மார்ச் 2022

WINMEEN.COM

LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்










**1.** **தொழிற்துறையில் அன்னிய முதலீட்டை ஊக்குவிப்பது தொடர்பான கொள்கைக்கு சமீபத்தில் ஒப்புதலளித்துள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) கோவா



ஆ) அஸ்ஸாம்

**இ) ஜம்மு–காஷ்மீர் ☑**

ஈ) லடாக்

✓ துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா தலைமையிலான நிர்வாக கவுன்சில், ஜம்மு–காஷ்மீரில் தொழிற்துறையில் அன்னிய முதலீட்டை மேம்படுத்துவத –ற்கான கொள்கைக்கு ஒப்புதல் அளித்தது. இந்தப் புதிய கொள்கையானது குறைந்தபட்சம் 51 சதவீத வெளிநாட்டு பங்குகளுடன் ₹100 கோடிக்கும் அதிகமான வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**2.** **இந்தியாவின் COVID–19 தடுப்பூசி மேம்பாடு மற்றும் நிர்வாகப் பயணத்தை ஆவணப்படுத்தும் அறிக்கைகளை வெளியிட்ட நிறுவனம் எது?**

**அ) போட்டித்தன்மைக்கான நிறுவனம் ☑**

ஆ) NITI ஆயோக்

இ) ஜான் ஹாப்கின்ஸ் பல்கலை

ஈ) எய்ம்ஸ்

✓ மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, இந்தியாவின் COVID தடுப்பூசி மேம்பாடு மற்றும் தடுப்பூசி நிர்வாகப் பயணத்தை ஆவணப்படுத்தும் போட்டித்தன் –மைக்கான நிறுவனத்தின் (இந்திய அத்தியாயம்) இரு அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்.

✓ இந்தியாவின் தடுப்பூசி மேம்பாடு குறித்த இவ்வறிக்கை, உள்நாட்டு தடுப்பூசிக்கான 'PM CARES' நிதியின் ₹100 கோடி நிதியுதவி மற்றும் மருத்துவ பரிசோதனைகளை நடத்துவதற்கான உலகளாவிய நிறுவனங்களுடன் இந்திய மருந்து நிறுவனங்களின் ஒத்துழைப்பில் கவனம் செலுத்துகிறது. நிர்வாகம் குறித்த அறிக்கை, 'Co–WIN' மற்றும் 'ஆரோக்கிய சேது' போன்ற செயலிகளில் கவனம் செலுத்துகிறது.

---

**3.** **'ஹெல்த் ஸ்டார் ரேட்டிங்' என்பது கீழ்காணும் எந்த அமைப்பின் முன்முயற்சியாகும்?**

அ) இந்திய உணவு கழகம்

**ஆ) FSSAI ☑**

இ) நபார்டு

ஈ) NITI ஆயோக்

✓ இந்திய உணவுப்பாதுகாப்பு&தரநிர்ணய ஆணையத்தின் (FSSAI) வழிகாட்டுதலின்படி, பேக்கேஜ் செய்யப்பட்ட உணவுப் பொருட்களுக்கு 'சுகாதார நட்சத்திர மதிப்பீடு' வழங்கப்படும். நட்சத்திரங்களின் எண்ணிக்கை, பொருள் எவ்வளவு ஆரோக்கியமானது அல்லது ஆரோக்கியமற்றது என்பதைக்குறிக்கும். உணவுப்பொருளிலுள்ள கொழுப்பு, சர்க்கரை மற்றும் உப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இம் மதிப்பீடு செய்யப்படும்.

**4.** **'கூட்டுப்பொருள் உற்பத்திக்கான தேசிய உத்தி'யை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?**

**அ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஆ) MSME அமைச்சகம்

இ) வர்த்தகம் & தொழில் அமைச்சகம்

ஈ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

✓ மின்னணுவியல் & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆனது 'கூட்டுப்பொருள் உற்பத்திக்கான தேசிய உத்தி'ஐ வெளியிட்டது. இவ்வுத்தியின்படி, அடுத்த 3 ஆண்டுகட்குள் உலகளாவிய கூட்டுப்பொருள் உற்பத்தியில் பங்கை 5% ஆக அதிகரிப்பதை இந்தியா நோக்கமாகக்கொண்டுள்ளது.

✓ முப்பரிமாண (3D) அச்சிடுதல் அல்லது கூட்டுப்பொருள் உற்பத்தியானது பொருள்களின் முன்மாதிரிகள் அல்லது வேலைசெய்யும் மாதிரிகளை உருவாக்க கணினி உதவி வடிவமைப்பைப் பயன்படுத்துகிறது.

---

**5.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற Intracortical Visual Prosthesis (ICVP) என்பதுடன் தொடர்புடையது எது?**

**அ) செயற்கை பார்வைத்திறன் ☑**



ஆ) செயற்கை நுண்ணறிவு

இ) ஸ்பைவேர்

ஈ) வழிசெலுத்தல்

✓ ஆய்வின் முதல் பங்கேற்பாளருக்கு Intracortical Visual Prosthesis (ICVP) வெற்றிகரமாக அறுவை சிகிச்சைமூலம் பொருத்தப்பட்டது. இந்த அமைப்பு பார்வையிழந்தோர்க்கு ஓரளவு பார்வையை மீட்டெடுக்கும் திறன்கொண்டதாக கூறப்படுகிறது. ICVP என்பது விழித்திரை மற்றும் பார்வை நரம்புகளைத்தவிர்த்துவிட்டு மூளையின் பார்வைப்புற –ணியுடன் நேரடியாக இணைக்கும் ஓர் உள்வைப்பாகும்.

---

**6.** **2028 ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடம் எது?**

அ) பாரிஸ்

ஆ) ரோம்

**இ) லாஸ் ஏஞ்சல்ஸ் ☑**

ஈ) மாஸ்கோ

✓ 2028 ஒலிம்பிக் போட்டிகள் அல்லது 2028 கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறும். இது 'LA28' எனக் குறிப்பிடப்படுகிறது. 2024 ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸில் நடைபெறும். அண்மையில், லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ள 2028 – கோடைகால ஒலிம்பிக்கில் சர்பிங், ஸ்கேட்போர்டிங் மற்றும் ஸ்போர்ட் கிளைம்பிங் ஆகியவற்றைச் சேர்க்கும் திட்டத்திற்கு பன்னாட்டு ஒலிம்பிக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.

---

**7.** **சௌரி சௌரா கிராமம் இன்றைய எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?**

அ) பீகார் **ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) ஒடிஸா ஈ) மேற்கு வங்கம்



- ✓ காலனித்துவ நிர்வாகத்திற்கு எதிராக 'மகாத்மா' காந்தியின் 'ஒத்துழையாமை இயக்கம்' தொடங்கப்பட்ட போது, இன்றைய உத்தரபிரதேசத்தில் உள்ள சௌரி சௌரா கிராமத்தில் 23 காவலர்களைக் கொன்ற கும்பல் காவல் நிலையத்திற்கு தீவைத்தது.
- ✓ அன்னிய பொருட்களுக்கு எதிராகப் போராடிய குழுவைச் சேர்ந்த 3 பேர் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக இது செய்யப்பட்டது. 'சௌரி சௌரா' சம்பவத்திற்குப் பிறகு, காந்தி, இயக்கத்தை கைவிட்டு அவ்வன்முறைசம்பவத்தைக் கண்டித்தார்.

---

**8. தென் கோல் பனிப்பாறையானது எந்தச் சிகரத்தின் மிக உயரமான பனிப்பாறை ஆகும்?**

**அ) எவரெஸ்ட் சிகரம் ☑**



ஆ) K2

இ) கஞ்சஞ்சங்கா

ஈ) கிளிமஞ்சாரோ

- ✓ ஓர் அண்மைய ஆய்வில், காலநிலை தொடர்பான பனி இழப்பின் அறிகுறிகளுக்காக, எவரெஸ்ட் சிகரத்தின் மிக உயரமான பனிப்பாறையான தென் கோல் பனிப்பாறை –யை கண்காணிக்க அறிவியலாளர்கள் குழு எவரெஸ்ட் சிகரத்தை அளந்தது.
- ✓ இது கடல்மட்டத்திலிருந்து கிட்டத்தட்ட 26000 அடி (8000 மீ) உயரத்தில் உள்ளது. பனிப்பாறையின் மேற்பரப்பில் பனி குவிவதற்கு எடுத்ததைவிட 80 மடங்கு வேகத்தில் அது தனது பனியை இழந்து வருகிறது என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

---

**9. ஆண்டுதோறும், 'பாகுபாடுகள் ஒழிப்பு நாள் – Zero Discrimination Day' அனுசரிக்கப்படும் தேதி எது?**

**அ) மார்ச் 01 ☑**




ஆ) மார்ச் 02

இ) மார்ச் 03

ஈ) மார்ச் 04

- ✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 1 அன்று UNAIDSஆல் உலகம் முழுவதும் 'பாகுபாடுகள் ஒழிப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற –து. 2030ஆம் ஆண்டுக்குள் AIDS'ஐ ஒரு பொதுநல அச்சுறுத்தலாக எண்ணி அதனை முடிவுக்குக்கொண்டு வருவதை நோக்கமெனக்கொண்ட ஐக்கிய நாடுகளின் அமைப்புதான் இந்த UNAIDS.

---

**10. பன்னாட்டு துருவக்கரடிகள் நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**

**அ) பிப்ரவரி 27 ☑**



ஆ) பிப்ரவரி 28

இ) பிப்ரவரி 25

ஈ) பிப்ரவரி 26

- ✓ சர்வதேச துருவக்கரடிகள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் பிப்.27 அன்று துருவக்கரடியின் பாதுகாப்பு நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கொண்டாடப்படுகிறது. பன்னாட்டு துருவக்கரடிகள் நிறுவனத்தால் இந்நாள் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- ✓ புவி வெப்பமடைதல் மற்றும் உருகிவரும் கடல்பனிக்கட்டி –கள் ஆகியவை துருவக்கரடிகளின் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. செபி தலைவராக மாதவி புரி நியமனம்**

இந்திய பங்கு பரிவர்த்தனை ஒழுங்காற்று வாரியத்தின் (SEBI) தலைவராக மாதவி புரி புச் (57) நியமிக்கப்பட்டு உள்ளார். செபி தலைவராக பெண் ஒருவர் பதவியேற்பது இதுவே முதல்முறையாகும்.

நிதி, வங்கித்துறையில் நீண்ட அனுபவமுள்ள மாதவி, தனியார் துறையில் பணியாற்றி செபி தலைமைப் பொறுப்பேற்கும் முதல் நபர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அவர் இப் பொறுப்பிலிருப்பார் என நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

இப்போது செபி தலைவராக உள்ள முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி அஜை தியாகியின் பதவிக்காலம் பிப்ரவரி.28 உடன் முடிவடைந்தது.

---

**2. உலகின் வேகமான பொருளாதார வளர்ச்சிபெறும் நாடு என்ற நிலையை தக்கவைத்துள்ள இந்தியா**

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2021–22ஆம் நிதி ஆண்டின் மூன்றாவது காலாண்டில் 5.4 சதவீதமாக குறைந்துள்ளது. இருந்தபோதும், இதே காலகட்டத்தில் சீனாவின் 4 சதவீத ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியைக்காட்டிலும் இந்தியா கூடுதல் வளர்ச்சி பெற்றுள்ளதோடு, உலகின் வேகமான பொருளாதார வளர்ச்சிபெறும் மிகப்பெரிய நாடு என்ற நிலையை தொடர் –ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளது தெரியவந்துள்ளது.

நிகழ் நிதியாண்டில் ஜிடிபி வளர்ச்சி விகிதம் ஏப்ரல்–ஜூன் காலாண்டில் 20.3 சதவீதமாகவும், ஜூலை–செப்டம்பர் காலாண்டில் 8.5 சதவீதமாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) இரண்டாவது தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான முன்கூட்டிய மதிப்பீட்டை வெளியிட்டது.

அதன்படி, 2021–22ஆம் ஆண்டுக்கான நாட்டின் பொருளா –தார வளர்ச்சி 8.9 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த ஜனவரியில் வெளியிடப்பட்ட முதல் முன்கூட்டிய மதிப்பீட்டைக் காட்டிலும் வளர்ச்சி விகிதம் சற்று குறைவு ஆகும். அப்போது, பொருளாதார வளர்ச்சி 9.2 சதவீதமாக கணிக்கப்பட்டிருந்தது.

அதுபோல, முந்தைய 2020–21 ஆம் நிதியாண்டில், முதல் முன்கூட்டிய மதிப்பீட்டில் பொருளாதார வளர்ச்சி 7.3 சதவீதமாக கணிக்கப்பட்டது. பின், கரோனா பாதிப்பின் தாக்கத்தை கருத்தில்கொண்டு NSO வெளியிட்ட திருத்திய மதிப்பீட்டில் வளர்ச்சி விகிதம் 6.6 சதவீதமாக சரிந்தது.

அந்த வகையில், 2020ஆம் ஆண்டில் ஜிடிபி வளர்ச்சி விகிதம் ஏப்ரல்–ஜூன் காலாண்டில் 23.8 சதவீதமாகவும், ஜூலை–செப்டம்பர் காலாண்டில் 6.6 சதவீதமாகவும் பதிவானது என்று NSO தெரிவித்துள்ளது.

மேலும், நிலையான விலைகளில் GDP 2020–21 3ஆம் காலாண்டில் ₹36.26 இலட்சம் கோடியாக மதிப்பீடு செய்யப்பட்ட நிலையில், 2021–22ஆம் நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் ₹38.22 இலட்சம் கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டது. இது 5.4 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது என்றும் என்எஸ்ஓ தெரிவித்துள்ளது.

---

**3. உலக 'பாரா' வில்வித்தையில் இந்திய வீராங்கனை பூஜா வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினார்.**

---

**4. தேசிய ஜூனியர் பேட்மின்ட்டன் தமிழ்நாட்டு அணி சாம்பியன்**

திண்டுக்கல் PSNA பொறியியல் கல்லூரி மற்றும் தமிழ்நாடு பூப்பந்தாட்டக் கழகம் சார்பில் 66ஆவது தேசிய ஜூனியர் பேட்மின்டன் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றது. இதில் 17 மாநிலங்களில் இருந்து 800 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் தமிழ்நாடு அணி 35 – 31, 35 – 28 என்ற புள்ளி கணக்கில் ஆந்திரா அணியை வீழ்த்தியது. பெண்களுக்கான இறுதிப் போட்டியில் தமிழ்நாடு அணி 35 – 24, 35 – 18 என்ற புள்ளி கணக்கில் ஆந்திரா அணியை வீழ்த்தியது.

சாம்பியன் பட்டம் வென்ற தமிழ்நாடு அணிகளுக்கு கிரிஸ்டல் சுழற்கோப்பை மற்றும் 3 லட்சம் ரூபாய் ரொக்கப் பரி வழங்கப்பட்டது.

---

**5. உலக டென்னிஸ் தரவரிசையில் நம்பர் ஒன் இடத்தை பிடித்தார் மெட்விடேவ்**

உலக டென்னிஸ் வீரர்களின் புதிய தரவரிசைப்பட்டியல் வெளியிடப்பட்டது. இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 2ஆவது இடம் வகித்த 26 வயது ரஷிய வீரர் டேனில் மெட்விடேவ் முதல்முறையாக 'நம்பர் ஒன்' அரியணையை அலங்கரித்து இருக்கிறார். கடந்த வாரம் நடந்த மெக்சிகோ ஓபன் டென்னிஸ் போட்டியில் அரை இறுதிக்கு முன்னேறியதன்மூலம் மெட்விடேவ் (8,615 புள்ளிகள்), முதலிடத்தில் இருந்த செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை (8,465 புள்ளிகள்) 2ஆவது இடத்துக்கு தள்ளி முதலிடத்தை சொந்தமாக்கினார்.

ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் (7,515 புள்ளிகள்) 3ஆவது இடத்தில் நீடிக்கிறார். மெக்சிகோ ஓபன் போட்டியில் பட்டம் வென்ற ஸ்பெயினின் ரபெல் நடால் (6,515 புள்ளிகள்) ஒரு இடம் உயர்ந்து 4ஆவது இடத்தையும், கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் (6,445 புள்ளிகள்) ஒரு இடம் சரிந்து 5ஆவது இடத்தையும், ரஷிய வீரர் ஆந்த்ரே ரூப்லெவ் (5,000 புள்ளிகள்) ஒரு இடம் முன்னேறி 6ஆவது இடத்தையும், இத்தாலி வீரர் பெரேட்டினி (4,928 புள்ளிகள்) ஒரு இடம் சறுக்கி 7ஆவது இடத்தையும் பிடித்தனர். நார்வேயின் கேஸ்பர் ரூட் (3,915 புள்ளிகள்) 8ஆவது இடத்திலும், கனடாவின் அலியாசிம் (3,883 புள்ளிகள்) 9ஆவது இடத்திலும் தொடருகின்றனர். போலந்தின் ஹூபர்ட் ஹூர்காஸ் (3,496 புள்ளிகள்) ஒரு இடம் உயர்ந்து 10ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

---

**6. 'ஆதிச்சநல்லூர் அகழாய்வில் மூன்று காலகட்டங்களை உள்ளடக்கிய 52 முதுமக்கள் தாழிகள்'**

ஆதிச்சநல்லூர் அகழாய்வில் மூன்று காலகட்டங்களை உள்ளடக்கிய 52 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டு உள்ளதாக, மத்திய தொல்லியல் துறை தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அருகேயுள்ள ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 2020ஆம் ஆண்டு அறிவித்திருந்தார்.

---

**7. 'நான் முதல்வன்': மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம் தொடக்கம்**

மாணவர்கள், இளைஞர்களுக்கான திறன் மேம்பாடு திட்டத்தை தனது பிறந்தநாளையொட்டி சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்துள்ளார்.

'நான் முதல்வன்' என்ற தலைப்பிலான திட்டம்மூலம் மாணவர்கள், இளைஞர்களின் திறனை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இளைய சமுதாயத்தை முழுமையா–ன திறமையானவர்களாக மாற்ற 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் பயிற்சிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நான் முதல்வன்' என்ற திறன் மேம்பாட்டுத்திட்டத்தின் கருப்பொருள் 'உலகை வெல்லும் இளைய தமிழகம்' என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கல்வி, ஆராய்ச்சி, சிந்தனை, செயலில் திறமையானவர்க–ளாக மாணவகள், இளைஞர்களை மாற்றவே இந்தத் திட்டம் தமிழக அரசு சார்பில் தொடக்கங்கப்பட்டுள்ளது.

---

**8. சேதி தெரியுமா?**

**பிப்.20:** சீனத்தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்ற குளிர் கால ஒலிம்பிக் போட்டிகள் நிறைவடைந்தன. 16 தங்கம், 8 வெள்ளி, 13 வெண்கலம் என 37 பதக்கங்களுடன் நார்வே பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.

**பிப்.21:** இணையம் வழியாக நடைபெற்ற வரும் ஏர்திங்க்ஸ் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த 16 வயது வீரர் பிரக்ஞானந்தா உலகப் புகழ்பெற்ற செஸ் சாம்பியனான நார்வேயைச் சேர்ந்த மேக்னஸ் கார்ல்செனைத் தோற்கடித்து சாதனை படைத்தார்.

**பிப்.22:** தமிழகத்தில் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன. இதில் 21 மாநகராட்சிகளையும் திமுக கூட்டணி வென்றது.

**பிப்.23:** உக்ரைன் மீது போர் நடவடிக்கைகளைத் தொடங்கும்படி ராணுவத்துக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் உத்தரவிட்டார்.

**பிப்.25:** உக்ரைன்மீது போர் தொடுத்த ரஷ்யாவுக்கு எதிராக ஐநா சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டு

வரப்பட்ட தீர்மானத்தை வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரஷ்யா தோற்கடித்தது. இந்தத் தீர்மானத்தின் மீது இந்தியா வாக்களிக்கவில்லை.

**பிப்.26:** பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒடிஷாவின் முதல் முதல்வர் ஹேமானந்தா பிஸ்வால் (82) காலமானார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இவர், 1989 – 90, 1999 – 2000 காலகட்டத்தில் ஒடிஷா முதல்வராக இருந்தார்.

**பிப்.26:** நாட்டின் மிகப்பெரிய காப்பீட்டு நிறுவனமான எல்ஐசி'இன் பங்குகளை விற்கும் நோக்கில் தானியங்கி வழிமுறைமூலம் 20 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியது.

---

**9. உக்ரைனிலிருந்து இந்தியர்களை மீட்க 'ஆபரேஷன் கங்கா' செயல்படுவது எப்படி? – ஒரு பார்வை**

போரினால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைன் நாட்டில் இருந்து இந்தியர்களை மீட்கும் பணியை ஒருங்கிணைக்க 4 மத்திய அமைச்சர், உக்ரைன் அண்டை நாடுகளுக்கு செல்கின்றனர்.

போர் நடைபெறும் பகுதியில் சிக்கித்தவிக்கும் இவர்களை மீட்க, மத்திய அரசு தொடர்நடவடிக்கை மேற்கொண்டு உள்ளது. இந்த மீட்புப்பணிக்கு 'ஆபரேஷன் கங்கா' எனப் பெயரிடப்பட்டுள்ளது. உக்ரைனில் இருக்கும் இந்தியர்கள் அதன் அண்டை நாடுகளுக்கு சாலை மார்க்கமாக அழைக்கப்பட்டு, பிறகு அங்கிருந்து விமானங்கள் மூலம் தாயகம் அழைத்து வரப்படுகின்றனர்.

இந்நிலையில், இந்திய மாணவர்களுக்கு உதவிடவும் அவர்களை அங்கிருந்து வெளியேற்றி அழைத்து வரும் பணியை ஒருங்கிணைக்கவும் மத்திய அமைச்சர்கள் ஹர்தீப் சிங் புரி, ஜோதிராதித்ய சிந்தியா, கிரண் ரஜிஜு, வி கே சிங் ஆகியோர் உக்ரைன் அண்டை நாடுகளுக்கு செல்கின்றனர்.

இதனிடையே 'ஆபரேஷன் கங்கா' திட்டத்துக்கு உதவிட 'OpGanga' என்ற பிரத்யேக டுவிட்டர் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது.

---

**10. உக்ரைனுக்கு சொந்தமான உலகின் பெரிய சரக்கு விமானத்தை தாக்கி அழித்த ரஷ்யா**

உக்ரைனுக்குச் சொந்தமான உலகின் மிகப்பெரிய விமானத்தை ரஷ்ய ராணுவம் தாக்கி அழித்து உள்ளது.

தொடர்ந்து 5ஆவது நாளாக நேற்றும் உக்ரைன் மீதான ரஷ்யாவின் அதிரடி தாக்குதல் தொடர்ந்துநடைபெற்று வருகிறது. எல்லையோர நகரங்கள் மீது ரஷ்ய ராணுவம் தொடர்ந்து குண்டு மழைபொழிந்து வருகிறது. நேற்று முன்தினம் நள்ளிரவில் தலைநகர் கீவில் பல பகுதிகளில் குண்டுகள் வெடித்ததாக தகவல் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், கீவ் அருகே உள்ள ஹோஸ்டோமல் விமான நிலையத்தில் ரஷ்ய படையினரின் குண்டு வீச்சால் உலகின் மிகப்பெரிய சரக்கு விமானம் அழிக்கப்பட்டதாக உக்ரைனின் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவித்தார். இந்த விமானம்உக்ரைனுக்குச் சொந்தமானதாகும்.

ஏஎன்–225 'மிரியா' என்று பெயரிடப்பட்ட அந்த விமானம் ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதல் மூலம் தகர்க்கப்பட்டு இருக்கிறது.

இதுதொடர்பாக உக்ரைனின் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா ட்விட்டரில் கூறியதாவது:

உலகின் மிகப்பெரிய சரக்கு விமானமான மிரியா, ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்களால் அழிக்கப்பட்டது. நமது மிரியாவை ரஷ்யா அழித்திருக்கலாம். ஆனால் வலுவான சுதந்திரமான ஜனநாயக ஐரோப்பியநாடு என்ற நமது கனவை அவர்களால் ஒருபோதும் அழிக்க முடியாது. நாம் வெற்றி பெறுவோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

உலகின் மிகப்பெரிய சரக்கு விமானமான மிரியா விமானம் உக்ரைனின் அன்டோனோ நிறுவனத்தால் கடந்த 1985–ம் ஆண்டுதயாரிக்கப்பட்டது. 30 சக்கரங்கள், 6 இன்ஜின்கள், 290 அடி நீள இறக்கைகளைக் கொண்ட இதில் 4,500 கிலோமீட்டர் வரை தொடர்ந்து பறந்து செல்ல முடியும். கரோனாகால கட்டத்தில் உலகம் முழுவதும் உயிர்காக்கும் தடுப்பூசி மற்றும் மருந்துகளை மிரியா விமானம் எடுத்துச்சென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**1.** **முதன்முறையாக 'சோலார் புரோட்டான் நிகழ்வு'களை கண்டறிந்த ISRO'இன் விண்வெளிப்பயணம்/செயற்கைக் கோள் எது?**

அ) சந்திரயான்–1

**ஆ) சந்திரயான்–2 ☑**

இ) செவ்வாய் சுற்றுக்கலன் திட்டம்

ஈ) மங்கள்யான்–2



✓ சந்திரயான்–2இன் சுற்றுக்கலனானது சூரிய புரோட்டான் நிகழ்வுகளை அதன் எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோமீட்டர் (CLASS) மூலம் கண்டறிந்தது. இந்தப் புரோட்டான் நிகழ்வுகள் விண்வெளிக்குச் செல்லும் மனிதர்களிடையே கதிர்வீச்சு தாக்கத்தை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

---

**2.** **தேசிய நகர்ப்புற விவகாரங்கள் நிறுவனமானது (NIUA) எந்நிறுவனத்துடனான, 'நிலையான நகரங்கள் இந்தியா' திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ) NITI ஆயோக்

**ஆ) உலகப் பொருளாதார மன்றம் ☑**

இ) உலக வங்கி

ஈ) UNDP

WORLD ECONOMIC FORUM

✓ உலகப் பொருளாதார மன்றமும் தேசிய நகர்ப்புற விவகார நிறுவனமும் (NIUA) இணைந்து 'நிலையான நகரங்கள் இந்தியா' திட்டத்தில் ஒத்துழைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இது ஒரு கூட்டுத்திட்டம் ஆகும். இது ஆற்றல், போக்குவரத்து மற்றும் கட்டமைக்கப் –பட்ட சுற்றுச்சூழல் துறைகளில் டிகார்பனைசேஷன் தீர்வுகளை உருவாக்க நகரங்களுக்கு உதவும் சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---


**3.** **எந்த நாட்டின் ஊர்தி, நிலவின் தொலைவில் இரண்டு கண்ணாடிக்கோளங்களைக் கண்டறிந்துள்ளது?**

அ) இந்தியா

**ஆ) சீனா ☑**

இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) அமெரிக்கா



✓ சீனாவின் Yutu–2 ஊர்தியானது அண்மையில் நிலவின் தொலைவில் இரண்டு விசித்திரமான கண்ணாடிக் கோளங்களைக் கண்டறிந்தது. நிலவின் மேற்பரப்பில் முதன்முறையாக இது போன்ற கோளங்கள் காணப்படுகி –ன்றன. ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, அவை மிகச் சமீபத்தில் உருவானவை.

---

**4.** **நடப்பு 2022இல், சீனியர் தேசிய செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்தப்படுகிற நகரம் எது?**

அ) மும்பை

**ஆ) கான்பூர் ☑**

இ) சென்னை

ஈ) பனாஜி



✓ அகில இந்திய செஸ் கூட்டமைப்பு செயலாளர் பாரத் சிங் 58ஆவது சீனியர் தேசிய செஸ் சாம்பியன்ஷிப்–2022'ஐ கான்பூரில் நடத்தப்படும் என அறிவித்தார். இதில் 23 கிராண்ட்மாஸ்டர்கள் மற்றும் 30 சர்வதேச மாஸ்டர்கள் உட்பட 184 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

✓ செஸ் ஒலிம்பியாட் & ஆசிய விளையாட்டுப்போட்டிகளுக் –கான இந்திய அணிக்கான தேர்வு மேடையாக இது இருக்கும். 7ஆவது தேசிய பெண்கள் செஸ் சாம்பியன்ஷிப் – 2022 புவனேஸ்வரில் நடைபெறுகிறது.

---

**5.** **'தேவயாதனம் – இந்தியக் கோவில் கட்டடக்கலையின் பயணம்' என்ற மாநாடு நடைபெறும் இடம் எது?**

அ) பூரி

**ஆ) ஹம்பி ☑**

இ) மைசூரு

ஈ வாரணாசி



✓ இந்திய அரசின் மத்திய கலாசார அமைச்சகத்தின் இந்திய தொல்பொருள் ஆய்வுமையம் கர்நாடகாவின் ஹம்பியில் 'இந்தியக் கோவில் கட்டடக்கலையின் பயணம் – தேவயாதனம்' என்ற சர்வதேச மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. மத்திய கலாசாரத்துறை அமைச்சர் கிஷன் ரெட்டி மாநாட்டை தொடங்கிவைத்தார்.

✓ இது கோவிலின் தத்துவ, மத, சமூக, பொருளாதார, தொழில்நுட்ப, அறிவியல், கலை மற்றும் கட்டடக்கலை அம்சங்களை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கோவில் கட்டடக்கலையின் பல்வேறு பாணிகளின் பரிணாம வளர்ச்சியையும் இது எடுத்துக் கூறுகிறது.

---

**6.** **சமீபத்தில் காலமான இப்ராகிம் சுதார் என்பவர் எந்த மாநிலத்தைச் சேர்ந்த 'பத்மஸ்ரீ' விருது பெற்றவரும் சமூக சேவகரும் ஆவார்?**

அ) தமிழ்நாடு

**ஆ) கர்நாடகா ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) கேரளா



✓ 'பத்மஸ்ரீ' விருது பெற்றவரும் சமூக சேவையாளருமான இப்ராகிம் சுதார் கர்நாடகாவில் தனது 82ஆவது வயதில் காலமானார். அவர் 'கன்னடத்தின் கபீர்' என்று அன்புடன் அழைக்கப்படுகிறார். சமூக மற்றும் மத நல்லிணக்கத்தை பரப்புவதற்கான அவரது அரும்பணிக்காக அறியப்பட்டவர். இவருக்கு கடந்த 2018ஆம் ஆண்டில் 'பத்மஸ்ரீ' விருது வழங்கப்பட்டது.

---

**7.** **இந்தியாவின் முதலாவது கடற்பசுப் பாதுகாப்பகத்தை அமைக்கவுள்ள மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) ஒடிஸா

ஈ) மகாராஷ்டிரா



- ✓ தமிழநாட்டின் தென்கிழக்குக் கடற்கரையில் உள்ள பாக் விரிகுடாவில் இந்தியாவின் முதல் கடற்பசுப் பாதுகாப்பகத்–தை அமைக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. கடற்பசு என்பது அழிந்துவரும் ஒரு கடற்பாலூட்டியினமாகும். இது வாழ்விட இழப்பு, கடல் மாசுபாடு மற்றும் கடற்பாசி இழப்பு காரணமாக அழிவை எதிர்கொள்கிறது.
- ✓ தமிழ்நாட்டின் தென்கிழக்கு முனைக்கும் இலங்கையின் மேற்குப்பகுதிக்கும் இடையே உள்ள ஆழமற்ற விரிகுடா பகுதியான மன்னார் வளைகுடாவிலும், பாக் விரிகுடாவிலும் கடற்பசுக்கள் காணப்படுகின்றன.

---

**8.** **தேசிய வான் விளையாட்டுக் கொள்கை வரைவை வெளியிட்ட அமைச்சகம் எது?**

அ) விளையாட்டு அமைச்சகம்

**ஆ) உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகம் ☑**

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

- ✓ உள்நாட்டு வான் போக்குவரவு அமைச்சகமானது நாட்டில் வான் விளையாட்டுகளை மேம்படுத்துவதற்காக தேசிய வான் விளையாட்டுக் கொள்கை வரைவை (NASP – 2022) தயாரித்துள்ளது. ஏரோபாட்டிக்ஸ், ஏரோ–மாடலிங், அமெச்சூர், டிரோன்கள், கிளைடிங், ஹேங்–கிளைடிங் மற்றும் பாராகிளைடிங் மைக்ரோ–லைட்டிங் மற்றும் பாரா–மோட்டரிங் ஸ்கை–டைவிங் மற்றும் விண்டேஜ் வான் விளையாட்டுகள் உள்ளிட்ட பெரும்பாலான வான் விளையாட்டுகளை இந்தக் கொள்கை உள்ளடக்கும்.
- ✓ மேலும், வான் விளையாட்டுக்களுக்கான சாதனங்களின் உள்நாட்டு வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் தயாரிப்பு ஊக்குவிக்கப்படும்.

---

**9.** **உலக வனவுயிரிகள் நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

அ) மார்ச் 01

ஆ) மார்ச் 02

**இ) மார்ச் 03 ☑**

ஈ) மார்ச் 04

- ✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.3 அன்று உலக வனவுயிரிகள் நாள் அனுசரிக்கப்படுகிறது. இது, புவியில் வாழும் விலங்கு மற்றும் தாவரங்கள் எதிர்கொள்ளும் ஆபத்துகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- ✓ "Recovering key species for ecosystem restoration" என்பது நடப்பாண்டு (2022) வரும் உலக வனவுயிரிகள் நாளுக்கான கருப்பொருளாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

---

**10.** **உலக செவிப்புலன் நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

அ) மார்ச் 02

**ஆ) மார்ச் 03 ☑**

இ) மார்ச் 04

ஈ) மார்ச் 05

- ✓ காதுகேளாமை மற்றும் செவித்திறன்குறை ஆகியவற்றை எப்படி தடுப்பது என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.3 அன்று உலக செவிப்புலன் நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ✓ உலக நலவாழ்வு அமைப்பானது (WHO) ஜெனீவாவில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் ஆண்டுதோறும் உலக செவிப்புலன் நாள் கருத்தரங்கை ஏற்பாடு செய்கிறது. "To hear for life, listen with care!" என்பது இந்த ஆண்டில் (2022) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழகத்தின் 7 பேர் உள்பட 49 ஆசிரியர்களுக்கு தேசிய விருது: தில்லியில் மத்திய அமைச்சர் வழங்கினார்**

தமிழகத்தைச் சேர்ந்த ஏழு ஆசிரியர்கள் உள்பட நாடு முழுவதும் 49 ஆசிரியர்களுக்கு தேசிய தகவல், தொலைத் தொடர்பு தொழில்நுட்ப விருதுகளை மத்திய கல்வித் துறை இணையமைச்சர் அன்னபூர்ணா தேவி வழங்கினார்.

2020ஆம் ஆண்டு தேசிய கல்விக்கொள்கை அடிப்படையில், கற்பித்தல், கற்றல் செயல்முறைகளில் தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் விரிவான பயன்பாடு, திட்டமிடலை உருவாக்கும் ஆசிரியர்களுக்கு இந்த விருதுகளை மத்திய கல்வித் துறை வழங்குகிறது. கல்வி கற்பிப்பதில் திக்ஷா, இ–பாடசாலை திட்டங்களின் கீழ் மின்னணு முறையில் பாடங்களைத் தயாரித்தல், காணொலிகள் போன்றவைமூலம் மாணவர்களுக்கான கற்றல் அணுகுதலுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

---

**2. கோடீஸ்வரர்கள் பட்டியல்: இந்தியாவுக்கு 3ஆவது இடம்**

அதிக எண்ணிக்கையிலான கோடீஸ்வரர்களைக் கொண்ட நாடுகள் பட்டியலில் இந்தியா 3ஆவது இடத்தில் உள்ளது.

உலக நாடுகளில் அதிக சொத்து வைத்துள்ளவர்களின் விவரங்களை தனியார் ஆய்வுநிறுவனம் வெளியிட்டு உள்ளது. அதன்படி, உலகில் கடந்த ஆண்டில் 30 மில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ₹226 கோடி) சொத்து வைத்திருந்த நபர்களின் எண்ணிக்கை 9.3 சதவீதம் அதிகரித்து 6,10,569ஆக இருந்தது. அவர்களில் 13,637 பேர் இந்தியர்கள் ஆவர். இந்தியாவில் அதிக சொத்து வைத்திருந்தவர்களின் எண்ணிக்கை கடந்த 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11 சதவீதம் அதிகரித்துள்ளது.

அதிக கோடீஸ்வரர்ரைகளைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அந்நாட்டில் 748 கோடீஸ்வரர்கள் உள்ளனர். 554 கோடீஸ்வரர்களு–டன் சீனா 2ஆவது இடத்தில் உள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் 145 கோடீஸ்வரர்களுடன் இந்தியா உள்ளது.

---

**3. உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல்: சௌரவ் சௌதரிக்கு தங்கப்பதக்கம்**

எகிப்தில் நடைபெற்று வரும் ISSF உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் சௌரவ் சௌதரி தங்கப்பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

ஆடவருக்கான 10 மீ ஏர் பிஸ்டல் இறுதிச்சுற்றில் சௌரவ் 16–6 என்ற கணக்கில் ஜெர்மனியின் மைக்கேல் ஷ்வால்டை தோற்கடித்து முதலிடம் பிடித்தார்.

**ஈஷாவுக்கு வெள்ளி**

இப்போட்டியின் மகளிருக்கான 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் ஈஷா சிங் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

---

**4. பருவநிலை மாற்றத்தால் உணவு உற்பத்தி பாதிக்கப்படும்: ஐநா அறிக்கையில் எச்சரிக்கை**

பருவநிலை மாற்றத்தால் இந்தியாவில் உணவு உற்பத்தி பாதிக்கப்படும் என எச்சரித்துள்ள ஐநா அறிக்கை, கடலோரப்பகுதிகளிலுள்ள மக்கள் கடல்மட்ட உயர்வால் பாதிக்கப்படுவர் என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐநாவின் பருவநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கிடையேயான குழு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

பருவநிலை மாற்றத்தால் கடல்நீர்மட்டம் உயர்ந்து, வெப்ப நிலை அதிகரிக்கும். உலகம் முழுவதும் பனிப்பாறைகள் முன்பில்லாத அளவில் வேகமாக உருகிவருகின்றன. வறட்சி, அதிக மழைப்பொழிவு, வெள்ளம், அனல்காற்று உள்ளிட்டவற்றின் காரணமாக நாட்டில் உணவு உற்பத்தி பாதிப்பைச் சந்திக்கும். அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் உள்ளிட்டவற்றின் உற்பத்தி 2050ஆம் ஆண்டில் 9% வரை குறைய வாய்ப்புள்ளது.

கரியமில வாயு வெளியேற்றம் தொடர்ந்து அதிகமாக இருந்தால், தென்னிந்தியாவில் சோள உற்பத்தி 17% வரை குறையும்.

கடல்மட்ட உயர்வால் நிலப்பயன்பாடு, கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்டவை பாதிக்கப்படும். கரியமில வாயு வெளியேற்ற அளவு தற்போதைய நிலையில் தொடர்ந்தால், நடப்பு நூற்றாண்டின் மத்தியில் சுமார் 3.5 கோடி பேர் கடல்மட்ட உயர்வு பிரச்னையால் பாதிக்கப்படுவர். அதுவே அந்த எண்ணிக்கை நூற்றாண்டின் இறுதியில் 5 கோடியாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. கரியமில வாயு வெளியேற்றம் குறைவாக இருந்தால், குறைந்த எண்ணிக்கையிலான நபர்களே பாதிக்கப்படுவர்.

**இந்தியாவுக்கு அதிக பாதிப்பு:**

கடல்மட்ட உயர்வு, திடீர் வெள்ளம் உள்ளிட்டவற்றால் பொருளாதார ரீதியில் அதிக பாதிப்பைச் சந்திக்கும் நாடாக இந்தியா விளங்கும். கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்கவுள்ளதாக இந்தியா உறுதியளித்துள்ளது. அவ்வாறு குறைக்கும் பட்சத்தில், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பொருளாதார இழப்பு சுமார் ₹1.68 இலட்சம் கோடியாக இருக்கும். இல்லையெனில் இழப்பு சுமார் ₹2.52 இலட்சம் கோடியாக அதிகரிக்கும்.

கரியமில வாயு வெளியேற்றம் தொடர்ந்தால், மும்பை மட்டும் 2050ஆம் ஆண்டு வாக்கில் ஆண்டுக்கு சுமார் ₹11.44 இலட்சம் கோடி இழப்பைச் சந்திக்கும் அபாயம் உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முக்கிய தகவல்கள்:**

கரியமில வாயு வெளியேற்றம் தொடர்ந்து அதிகரித்தால், ஈரக்குமிழ் வெப்பநிலை (வெப்பம், ஈரப்பதத்தின் அளவீடு) 35 டிகிரி செல்சியஸைத் தாண்டும்.

லக்னௌ, பாட்னா நகரங்களில் அந்த வெப்பநிலை 35 டிகிரியை விட அதிகமாக இருக்கும்.

புவனேசுவரம், சென்னை, மும்பை, இந்தூர், அகமதாபாத் ஆகிய நகரங்களில் ஈரக்குமிழ் வெப்பநிலை 32 முதல் 34 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கும்.

கடல்மட்ட உயர்வு, திடீர் வெள்ளம் உள்ளிட்டவற்றால் பொருளாதார ரீதியில் அதிக பாதிப்பைச் சந்திக்கும் நாடாக இந்தியா இருக்கும்.

பருவநிலை மாற்றத்தால் 2050ஆம் ஆண்டில் 40 சதவீத மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்வர். தற்போது 33 சதவீத மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வருகின்றனர்.

பருவநிலை மாற்றத்தால் உலகின் சராசரி வருமானம் 23 சதவீதம் வரை குறையும். இந்தியாவில் 2100ஆம் ஆண்டுக்குள் 92 சதவீதம் வரை குறையும்.

பருவநிலை மாற்றத்தால் ஒட்டுமொத்தமாக அஸ்ஸாம், மேகாலயம், திரிபுரா, மேற்கு வங்கம், பிகார், ஜார்க்கண்ட், ஒடிஸா, சத்தீஸ்கர், உத்தர பிரதேசம், ஹரியாணா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் அதிகமாக பாதிக்கப்படும்.

பருவநிலை மாற்றத்தால் உலகின் பல்வேறு நாடுகள் பொருளாதார ரீதியில் பாதிப்புகளை எதிர்கொள்ளும். நடப்பாண்டு இறுதியில் இந்தியாவின் பொருளாதாரம் 92 சதவீதம் வரை வீழ்ச்சியடையும்.

**உலகில் பாதிபேர் பாதிக்கப்படும் அபாயம்**

பருவநிலை மாற்றம் காரணமாக உலக அளவில் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்பை எதிர்கொள்ளும் அபாயம் இருப்பதாக ஐ.நா. அறிக்கை எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக அவ்வறிக்கையில், "தொழில்மயமாதலுக்கு முந்தைய காலகட்டத்தைவிட வெப்பநிலை 1.5 டிகிரி C அதிகரித்தால், 14% உயிரினங்கள் அழிவைச் சந்திக்கும் அபாயம் உள்ளது. கோடிக்கணக்கான மக்கள் டெங்கு உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்படுவர்; மக்களின் உயிரிழப்பும் பெருமளவில் அதிகரிக்கும்.

கடல்மட்ட உயர்வால் அலைகளின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதன்காரணமாக கோடிக்கணக்கான மக்கள் பாதிப்பை எதிர்கொள்வர். தற்போதைய கடல் மட்டத்தில் இருந்து 10 மீட்டருக்குள் 90 கோடி மக்கள் வசித்து வருகின்றனர். கடல்மட்டம் 75 செமீ வரை உயர்ந்தால், தற்போது கணிக்கப்பட்டுள்ளதைவிட இரு மடங்கு எண்ணிக்கையிலான மக்கள் 2100ஆம் ஆண்டுக்குள் பாதிக்கப்படுவர்.

பருவநிலை மாற்றத்தின் காரணமாக வெப்பநிலை உயர்வை 1.5 டிகிரி செல்சியஸுக்குள் கட்டுப்படுத்த வேண்டுமென பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போதைய நிலை

தொடர்ந்தால் அடுத்த 10 ஆண்டுகளிலேயே உலகின் வெப்பநிலை உயர்வு 1.5℃ நிலையை எட்டிவிடும்.

அதற்கு அதிக வெப்பநிலை உயர்ந்தால், சுற்றுச்சூழலில் பெரும் தாக்கங்களும் பாதிப்புகளும் ஏற்படும்; பவளப் பாறைகள் பாதிக்கப்படும். பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் வேகமாக உயரும். பனிப்பாறைகள் உருகும்போது கரியமில வாயு வெளியேற்றம் மேலும் அதிகரிக்கும். பருவநிலை மாற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**1.** 'தர்மா கார்டியன்' பயிற்சி என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெறும் இராணுவப் பயிற்சி ஆகும்?



அ) இலங்கை

**ஆ) ஜப்பான் ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ இந்தியாவும் ஜப்பானும் ஆண்டுதோறும் நடத்தப்படும் தங்களது 'தர்மா கார்டியன்' பயிற்சியை கர்நாடகாவில் தொடங்கியுள்ளன. இந்தப் பயிற்சி பிப்.27 முதல் மார்ச்.10 வரை தொடங்கியது. 'மராத்தா லைட்' காலாட்படைப் பிரிவின் 15ஆவது பட்டாலியன் இந்தியாவின் சார்பாக பங்கேற்கிறது. இந்தப் பயிற்சியானது 2018ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

---

**2.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'IVFRT திட்டம்' எந்தத் துறையுடன் தொடர்புடையது?



**அ) குடியேற்றம் ☑**

ஆ) நீர்ப்பாசனம்

இ) தகவல்

ஈ) தொழிற்துறை

✓ 2021 முதல் 2026 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு 'குடியேற்ற விசா வெளிநாட்டினர் பதிவு கண்காணிப்பு' திட்டத்தைத் தொடர மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் ₹1,364.88 கோடி செலவில் அங்கீகரிக்கப்பட்டது.

✓ விசா வழங்குதற்கான காலம் IVFRT திட்டம் அமல்படுத்தும் முன் வரை, 15 முதல் 30 நாட்களாக இருந்தது. தற்போது அதிகபட்சமாக 72 மநேரத்துக்குள் விசா வழங்கப்படுகிறது.

---

**3.** 'எம்னாதி' புயலால் பாதிக்கப்பட்ட நாடு எது?



அ) இந்தோனேசியா

**ஆ) மடகாஸ்கர் ☑**

இ) பிலிப்பைன்ஸ்

ஈ) ஜப்பான்

✓ 'எம்னாட்டி' புயலின் வருகையை அடுத்து 5 வாரங்களில் நான்காவது சூறாவளியை மடகாஸ்கர் காண்கிறது.

✓ ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மடகாஸ்கர் பல சூறாவளிகளால் தாக்கப்படுகிறது. இந்த மாத தொடக்கத்தில் 120'க்கும் மேற்பட்டவர்களின் பலிக்கு காரணமான பட்சிராய் சூறாவளியின் தாக்கத்திலிருந்து அந்தத் தீவு நாடு இன்னும் மீளவில்லை.

---

**4.** 'மொழிச் சான்றிதழ் தன்பட' பிரச்சாரத்தை தொடங்கிய மத்திய அமைச்சகம் எது?



**அ) கல்வி அமைச்சகம் ☑**

ஆ) கலாசார அமைச்சகம்

இ) சுற்றுலா அமைச்சகம்

ஈ) வெளியுறவு அமைச்சகம்

✓ நாட்டின் கலாசார பன்முகத்தன்மை மற்றும் பன்மொழி பயன்பாட்டை ஊக்குவித்து, 'ஒன்றுபட்ட பாரதம்–வலிமையான பாரதம்' என்ற உணர்வை ஏற்படுத்தும் விதமாக, மத்திய கல்வித்துறை, மொழிச்சான்றிதழ் தன்பட இயக்கத்தை தொடங்கியுள்ளது.

✓ மத்திய கல்வித்துறை மற்றும் MyGov இந்தியா ஆகியவை இதற்கென 'பாஷா சங்கம்' என்ற செல்போன் செயலியை உருவாக்கியுள்ளன. இந்தச் செயலியைப் பயன்படுத்தி, அட்டவணையிடப்பட்ட 22 இந்திய மொழிகளில் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் 100+ வாக்கியங்களை கற்றுக் கொள்ளலாம். இந்தச்சான்றிதழுடன் மக்கள் செல்பி எடுத்து அதனை தங்களது சமூக ஊடக கணக்கு வாயிலாக 'மொழிச்சான்று தன்படம்' எனப் பதிவேற்றஞ்செய்யலாம்.

---

**5.** சமீப செய்திகளில் இடம்பெற்ற ஸ்மீன்யீ தீவு (பாம்புத் தீவு) அமைந்துள்ள கடல்/பெருங்கடல் எது?



**அ) கருங்கடல் ☑**

ஆ) பசிபிக் பெருங்கடல்

இ) மத்தியதரைக்கடல்

ஈ அட்லாண்டிக் பெருங்கடல்

✓ ஸ்மீன்யீ தீவு (பாம்புத் தீவு) என்பது உக்ரைனுக்குச் சொந்தமான சுமார் 16 ஹெக்டேர் பரப்பளவிலான பாறைத் தீவாகும். இது கருங்கடலில் கிரிமியாவிற்கு மேற்கே 300 கிமீ தொலைவில் உள்ளது.

✓ ரஷ்யப்படைகளிடம் இருந்து இத்தீவைக்காத்த பதிமூன்று வீரர்களுக்கு உக்ரைன் அரசு மரியாதை செலுத்தியுள்ளது. உக்ரேனிய அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, மரணித்த ஒவ்வொரு ராணுவ வீரருக்கும் "உக்ரைனின் நாயகன்" என்ற பட்டத்தை வழங்கினார்.

---

**6.** அன்டோனியோ கோஸ்டா, கீழ்காணும் எந்த நாட்டின் பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்?



அ) இத்தாலி

**ஆ) போர்ச்சுகல் ☑**

இ) ஜெர்மனி

ஈ) இஸ்ரேல்

✓ கடந்த 2015ஆம் ஆண்டு முதல் போர்ச்சுகலின் பிரதமராக இருந்துவருகிறார் அன்டோனியோ கோஸ்டா. சமதர்மவாத கட்சியின் தலைவரான கோஸ்டா, சமீபத்தில் நடந்த பொதுத்தேர்தலில் 2ஆவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

**7.** 'DESH–Stack' என்பது எத்துறையுடன் தொடர்புடைய இணையதளமாகும்?




அ) முதலீடு

**ஆ) திறன் மேம்பாடு ☑**

இ) ஜிஎஸ்டி

ஈ) ஊட்டச்சத்து

- ✓ மத்திய பட்ஜெட்டில் 'திறன் மற்றும் வாழ்வாதாரத்திற்கான டிஜிட்டல் சூழலமைப்பு' அல்லது 'DESH-Stack' இணைய தளம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ இணையவழி பயிற்சிமூலம் நாட்டின் குடிகளுக்கு திறன் அல்லது மேம்பாட்டை வளர்த்தெடுப்பதை இது தனது நோக்கமாகக்கொண்டுள்ளது. பொருத்தமான வேலைகள் மற்றும் தொழில்முனைவு வாய்ப்புகளை கண்டறிதற்கான நம்பகமான வாய்ப்புகளை இது வழங்கும்.

---

**8.** **ஒரு பன்னாட்டுக் குழு நடத்திய ஒரு புதிய ஆய்வின்படி, இன்னமும் கண்டுபிடிக்கப்படாத மொத்த மரங்களின் எண்ணிக்கை என்ன?**

அ) 92

ஆ) 920

**இ) 9200 ☑**

ஈ) 19200



- ✓ உலகம் முழுமைக்கும் உள்ள 100 அறிவியலாளர்கள் இணைந்து நடத்திய ஆய்வில், பூமியில் உள்ள மொத்த மர இனங்களின் எண்ணிக்கை 73,000 என்று கண்டறியப்பட்டது. 9,200 மர இனங்கள் மர்மமானவை மற்றும் கண்டுபிடிக்கப்படாமல் உள்ளன என்பதையும் இந்த ஆய்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- ✓ பிறவிடங்களைவிட தென்னமெரிக்காவில் 40 சதவீதத்தி -ற்கும் அதிகமான கண்டுபிடிக்கப்படாத மர இனங்கள் உள்ளன. இம்மதிப்பீடுகளின்படி, பூமியின் அனைத்து மர வகைகளிலும் 43% தென்னமெரிக்காவில் உள்ளன. அதைத்தொடர்ந்து யூரேசியா (22 சதவீதம்), ஆப்பிரிக்கா (16 சதவீதம்) ஆகியன உள்ளன.

---

**9.** **'தேசிய புரத நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) மார்ச் 01

ஆ) மார்ச் 02

**இ) பிப்ரவரி 27 ☑**

ஈ) பிப்ரவரி 28

- ✓ தேசிய அளவிலான பொதுநல முன்னெடுப்பான 'Right to Protein' இந்தியாவின் முதல் 'புரத நாளை' 2020 பிப்.27 அன்று அறிமுகப்படுத்தியது. புரதத்தின் ஊட்டச்சத்து நன்மைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. "Food Futurism" என்பது நடப்பாண்டு (2022) வரும் இந்நாளின் கருப்பொருளாகும்.

---

**10.** **இந்திய ரயில்வேயின் எந்த நெட்வொர்க் 100ஆவது ஜவுளி எக்ஸ்பிரஸை இயக்கி சாதனை படைத்துள்ளது?**

**அ) மேற்கு ரயில்வே ☑**

ஆ) மத்திய ரயில்வே

இ) வடக்கு ரயில்வே

ஈ) வட மேற்கு ரயில்வே

- ✓ மேற்கு ரயில்வேயின் மும்பை மத்திய கோட்டம், சல்தாகன் பகுதியிலிருந்து (சூரத்) ஷாங்ரயிலுக்கு (காரக்பூர் கோட்டம், தென்கிழக்கு ரயில்வே) ஜவுளிப்பொருட்கள் ஏற்றிய 100ஆவது ரயிலை இயக்கி சாதனை படைத்துள்ளது. முதலாவது ரயில் உத்னாவிலிருந்து 01.09.2021 அன்று இயக்கப்பட்டது.
- ✓ ஐந்து மாதங்களுக்குள் இந்தச் சாதனை எட்டப்பட்டுள்ளது. இந்த ஜவுளி எக்ஸ்பிரஸ்மூலம் இதுவரை இரயில்வே துறைக்கு ₹10.2 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சீர்மிகு நகரம் திட்டத்தில் முறைகேடு: ஒரு நபர் ஆணையத்தை அமைத்தது தமிழக அரசு**

'சீர்மிகு நகரம்' திட்டத்தில் நடைபெற்ற முறைகேடு தொடர்பாக விசாரணை செய்ய ஒரு நபர் விசாரணை ஆணையத்தை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. ஓய்வு பெற்ற இ ஆ ப அதிகாரி தேவிதார் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

சீர்மிகு நகரம் திட்ட முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்தி மூன்று மாதங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

சென்னை, கோவை, மதுரை, திருப்பூர் உள்பட 11 நகரங்களில் 'சீர்மிகு நகரம்' திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. 'சீர்மிகு நகரம்' திட்ட முறைகேடு குறித்து விசாரணை நடத்த விசாரணைக் குழு அமைக்கப்படும் என ஏற்கனவே முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவித்து இருந்த நிலையில், ஒருநபர் ஆணையத்தை தமிழக அரசு அமைத்துள்ளது.

---

**2. முதலீட்டு கண்காட்சி: முதலமைச்சர் ஸ்டாலின் துபை பயணம்**

சர்வதேச அளவில் பிரமாண்ட முறையில் நடைபெறும் தொழில் முதலீட்டு காட்சியில் பங்கேற்க முதலமைச்சர் மு க ஸ்டாலின், துபை செல்லவுள்ளார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது.

துபையில் நடைபெறும் தொழில் கண்காட்சி சர்வதேச அளவில் புகழ்பெற்றது. இந்தக் கண்காட்சியில் 180க்கும் மேற்பட்ட நாடுகள் தங்களது அரங்குகளை அமைக்கும். இந்த ஆண்டும் சர்வதேச கண்காட்சி நடைபெறவுள்ளது. தமிழகத்தின் சார்பில் கைத்தறி, வேளாண்மை உள்ளிட்ட காட்சி அரங்குகள் அமைக்கப்படவுள்ளன.

---

**3. அரசு குழந்தைகள் மையங்களில் தங்கியுள்ள பெண்களுக்கு தற்காப்பு பயற்சி அளிக்க மத்திய அரசு திட்டம்**

பெண்களின் பாதுகாப்புக்காக அரசு நடத்தும் குழந்தைகள் மையங்களில் தங்கியுள்ள பெண்களுக்கு தற்காப்பு பயிற்சி அளிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

பெண்கள் நாள் மார்ச்.8 அன்று கொண்டாடப்படுகிறது. இதற்காக நாடு முழுவதும் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

பெண்கள் பாதுகாப்பின் முக்கிய அங்கமாக இளம் பெண்களுக்கு தற்காப்புப் பயிற்சி அளிக்க மத்திய அரசு

முடிவுசெய்துள்ளது. மத்திய அரசால் நடத்தப்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் & கடினமான சூழ்நிலைகளில் சிக்கித்தவிக்கும் பெண்களுக்கான தங்குமிடங்களிலும் 704 மையங்களில் இளம்பெண்கள், பெண் பணியாளர்க –ளுக்கு தற்காப்பு பயிற்சியளிக்க மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது.

**அவசரகால உதவி எண்**

தேசிய அவசரகால உதவி எண் 112 மற்றும் பெண்களுக்கான உதவி எண்ணான 181 ஆகியவை இணைக்கப்படும். இந்த இரண்டு எண்களில் எதை அழைத்தாலும் ஆபத்தில் உள்ள பெண்கள் உதவிகளை பெறமுடியும். ஆபத்தில் உள்ள பெண்கள் 112 எண்ணை அழைத்தால் அது 181'க்கு அனுப்பப்படும். இது ஆபத்துக் காலத்தில் பெண்களுக்கான உதவியை மேம்படுத்தும்.

**1.** 2022 – தேசிய அறிவியல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

**அ) Integrated Approach in Science and Technology for Sustainable Future ☑**



ஆ) Science and Technology for Atmanirbhar Bharat

இ) Vigyan Sarvatra Pujyate

ஈ) Amrut Kaal Vigyan

✓ 'ராமன் விளைவு' கண்டுபிடிக்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் ஒவ்வோராண்டும் பிப்.28 அன்று இந்தியாவில் 'தேசிய அறிவியல் நாள்' அனுசரிக்கப்படுகிறது. அதே நாளில், சர் சி வி ராமன் 'ராமன் விளைவு' கண்டுபிடிப்பை அறிவித்தார். மேலும் அவருக்கு 1930இல் 'நோபல் பரிசு' வழங்கப்பட்டது. "Integrated Approach in Science and Technology for Sustainable Future" என்பது 2022–தேசிய அறிவியல் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**2.** **இந்தியாவில் விளையும் அனைத்து பசுமை உணவு வகைகளிலும் அதிகமாக ஏற்றுமதியான பொருள் எது?**

**அ) பசுந்திராட்சை ☑**



ஆ) கொய்யா

இ) பசுமையான மாம்பழங்கள்

ஈ) வெற்றிலை & பாக்கு

✓ இந்தியாவின் பழங்கள் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க வளர்ச்சியை கண்டுள்ளது. பழங்கள் பிரிவில் திராட்சை அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த 2020–21ஆம் ஆண்டில் திராட்சை ஏற்றுமதியின் மதிப்பு $314 மில்லியன் அமெரிக்க டாலர்.

✓ இதர பழங்களின் ஏற்றுமதி மதிப்பு $302 மில்லியன் அமெரிக்க டாலராகவும், மாம்பழங்களின் ஏற்றுமதி $36 மில்லியன் டாலராகவும், வெற்றிலை மற்றும் பாக்குகளின் ஏற்றுமதி $19 மில்லியன் டாலராகவும் உள்ளது. இந்தியாவின் மொத்த பழங்கள் ஏற்றுமதியில், திராட்சை மற்றும் இதர பழங்கள் 92 சதவீதம் உள்ளன.

---

**3.** **2022ஆம் ஆண்டு பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் இந்தியாவிலிருந்து பங்கேற்ற ஒரே போட்டியாளர் யார்?**

**அ) ஆரிப் கான் ☑**



ஆ) நீரஜ் சோப்ரா

இ) சிவ கேசவன்

ஈ) ஜெகதீஷ் சிங்

✓ ஸ்லாலோம் மற்றும் ஜெயண்ட் ஸ்லாலோம் போட்டிகளில் பங்கேற்கும் ஆரிப் கான், 2022ஆம் ஆண்டு பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில், இந்தியாவிலிருந்து பங்கேற்கும் ஒரே போட்டியாளர் ஆவார். ஈராண்டுகளுக்கு முன்பு கால்வன் மோதலில் காயமடைந்த சீன இராணுவ வீரர் ஒலிம்பிக் ஜோதியை ஏந்தியதை அடுத்து, 2022 பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கை அரசியல் ரீதியாக புறக்கணிப்ப–தாக இந்தியா அறிவித்தது.

---

**4.** CPEC என்பது சீனாவின் சிஞ்சியாங் பகுதியையும் எந்த நாட்டின் குவாடர் துறைமுகத்தையும் இணைக்கும் ஒரு பொருளாதார வழித்தடமாக உள்ளது?

அ) ஈரான்



**ஆ) பாகிஸ்தான் ☑**

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) கஜகஸ்தான்

✓ சீனா–பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் (CPEC) என்பது சீனாவின் வடமேற்கு சிஞ்சியாங் உய்குர் பகுதி மற்றும் பாக்கின் மேற்கு மாகாணமான பலுசிஸ்தானில் உள்ள குவாடர் துறைமுகத்தை இணைக்கும் உட்கட்ட–மைப்புத் திட்டங்களுக்கான 3,000–கிமீ நீளமுடைய பாதையாகும். $60 பில்லியன் டாலர் சீனா–பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தின் இரண்டாம் கட்டத்தை தொடங்குவதற்கு பாகிஸ்தான் சமீபத்தில் சீனாவுடன் ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

---

**5.** 'பால சுவராஜ்' தளத்துடன் தொடர்புடையது எது?

அ) பிரதம் அறக்கட்டளை

**ஆ) தேசிய சிறார் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ☑**

இ) பன்னாட்டு மன்னிப்பு அவை

ஈ) தேசிய மனித உரிமைகள் ஆணையம்

✓ சிறார் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணையம் (NCPCR) ஆனது அரசு சாரா அமைப்புகள் மற்றும் ஐநா நிறுவனங்களுடன் இணைந்து வீதிகளில் வாழும் குழந்தைகளை அடையாளம் காணுதல், அவர்களை மீட்டல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் பற்றிய தேசிய அளவிலான கூட்டத்தை ஏற்பாடு செய்தது.

✓ NCPCR, 'பால ஸ்வராஜ் இணையதளம் – Children in Street Situations (CiSS)' ஒன்றைத் தொடங்கியுள்ளது. முன்னதாக, COVID–19 காரணமாக பெற்றோரை இழந்த குழந்தைகளைக் கண்காணிக்க NCPCR, 'பால ஸ்வராஜ் (கோவிட்–கேர்)' போர்ட்டலை உருவாக்கியது.

---

**6.** 'SWIFT' நிதிச்செய்தியிடல் சேவையில் 'S' என்பது எதைக் குறிக்கிறது?

அ) Secure

**ஆ) Society ☑**

இ) Simple

ஈ) Service

✓ SWIFT அமைப்பு என்பது Society for Worldwide Interbank Financial Telecommunication என்பதன் சுருக்கமாகும். இது பாதுகாப்பான நிதிச்செய்தியிடல் சேவைகளை வழங்கும் உலகின் முன்னணி வழங்குநராகும். அண்மையில், அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பல்வேறு ரஷ்ய வங்கிகளை SWIFT அமைப்பிலிருந்து நீக்க முடிவுசெய்தன.

✓ ரஷ்ய மத்திய வங்கியின் சொத்துக்கள் முடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது ரஷ்யாவின் வெளிநாட்டு இருப்புக்களை அணுகும் திறனைக் கட்டுப்படுத்துகிறது.

**7.** 'மில்லினியம் சேலஞ்ச் கார்ப்பரேஷன்' என்பது எந்த நாட்டின் முன்முயற்சியாகும்?

**அ) அமெரிக்கா ☑**

ஆ) ரஷ்யா

இ) சீனா

ஈ) ஜப்பான்

- ✓ கடந்த 2004இல் அமெரிக்கா உருவாக்கிய மில்லினியம் சேலஞ்ச் கார்ப்பரேஷனானது பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்க பெரும் மானியங்களை வழங்குகிறது. சமீபத்தில், நேபாளத்தில் நடந்த போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பையும் மீறி, அந்த நாட்டின் நாடாளுமன்றம், $500 மில்லியன் மானியத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக நேபாளம் அமெரிக்க அரசாங்கத்தின் MCC ஒப்பந்தத்தில் கடந்த 2017இல் கையெழுத்திட்டது. ஆனால் அரசியல் கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகள் காரணமாக அதற்கான ஒப்புதல் இன்னமும் பெறப்படவில்லை.

---

**8.** பன்னாட்டு அணுசக்தி முகமையின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

அ) ஜெனீவா

**ஆ) வியன்னா ☑**

இ) நியூயார்க்

ஈ) மாஸ்கோ

- ✓ பன்னாட்டு அணுசக்தி முகமை என்பது ஒரு பன்னாட்டு அமைப்பாகும். இது அணுவாற்றலின் அமைதியான பயன்பாட்டை ஊக்குவிக்கவும், அணுவாயுதங்களுக்கான அதன் பயன்பாட்டைத் தடுக்கவும் எண்ணுகிறது. இதன் தலைமையகம் வியன்னாவில் உள்ளது.
- ✓ IAEA'இன் 35 நாடுகளைக் கொண்ட ஆளுநர்கள் குழு உக்ரைன்குறித்த அவசரக்கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. வாரிய உறுப்பினர்களான கனடா மற்றும் போலந்து உக்ரைனின் வேண்டுகோளின் பேரில் இக்கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தன. இவ்விரு நாடுகளுமே அவ்வாரியத்தில் இடம்பெறாதவையாகும்.

---

**9.** InDEA 2.0 பற்றிய வரைவு அறிக்கையை வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?

**அ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஆ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்




இ) நிதி அமைச்சகம்

ஈ) கார்ப்பரேட் விவகார அமைச்சகம்

- ✓ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது இந்திய டிஜிட்டல் சூழல் கட்டமைப்பு 2.0 அல்லது InDEA 2.0 பற்றிய வரைவு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ✓ InDEA 2.0, ஒரு குடிமகன் வைத்திருக்க வேண்டிய டிஜிட்டல் அடையாளங்களின் எண்ணிக்கையை மேம்படுத்த முற்படும் 'Federated Digital Identities'இன் மாதிரியை முன்மொழிகிறது. இந்த வரைவு அறிக்கைக்கு முன்னாள் MeitY செயலாளர் J சத்யநாராயணா தலைவராகவும், தற்போதைய செயலாளர் அஜய் பி சாவ்னி இணைத் தலைவராகவும் உள்ளார்.

---

**10.** இந்தியாவில் எந்தத் தேதியில் தேசிய பாதுகாப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது?

**அ) மார்ச் 4 ☑**



ஆ) மார்ச் 3

இ) மார்ச் 1

ஈ) மார்ச் 2

- ✓ பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து நாட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.4ஆம் தேதியன்று இந்தியாவில் தேசிய பாதுகாப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் தேசிய பாதுகாப்பு நாளுக்கானக் கருப்பொருளாக, "Nurture young minds develop a Safety Culture" தேர்வுசெய்யப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு வாரம் மார்ச் 4 முதல் மார்ச் 10 வரை அனுசரிக்கப்படுகிறது.
- ✓ நடப்பு 2022ஆம் ஆண்டு 51ஆவது தேசிய பாதுகாப்பு நாள் / தேசிய பாதுகாப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 28 ஆண்டுக்கு பிறகு மார்ச் மாதத்தில் காற்றழுத்த தாழ்வு; வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் எஸ் பாலச்சந்திரன் தகவல்**

வங்கக்கடலில் 28 ஆண்டுகளுக்கு பிறகு மார்ச் மாதத்தில் காற்றழுத்த தாழ்வுமண்டலம் உருவாகி இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் எஸ் பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இவ்வாறு பருவம் தவறி மழை பெய்வது குறித்து இந்திய வானிலை ஆய்வுமையத்தின் தென்மண்டல தலைவர் எஸ் பாலச்சந்திரன் கூறும்போது,

"மார்ச் மாதத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாவது அரிதானது தான். இதுவரை 1938, 1994 ஆகிய இரு ஆண்டுகளில் மார்ச் மாதத்தில் காற்றழுத்த தாழ்வுமண்டலங்கள் ஏற்பட்டுள்ளன. இவையிரண்டும் தமிழ்நாட்டின் கரையை நோக்கி நகர்ந்து கரையை வந்து அடைவதற்குள் வலுவிழந்துவிட்டன. 28 ஆண்டுகட்குப் பிறகு மீண்டும் மார்ச் மாதத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது". இவ்வாறு அவர் கூறினார்.

---

**2. 16 ஆண்டுகளுக்குப் பிறகு நகர்ப்புற உள்ளாட்சிகளில் இன்று மறைமுகத் தேர்தல்**

தமிழ்நாட்டில் 16 ஆண்டுகளுக்குப் பிறகு நகர்ப்புற உள்ளாட்சிகளில் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க மறைமுக தேர்தல் நடைபெறவுள்ளது. கடந்த 2006இலும் இதுபோன்றே மறைமுகத் தேர்தல் நடந்தது.

---

**3. துப்பாக்கி சுடுதல்: இந்திய மகளிரணிக்கு தங்கம்**

எகிப்தில் நடைபெறும் ISSF உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் அணிகள் பிரிவில் இந்தியாவுக்கு தங்கம் கிடைத்தது.

இறுதிச்சுற்றில் இந்தியாவின் ஸ்ரீநிவேதா, ஈஷா சிங், ருசிதா வினெர்கர் ஆகியோர் கூட்டணி 16–6 புள்ளிகள் கணக்கில் ஜெர்மனியின் ஆண்ட்ரியா கேத்ரினா எக்னர், சாண்ட்ரா ரீட்ஸ், கேரினா விம்மர் கூட்டணியை வீழ்த்தி முதலிடம் பிடித்தது.

வியாழக்கிழமை நிலவரப்படி, இப்போட்டியில் இந்தியா 2 தங்கம், 1 வெள்ளி என 3 பதக்கங்களுடன் பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறது.

---

**3. இன்றுமுதல் மகளிர் உலகக்கோப்பை**

ஐசிசியின் மகளிர் ஒன்டே கிரிக்கெட் உலகக்கோப்பை போட்டி நியூஸிலாந்தில் வெள்ளிக்கிழமை தொடங்குகிறது.

முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்து – மேற்கிந்தியத் தீவுகள் மோதுகின்றன. இந்தியா தனது முதல் ஆட்டத்தில் 6ஆம் தேதி பாகிஸ்தானைச் சந்திக்கிறது.

பின்னர் நியூஸிலாந்தை 10ஆம் தேதியும், மேற்கிந்தியத் தீவுகளை 12ஆம் தேதியும், இங்கிலாந்தை 16ஆம் தேதியும் எதிர்கொள்கிறது. அடுத்து ஆஸ்திரேலியாவுடன் 19ஆம் தேதியும், வங்கதேசத்துடன் 22ஆம் தேதியும், தென்னாப்பி–ரிக்காவுடன் 27ஆம் தேதியும் விளையாடுகிறது.

கரோனா சூழல்காரணமாக ஓராண்டு தாமதமாக நடக்கும் இப்போட்டியின் ஆட்டங்கள், நியூஸிலாந்தின் 6 நகரங்களி–ல் நடைபெறவுள்ளன. 8 அணிகளும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் அணியும், மற்றொரு அணி–யுடன் தலா ஒருமுறை மோதும். லீக் ஆட்டங்கள் முடிவில் இருபிரிவுகளிலும் முதலிரு இடங்களில் இருக்கும் அணிகள் அரையிறுதி ஆட்டங்களுக்கு தகுதிபெறும்.

---

**4. நீர்மின்திட்டங்கள் பற்றிய கூடுதல் விவரங்கள்: பாகிஸ்தானுக்கு அளிக்க இந்தியா ஒப்புதல்**

சிந்து நதி மற்றும் அதன் கிளையாறுகளில் கட்டப்பட்டு வரும் நீர்மின்திட்டங்கள் பற்றிய கூடுதல் விவரங்களை பாகிஸ்தானுடன் பகிர்ந்துகொள்வதற்கு இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது.

சிந்து, ஜீலம், சீனாப் ஆகிய நதிகளின் நீரை பாகிஸ்தானும், சட்லெஜ், பியாஸ், ரவி ஆகிய நதிகளின் நீரை இந்தியாவும் தடையின்றி பயன்படுத்திக்கொள்ள இருநாடுகளுக்கு இடையே 1960இல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தப்படி, சிந்து நதி நீர் நிரந்தர ஆணையத்தின் கூட்டம், ஆண்டுக்கு ஒரு முறை பாகிஸ்தானில் அல்லது இந்தியாவில் நடைபெற வேண்டும். கடந்த ஆண்டு இந்தியாவில் கூட்டம் நடைபெற்றதால், இந்த ஆண்டு பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் மார்ச்.1ஆம் தேதி தொடங்கி 3 நாட்கள் நடைபெற்றது.

அதில், பாகிஸ்தான் தரப்பில் அந்நாட்டு சிந்து நதி நீர் ஆணையர் மெஹர் அலி ஷா தலைமையிலான குழுவும் இந்தியத் தரப்பில் சிந்து நதி நீர் ஆணையர் பிரதீப் குமார் சக்சேனா தலைமையிலான குழுவும் கலந்துகொண்டு விவாதித்தன.

கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள் குறித்து கூறியிருப்பதாவது:

"சிந்து நதி நீர் ஆணைய ஒப்பந்தப்படி, அந்த நதிகளில் இந்தியா நீர்மின் திட்டங்களைத் தொடங்கலாம். அந்தத் திட்டத்தால் தங்களுக்கு பாதிப்பு இருப்பதாகக் கருதினால் பாகிஸ்தான் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம்.

சிந்து மற்றும் அதன் கிளையாறுகளில் 10 நீர்மின் திட்டங்களை இந்தியா மேற்கொண்டுள்ளது. அவற்றில் 9 திட்டங்கள் 25 மெகாவாட் மற்றும் அதற்குக் குறைவான மின்னுற்பத்தித் திறன் கொண்டவை. இந்த நீர்மின் திட்டங்கள்பற்றிய விவரங்களை பாகிஸ்தான் கேட்டுக் கொண்டதன் பேரில், அந்நாட்டு குழுவிடம் இந்தியத் தரப்பு அளித்தது. ஆனால், அந்த விவரங்கள் தெளிவின்றி இருப்பதாக பாகிஸ்தான் தரப்பு கூறியுள்ளது.

அதற்கு, 'சிறிய நீர்மின் திட்டங்களின் வரைபடங்கள், தொழில்நுட்பங்கள்பற்றிய விவரங்கள் மாநில அரசுகளிடம் போதிய அளவில் இருக்காது. எனவே, சம்பந்தப்பட்ட நிறுவனங்களைத் தொடர்புகொண்டு கூடுதல் விவரங்களைப் பெற்றுத்தரப்படும்' என இந்தியா தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. மேலும், பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்படும் ஆட்சேபங்களை திறந்த மனதுடன் பரிசீலிக்கவும் இந்திய தரப்பு ஒப்புக்கொண்டது என்று அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது" எனக்கூறப்பட்டுள்ளது.

---

**5. தேசிய செஸ்: அர்ஜூன் சாம்பியன்**

உத்தர பிரதேசத்தில் நடைபெற்ற 58ஆவது சீனியர் தேசிய செஸ் சாம்பியன்ஷிப்பில் தெலங்கானாவின் அர்ஜூன் எரிகாய்சி வாகை சூடினார்.

11 சுற்றுகளின் முடிவில் அர்ஜூன், தமிழகத்தைச் சேர்ந்த டி குகேஷ், பி இனியன் ஆகிய மூவருமே 8.5 புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தனர். இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்க நடத்தப்பட்ட 'டை–பிரேக்கரில்' வெற்றி பெற்று அர்ஜூன் சாம்பியன் ஆனார். அவருக்கு ₹6 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

குகேஷ் 2ஆம் இடமும், இனியன் மூன்றாமிடமும் பிடிக்க, நடப்பு சாம்பியனாக இருந்த மற்றொரு தமிழரான அரவிந்த் சிதம்பரம் 8 புள்ளிகளுடன் 4ஆம் இடம் பிடித்தார்.

**திவ்யா முதலிடம்:** முன்னதாக, இப்போட்டியன் மகளிர் பிரிவில் மகாராஷ்டிரத்தின் திவ்யா தேஷ்முக் சாம்பியன் ஆக, சாக்ஷி சித்லாங்கே 2ஆம் இடமும், ஆந்திரத்தின் பிரியங்கா நுடாகி 3ஆம் இடமும் பிடித்தனர்.

---

**6. இன்று தேசிய பாதுகாப்பு தினம்**

"இளம்தலைமுறையினருக்கு பாதுகாப்பு கலாசாரத்தினை மேம்படுத்த புகட்டுவோம்" என்ற கருவுடன் இன்று 51ஆவது தேசிய பாதுகாப்பு தினம் கொண்டாடப்படுகிறது. தேசிய பாதுகாப்பு குழுமம் தொடங்கப்பட்ட மார்ச்.4ஆம் தேதி ஒவ்வோர் ஆண்டும் தேசிய பாதுகாப்பு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

---

**1. எந்த ஒழுங்குமுறை அமைப்பின் முதல் பெண் தலைவராக மாதபி புரி புச் நியமிக்கப்பட்டுள்ளார்?**

**அ) SEBI ☑**

ஆ) NABARD

இ) PFRDA

ஈ) IRDAI



✓ இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) புதிய தலைவராக மாதபி புரி புச் அவர்களை அரசாங்கம் நியமித்துள்ளது. இவர் செபியின் முதல் பெண் தலைவர் ஆவார். அஜய் தியாகியை அடுத்து ICICI செக்யூரிட்டிஸின் முன்னாள் தலைவரான திருமதி மாதபி புரி புச் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

---

**2. தேசிய வருமானத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, 2021–22இல் இந்தியாவின் மெய்யான GDP வளர்ச்சி என்ன?**

அ) 5.6 சதவீதம்

ஆ) 7.1 சதவீதம்

**இ) 8.9 சதவீதம் ☑**

ஈ) 10.5 சதவீதம்




✓ தேசிய புள்ளியியல் அலுவலகம், புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், 2021–22 தேசிய வருமானத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடுகள் மற்றும் 2021–22 ஆம் ஆண்டின் அக்டோபர்–டிசம்பர் காலாண்டிற்கான GDPஇன் காலாண்டு மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது.

✓ 2020–21இல் 6.6 சதவீதமாக இருந்த மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 2021–22இல் GDP உற்பத்தியின் வளர்ச்சி 8.9 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

---

**3. பூமியின் மிகப்பெரிய பள்ளமான 'யிலான்' பள்ளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நாடு எது?**

அ) ரஷ்யா

**ஆ) சீனா ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) ஜப்பான்



✓ வடகிழக்கு சீனாவில், 'யிலான்' எனப் பெயரிடப்பட்ட பிறை வடிவ பள்ளமானது கடந்த நூறாயிரம் ஆண்டுகளில் உருவான பூமியின் மிகப்பெரிய மொத்தல் நிலக்குழி என்ற சாதனையைப் படைத்துள்ளது.

✓ NASA புவி கண்காணிப்பு அறிக்கையின்படி, 2020ஆம் ஆண்டுக்கு முன்பு வரை, சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரேயொரு மொத்தல் நிலக்குழியாக லியோனிங்கில் கண்டறியப்பட்ட சியான் பள்ளம் இருந்தது. யிலான் பள்ளம், சுமார் 1.85 கிமீ விட்டத்துடன் உள்ளது. ரேடியோகார்பன் டேட்டிங் அடிப்படையில் சுமார் 46,000 முதல் 53,000 ஆண்டுகளுக்கு முன்பு இது உருவாகியிருக்கலாம்.

---

**4. இந்திய கடற்படையானது பின்வரும் எந்த நகரத்தில் 'செய்முறை விளக்கத்தை' நடத்தியது?**

அ) புனே

ஆ) கொச்சி

**இ) விசாகப்பட்டினம் ☑**

ஈ) எர்ணாகுளம்



✓ கடற்படையின் மிலன்–22 கூட்டுப்பயிற்சியை முன்னிட்டு, விசாகாப்பட்டின கடற்கரையில், 'செய்முறை விளக்க நிகழ்வுகளும் பன்னாட்டுக்கடற்படையினரின் அணிவகுப்–பும் நடத்தப்பட்டன.

✓ இந்திய கடற்படை கமாண்டோக்கள் வானில் இருந்து குதித்து சாகச நிகழ்ச்சிகள் நடத்தினர். இந்த நிகழ்ச்சிக்கு ஆந்திர பிரதேச முதலமைச்சர் YS ஜெகன் மோகன் ரெட்டி தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

---

**5. 'தேசிய அளவிலான விழிப்புணர்வுத் திட்டம் – சம்பவ்' என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் முன்னெடுப்பாகும்?**

அ) கல்வி அமைச்சு

**ஆ) MSME அமைச்சகம் ☑**

இ) திறன் மேம்பாடு & தொழில்முனைவோர் அமைச்சகம்

ஈ) பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

सूक्ष्म, लघु और मध्यम उद्यम मंत्रालय
MINISTRY OF
MICRO, SMALL & MEDIUM ENTERPRISES

✓ குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சகம் (MSME) 28.02.2022 முதல் 06.03.2022 வரை 'அமுதப் பெருவிழாவின்' கீழ் அதன், 'தனித்துவமிக்க வாரத்தை' கொண்டாடுகிறது. MSME அமைச்சகம் அதன், 'தேசிய அளவிலான விழிப்புணர்வுத் திட்டம் – சம்பவ்'இன் 2ஆம் கட்டத்தைத் தொடங்கவுள்ளது.

✓ இதன்மூலம் நாடு முழுவதும் உள்ள 1300 கல்லூரிகளில் இருந்து ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தொழில்முனைவோர் முயற்சியில் ஈடுபட ஊக்கப்படுத்தப்–படுவார்கள். இந்தத் திட்டத்தின் முதற்கட்டம் 2021'இல் தொடங்கப்பட்டது.

---

**6. கீழ்காணும் எந்த இடத்தில், இந்திய இரயில்வேக்கான சூரிய ஒளிமின்னழுத்த மின்னுற்பத்தி நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது?**

அ) மும்பை

ஆ) கொல்கத்தா

இ) ஜான்சி

**ஈ) பினா ☑**



✓ மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள பினாவில் பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிட் (BHEL)மூலம் 1.7 மெகாவாட் சோலார் ஒளிமின்னழுத்த மின்னுற்பத்தி ஆலை இந்திய இரயில்வேக்காக தொடங்கப்பட்டது. இந்திய ரயில்வேயின் இழுவை அமைப்புகளுக்கான மின்சாரம் இந்த ஆலை மூலம் நேரடியாக வழங்கப்படும்.

✓ இதன் வகையில் ரயில்வே நெட்வொர்க்கில் இயக்கப்பட்ட முதல் சூரிய மின்னுற்பத்தி நிலையம் இதுவாகும்.

---

**7. செர்னோபில் பேரழிவு நடந்த ஆண்டு எது?**



அ) 1972

**ஆ) 1986 ☑**

இ) 1997

ஈ) 2000

- ✓ 1986 ஏப்ரலில் செர்னோபில் அணுமின் நிலையத்தில் உலகின் மிகக்கொடிய அணு விபத்து ஏற்பட்டது. அதன் பின்னர், ஓர் அணு உலை வெடித்து ஐரோப்பா முழுவதும் அதன் கதிரியக்கக் கதிர்வீச்சு பரவியது.
- ✓ இந்த ஆலை கியேவிலிருந்து 130 தொலைவில் உள்ள பிரிபியாட்டில் அமைந்துள்ளது. கதிர்வீச்சுக் கசிவைத் தடுப்பதற்காக இவ்வணுவுலை இப்போது ஒரு பாதுகாப்பு சாதனத்தால் மூடப்பட்டுள்ளது. இந்த ஆலை முழுவதும் முடக்கப்பட்டுள்ளது. அறிவியலாளர்களின் கூற்றுப்படி, அடுத்த 24 ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்த இடத்தில் எந்த மனிதனும் வாழவியலாது. இது அணுக்கழிவுகளை சேமிக்கும் மையமாக செயல்பட்டுவருகிறது.

---

**8. 2022 மெக்சிகன் ஓபன் பட்டத்தை வென்ற டென்னிஸ் வீரர் யார்?**



அ) நோவக் ஜோகோவிச்

**ஆ) ரபேல் நடால் ☑**

இ) ரோஜர் பெடரர்

ஈ) டேனியல் மெட்வெடேவ்

- ✓ டென்னிஸில், ரபேல் நடால் (ஸ்பெயின்) பிரித்தானிய வீரர் கேமரூன் நோரியை 6–4 6–4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி நடப்பு 2022ஆம் ஆண்டின் மெக்சிகன் ஓபன் (அகாபுல்கோ பட்டம் எனவும் அழைக்கப்படுகிறது) ஒற்றையர் பட்டத்தை வென்றார். இது டென்னிஸ் வாழ்வில் அவரது 91ஆவது ATP பட்டமாகும். கடந்த 2005, 2013 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் ரபேல் நடால் மெக்சிகன் ஓபன் பட்டத்தை வென்றுள்ளார்.

---

**9. உலக உடல்பருமன் நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**

அ) மார்ச் 02

ஆ) மார்ச் 03

**இ) மார்ச் 04 ☑**

ஈ) மார்ச் 05

World Obesity Day March 4

- ✓ உலக உடல் பருமன் நாள் ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.04 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது உடல்பருமன் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்கும் அதை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் அனுசரிக்கப்படுகிறது.
- ✓ "Everybody Needs to Act" என்பது 2022'இல் வரும் உலக உடல் பருமன் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**10. ஹேமானந்தா பிஸ்வால் என்பவர் எந்த மாநிலத்தின் முதல் பழங்குடியின முதலமைச்சராக இருந்தார்?**



அ) ஹரியானா ஆ) ஜார்கண்ட்

இ) மத்திய பிரதேசம் **ஈ) ஒடிஸா ☑**

- ✓ ஒடிஸா மாநிலத்தின் முதல் பழங்குடியின முதல்வரும், மாநிலத்தின் கடைசி காங்கிரஸ் முதல்வருமான ஹேமானந்த பிஸ்வால் (82) அண்மையில் காலமானார்.
- ✓ ஜார்சுகுடா மாவட்டத்தைச்சேர்ந்த புயான் பழங்குடியினத்–தைச்சார்ந்தவரான ஹேமானந்த பிஸ்வால், 1989–1990 வரையிலும், 1999 – 2000 வரையிலும் என இரண்டு முறை முதலமைச்சராகப் பதவி வகித்துள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் 2024ஆம் ஆண்டுக்குள் குடிநீர் குழாய் இணைப்பு வசதி: மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்**

தமிழ்நாடு, கர்நாடகா கேரளா மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 2024ஆம் ஆண்டுக்குள் அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுவிடும் என மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, ஜல் ஜீவன் திட்டம் தொடங்கப்பட்டபோது, மொத்தம் இருந்த 1 கோடியே 26 லட்சத்து 89 ஆயிரம் கிராமப்புற வீடுகளில், 21.76 லட்சம் (17%) வீடுகளில் மட்டுமே குடிநீர் குழாய் இணைப்புகள் இருந்ததாகவும், 30.21 லட்சம் (20.4%) வீடுகளுக்கு திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு, தற்போது 51.97 லட்சம் (41%) வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

---

**2. 2030க்குள் புதைபடிவ எரிமம் அற்ற 500 ஜிகாவாட் எரிசக்தி பிரதமர் மோடி உறுதி**

2030ஆம் ஆண்டுக்குள் நிலக்கரிபோன்ற புதைபடிவ எரிமம் அற்ற 50% எரிசக்தி நிறுவும் திறனை இந்தியா அடையும்; இதன்மூலம், 500 ஜிகாவாட் புதைபடிவ எரிமம் அற்ற எரிசக்தித் திறன் இலக்கை அடைய முடியும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

உஜாலா திட்டத்தின் கீழ் 37 கோடி LED விளக்குகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 48,000 மில்லியன் கிலோ வாட் மின்சாரம் சேமிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வருடாந்திர கரியமில மாசு 4 கோடி டன் அளவுக்கு குறைந்துள்ளது என்றார் பிரதமர் மோடி.

---

**3. இரயில்கள் மோதி ஏற்படும் விபத்து.. தடுக்கும் 'கவச்' கருவி! இந்திய இரயில்வே சோதனை வெற்றி!**

இரயில்கள் நேருக்கு நேர் மோதி ஏற்படும் விபத்துகளை தடுக்கும் கருவியை இந்திய இரயில்வே வெற்றிகரமாக சோதித்துள்ளது.

லேசர் அடிப்படையிலான 'கவச்' என்ற கருவி, ஒரே தண்டவாளத்தில் 2 ரயில்கள் எதிரெதிரே வர நேர்ந்தால் இன்ஜின் இயக்கத்தை நிறுத்தி விபத்தைத் தடுக்கிறது.

தெலுங்கானாவில் செகந்திராபாத் அருகே இந்தக் கருவி சோதிக்கப்பட்டது.

**'கவச்' கருவியின் அம்சங்கள்:** 'கவச்' கருவி பொருத்தப்பட்ட இரயில் நிலையங்களில் நுழையும்போது ஒரு பாதையில் இருந்து மற்ற பாதைக்கு மாறும் முன்பு தானாக வேகத்தை 30 கிமீ அளவிற்கு குறைத்து மெதுவாகப் பயணிக்கும்.

இரயில்வே லெவல் கிராஸிங் கேட்டுகளை 'கவச்' கருவி பொருத்திய ரயில் நெருங்கும்போது தானாக ஒலி எழுப்பி சாலை பயன்பாட்டாளர்களை எச்சரிக்கும். விபத்தில்லாத ரயில் பயணமாக 'கவச்' கருவி முழு ரயிலையும் கவசமாக பாதுகாக்கும். சிவப்பு விளக்கைக் கண்டால் இரயிலை உடனே நிறுத்தும். ரயில்கள் நேருக்குநேர் வந்தாலும் இரு ரயில்களும் தானாக நின்றுவிடும். அதோடு பாரத கவசம் – அவசர நேரத்தில் ரயில் இன்ஜின் டிரைவர் பிரேக் பிடிக்க தாமதமாகும் போது 'கவச்' தானியங்கி கருவி ரயிலை நிறுத்தும். 2 ரயில்கள் நேருக்குநேர் மோதுவதை தடுக்கும்.

---

**4. உலக ரேஸ் வாக்கிங்: இந்திய மகளிர் சாதனை**

உலக தடகள ரேஸ் வாக்கிங் சாம்பியன்ஷிப்பில் 20 கிமீ பந்தயத்தில் இந்திய மகளிரணி வெண்கலப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

இந்தப் போட்டியின் 61 ஆண்டுகால வரலாற்றில் இந்திய மகளிர் பதக்கம் வென்றிருப்பது இதுவே முதன்முறை ஆகும். இப்போட்டியில் இந்திய ஆடவர் அணி கடந்த 2012இல் வெண்கலம் வென்றது நினைவுகூரத்தக்கது.

---

**5. சுழல் சூறாவளி மறைவு!**

சர்வதேச கிரிக்கெட்டில் சிறந்த ஸ்பின்னராக இருந்தவரும், ஆஸ்திரேலிய வீரருமான ஷேன் வார்னே காலமானார். அவருக்கு வயது 52.

'பால் ஆப் தி செஞ்சுரி'...

ஆஸ்திரேலிய அணிக்காக 1992 முதல் 2007 வரை 15 ஆண்டுகள் விளையாடியிருக்கிறார் வார்னே. அந்தக்கால கட்டத்தில் மிகச்சிறந்த ஸ்பின்னராக அறியப்படும் வார்னேவின் 'பால் ஆப் தி செஞ்சுரி' என்று பாராட்டப்படும் ஒரு பந்துவீச்சு மிகப்பிரபலமானதாகும். 1993இல் ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்டில் முதலில் இங்கிலாந்து பேட் செய்தது. 2–ஆவது நாளில் மைக் கேட்டிங்கிற்கு வார்னே வீசிய ஒரு லெக் பிரேக் பந்து அவர் சற்றும் கணிக்க முடியாத வகையில் திசைதிரும்பி ஸ்டம்ப் பெய்ல்ஸை தட்டியது. அத்தகைய ஓர் எதிர்பாராத பௌலிங்கை கண்டு கேட்டிங் மட்டுமல்லாது சர்வதேச கிரிக்கெட் சமூகமே ஆச்சரியமடைந்தது.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர்கள் வரிசையில், இலங்கையின் முத்தையா முரளீதரனை (800) அடுத்து வார்னே 708 விக்கெட்டுகள் உடன் 2ஆம் இடத்தில் உள்ளார். அவர்கள் இருவரையும் கௌரவிக்கும் வகையில் கடந்த 2007இல் ஆஸ்திரேலிய – இலங்கை மோதிய டெஸ்டுக்கு 'வார்னே–முரளிதரன் கோப்பை' டெஸ்ட் என்று பெயரிடப்பட்டது.

---

**6. தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் மார்ச் 30, 31இல் மகாகவி பாரதியார் நினைவுநூற்றாண்டு பன்னாட்டு ஆய்வரங்கம்**

தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் மகாகவி பாரதியார் நினைவு நூற்றாண்டு பன்னாட்டு ஆய்வரங்கம் மார்ச் 30, 31ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து துணைவேந்தர் வி திருவள்ளுவன் தெரிவித்திருப்பது:

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு நூற்றாண்டையொட்டி, தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை, இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை, வானவில் பண்பாட்டு மையம் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து 'மகாகவி பாரதியாரின் உரைநடை ஆக்கங்கள்' என்ற பன்னாட்டு ஆய்வரங்கத்தை மார்ச் 30, 31ஆம் தேதிகளில் நடத்தவுள்ளன.

---

**7. பிரம்மோஸ் ஏவுகணையின் நீட்டிக்கப்பட்ட நிலத்தாக்குதல் இலக்கை துல்லியமாகத் தாக்கி இந்திய கடற்படை வெற்றிகர சோதனை**

இந்திய கடற்படை பிரம்மோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையின் நீட்டிக்கப்பட்ட நிலத்தாக்குதல் இலக்கை துல்லியமாகத் தாக்கி வெற்றிகரமான சோதனையை மேற்கொண்டது. நாசகார கப்பலான INS சென்னையில் இருந்து இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சோதனையில் ஏவுகணை மிகத்துல்லியமாக இலக்கை தாக்கியது.

பிரம்மோஸ் ஏவுகணையும், அதனை ஏவிய ஐஎன்எஸ் சென்னை கப்பலும் உள்நாட்டிலேயே நவீன ஆற்றலுடன் தயாரிக்கப்பட்டவை என்பது கூடுதல் சிறப்பாகும். தற்சார்பு இந்தியா, இந்தியாவில் தயாரிப்போம் ஆகிய இந்தியாவின் முன்முயற்சிகளில் இந்திய கடற்படையின் பங்களிப்பாக இது அமைந்துள்ளது.

இச்சோதனைமூலம், இந்திய கடற்படை, கடலிலிருந்து வெகு தொலைவில் உள்ள நிலப்பரப்பை தேவைப்படும் இடத்திலும் நேரத்திலும் குறிவைத்து துல்லியமாகத் தாக்–கும் திறனைப்பெற்றிப்பது சாதனையாக கருதப்படுகிறது.

---

**8. டிஜிட்டல் பல்கலைக்கழகம் – இந்திய கல்வித் துறையில் புரட்சி: இந்தியாவில் முதன்முதலாக கேரள மாநிலத்தில் உருவாக்கம்**

இந்தியாவில் டிஜிட்டல் பல்கலைக் கழகம் தொடங்கப்படும் என்று கடந்த பட்ஜெட்டில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். டிஜிட்டல் பல்கலைக்கழகம் என்றால் என்ன, அது எப்படி செயல்படும்? என்று கல்வியாளர்களும் மாணவர் சமுதாயமும் குழம்பிவந்த நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, கடந்த மாதம் நடத்திய இணைய கருத்தரங்கு மூலம் இதற்கான அடுத்தகட்ட நகர்வு ஏற்பட்டுள்ளது.

டிஜிட்டல் பல்கலைக்கழகம் குறித்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும்படி கல்வித்துறை அறிஞர்களையும், உயர் அதிகாரிகளையும் பிரதமர் கேட்டுக் கொண்டார். அதுமட்டுமின்றி, 'அனைத்து பல்கலைக்கழகங்களும்

சேர்ந்து உருவாக்குவதுதான் டிஜிட்டல் பல்கலைக்கழகம். இது செயல்பாட்டுக்கு வந்தால் கல்லூரி மற்றும் பல்கலைகளில் இடம் கிடைக்கவில்லை என்ற பேச்சுக்கே இடமில்லை. மாணவர் சேர்க்கைக்கு எந்த வரம்பும் இல்லை' என்று குறிப்பிட்டு டிஜிட்டல் பல்கலைக்கழகத்தின் வடிவத்தை கோடிட்டுக் காட்டினார்.

பிரதமர் எடுத்த முயற்சியின் தொடர்ச்சியாக உயர்கல்வித் துறை செயலர்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் உயர்கல்வித் துறையை நிர்வகிக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் கூடி, டிஜிட்டல் பல்கலைக்கழக திட்டத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வது குறித்து விவாதித்தனர். அதில் சான்றிதழ், டிப்ளமோ, பட்டப்படிப்புகளை டிஜிட்டல் பல்கலைக்கழகம் மூலம் வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது.

பிளஸ் 2 தேர்ச்சிபெற்ற யார் வேண்டுமானாலும் டிஜிட்டல் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பட்டம் பெற முடியும். மாணவர் சேர்க்கை இடங்களுக்கு எந்த வரையறையும் இல்லை. எத்தனை மாணவர்கள் சேர்ந்தாலும் அனைவருக்கும் டிஜிட்டல் பல்கலைக்கழகம் மூலம் பட்டம் வழங்க முடியும். தற்போதுள்ள நடைமுறையில் மாணவர்களை கழித்து வெளியேற்றும் சேர்க்கை முறையே பின்பற்றப்படுகிறது. இதில் பல மாணவர்கள் உயர்கல்வி மையங்களில் இடம் கிடைக்காமல் வெளியேறும் நிலை ஏற்படுகிறது. இப்பிரச்சினைக்கு டிஜிட்டல் பல்கலைக்கழகம் தீர்வாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'ஹப்–ஸ்போக் மாடல்'

புதிய டிஜிட்டல் பல்கலைக்கழகம், இணையத் தொடர்புடன் கூடிய 'ஹப்–ஸ்போக் மாடல்' மூலம் இயங்கும். அதாவது, இந்தியாவில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் டிஜிட்டல் பல்கலைக்கழகத்தின் அங்கமாக இருக்கும். அவை அனைத்திடம் இருந்தும் பாடத்திட்டங்கள் மற்றும் கற்பித்தல் குறித்த வீடியோ விவரங்களைப் பெற்று அவற்றை மாணவர்களுக்கு வழங்கும் மையமாக டிஜிட்டல் பல்கலைக்கழகம் செயல்படும்.

இந்தியாவில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் மையமாக டிஜிட்டல் பல்கலைக்கழகம் செயல்பட்டு ஒரே இடத்தில் மாணவர்கள் சேரும் வகையில் உருவாகும். இந்த புரட்சிகரமான முயற்சிக்கு நிலையான இணையத்தொடர்பு, அவசியமான மின்னணு சாதனங்கள், மாணவர்கள் பாடங்களை கவனிக்கும் காலவரையறை, ஆன்லைன் மூலம் பாடங்களை மாணவர்களுக்கு கொண்டு சேர்க்கும் முறை ஆகியவை சவால்களாக இருக்கும் என்று கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், சவால்களைக் கடந்து 6 மாதம் முதல் ஓராண்டுக்குள் செயல்பாட்டுக்குள் அடியெடுத்து வைக்க வேண்டும் என்று மத்திய அரசு கால நிர்ணயம் வகுத்துள்ளது.

இந்த முயற்சியில் பைஜுஸ் போன்ற கல்வி கற்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தனியார் அமைப்புகளையும் பயன்படுத்திக் கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது. அவர்களிடம் உள்ள தொழில்நுட்ப உதவிகளை டிஜிட்டல் பல்கலைக்கழகத்துக்குப் பயன்படுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதற்காக சட்டத்தில் உரிய திருத்தங்களைக் கொண்டு வந்து கல்விப்பணியில் தனியாருக்கும் முக்கியப் பங்களிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான விதிகளை 2 மாதங்களுக்குள் உருவாக்கி வெளியிடும் பொறுப்பு யுஜிசி–யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 8–ம் வகுப்பில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 15 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 84 லட்சத்து 65 ஆயிரம் பேர் மட்டுமே கல்லூரிகளில் சேருகின்றனர். இன்னும் 15 ஆண்டுகளில் 18 முதல் 23 வயதுடைய இளைஞர்களில் 50 சதவீதம் பேரை உயர்கல்விக்குக் கொண்டு வர வேண்டும் என்ற இலக்கோடு டிஜிட்டல் பல்கலைக்கழகம் உருவாக்கப்படுகிறது.

மத்திய அரசின் இந்த முயற்சிக்கு உறுதுணையாக, படித்தவர்கள் நிறைந்த மாநிலமாகக் கருதப்படும் கேரளாவில் முதல் டிஜிட்டல் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாகச் செயல்பட்டு வரும் கேரள நிர்வாகவியல் ஐஐஐடி–யை தரம் உயர்த்தி அம்மாநில அரசு டிஜிட்டல் பல்கலைக்கழகமாக மாற்றியுள்ளது. இது மத்திய அரசின் டிஜிட்டல் பல்கலைக்கழக முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**9. இருசக்கர வாகன விபத்தில் இறப்பு 107 சதவீதம் அதிகரிப்பு – 2021–ல் நடந்த சாலை விபத்துகளில் 14,912 பேர் உயிரிழப்பு**

தமிழகத்தில் 2021–ல் நடந்த 55,713 வாகனவிபத்துகளில் 14,912 பேர் இறந்துள்ளனர். இது முந்தைய ஆண்டை விட 6,852 பேர்அதிகமாகும். இருசக்கர வாகன விபத்து உயிரிழப்பு 107 சதவீதம் அதிகரித்து உள்ளது,

தமிழகத்தில் சாலை விபத்துகள், இறப்புகளைக் குறைக்க போக்குவரத்து, காவல்துறை, சுகாதாரத் துறை உட்பட பல்வேறு துறைகளோடு இணைந்து தமிழக அரசு பணியாற்றி வருகிறது. இதனால், கடந்த 5ஆண்டுகளாக உயிரிழப்புகள் படிப்படியாக குறைந்து வந்தன.

குறிப்பாக, கடந்த 2016–ம் ஆண்டில் 17 ஆயிரத்து 218 ஆக இருந்த உயிரிழப்பு எண்ணிக்கை 2020–ல் 8 ஆயிரத்து 60 ஆககுறைந்தது. அதாவது, இலக்கு நிர்ணயித்த 50 சதவீதத்தை விட 54 சதவீதமாக குறைந்தது, தமிழக அரசின் சாதனையாக இருந்தது. இந்த நிலை தற்போது மாறியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளுக்கு பிறகு தமிழகத்தில் மீண்டும் சாலை விபத்தில் உயிரிழப்பு அதிகரித்துள்ளது.

**2021–ல் 14,912 பேர் உயிரிழப்பு**

இதுதொடர்பாக தமிழக அரசின் புள்ளிவிவரத்தில், "தமிழகத்தில் கடந்த ஆண்டில்நடந்த 55 ஆயிரத்து 713 சாலை விபத்துகளில்மொத்தம் 14 ஆயிரத்து 912 பேர் இறந்துள்ளனர். இதற்கு முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில் இது 85 சதவீதம் அதிகமாகும்.

இருசக்கர வாகன விபத்துகளில் மட்டும் 6,223 பேர் இறந்துள்ளனர். லாரிகளால் ஏற்பட்ட விபத்துகளில் 2,467 பேரும், கார்கள், டாக்சி விபத்துகளால் 2,467 பேரும், வேன் மற்றும் சிறிய வகை சரக்கு வாகனங்களால் 1,140 பேரும் இறந்துள்ளனர். அதுபோல், தேசிய நெடுஞ்சாலை விபத்துகளில் 4,129 பேரும், மாநில நெடுஞ்சாலை விபத்துகளில் 4,929 பேரும் இறந்துள்ளனர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**1. தேசிய சிறார்கள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தி –ன் (NCPCR) புதிய குறிக்கோள் வாசகம் என்ன?**

அ) Support to Children

**ஆ) Bhavishyo Rakshati Rakshit ☑**

இ) All–round Protections of Child Rights

ஈ) Dharmo Rakshati Rakshit

✓ மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி, தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் (NCPCR) புதிய குறிக்கோள் வாசகமான, "பவிஷ்யோ ரக்ஷதி ரக்ஷித் – எதிர்காலத்தை பாதுகாப்போம்" என்பதை அதன் 17ஆவது நிறுவன நாளில் புதுதில்லியில் உள்ள செங்கோட்டையில் வெளியிட்டார்.

✓ உயிர்த்தியாகஞ்செய்த BSF வீரர்களின் குழந்தைகளுக்கு உளவியல் மற்றும் சமூக பாதுகாப்பு ஆலோசனை வழங்க 'ஷகாரா' என்ற பெயரில் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு தேசிய ஆணையத்துடன் இணைந்து எல்லை பாதுகாப்பு படை ஏற்பாடு செய்திருந்த சிறப்பு நடவடிக்கையையும் மத்திய அமைச்சர் பாராட்டினார்.

---

**2. திட்டம் 15B'இன்கீழ் தயாரிக்கப்படும் இந்தியாவின் 4 மறைந்திருந்து தாக்கும் வழிசெலுத்துதல் இயக்கப்பட்ட ஏவுகணை அழிகலனுள்முதல் அழிகலனின் பெயரென்ன?**

அ) ஐஎன்எஸ் கொச்சி



**ஆ) ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் ☑**

இ) ஐஎன்எஸ் வீரா

ஈ) ஐஎன்எஸ் கட்டபொம்மன்

✓ 'INS விசாகப்பட்டினம்' என்னும் நாசகார கப்பலை ஆந்திர பிரதேச மாநில முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

✓ திட்டம் 15B'இன்கீழ் இந்தியாவிற்காக தயாரிக்கப்படும் 4 மறைந்திருந்து தாக்கும் வழிசெலுத்துதல் இயக்கப்பட்ட ஏவுகணை அழிகலனுள் இது முதல் அழிகலனாகும். இது இந்திய கடற்படையின் கடற்படை வடிவமைப்பு இயக்குந –ரகத்தால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டதாகும்.

✓ இது 75% உள்நாட்டு உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது. மும்பையின் மசகான் கப்பல்கட்டும் நிறுவனத்தின்மூலம் இந்தக் கப்பல் கட்டப்பட்டது.

---

**3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பேரன்ட்ஸ் கடல், எந்த 2 நாடுகளின் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது?**

அ) ரஷ்யா–உக்ரைன்




**ஆ) ரஷ்யா–நார்வே ☑**

இ) ரஷ்யா–போலந்து

ஈ) ரஷ்யா–பெலாரஸ்

✓ 'பேரன்ட்ஸ் கடல்' என்பது ஆர்க்டிக் பெருங்கடலின் விளிம்பில் உள்ள ஒரு கடல் ஆகும். இது நார்வே மற்றும் ரஷ்யாவின் வடக்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. இது ரஷ்யாவில் 'மர்மன் கடல்' என்றும் அழைக்கப்படுகிறது.

✓ ரஷ்யாவின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் பேரன்ட்ஸ் கடலில் பயிற்சி மேற்கொள்வதற்காக புறப்பட்டுச் சென்றன. சைபீரியாவிலுள்ள பனிக்காடுகளுக்கிடையில் கையில் எடுத்துச்செல்லக்கூடிய எறிகணை ஏவிகள் காணப்பட்ட –தை அடுத்து, ரஷ்யா அதிபர் விளாடிமிர் புடின் உக்ரைன் படையெடுப்பு பதட்டங்கள்பற்றி தமது நாட்டின் அணுசக்தி படைகளை அதிக எச்சரிக்கையுடன் இருக்குமாறு உத்தரவிட்டார்.

---

**4. குறைந்த கரிமத் தொழில்நுட்பங்கள் பற்றிய தேசிய புத்தாக்க மாநாட்டை ஏற்பாடு செய்த நிறுவனம் எது?**

அ) NITI ஆயோக்

**ஆ) எரிசக்தி திறன் பணியகம் ☑**

இ) ASSOCHAM

ஈ) IIT மெட்ராஸ்

✓ எரிசக்தி திறன் பணியகமானது (BEE) 'குறைந்த கரிமத் தொழில்நுட்பங்கள்குறித்த தேசிய புத்தாக்க மாநாட்டை" நடத்தி அதன் 20ஆம் நிறுவன நாளை நினைவுகூர்ந்தது.

✓ Facility for Low Carbon Technology Deployment (FLCTD) என்பது உலகளாவிய சுற்றுச்சூழல் வசதியால் நிதியுதவி அளிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இது ஐநா தொழிற்துறை மேம்பாட்டு அமைப்பு (UNIDO)மூலம் எரிசக்தி செயல்திறன் பணியகத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

---

**5. உக்ரைன், எத்தனை ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுடன் தனது எல்லையைப் பகிர்ந்துகொள்கிறது?**

அ) ஒன்று



ஆ) இரண்டு

இ) மூன்று

**ஈ) நான்கு ☑**

✓ உக்ரைன் 4 ஐரோப்பிய ஒன்றிய உறுப்புநாடுகளான ஹங்கேரி, போலந்து, ஸ்லோவாக்கியா (மேற்கு) மற்றும் ருமேனியா (தெற்கு) ஆகியவற்றுடன் தனது எல்லையை பகிர்ந்துகொள்கிறது. இது கிழக்கு மற்றும் வடகிழக்கில் ரஷ்யாவுடன் தனது எல்லையைப் பகிர்ந்துகொள்கிறது.

✓ உக்ரைன் வடக்கே பெலாரஸுடனும் தெற்கில் மால்டோ –வாவுடனும் தனது எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது. உக்ரைன் அதிபர் உரையாற்றி கைதட்டல்களைப்பெற்ற விவாதத்திற்குப்பிறகு, உக்ரைனை ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமைக்கான அதிகாரப்பூர்வ வேட்பாளராக மாற்ற ஐரோப்பிய நாடாளுமன்றம் பரிந்துரைத்தது.

---

**6. 'உலகளாவிய நெகிழி ஒப்பந்த' வரைவுக்கான ஆணையை அங்கீகரித்துள்ள சர்வதேச நிறுவனம் எது?**

அ) UNFCCC

**ஆ) ஐநா சுற்றுச்சூழல் அவை ☑**

இ) IPCC

ஈ) WWF

✓ நெகிழி மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக 175 உறுப்பு நாடுகளுடன் ஐநா சுற்றுச்சூழல் பேரவை,

நாடுகள் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படும் ஓர் ஆணையில் கையெழுத்திட்டது. அடுத்த 2 ஆண்டுகளில் உலகளாவிய நெகிழி ஒப்பந்தம் வரைவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும். நெகிழி உற்பத்தியைக் கையாள்வதற்கும் நெகிழியின் நச்சுச்சுமையை நிவர்த்திசெய்வதற்கும் இந்த ஆணை பரிந்துரைக்கிறது.

---

**7.** 'How Indians View Gender Roles in Families and Society' **என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) NITI ஆயோக்

ஆ) UNICEF

இ) பிரதம் அறக்கட்டளை

**ஈ) பியூ ஆராய்ச்சி மையம் ☑**

- ✓ 29,999 வயதுவந்த இந்தியர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில், வாஷிங்டன் DC'ஐச் சார்ந்த ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமான பியூ ஆராய்ச்சி மையம், 'How Indians View Gender Roles in Families and Society' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- ✓ இவ்வறிக்கையின்படி, பெண்கள் அரசியல் தலைவர்கள் ஆகி நாட்டை ஆள்வதை இந்திய ஆண்கள் வரவேற்கின் –றனர். ஆண்களைப்போலவே பெண்களும் அரசியலில் திறமையாக செயல்பட முடியும் என்ற கருத்தை 55 சதவீத ஆண்கள் ஒப்புக்கொள்கின்றனர்.
- ✓ பத்தில் ஒன்பது இந்தியர்கள் மனைவி எப்போதும் தனது கணவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற கருத்தை ஒப்புக்கொள்கிறார்கள். 34% பேர் குழந்தை பராமரிப்பு முதன்மையாக பெண்களால் கையாளப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர். 43% பேர் வருமானம் ஈட்டுவது ஆண்களின் கடமை என்று கூறியுள்ளனர்.

---

**8.** 'கொத்துக்குண்டுகள் மீதான தீர்மானம்' **கையெழுத்தா –ன ஆண்டு எது?**

அ) 1972

**ஆ) 2008 ☑**

இ) 2020

ஈ) 2021

- ✓ 2008 மேயில், 107 நாடுகள் கொத்துக்குண்டுகளைத் தடைசெய்யும் ஒரு பன்னாட்டு தீர்மானத்தைக் கொண்டு வந்தன. அதற்கு, 'கொத்துக்குண்டுகள் மீதான தீர்மானம்' என்று பெயரிடப்பட்டது. சமீபத்தில், ரஷ்யா உக்ரைனுக்கு எதிரான போரில் கொத்துக்குண்டுகள் மற்றும் வெற்றிட குண்டுகளை பயன்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டது.
- ✓ தீர்மானத்தின்படி, கொத்துக் குண்டுகள் ஒவ்வொன்றும் 20 கிகிராம்களுக்கு குறைவான எடையுள்ள வெடிக்கும் துணைக்குண்டுகளை வெளியிடுகின்றன.

---

**9.** **பன்னாட்டு கழிவெடுப்பவர்கள் (Waste Pickers') நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ) மார்ச் 01 ☑** ஆ) மார்ச் 02

இ) மார்ச் 03 ஈ) மார்ச் 05



- ✓ 11 தொழிலாளர்களின் கொடூரமான இறப்புக்கு வழிவகுத்த கொலம்பிய படுகொலையைக் குறிக்கும் வகையில் மார்ச்.1ஆம் தேதி பன்னாட்டு கழிவு எடுப்பவர்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் உலகெங்கிலும் உள்ள கழிவெடுப்பவர்கள் அல்லது மறுசுழற்சி செய்பவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்க முற்படுகிறது.

---

**10.** **அரசின் அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, இந்தியாவில் COVID-19 காரணமாக பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை என்ன?**

அ) 0.74 இலட்சம்

**ஆ) 1.54 இலட்சம் ☑**

இ) 5.54 இலட்சம்

ஈ) 15.54 இலட்சம்



- ✓ அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, இந்தியாவில் COVID-19 காரணமாக பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 1,53,827 ஆகும்.
- ✓ பெற்றோரை அல்லது பராமரிப்பாளர்களை இழந்த குழந்தைகளின் எண்ணிக்கையை மட்டும் இது கொண்டிருக்கவில்லை. லான்செட்டின் ஓர் அண்மைய ஆய்வில், இந்தியாவில் 19 லட்சம் குழந்தைகள் COVID-19 காரணமாக தங்களது பெற்றோர் அல்லது பராமரிப்பாளரை இழந்துள்ளனர் என்று கூறியிருந்ததற்கு பதிலளித்த பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், இந்த எண்ணிக்கைக்கும் கள நிலவரத்துக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்று கூறியது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பந்தல்குடியில் பல்லுயிர் பெருக்க சுற்றுச்சூழல் பூங்கா**

அருப்புக்கோட்டை அருகேயுள்ள பந்தல்குடியில் சுண்ணா –ம்புக்கல் சுரங்கத்தில் சுமார் 72 ஏக்கரில் ₹5.20 கோடியில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பல்லுயிர் பெருக்க சுற்றுச் சூழல் பூங்காவை தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் திறந்து வைத்தார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை – தூத்துக்குடி செல்லும் சாலையில் உள்ள பந்தல்குடியில், ராம்கோ நிறுவனத்துக்குச் சொந்தமான 800 ஏக்கர் பரப்பளவில் சுண்ணாம்புக்கல் சுரங்கம் உள்ளது. சுற்றுப்புறச்சூழலைக் கருத்தில்கொண்டு அச்சுரங்க பகுதியில் உள்ள செயல்படா 72 ஏக்கர் பரப்பளவில் ₹5.20 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு செய்து பல்லுயிர் பெருக்க சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மழைநீரை முழுமையாக சுரங்கத்தில் சேகரிப்பது, அதனால் ஏற்படும் பயன்கள் குறித்து இளந்தலைமுறையினர்க்கு எடுத்துரைப்பதற்காக இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

---

**2. குறைந்தபட்ச ஜிஎஸ்டி 5%-லிருந்து 8%-ஆக உயர்த்த பரிசீலனை**

வரவிருக்கும் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் குறைந்தபட்ச ஜிஎஸ்டி விகிதம் 5%-லிருந்து 8%-ஆக உயர்த்துவது

குறித்து கலந்தாலோசிக்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது ஜிஎஸ்டி 5%, 12%, 18%, 28% என நான்கு அடுக்குகளில் உள்ளன. இந்நிலையில் குறைந்தபட்ச விகிதத்தை 5%லிருந்து 8%ஆக உயர்த்துவது தொடர்பாக அமைச்சர்கள் குழு இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத தொடக்கத்தில் நடக்கவிருக்கும் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் அறிக்கை தாக்கல் செய்ய இருப்பதாகவும், அது தொடர்பான கலந்தாலோசனை அக்கூட்டத்தில் நடைபெற இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு குறைந்தபட்ச விகிதம் 8%ஆக உயர்த்தபடுவத –ன்மூலம் அரசுக்கு ₹1.50 லட்சம் கோடி கூடுதல் வரி வருவாய் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இதுதவிர, ஜிஎஸ்டி 5%, 12%, 18%, 28% என்ற நான்கு அடுக்குகளிலிருந்து 8%, 18%, 28% என்ற மூன்று அடுக்குகளாக குறைப்பது குறித்தும் கலந்தாலோசிக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது. அவ்வாறு ஜிஎஸ்டி மூன்று அடுக்குகளாக குறைக்கப்படும்பட்சத்தில் 12% அடுக்கில் வருபவை 18% அடுக்கின்கீழ் சேர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**3. தேசிய அளவிலான சிலம்பம்: தமிழ்நாடு அணி சாம்பியன்**

கன்னியாகுமரியில் நடைபெற்ற தேசிய அளவிலான சிலம்பம் போட்டியில் தமிழ்நாடு அணி சாம்பியன் பட்டம் வென்றது.

அகில இந்திய சிலம்பம் சம்மேளனம் சார்பில், தேசிய அளவிலான 18ஆவது மினி சப் ஜூனியர், சப் ஜூனியர், ஜூனியர், சீனியர் பிரிவில் ஆண், பெண் பங்கேற்ற சிலம்பப்போட்டி கன்னியாகுமரியில் இருநாட்கள் நடந்தது.

இப்போட்டியில் தமிழகம், புதுச்சேரி, கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தெலுங்கானா, மகாராஷ்டிராம், தில்லி, மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், ஹரியானா, இராஜஸ்தான், நாகலாந்து, மிசோரம், ஜம்மு–காஷ்மீர், பீகார், ஒடிஸா, சத்திஸ்கர் உள்ளிட்ட 22 மாநிலங்களைச் சேர்ந்த அணிகள் பங்கேற்றன. 1200'க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

இதில், தமிழகம் அணி சாம்பியன் பட்டம் வென்றது. இரண்டாவது இடத்தை புதுச்சேரி அணியும், மூன்றாவது இடத்தை மகாராஷ்டிராம் அணியும் பிடித்தது.

---

**4. நாட்டிலேயே முதலாவதாக தூத்துக்குடியில் ₹1,000 கோடியில் சர்வதேச அறைகலன் பூங்கா: முதல்வர் மு க ஸ்டாலின் இன்று அடிக்கல்**

இந்தியாவிலேயே முதலாவதாக தூத்துக்குடியில் ₹1,000 கோடி மதிப்பீட்டில் 1,150 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ள சர்வதேச அறைகலன் பூங்காவுக்கு முதல்வர் மு க ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

துறைமுக நகரமான தூத்துக்குடியில் தொழில் வளர்ச்சியை பெருக்கவும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் ₹1,000 கோடியில் 1,150 ஏக்கர்பரப்பளவில் 'சர்வதேச அறைகலன் (Furniture) பூங்கா' அமைக்கப்படும் என கடந்த ஆண்டு சட்டப்பேரவையில் முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார். அறைகலன் பூங்கா அமைக்க சிப்காட் நிறுவனம் சார்பில் தூத்துக்குடி சிப்காட் வளாகத்தில் 1,150 ஏக்கர் நிலம் சீரமைக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

அறைகலன் தொழிலுக்கென தனியாக நாட்டிலேயே முதல் சிறப்பு பொருளாதார மண்டலமாக அமைக்கப்படும் இந்தப் பூங்காவில் மர அறுவை ஆலை, அறைகலன் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள், ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்கள் உள்ளிட்ட சுமார் 100 நிறுவனங்கள் இடம் பெறுகின்றன. அறைகலன் தொழில்சார்ந்த உதிரி பாகங்களை தயார் செய்யும் சிறு, குறு தொழில் நிறுவனங்களும் இந்தப் பூங்காவில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**3.5 இலட்சம் பேருக்கு வேலை**

அறைகலன் தொழில் தொடர்பாக ஆண்டுதோறும் சுமார் 5 ஆயிரம்பேருக்கு திறன் பயிற்சி அளிக்கும் வகையில் பயிற்சிக்கூடம், அறைகலன் பொருட்களின் தரத்தை பரிசோதிக்கும் ஆய்வுக்கூடம், கூட்ட அரங்கம், தங்கும் விடு –திகள், உணவகங்கள்போன்ற அனைத்து வசதிகளும் அங்கு இடம்பெறும்.

இந்தப் பூங்காமூலம் சுமார் ₹4,500 கோடிக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், நேரடியாகவும், மறைமுகமாகவு –ம் சுமார் 3.5 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னதாக, தூத்துக்குடி ஸ்பிக் நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 22 மெகாவாட் திறன் கொண்ட நீரில் மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையத்தை முதல்வர் திறந்து வைக்கிறார்.

---

**5. இலங்கை – இந்தியா கூட்டுகடற்படை பயிற்சி – ஸ்லைநெக்ஸ், 07–10 மார்ச் 2022**

இந்தியா– இலங்கை இடையே 9ஆவது கூட்டு கடற்படை பயிற்சி இன்று தொடங்கி வரும் 10ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இரண்டு கட்டங்களாக இந்தப் பயிற்சி நடத்தப்பட உள்ளது. முதல்கட்டப் பயிற்சி விசாகப்பட்டினம் துறைமுகத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. அதன்பின் இரண்டாம் கட்ட பயிற்சி வங்காள விரிகுடாவில் 9 மற்றும் 10ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது.

இலங்கை கடற்படையின், ரோந்துக்கப்பலான LLNS சயூரலா, இந்திய கடற்படையின் INS கிர்ச் கப்பல் ஆகியவை பயிற்சியில் இடம்பெற்றுள்ளன. முன்னதாக கடந்த 2020ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இரு நாடுகளுக்கு இடையேயான கூட்டு கடற்படை பயிற்சி திரிகோணமலையில் நடைபெற்றது.

இருநாட்டு கடற்படைகளுக்கு இடையே புரிந்துணர்வு, அனுபவ பகிர்வு, கடல்சார் நடவடிக்கைகள், ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் இக்கூட்டு கடற்படை பயிற்சி நடைபெறுகிறது.

---

**1. ஐஐடி ரூர்க்கியானது எந்நிறுவனத்துடன் இணைந்து 'ரூர்க்கி நீர் மாநாட்டை' ஏற்பாடு செய்துள்ளது?**

அ) NITI ஆயோக்

**ஆ) தேசிய நீரியல் நிறுவனம் ☑**

இ) இந்திய கடற்படை

ஈ) இந்திய கடலோர காவல்படை

✓ மத்திய ஜல்சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், ஐஐடி ரூர்க்கியில், 'ரூர்க்கி நீர் மாநாட்டின்' 2ஆம் பதிப்பை தொடங்கி வைத்தார். இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – ரூர்க்கியும் தேசிய நீரியல் நிறுவனமும் இணைந்து, "Water Security for Sustainable Development" என்ற கருப்பொருளின் அடிப்படையில் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தன. தேசிய நீரியல் நிறுவனம் என்பது ஜல்சக்தி அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.

---

**2. 'தெய்யம்' அல்லது 'காளியாட்டம்' என்பது பின்வரும் எந்த மாநிலத்தில் நடத்தப்படும் ஒரு சடங்கு நடனமாகும்?**

அ) கர்நாடகா



**ஆ) கேரளா ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) மேற்கு வங்காளம்

✓ 'தெய்யம்' அல்லது 'காளியாட்டம்' என்பது கேரளத்தில் நடத்தப்படும் எண்ணூறு ஆண்டுகள் பழமையான ஒரு சடங்கு நடனமாகும். இது நாட்டுப்புற நடனங்கள் மற்றும் கலைகளை வெளிப்படுத்தும் விதமாக உள்ளது. இது பண்டைய பழங்குடி கலாசாரங்களை வெளிப்படுத்துகிறது. இந்தத் திருவிழாவின்போது பலவகையான 'தெய்யங்கள்' நிகழ்த்தப்படுகின்றன.

✓ கேரளத்தின் கண்ணூரில் நடைபெறும் காளியாட்டம் திருவிழாவில், 'அக்னி கண்டகர்ணன்' என்ற ஒருவகை தெய்யம் என்ற சடங்கு நடனம் தொடங்கியது.

---

**3. 'ஜன் ஔஷாதி பால மித்ரா' என்ற திட்டத்தின் நோக்கம் என்ன?**

**அ) PMBJP திட்டம் பற்றி குழந்தைகளுக்குக் கற்பித்தல் ☑**

ஆ) சிறார்களுக்கு மானியவிலையில் மருந்துகள் வழங்கல்

இ) கருவுற்றிருக்கும் பெண்களுக்கு மானிய விலையில் மருந்துகள் வழங்குதல்



ஈ) PMBJP–க்கான முதலீட்டை ஊக்குவித்தல்

✓ 'ஜன் ஔஷாதி திவாஸ்' வாரவிழாவையொட்டி, நாடு முழுவதும் 75 இடங்களில் 'ஜன் ஔஷாதி பால மித்ரா' நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பிரதமர் பாரதிய ஜன் ஔஷாதி பரியோஜனாவின் நன்மைகளைப்பற்றி சிறார்களுக்குக் கற்பிப்பதற்காக 'ஜன் ஔஷாதி திட்டத்துடன் சிறார்களை 'பால மித்ரா'க்களாக ஈடுபடுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**4. 'சுதேச தர்ஷன் விருதுகளை' நிறுவியுள்ள நடுவண் அமைச்சகம் எது?**

அ) வெளியுறவு அமைச்சகம்

**ஆ) சுற்றுலா அமைச்சகம் ☑**

இ) கலாசார அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ நடுவண் சுற்றுலா அமைச்சகம் மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் முன்னெடுப்புகளை அங்கீகரிப்பதற்காக 'சுதேச தர்ஷன் விருதுகளை' அமைத்துள்ளது. 'சுதேச தர்ஷன்' திட்டத்தின்கீழ், 500–க்கும் மேற்பட்ட சுற்றுலா தலங்களில் சுற்றுலா தொடர்பான உட்கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் 31 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் ₹5500 கோடிக்கு மேல் 76 திட்டங்களுக்கு அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

---

**5. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'சாபோரிஜியா அணுமின் நிலையம்' அமைந்துள்ள நாடு எது?**

அ) ரஷ்யா



**ஆ) உக்ரைன் ☑**

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) பெலாரஸ்

✓ சாபோரிஜியா அணுமின் நிலையமானது உக்ரைனின் ஒரு முக்கிய மின் விநியோகக் கட்டமைப்பு ஆகும். இந்த ஆலை 40–42 பில்லியன் kWh'ஐ உற்பத்தி செய்கிறது. இது உக்ரைனின் சராசரி ஆண்டு மின்சார உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது. சமீபத்தில், ரஷ்ய இராணுவம் இதனைக் கைப்பற்றி ஷெல் தாக்குதலைத் தொடங்கியதாக உக்ரைன் கூறியது. இது ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையமாகவும் உள்ளது.

---

**6. ஒரு சமீப அறிக்கையின்படி, 2020இல் இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் யூடியூப் கிரியேட்டர் அமைப்பின் பங்களிப்பு என்ன?**

அ) ₹1700 கோடி




ஆ) ₹3400 கோடி

**இ) ₹6800 கோடி ☑**

ஈ) ₹8500 கோடி

✓ தன்னாட்சிமிகு ஆலோசனை நிறுவனமான ஆக்ஸ்போர்டு எகனாமிக்ஸின் புதிய அறிக்கையின்படி, யூடியூப் உருவாக்கிய சுற்றுச்சூழல் அமைப்பு இந்திய GDP–க்கு ₹6,800 கோடி பங்களித்துள்ளது.

✓ 2020ஆம் ஆண்டில் இந்தியாவில் முழுநேர வேலைக்கு இணையான 683,900 பணிகளை யூடியூப் உருவாக்கி உள்ளது. இந்தியாவில் 100,000–க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களைக்கொண்ட யூடியூப் சேனல்களின் எண்ணிக்கையானது 40,000 என்றும் அது கூறியுள்ளது.

---

**7.** 2022 – உலக பெண்கள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?



அ) Educate Organise and Agitate

ஆ) Gender Equality: March against Patriarchy

**இ) Gender equality today for a sustainable tomorrow ☑**

ஈ) Impact of COVID–19 on women

✓ பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் அவர்களது சாதனைகளை முன்னிலைப்படுத்தும் நோக்கோடு பன்னாட்டு பெண்கள் நாள் ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.8 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. "Gender equality today for a sustainable tomorrow" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டிற்கான கருப்பொருளாகும்.

---

**8.** உக்ரைனில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை மீட்க இந்தியா மேற்கொண்ட முயற்சியின் பெயர் என்ன?



**அ) ஆபரேஷன் கங்கா ☑**

ஆ) ஆபரேஷன் கியேவ்

இ) ஆபரேஷன் மாஸ்கோ

ஈ) ஆபரேஷன் பாரத்

✓ 'ஆபரேசன் கங்கா' என்பது உக்ரைனில் சிக்கித்தவிக்கும் இந்தியர்களை மீட்பதற்காக இந்திய அரசு மேற்கொண்ட ஒரு முயற்சியின் பெயராகும். இதுவரை, இந்தியா தனது நாட்டைச் சேர்ந்த 1,000–க்கும் மேற்பட்டவர்களை திரும்ப அழைத்து வந்துள்ளது. ஹங்கேரி, போலந்து, ருமேனியா மற்றும் ஸ்லோவாகிய குடியரசின் எல்லை வழியாக இந்தியர்களை வெளியேற்ற உதவுவதற்காக 24×7 கட்டுப்பாட்டு மையங்களையும் இந்தியா அமைத்துள்ளது.

---

**9.** குஜராத் பன்னாட்டு நிதி தொழில்நுட்ப நகரத்தில் (GIFT) அலுவலகத்தைத் திறக்கும் முதல் பலதரப்பு நிறுவனம் எது?

அ) WEF

ஆ) ILO

**இ) புதிய வளர்ச்சி வங்கி ☑**

ஈ) உலக வங்கி

✓ குஜராத் பன்னாட்டு நிதி தொழில்நுட்ப நகரத்தில் (GIFT) அலுவலகத்தைத் திறக்கும் முதல் பலதரப்பு நிறுவனமாக புதிய வளர்ச்சி வங்கி மாறவுள்ளது. புதிய வளர்ச்சி வங்கி ஆனது இந்தியாவில் உள்ள முக்கியமான உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு உதவுதற்காக, புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய நிதியுதவி உட்கட்டமைப்பு & மேம்பாட்டிற்கான நிறுவனத்துடன் கூட்டு சேரவும் அவ்வங்கி எண்ணுகிறது.

---

**10.** 2022–உலக மொபைல் மாநாடு நடந்த நகரம் எது?

அ) பாரிஸ்

**ஆ) பார்சிலோனா ☑**

இ) பெய்ஜிங்

ஈ) டோக்கியோ

✓ உலக மொபைல் மாநாடானது அண்மையில் ஸ்பெயினின் பார்சிலோனா நகரத்தில் தொடங்கியது. இந்த மாநாட்டில், உலகளாவிய மொபைல் பொருளாதார அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையின்படி, உலகளவில் 5G இணைப்புகளின் எண்ணிக்கை 2022ஆம் ஆண்டில் 1 பில்லியனை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ கடந்த 2021ஆம் ஆண்டில், மொபைல் தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகள் மட்டும் 4.5 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை ஈட்டியுள்ளன. இது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதமாகும். இது 2025இல் $5 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியா–இலங்கை கூட்டு கடற்படை பயிற்சி தொடக்கம்**

இந்தியா–இலங்கை இடையிலான 9ஆவது கூட்டு கடற்படை பயிற்சி தொடங்கியது.

இந்தியா–இலங்கை இடையிலான கூட்டு கடற்படை பயிற்சி 2 கட்டங்களாக நடக்கவுள்ளது. விசாகப்பட்டினம் துறைமுகத்தில் இது தொடங்கியது.

அதனைத்தொடர்ந்து வங்கக்கடலில் மார்ச் 9, 10ஆம் தேதிகளில் இரண்டாம் கட்ட பயிற்சி நடைபெற உள்ளது. இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் கிர்ச் கப்பல், இலங்கை கடற்படையின் ரோந்து கப்பலான எஸ்எல்என்எஸ் சயூரலா ஆகியவை பயிற்சியில் இடம்பெற்றுள்ளன. இருநாட்டு கடற்படைகளுக்கு இடையே புரிந்துணர்வு, அனுபவ பகிர்வு, கடல்சார் நடவடிக்கைகள் ஆகியவற்றை மேம்படு–த்தும் நோக்கில் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

---

**2. உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டி: இந்தியா முதலிடம்...!**

உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடந்தது. இதில் நேற்று நடந்த 25 மீ ரேபிட் பயர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவின் இறுதிப் போட்டியில் இந்தியாவின் ரிதம் சங்வான்– அனிஷ் பன்வாலா ஜோடி 17–7 என்ற புள்ளி கணக்கில் தாய்லாந்து அணியை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை தனதாக்கியது.

இந்த போட்டியில் இந்தியா 4 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் என மொத்தம் 7 பதக்கங்களை கைப்பற்றி பதக்கப்பட்டியலில் முதலிடத்தை பிடித்தது. நார்வே (3 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலம்) 2ஆவது இடத்தை பெற்றது. பிரான்ஸ் (3 தங்கப்பதக்கம் உள்ளிட்ட 20 பதக்கங்களுடன்) மூன்றாம் இடத்தைப் பிடித்தது.

இப்போட்டியில் மொத்தம் 60 நாடுகளைச் சேர்ந்த 500–க்கும் மேற்பட்ட வீரர்–வீராங்கனைகள் பங்கேற்றனர்.

---

**3. நான்கு நாள் இந்தோ–பசிபிக் இராணுவ சுகாதாரக் கருத்தரங்கு: பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார்**

நான்கு நாட்கள் நடைபெறும் இந்தோ–பசிபிக் இராணுவ சுகாதாரக் கருத்தரங்கைப் (IPMHE), பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கிவைத்தார்.

இந்தக் கருத்தரங்கைப் பாதுகாப்புப் படைகள் மருத்து சேவைகள் பிரிவு மற்றும் அமெரிக்க இந்தோ பசிபிக் கட்டுப்பாட்டு மையம் ஆகியவை இணைந்து நடத்துகிறது.

"கொந்தளிப்பான, நிச்சமற்ற, சிக்கலான உலகில் ராணுவ மருத்துவ நலன்" என்பதுதான் இந்த மாநாட்டின் கருப் பொருள். மார்ச்.10ஆம் தேதி வரை நடைபெறும் இந்தக் கருத்தரங்கு, இராணுவ மருத்துவப்பிரிவுகள் இடையே –யான ஒத்துழைப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. போர்க்கள மருத்துவப் பராமரிப்பு, மருந்துகள், போர்க்கள அறுவை சிகிச்சை, மயக்க மருந்து, விமானம் மற்றும் கடல்சார் மருத்துவ அவசரநிலை உட்பட பல விஷயங்கள் குறித்து இந்தக் கருத்தரங்கில் விவாதிக்கப்படவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில், 38–க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 600–க்கும் மேற்பட்ட இந்திய மற்றும் வெளிநாட்டு பிரதிகள் கலந்துகொள்கின்றனர். இந்த 4 நாள் கருத்தரங் –கில் 110 தலைப்புகளில் நிபுணர்கள், உயர் அதிகாரிகள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

---

**4. மைக்ரோசாப்ட் நிறுவனம் இந்தியாவின் மிகப்பெரிய தரவு மையத்தை ஹைதராபாத்தில் அமைக்கவுள்ளது**

தொழில்நுட்ப நிறுவனமான மைக்ரோசாப்ட் இந்தியாவில் நான்காவது தரவு மையத்தை தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் அமைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

ஹைதராபாத் தரவு மையம் இந்தியாவின் மிகப்பெரிய தரவு மையங்களுள் ஒன்றாக இருக்கும் எனவும் 2025 ஆம் ஆண்டில் இது செயல்படும் எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. மைக்ரோசாப்ட் ஏற்கனவே புனே, மும்பை மற்றும் சென்னை ஆகிய 3 இந்தியப் பிராந்தியங்களில் தரவு மையத்தைக் கொண்டுள்ளது.

---

**5. ஆசியாவின் பெரிய இந்திய யானை உயிரிழப்பு**

ஆசியாவின் மிகப்பெரிய யானையாக கருதப்படும் 69 வயதான 'நதுங்கமுவே இராஜா' 07–03–2022 அன்று உயிரிழந்தது.

கண்டியில் உள்ள பிரசித்தி பெற்ற பௌத்த ஆலயத்தில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் விழாவில் புனித புத்தரின் பல் இந்த யானை மீது வைத்து கொண்டு செல்லப்படும். இதற்காக இராஜா தனது நதுங்கமுவே கிராமத்தில் இருந்து 90 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கண்டிக்கு நடந்தே செல்லும். இந்த யானையின் தந்தம் 10.5 அடி நீளமாகும்.

---

**6. நாட்டின் முதல் & மிகப் பெரிய மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையத்தை தூத்துக்குடியில் முதல்வர் மு க ஸ்டாலின் திறந்து வைத்தார்**

தூத்துக்குடி ஸ்பிக் (SPIC) நிறுவனத்தின் தொழிற்சாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் மற்றும் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மு.க.ஸ்டாலின் 07.03.2022 அன்று தூத்துக்குடியில், SPIC நிறுவனத்தின் தொழிற்சாலை வளாகத்தில் உள்ள பெரிய நீர் தேக்கத்தில் ₹150 கோடியே 40 லட்சம் மதிப்பீட்டில் ஆண்டுக்கு 42 மில்லியன் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதனை தங்களுடைய தொழிற்சாலைகளிலேயே உபயோகப்படுத்தும் விதமாக அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் மற்றும் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையத்தை திறந்து வைத்தார்.

இப்புதிய 25.3 MW DC / 22 MW AC திறன் கொண்ட மிதக்கும் சூரிய மின் நிலையத்திட்டம், நவீனகால பசுமை, நிலையான தொழில்நுட்பம் மற்றும் தன்னிறைவு பெற்ற ஆற்றல் உற்பத்தியை செயல்படுத்த SPIC நிறுவனத்தின் ESG உத்தியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மிதக்கும் சோலார் திட்டங்கள் பாரம்பரிய நில அடிப்படையிலான சோலார் ஆலைகளை விட அதிக உற்பத்தியை வழங்குவதோடு, ஆற்றல் உற்பத்தியை மேம்படுத்தி, விலைமதிப்பற்ற தண்ணீரை ஆவியாகாமல் சேமிக்கிறது. இச்சூரிய மின்சக்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து மின்சாரமும் 'SPIC' மற்றும் 'Greenstar' உரங்களின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும்.

இந்த மிதக்கும் சூரியமின் நிலையம், நீர் குளிர்ச்சி விளைவை எளிதாக்கி, அதிக மின் உற்பத்திக்கு உதவுகிறது. சுத்தமான மின்சாரத்தை உற்பத்தி செய்வதைத் தவிர, நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் ஆவி ஆகாமல் 60% கட்டுப்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் நன்மைக்கும் இந்தத் திட்டம் உதவுகிறது. இந்தத் திட்டம் இந்திய சூரிய ஆற்றல் மேம்பாட்டுத் துறையில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.

"SPIC நிறுவனத்தின் மிதக்கும் சூரியமின் நிலையத் திட்டம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்தி மாநிலத்தில் உள்ள தொழில்களை மேம்படுத்துவதோடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் தமிழகத்தை முன்னோடி மாநிலமாக மாற்றும் இலக்கை அடைவதற்கான ஒரு மைல்கல்லாக அமையும்" என்று தமிழ்நாடு அரசு குறிப்பிட்டுள்ளது.

---

**7. உலக மகளிர் நாளன்று 2020, 2021 ஆண்டுகளுக்கா –ன தலைசிறந்த 29 பேருக்கு கௌரவம் மிக்க 'நாரி சக்தி' விருதுகளை மாண்புமிகு குடியரசு தலைவர் வழங்கினார்.**

மகளிருக்கு அதிகாரமளித்தலுக்காக குறிப்பாக நலிந்த மற்றும் விளிம்பு நிலை பெண்களுக்கு சிறப்புமிக்க சேவைகள் செய்தவர்களின் மெச்சதக்க பணிகளை அங்கீகரிக்கும் விதமாக 29 பேருக்கு 28 விருதுகள் (2020 மற்றும் 2021–க்கு தலா 14) வழங்கப்பட்டன.

தமிழ்நாட்டில் கைவினைக்கலைஞர் ஜெயா முத்து, தோடா கைப்பின்னல் கலைஞர் தேஜம்மா ஆகியோர் 2020ஆம் ஆண்டுக்கான விருதினைக் கூட்டாகப் பெறுகிறார்கள்.

2021ஆம் ஆண்டுக்கு தமிழ்நாட்டைச்சேர்ந்த மனநல மருத்துவர் மற்றும் ஆய்வாளரான தாரா ரங்கசாமி விருது பெறுகிறார்.

**1. இந்தியாவின் உள்நாட்டு, 'தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பின்' பெயர் என்ன?**

அ) சக்தி

**ஆ) கவாச் ☑**

இ) வீரா

ஈ) பிரம்மா

✓ 'கவாச்' என்பது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒரு 'தானியங்கி இரயில் பாதுகாப்பு அமைப்பு' ஆகும். இது அண்மையில் தெற்கு மத்திய இரயில்வேயில் சோதனை செய்யப்பட்டது. மத்திய பட்ஜெட்டின்படி, 2022–23–இல் 2000 கிலோமீட்டர் ரயில்பாதை 'கவாச்' பாதுகாப்பின்கீழ் கொண்டுவரப்படும். 2012 முதல் இந்தியாவின் சொந்த தானியங்கி பாதுகாப்பு அமைப்பாக திகழ்ந்து வரும் இது, 'இரயில் மோதல் தவிர்ப்பு அமைப்பு' என்ற பெயரிலிருந்து 'கவாச்' என மறுபெயரிடப்பட்டது.

---

**2. கன்னியாகுமரி வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**



**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) மேற்கு வங்காளம்

✓ தமிழ்நாட்டின் கன்னியாகுமரி வனவுயிரி சரணாலயத்தில் '*Glycosmis albicarpa*' என்ற புதிய ஜின் பெர்ரி இனம் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்திய தாவரவியல் ஆய்வு மைய அறிவியலாளர்கள் குழு ஒரு தனித்துவமான பெரிய வெண்ணிறமுடைய பழ இனத்தை கண்டுபிடித்து உள்ளனர். இந்த இனம் தென்மேற்குத் தொடர்ச்சி மலைகள் –ளில் மட்டுமே காணப்படுகிறது. இது ஆரஞ்சு குடும்பமான '*Rutaceae*'ஐச் சேர்ந்தது.

---

**3. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 176 (1) ஆனது எதனை கையாளுகிறது?**



அ) இந்திய தேர்தல் ஆணையம்

ஆ) நிதி ஆணையம்

இ) நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல்

**ஈ) ஈரவைகளிலும் ஆளுநரின் உரை ☑**

✓ அரசியலமைப்புச்சட்டத்தின் 176(1) பிரிவானது, 'ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பின்னும் முதல் கூட்டத்தொடர் தொடங்கும்போதும், ஒவ்வோர் ஆண்டின் முதல் அமர்வின் போதும் மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் ஆளுநர் உரையாற்ற வேண்டும்" எனக் கூறுகிறது.

✓ வழக்கமான ஆளுநர் உரையின்றி சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடரை நடத்துவது குறித்து தெலுங்கானா அரசு தனது முடிவை அறிவித்துள்ளதால் இது அண்மைச் செய்திகளில் இடம்பெற்றது.

---

**4. டெலிகாம் தகராறுகள் தீர்வு மற்றும் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



அ) நீதிபதி இரஞ்சன் கோகோய்

ஆ) நீதிபதி சதாசிவம்

**இ) நீதிபதி D N படேல் ☑**

ஈ) நீதிபதி கே சந்துரு

✓ இந்திய அரசு தில்லி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி D N படேலை டெலிகாம் தகராறுகள் தீர்வு மற்றும் மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக நியமித்துள்ளது.

✓ டெலிகாம் தகராறுகள் தீர்வு மற்றும் மேல்முறையீட்டு தீர்ப்பாயமானது தொலைத்தொடர்பு ஆபரேட்டர்கள் மற்றும் நுகர்வோர் இடையே உள்ள தகராறுகளை தீர்ப்பதற்காக அமைக்கப்பட்டது. உச்சநீதிமன்ற நீதிபதியாகவோ அல்லது உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக –வோ இருக்கும் ஒருவரை இந்தத் தீர்ப்பாயம் தனது தலைவராகக் கொண்டுள்ளது.

---

**5. 'மழைகுண்டுகள்' எனப்படும் அசாதாரண மழையால் பாதிக்கப்பட்ட நாடு எது?**



அ) ரஷ்யா

ஆ) உக்ரைன்

**இ) ஆஸ்திரேலியா ☑**

ஈ) பெலாரஸ்

✓ ஆஸ்திரேலியாவை 'மழைகுண்டுகள்' தாக்கியதால், அந்நாட்டின் மூன்றாவது அதிக மக்கள்தொகைகொண்ட நகரமான பிரிஸ்பேன் மழையால் மிகவும் பாதிக்கப்பட்டது, இது கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் வரலாறு காணாத வெள்ளத்தைக் கொண்டுவந்து எட்டு பேரைக்கொன்றது.

✓ பிரிஸ்பேன் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் ஏற்பட்ட வெள்ளம் கடந்த 2011ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்படும் மிக மோசமான வெள்ளமாகக் கூறப்படுகிறது. பிரிஸ்பேன் மீது பொழிந்த இம்மழைப்பொழிவு அசாதாரணமானதாகும்; எனவே இது, 'மழைகுண்டு' என்று அழைக்கப்படுகிறது.

---

**6. 22 செயற்கைக்கோள்களை விண்வெளியில் நிலை நிறுத்துவதற்காக ஏவுகலத்தை ஏவிய நாடு எது?**



அ) ஐக்கிய அரபு அமீரகம்

ஆ) அமெரிக்கா

**இ) சீனா ☑**

ஈ) ரஷ்யா

✓ 22 செயற்கைக்கோள்களை விண்வெளியில் நிலைநிறு –த்துவதற்காக சீனா சமீபத்தில் லாங்மார்ச்–8 ஏவுகலத்தை ஏவியது; ஒரே ராக்கெட்மூலம் ஏவப்பட்ட அதிக விண்கலம் என்ற உள்நாட்டு சாதனையை சீனா படைத்தது.

✓ இந்தச் செயற்கைக்கோள்கள் வணிக நோக்கிலான தொலையுணரி சேவைகள், கடற்சூழல் கண்காணிப்பு, காட்டுத் தீ தடுப்பு மற்றும் பேரிடர் தணிப்பு ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்படும்.

---

**7.** 2022 – ஜன் ஒளஷாதி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

**அ) Jan Aushadhi–Jan Upyogi ☑**

ஆ) Atmanirbhar and Affordable Aushadhi

இ) Awareness of Jan Aushadhi Pariyojana

ஈ) Leaving No one Behind

✓ மருந்துத் துறையின்கீழ் இயங்கும் இந்திய மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் பணியகம் ஜன் ஒளஷாதி திவாஸ் வாரத்தை மார்ச் 7ஆம் தேதி முக்கிய நிகழ்வாகக் கொண்டாடியது. நான்காவது ஜன் ஒளஷாதி திவாஸின் கருப்பொருள், "ஜன் ஒளஷதி–ஜன் உப்யோகி" ஆகும்.

✓ 'பிரதம மந்திரி பாரதிய ஜன் ஒளஷாதி பரியோஜனா' ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மக்களுக்கு மலிவு விலையில் மருந்து எளிதில் சென்றடைவதை உறுதி செய்கிறது. 2025 மார்ச் இறுதிக்குள் பிரதம மந்திரி பாரதிய ஜன் ஒளஷாதி மையங்களின் எண்ணிக்கையை 10,500 ஆக அதிகரிக்க அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

---

**8.** Geostationary Operational Environmental Satellite (GOES–T) செயற்கைக்கோளை ஏவிய நாடு எது?



அ) ரஷ்யா

ஆ) சீனா

**இ) அமெரிக்கா ☑**

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ அமெரிக்க தேசிய பெருங்கடல் & வளிமண்டல நிர்வாகம் (NOAA) Geostationary Operational Environmental Satellite (GOES–T) செயற்கைக்கோளை ஏவியது. இது யுனைடெட் லாஞ்ச் அலையன்ஸ் அட்லஸ் V ஏவுகலத்தில் ஏவப்பட்டது.

✓ GOES–T என்பது GOES–R வரிசையின் ஓர் அண்மைய விண்கலமாகும். புவியின் வானிலை & காலநிலையை ஆய்வுசெய்வதற்காக பயன்படுத்தப்படும்.

---

**9.** 'Remove Laws that Harm; Create Laws that Empower' என்பது மார்ச்.1 அன்று கொண்டாடப்படுகிற எந்த நாளின் கருப்பொருளாகும்?




**அ) பாகுபாடுகள் ஒழிப்பு நாள் ☑**

ஆ) உலக எய்ட்ஸ் நாள்

இ) உலக சமத்துவ நாள்

ஈ) உலக சமூக நீதி நாள்

✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.1 அன்று UNAIDSஆல் உலகம் முழுவதும் 'பாகுபாடுகள் ஒழிப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற –து. 2030ஆம் ஆண்டுக்குள் AIDS'ஐ ஒரு பொதுநல அச்சுறுத்தலாக எண்ணி அதனை முடிவுக்குக்கொண்டு வருவதை நோக்கமெனக்கொண்ட ஐக்கிய நாடுகளின் அமைப்புதான் இந்த UNAIDS.

✓ "Remove Laws that Harm; Create Laws that Empower" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில்வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**10.** 'தேசிய பாலினக்குறியீடு' மற்றும் 'மாநில ஆற்றல் மற்றும் காலநிலைக்குறியீடு' ஆகியவை கீழ்காணும் எந்த நிறுவனத்தின் வரவிருக்கும் முயற்சிகளாகும்?

அ) ஐநா வளர்ச்சித் திட்டம்

**ஆ) NITI ஆயோக் ☑**

இ) UNICEF

ஈ) பொருளாதார புலனாய்வு பிரிவு

✓ தேசிய பாலினக் குறியீட்டை உருவாக்கும் பணியில் NITI ஆயோக் ஈடுபட்டுள்ளது; இது பாலினம் தொடர்பான கொள்கை நடவடிக்கையை ஆதரிக்கும். மேலும், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கட்டமைப்பிற்கு ஏற்றவாறு இது சீரமைக்கப்படும். NITI ஆயோக், 'மாநில ஆற்றல் மற்றும் காலநிலை குறியீட்டெண்' வரைவை பல்வேறு அளவுருக் –களில் மாநிலங்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்காக உருவாக்கியுள்ளது.

✓ மாநிலங்கள் தங்கள் ஆற்றல் வளங்களை திறம்பட நிர்வகிப்பதற்கும் மக்களுக்கு சிறந்த ஆற்றல் அணுகலை வழங்குவதற்கும் இந்தக் குறியீடு உதவும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இரண்டு இலட்சம் தடுப்பூசி செலுத்தி சென்னை செவிலியர் சாதனை**

சென்னை பாடியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியராக பணியாற்றுபவர் சிவசங்கரி. கொரோனா தடுப்புப்பணியில் ஈடுபட்டு வரும் இவர் இதுவரை 2 இலட்சத்து 306 கொரோனா தடுப்பூசிகள் செலுத்தியுள்ளார்.

இதேபோல் திருச்சி பீமன் நகர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியராக பணியாற்றி வரும் தாரணி என்பவர் 302,005 தடுப்பூசிகள் செலுத்தி இருக்கிறார்.

தேசிய அளவில் சாதனை படைத்த இந்த இரண்டு செவிலியர்களுக்கும் தில்லியில் சுகாதாரத்துறை சார்பில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் விருது வழங்கப்பட்டது.

---

**2. உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் நான்கு தங்கப்பதக்கங்களுடன் இந்தியா முதலிடம்**

எகிப்தின் கெய்ரோ நகரில் உலக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி நடைபெற்றது. இதில், இந்திய அணியினர் சிறப்பாக செயல்பட்டு பதக்கங்கள் வென்றனர். கடைசி நாளான இன்று 25 மீட்டர் ரேபிட் பயர் பிஸ்டல் கலப்பு அணிகளுக்கான போட்டியில் இந்தியாவின் ரிதம் சங்வான், அனிஷ் பன்வாலா ஜோடி தங்கம் வென்று அசத்தியது. தங்கப் பதக்கத்துக்கான போட்டியில் இவர்கள் இருவரும் 17–7 என தாய்லாந்து ஜோடியை வென்றனர்.

25 மீட்டர் ரேபிட் பயர் பிஸ்டர் ஆண்கள் அணிகள் பிரிவில் இந்திய அணி, ஜெர்மனியிடம் தோல்வியடைந்ததால் வெள்ளிப் பதக்கம் வென்றது.

இதன்மூலம் 4 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் என மொத்தம் 7 பதக்கங்களுடன் பதக்க பட்டியலில் இந்தியா

முதலிடத்தை பிடித்தது. மூன்று தங்கம், ஒரு வெள்ளி, இரு வெண்கலப்பதக்கங்களுடன் நார்வே அணி இரண்டாம் இடத்தைப் பிடித்தது. பிரான்ஸ் அணி 3 தங்கம் உள்ளிட்ட 20 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்தை பிடித்தது.

இப்போட்டியில் மொத்தம் 60 நாடுகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட வீரர்–வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில் 22 நாடுகள் பதக்கங்கள் வென்றுள்ளன.

---

**3. சந்திரனில் முதன்முறையாக NASA சார்பில் 4ஜி நெட்வொர்க்: இந்தியரான நிஷாந்த் பத்ரா அமைக்கிறார்**

NASA விண்வெளி அமைப்புக்காக சந்திரனில் முதல் முறையாக 4ஜி நெட்வொர்க்கை ஏற்படுத்தும் பணிக்கு தில்லியில் பிறந்த நிஷாந்த் பத்ரா தலைமை வகிக்கிறார்.

தில்லியில் 1978இல் பிறந்தவர் நிஷாந்த் பத்ரா. இந்தூரில் உள்ளதேவி அகில்யா பல்கலைக்கழகத்தில் கம்யூட்டர் அப்ளிகேஷன்ஸ் துறையில் பட்டம் பெற்ற இவர், பிறகு இன்சீட் பிசினஸ் பள்ளியில் எம்பிஏ முடித்தார்.

இதையடுத்து அமெரிக்காவில் உள்ள சதர்ன் மெதடிஸ்ட் பல்கலையில் தொலைத்தொடர்பு துறையிலும் கணினி அறிவியல் பாடத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றார்.

தற்போது பின்லாந்து நாட்டின் எஸ்பூ நகரில் வசிக்கும் நிஷாந்த் பத்ரா, நோக்கியா நிறுவனத்தில் உத்தி மற்றும் தொழில்நுட்ப பிரிவுக்கான சர்வதேச தலைவராக உள்ளார். மேலும் 9 நோபல் பரிசுகளையும் ஐந்து டூரிங் விருதுகளையும் பெற்றுள்ள 'பெல் லேப்ஸ்' நிறுவனத்தில் தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சிக்கு தலைமை வகிக்கிறார்.

NASA விண்வெளி அமைப்புக்காக சந்திரனில் முதல் முறையாக 4ஜி நெட்வொர்க்கை ஏற்படுத்தும் பணிக்கு நிஷாந்த் பத்ரா தலைமை வகிக்கிறார்.

---

**4. உலக மகளிர் நாளை முன்னிட்டு 29 பெண்களுக்கு குடியரசு தலைவர் விருது**

சர்வதேச மகளிர் தினமான நேற்று, நாட்டின் தலைசிறந்த 29 பெண்களுக்கு பெண் சக்தி விருதுகளை (நாரி சக்தி புரஸ்கார்) குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்படும் பெண்களை கவுரவிக்கும் வகையில் மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஆண்டுதோறும் பெண்சக்தி விருது வழங்கப்படுகிறது. தொழில்முனைவு, வேளாண்மை, சமூகப் பணி, கல்வி, இலக்கியம், மொழியியல், கலைகள், அறிவியல் தொழில்நுட்பம், பொறியியல், கணிதம், ஊனமுற்றோர் உரிமைகள், வனவிலங்குகள் பாதுகாப்பு எனப் பல்வேறு துறைகளை சேர்ந்த பெண்கள் இவ்விருதுக்கு தேர்வு செய்யப்படுகின்ற –னர்.

இந்நிலையில் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுக்கான பெண் சக்தி விருது வழங்கும் விழா, சர்வதேச மகளிர் தினமான நேற்று குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்தது. இதில் நாட்டின் தலைசிறந்த 29 பெண்களுக்கு பெண் சக்தி விருதுகளை குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

**3 தமிழக பெண்களுக்கு விருது**

தமிழகத்தைச் சேர்ந்த 3 பெண்களுக்கும் பெண் சக்தி விருது வழங்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தை சேர்ந்த தோடா எம்பிராய்டரி கைவினைஞர்களான ஜெயமுத்து, தேஜம்மா ஆகிய இருவருக்கும் 2020–ம் ஆண்டுக்கான பெண் சக்தி விருது வழங்கப்பட்டது. மனநல மருத்துவரும் ஆராய்ச்சியாளருமான தாரா ரங்கசாமிக்கு 2021–ம் ஆண்டுக்கான பெண் சக்தி விருது வழங்கப்பட்டது.

ஜெயமுத்து, தேஜம்மா ஆகிய இருவரும் பள்ளி நாட்களில் இருந்து தோடா எம்பிராய்டரி கொண்ட சால்வைகள் மற்றும் ஆடைகளை உருவாக்கி வருகின்றனர். டாக்டர் தாரா ரங்கசாமி, சென்னையில் உள்ள ஸ்கிசோப்ரினியா ஆராய்ச்சி அறக்கட்டளையின் (ஸ்கார்ப்) இணை நிறுவனர் மற்றும் துணைத் தலைவராக உள்ளார்.

---

**5. திறன் மேம்பாட்டுக்கழகம் பிரிட்டிஷ் கவுன்சில் ஒப்பந்தம் – 'நான் முதல்வன்' திட்டத்துக்காக முதல்வர் தலைமையில் கையெழுத்தானது**

**இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:**

பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளையோர்க்கான புதிய முன்னெடுப்பாக, 'நான் முதல்வன்' என்ற திறன் மேம்பாட்டு வழிகாட்டுதல் திட்டத்தை மார்ச்.1ஆம் தேதி, முதல்வர் மு க ஸ்டாலின் அறிமுகப்படுத்தினார்.

இதன் தொடர்ச்சியாக தமிழக இளைஞர்கள் அனைவரும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும், எழுதவும் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுவது மட்டுமின்றி, நேர்முகத் தேர்வுகளுக்கு அவர்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளவும், அவர்களின் தனித்திறன்களை மெருகேற்றவும் பிரிட்டிஷ் கவுன்சிலுடன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள திட்டமிட்டது.

இதையடுத்து, தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் தலைமையில், பிரிட்டிஷ் உயர் ஆணையர் அலெக்ஸ் எல்லீஸ் முன்னிலையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம்மூலம் இளைஞர்களின் உயர்கல்வி, திறன் மேம்பாடு, கலை மற்றும் பண்பாடு ஆகியவை வலுப்படுத்தப்படும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

**6. பெண்கள், குழந்தைகளுக்காக பணியாற்றிய கிரிஜா குமார்பாபுவுக்கு 2022ஆம் ஆண்டுக்கான ஔவையார் விருது: தங்கப்பதக்கம், ₹1 லட்சத்துக்கான காசோலையை மு க ஸ்டாலின் வழங்கினார்**

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காகப் பணியாற்றிய கிரிஜா குமார்பாபுவுக்கு இந்த ஆண்டுக்கான ஔவையார் விருதை முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார்.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு, பெண்களுக்கான சேவையில் சிறந்துவிளங்கும் மகளிரை

கௌரவிக்கும் வகையில், சமூக நலத்துறைமூலம் ஔவையார் விருது வழங்கப்பட்டு வருகிறது.

மகளிர் அதிகாரம், மதநல்லிணக்கம், மொழி, கலை, அறிவியல், ஊடகவியல், நிர்வாகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கியதுடன், சேவை மனப்பான்மையோடு தொண்டாற்றியவர்களைப் பாராட்டி எட்டு கிராம் தங்கப் பதக்கம், ₹1 லட்சத்துக்கான காசோலை, பாராட்டுப்பத்திரம் அளிக்கப்படுகிறது.

அந்த வகையில் 2022ஆம் ஆண்டுக்கான ஔவையார் விருதை, தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கிரிஜா குமார்பாபுவுக்கு முதலமைச்சர் மு க ஸ்டாலின் வழங்கினார். பெண்கள், குழந்தைகளுக்கு இவர் ஆற்றிய சேவை களைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

**பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது**

2020–21ஆம் ஆண்டுக்கான 'எம்ஜிஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர்' விருதுகளும் வழங்கப்பட்டன. அதன்படி கருப்பு கவுனி ரகம் சாகுபடியில் அதிக மகசூல் செய்து மாநில அளவில் முதலிடம் பெற்ற நாமக்கல்லைச் சேர்ந்த செ மூர்த்திக்கு விருதுடன் பரிசுத்தொகையாக ₹1 லட்சத்துக்கான காசோலையையும், வாசனை சீரக சம்பா சாகுபடியில் அதிக மகசூல் செய்து இரண்டாம் இடம் பெற்ற திருநெல்வேலியைச்சேர்ந்த கோ.பொன்னு புதியவனுக்கு விருதுடன் பரிசுத்தொகை ₹75,000–க்கான காசோலை –யையும், ஆத்தூர் கிச்சடி சம்பா சாகுபடியில் அதிக மகசூல் செய்து 3ஆம் இடம் பெற்ற திருநெல்வேலியைச் சேர்ந்த பி லட்சுமி தேவிக்கு விருதுடன் ₹50 ஆயிரத்துக்கான காசோலையையும் முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

---

**7. அடிப்படை அம்சங்களைக் கொண்ட கைப்பேசிக்கும் UPI வசதி**

அடிப்படை அம்சங்களைக்கொண்ட கைப்பேசி மூலமாகவு –ம் UPI பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கான வசதியை இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் தொடக்கிவைத்தார். மேலும் அவர் கூறியதாவது:

தற்போது வரை UPI பணப்பரிவர்த்தனை வசதியானது திறன்பேசி பயன்பாட்டாளர்களுக்கு மட்டுமே கிடைத்து வருகிறது. அதன் காரணமாக கிராமப்பகுதிகளில் வசிக்கும் சமூகத்தின் விளிம்புநிலை மக்களை அந்த வசதி சென்றடைய முடியவில்லை. திறன்பேசிகளின் விலை தொடர்ந்து குறைந்தாலும், அவர்களுக்கு UPI வசதி சென்று அடையவில்லை.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'UPI 123பே' வசதி மூலமாக அடிப்படை அம்சங்களைக்கொண்ட கைப்பேசியைப் பயன்படுத்துவோரும் பணப் பரிவர்த்த –னையை மேற்கொள்ள முடியும். இது நிதி சேவைகளை அனைத்துத்தரப்பு மக்களுக்கும் கொண்டுசேர்க்க உதவும்.

நடப்பு 2021–22ஆம் நிதியாண்டில் இதுவரை ₹76 லட்சம் கோடிக்கு UPI பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட் –டுள்ளன. கடந்த நிதியாண்டில் ₹41 இலட்சம் கோடி அளவுக்கு மட்டுமே பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ள –ப்பட்டிருந்தன. விரைவில் இது ₹100 இலட்சம் கோடியை எட்டும் என அவர் கூறினார்.

**1.** 'SLINEX' என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான இருதரப்பு கடல்சார் பயிற்சியாகும்?



அ) ஓமன்

ஆ) சிங்கப்பூர்

**இ) இலங்கை ☑**

ஈ) ஜப்பான்

✓ இந்தியா–இலங்கை இடையே 9ஆவது கூட்டு கடற்படை பயிற்சி 2 கட்டங்களாக நடத்தப்படவுள்ளது. முதற்கட்டப் பயிற்சி விசாகப்பட்டினம் துறைமுகத்தில் நடைபெற உள்ளது. அதன்பின் இரண்டாம்கட்ட பயிற்சி வங்காள விரிகுடாவில் நடைபெறவுள்ளது.

✓ இலங்கை கடற்படையின், ரோந்துக் கப்பலான LLNS சயூரலா, இந்திய கடற்படையின் INS கிர்ச் கப்பல் ஆகிய –வை பயிற்சியில் இடம்பெற்றுள்ளன. இருநாட்டு கடற்ப –டைகளுக்கு இடையே புரிந்துணர்வு, அனுபவ பகிர்வு, கடல்சார் நடவடிக்கைகள், ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் இக்கூட்டு கடற்படை பயிற்சி நடைபெறுகிறது.

---

**2.** எந்த நகரத்தின் மெட்ரோ திட்டத்தை பிரதமர் சமீபத்தில் தொடங்கிவைத்தார்?

அ) மைசூரு

**ஆ) புனே ☑**

இ) கோயம்புத்தூர்

ஈ) திருவனந்தபுரம்

✓ புனே மெட்ரோ திட்டம் இந்திய அரசு மற்றும் மகாராஷ்டிரா அரசாங்கத்தின் SPV (சிறப்பு நோக்கத்திற்கான ஊர்தி) MAHA மெட்ரோவால் மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் 32.2 கிமீட்டர் புனே மெட்ரோ இரயில் திட்டத்தில், 12 கிமீ தூரத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் மொத்தச் செலவு ₹11,400 கோடி.

---

**3.** 2022இல் இந்தியா குளோபல் போரம் நிகழ்வு நடக்கும் இடம் எது?

அ) சென்னை

**ஆ) பெங்களூரு ☑**

இ) வாரணாசி

ஈ) காந்தி நகர்

✓ இந்தியா குளோபல் ஃபோரம் (IGF) நிகழ்ச்சி பெங்களூரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதோடு, 30 யூனிகார்ன் நிறுவனங்களின் நிறுவனர்கள் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரிகளுடன் கலந்துரையாட உள்ளார். இந்நிகழ்வில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் வெளியுறவு மற்றும் கலாச்சாரத் துறை இணை அமைச்சர் மீனாட்சி லேகி மற்றும் தொழிற்துறையைச் சேர்ந்த CEO–க்கள் மற்றும் தலைவர்கள் பங்கேற்பார்கள்.

---

**4.** உளவு செயற்கைக்கோள் அமைப்பை அண்மையில் பரிசோதித்த நாடு எது?



**அ) வட கொரியா ☑**

ஆ) உக்ரைன்

இ) ரஷ்யா

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ வட கொரியாவின் பிராந்திய இராணுவ அதிகாரிகள் எறிகணை ஏவப்பட்டதாக அறிவித்ததை அடுத்து, உளவு செயற்கைக்கோள் அமைப்புகளுக்கான பரிசோதனையை நடத்தியதாக வடகொரியா கூறியது. இது கடந்த ஒரு வார காலத்தில் செயற்கைக்கோள் கருவிகளை பரிசோதிப்பத –ற்காக மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது ஏவுதலாகும். மேலும் இந்த ஆண்டில் இது ஒன்பதாவது ஏவுதலாகும். இதற்கு அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடுங்கண்டனம் தெரிவித்துள்ளன.

---

**5.** 'பள்ளி சுகாதார கிளினிக்குகளை'த் தொடங்கியுள்ள மாநிலம் எது?



அ) ஒடிஸா

ஆ) குஜராத்

**இ) புது தில்லி ☑**

ஈ) இராஜஸ்தான்

✓ தில்லி அரசு சமீபத்தில் 20 அரசுப்பள்ளிகளில் தனிநபர் மருத்துவமனைகளைத் திறந்து வைத்துள்ளது. அவற்றை துணை முதலமைச்சரும், கல்வியமைச்சருமான மணீஷ் சிசோடியா திறந்து வைத்தார். இந்தக் கிளினிக்குகள் சிறார்களின் உடல் மற்றும் மனநலனை உறுதிசெய்வதற் –கான வழக்கமான சுகாதார பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கும்.

---

**6.** அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற 'ஜரோக்கா' என்பது எந்தத் துறைசார்ந்த கொண்டாட்டமாகும்?



**அ) கலை மற்றும் கலாசாரம் ☑**

ஆ) இலக்கியம்

இ) ஆயுஷ்

ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

✓ மத்திய கலாசார அமைச்சகம் மற்றும் ஜவுளி அமைச்சகம் இணைந்து "ஜரோகா–இந்திய கைவினைப்பொருட்கள் / கைத்தறி, கலை மற்றும் கலாசாரத்தின் தொகுப்பு" ஆகியவற்றை ஏற்பாடு செய்கின்றன. 'ஜரோக்கா' என்பது பாரம்பரிய இந்திய கைவினைப்பொருட்கள், கைத்தறி & கலை மற்றும் கலாச்சாரத்தின் கொண்டாட்டமாகும்.

✓ நாடு முழுவதும் 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 16 இடங்களில் நடைபெறவுள்ளது. இந்தக் கொண்டாட்டத்தின்கீழ் முதல் நிகழ்வு மத்திய பிரதேசத்தின் போபாலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

**7.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'டிரெல்லிஸ் அமைப்பு' எந்தத் துறையுடன் தொடர்புடையது?**

அ) ஆட்டோமொபைல்

**ஆ) வேளாண்மை ☑**

இ) செயற்கை நுண்ணறிவு

ஈ) வங்கியியல்



- ✓ நிலையான வேளாண்மையின் ஒருபகுதியாக, 20 தசம நிலத்தில் நான்கு தூண்கள், மூங்கில் கம்புகள் மற்றும் கயிறுகளை பயன்படுத்தி குறுக்குநெடுக்காக அடிக்கப்பட்ட ஒரு தட்டி அமைப்பு தயாரிக்கப்படுகிறது.
- ✓ குறுக்குநெடுக்காக அடிக்கப்பட்ட தட்டி அமைப்பில் செடிகள் குறிப்பாக கொடிகள் செங்குத்தாக வளர்ந்ததால், தண்டுகள், பூக்கள் & பழங்கள் அழுகும் வாய்ப்புகள் மிகக் குறைவு. ஒடிஸாவின் பல பழங்குடி கிராமங்களில் இந்த அமைப்பு சிறப்பாக செயல்பட்டுள்ளது.

---

**8.** **'கரேவாஸ்' என்பது எந்த மாநிலத்தில் காணப்படும் வளமான வண்டல்மண் படிவுகளாம்?**

அ) உத்தர பிரதேசம்

ஆ) மேற்கு வங்கம்

**இ) ஜம்மு–காஷ்மீர் ☑**

ஈ) பீகார்




- ✓ காஷ்மீர் பள்ளத்தாக்கின் மிகவும் வளமான வண்டல்மண் படிவுகள் 'கரேவாஸ்' என்று அழைக்கப்படுகின்றன.
- ✓ இந்தப்பீடபூமிகள் 13,000–18,000 மீட்டர் தடிமன்கொண்ட வண்டல்மண் மற்றும் மணற்கல் & மண்கல்போன்ற வண்டல் படிவுகளாகும். குங்குமப்பூ, பாதாம், ஆப்பிள் மற்றும் பல்வேறு பணப்பயிர்களை பயிரிடுவதற்கு ஏற்ற இடங்கள் இவை. வளர்ச்சி என்ற பெயரில் கரேவாக்கள் அழிக்கப்படுவதன் காரணமாக இது அண்மைச் செய்திகளில் இடம்பெற்றது.

---

**9.** **MSME அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட 'SAMARTH' முன்னெடுப்பின் நோக்கம் என்ன?**

**அ) பெண்கள் தொழில்முனைவு ☑**

ஆ) மதிப்புக்கூட்டல்

இ) சந்தைப்படுத்துதலுக்கான ஆதரவு

ஈ) GST–க்கான இணையதளம்



- ✓ மத்திய MSME அமைச்சகமானது சமீபத்தில் SAMARTH – பெண்களுக்கான சிறப்பு தொழில்முனைவு ஊக்குவிப்பு இயக்கத்தை அறிமுகப்படுத்தியது.
- ✓ SAMARTH'இன்கீழ், அமைச்சகத்தின் திறன்மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் ஏற்பாடு செய்யப்படும் இலவச திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் 20% இடங்கள், ஆர்வமுள்ள பெண் தொழில்முனைவோருக்கு ஒதுக்கப்படும்.

---

**10.** **2022ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகின் மிகப்பெரிய கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடு எது?**

அ) ரஷ்யா

**ஆ) அமெரிக்கா ☑**

இ) சௌதி அரேபியா

ஈ) ஈரான்




- ✓ அமெரிக்காவிற்கு அடுத்ததாக உலகில் கச்சா எண்ணெய் உற்பத்தியில் ரஷ்யா 2ஆவது பெரிய நாடாக உள்ளது. ரஷ்யா, நாளொன்றுக்கு 11 மில்லியன் பீப்பாய்கள் கச்சா எண்ணெயை உற்பத்தி செய்கிறது.
- ✓ ரஷ்யாவின் எண்ணெய் ஏற்றுமதி பாதி (ஒரு நாளைக்கு 2.5 மில்லியன் பீப்பாய்கள்) – ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. இதில் மூன்றில் ஒரு பங்கு பெலாரஸ் வழியாக ட்ருஷ்பா பைப்லைன் வழியாக ஐரோப்பாவிற்கு வருகிறது. அண்மையில் G7 நாடுகள், ரஷ்ய எண்ணெய் மற்றும் எரிவாயு இறக்குமதிக்கு வரம்புகளை விதிக்க வேண்டும் என UK முன்மொழிந்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முதலமைச்சர் மு க்ஸ்டாலின் தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறையினர் மாநாடு இன்று தொடக்கம்**

முதலமைச்சர் மு க்ஸ்டாலின் தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை, வனத்துறை அலுவலர்கள் மாநாடு இன்று தொடங்குகிறது.

மாநிலம் முழுவதும் அரசின் திட்டங்களை தொய்வின்றி செயல்படுத்துவது குறித்தும், மாநிலத்தில்சட்டம் ஒழுங்கை பராமரிப்பதற்காகவும், ஆண்டுதோறும் மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறை அதிகாரிகளுக்கான மாநாடு நடத்தப்படும். கடந்த சில ஆண்டுகளாக இந்த மாநாடு நடத்தப்படாத நிலையில், இந்த ஆண்டு மாநாட்டை நடத்த தமிழக அரசு முடிவெடுத்தது.

**அரசின் அறிவிப்புகள், திட்டங்கள்**

கடந்த பத்து மாதங்களாக தமிழ்நாடு அரசு பல்வேறு புதிய அறிவிப்புகளையும், திட்டங்களையும் வெளியிட்டு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் ஆளுநர் உரை, முதல்வரின் அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கை, அமைச்சர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் என மொத்தம் 1,704 அறிவிப்புகள் வெளியிடப்பட்டு 80 சதவீதத்துக்கும் மேலானவற்றுக்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்டங்கள் தோறும் இந்த திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அறிந்து கொள்ளவும், அடுத்தக்கட்ட செயல்பாடுகள் குறித்தும் மாநாட்டில் ஆலோசிக்கப்படும். இம்மாநாட்டில் முதல்முறையாக வனத்துறை அதிகாரிகளும் பங்கேற்க உள்ள நிலையில், வனத்துறை தொடர்பான திட்டங்களையும் முதலமைச்சர் ஆய்வுசெய்யவுள்ளார்.

---

**2. சுகாதாரத் திட்டங்கள்: ஐந்து ஆட்சியர்களுக்கு விருது!**

தமிழ்நாடு சுகாதாரத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய மாவட்ட ஆட்சியர்களுக்கான விருதை சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

அதன்படி, 2016ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரையிலான விருதுகளைப் பெறும் மாவட்ட ஆட்சியர்களி–ன் பெயர்களை தமிழ்நாடு அரசின் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

2016–17ஆம் ஆண்டிற்கான விருதை விருதுநகர் மாவட்ட ஆட்சியராக இருந்த சிவஞானத்திற்கும்,

2017–18ஆம் ஆண்டிற்கான விருதை திருவாரூரில் ஆட்சியராக இருந்த நிர்மல் ராஜுக்கும்,

2018–2019ஆம் ஆண்டிற்கான விருதை சிவகங்கை மாவட்ட ஆட்சியராக இருந்த ஜெயகாந்தனுக்கும்,

2019–20ஆம் ஆண்டுக்கான விருதை விருதுநகர் ஆட்சியர் சிவஞானத்துக்கும்,

2020–21ஆம் ஆண்டிற்கான விருதை திருவண்ணாம–லை மாவட்ட ஆட்சியராக இருந்த கந்தசாமிக்கும் வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. திருப்பெரும்புதூரில் ₹500 கோடியில் புதிய தொழில் பிரிவுகள்: முதலமைச்சர் மு கஸ்டாலின் தொடக்கி வைத்தார்**

சென்னையை அடுத்த திருப்பெரும்புதூரில் 200 பேருக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கும் ₹500 கோடி மதிப்பிலான புதிய தொழில் பிரிவுகளை முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

சென்னையை அடுத்த திருப்பெரும்புதூரில் செயின்ட் – கோபைன் என்ற புகழ்பெற்ற கண்ணாடி உற்பத்தி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்துக்கு கடந்த 1998–ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் கருணாநிதியால் அடிக்கல்நாட்டப்பட்டது. கடந்த 2000ஆம் ஆண்டில் கண்ணாடி உற்பத்தி தொடங்கப்பட்டது. 177 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள செயின்ட்–கோபைன் நிறுவனம் ₹3,750 கோடியை முதலீடு செய்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் இந்நிறுவனமானது, சுமார் ₹4,700 கோடி முதலீட்டைச் செய்து நேரடியாக 2,000 பேருக்கும், மறைமுகமாக 2,500 பேருக்கும் வேலைவாய்ப்புகளை அளித்து வருகிறது.

**₹500 கோடி முதலீடு:** திருப்பெரும்புதூரில் உள்ள செயின்ட்–கோபைன் வளாகத்தில் கண்ணாடி, முகம் பார்க்கும் கண்ணாடி, சூரிய ஆற்றல் கண்ணாடி, வெடி குண்டு தாக்குதலை சமாளிக்கும் வகையிலான பல்வேறு வகை கண்ணாடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மதிப்புகூட்டப்பட்ட 90% கண்ணாடிகள் இந்த வளாகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

---

**4. உபரி நிலங்களைப் பணமாக்குவதற்காக சிறப்பு ஏற்பாடாக தேசிய நில பணமாக்கல் கழகத்தை ஏற்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், உபரி நிலங்களைப் பணமாக்குவதற்காக சிறப்பு ஏற்பாடாக, முற்றிலும் மத்திய அரசுக்கு சொந்தமான நிறுவனமாக தேசிய நில பணமாக்கல் கழகத்தை ஏற்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டது.

இந்தக் கழகத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட தொடக்க பங்கு மூலதனமாக ₹5,000 கோடியும், பெறப்படும் தொகையில் இருந்து ₹150 கோடி பங்குமூலதனத்தையும் கொண்டதாக இருக்கும். மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பிற அரசு அமைப்புகளுக்குச் சொந்தமான உபரிநிலம் மற்றும் கட்டட சொத்துக்களை பணமாக்கும் பணியை இந்தக் கழகம் மேற்கொள்ளும்.

2021–22 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டதற்கு இணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பயன்படுத்தப்படாத மற்றும் குறைவான பயன்பாடு கொண்ட முக்கியமற்ற சொத்துக்களை பணமாக்குவதன் மூலம் அரசுக்கு கணிசமான வருவாய் கிடைக்கும்.

மத்திய நிதியமைச்சகத்தின் பொது நிறுவனங்கள் துறை இந்தக் கழகத்தை உருவாக்கி, அதன் நிர்வாகம் அமைச்சகமாகவும், செயல்படும்.

---

**5. சென்னை ஐஐடி–வால்மார்ட் நிறுவனம் இடையே புரிந்துணர்வு**

தொழில்நுட்பத்தின் புதிய பகுதிகளில் ஆராய்ச்சியை விரைவுபடுத்தவும், வால்மார்ட் பணியாளர்களுக்கு தொடர்ச்சியான கல்வியை வழங்கவும், இந்தியாவில் உள்ள அந்த நிறுவனத்தின் சமூகப்பொறுப்புணர்வு திட்டங்களில் ஒத்துழைக்கவும், சென்னை ஐஐடி – வால்மார்ட் குளோபல் டெக் நிறுவனம் இடையே புரிந்துணர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி சென்னை ஐஐடி மாணவர்களும், வால்மார்ட் குளோபல் டெக் பணியாளர்களும் ஆராய்ச்சித் திட்டங்களில் இணைந்து செயலாற்றுவர்.

---

**1. இந்திய ரிசர்வ் வங்கியால் சமீபத்தில் தொடங்கப்பட்ட 'UPI123Pay' வசதியின் இலக்குப் பயனாளிகள் யார்?**

அ) பார்வைக் குறைபாடுடையோர்

**ஆ) கைபேசி பயனர்கள் ☑**

இ) குழந்தைகள்

ஈ) மூத்த குடிமக்கள்

✓ RBI ஆளுநர் சக்திகாந்த தாஸ் 'UPI123Pay' எனப்படும் சாதாரண கைபேசிகளுக்கான UPI வசதியை அறிமுகம் செய்தார். 'டிஜிசாதி' என்ற டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைக்–காக 24×7 ஹெல்ப்லைனையும் அவர் தொடங்கினார்.

✓ 'UPI123Pay' ஆனது ஸ்கேன் செய்து பணஞ்செலுத்தும் சேவையைத்தவிர அனைத்துப் பரிவர்த்தனைகளுக்கும் சாதாரண கைபேசியைப் பயன்படுத்த வாடிக்கையாளர்க–ளை அனுமதிக்கும். இந்த வசதியைப் பயன்படுத்த வாடிக்கையாளர்கள் தங்கள் வங்கிக்கணக்கை சாதாரண கைபேசியுடன் இணைத்திருக்க வேண்டும்.

---

**2. 'BBIN' மோட்டார் வாகன ஒப்பந்தத்தை செயல்படுத்துவ–தற்காக பின்வரும் எந்த நாடுகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?**




அ) பூட்டான்–நேபாளம்

**ஆ) வங்காளதேசம்–நேபாளம் ☑**

இ) பூட்டான்–கம்போடியா–நேபாளம்

ஈ) வங்காளதேசம்–மியான்மர்–நேபாளம்

✓ இந்தியா, வங்கதேசம் மற்றும் நேபாளம் ஆகியவை வங்க தேசம்–பூடான்–இந்தியா–நேபாளம் (BBIN) மோட்டார் வாகன ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதற்கான புரிந்துண–ர்வு ஒப்பந்தத்தை இறுதிசெய்துள்ளன. இந்தக்கூட்டத்தில் பூடான் பார்வையாளராக பங்கேற்றது.

✓ BBIN ஆனது பிராந்திய வர்த்தகம் மற்றும் இணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற, "பரம் கங்கா" என்றால் என்ன?**



அ) COVID தடுப்பு மருந்து

ஆ) கங்கை புத்துயிரளிப்புத் திட்டம்

**இ) மீத்திறன் கணினி ☑**

ஈ) கிரிப்டோ–நாணயம்

✓ தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் மிஷன் 1.66 பெடா பிளாப்ஸ் திறன்கொண்ட "PARAM Ganga" என்ற மீத்திறன் கணினியை நிறுவியுள்ளது.

✓ இது மின்னணுவியல் & தகவல்தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் அறிவியல் & தொழில்நுட்பத்துறை ஆகியவற்றால் கூட்டாக இயக்கப்படுகிறது. நவீன கணினி மேம்பாட்டு மையம் (C–DAC) மற்றும் இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூர் ஆகியவற்றால் இது செயல்படுத்தப்படுகிறது.

---

**4. 'பால்–தாத்வாவ் படுகொலை' இன்றைய எந்த இந்திய மாநிலத்தில் நடைபெற்றது?**



**அ) குஜராத் ☑**

ஆ) மேற்கு வங்கம்

இ) அஸ்ஸாம்

ஈ) உத்தரகாண்ட்

✓ குஜராத் மாநில அரசு 'பால்–தாத்வாவ்' படுகொலையின் 100ஆம் ஆண்டு நிறைவைக்குறிப்பிட்டு, இது "ஜாலியன் வாலாபாக்கை விடவும் மிகப்பெரிய படுகொலை" என்று கூறியது. அம்மாநிலத்தின் குடியரசு நாள் அலங்கார ஊர்தியிலும் இந்தப்படுகொலைகள் இடம்பெற்றிருந்தன.

✓ குஜராத் மாநிலத்தின் 'பால்–சிதாரியா' மற்றும் 'தத்வாவ்' கிராமங்களில் 1922 மார்ச்.7ஆம் தேதி இப்படுகொலை நடந்தது. மோதிலால் தேஜாவத் தலைமையிலான, 'ஏகி இயக்கத்தின்' ஒருபகுதியாக கிராமமக்கள் ஒன்றுகூடிய போது, ஆங்கிலேயர்களால் சுமார் ஆயிரம் பேர் சுட்டு வீழ்த்தப்பட்டனர். அதீத நிலவருவாய் வரிக்கு எதிராக போராட்டம் நடத்துவதே அவர்களின் நோக்கமாகும்.

---

**5. 'கௌசல்யா மாத்ரித்வா யோஜனா' தொடங்கப்பட்ட இந்திய மாநிலம் எது?**



அ) ஒடிஸா

ஆ) குஜராத்

**இ) சத்தீஸ்கர் ☑**

ஈ) இராஜஸ்தான்

✓ சத்தீஸ்கர் மாநில முதல்வர் பூபேஷ் பாகேல், 'கௌசல்யா மாத்ரித்வா யோஜனா' என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின்கீழ் இரண்டாவது பெண் குழந்தை பிறக்கும் பெண்களுக்கு 5000 ரூபாய் நிதியுதவி வழங்கப்படும். அவர், 'கன்யா விவாக யோஜனா' குறிப்பு ஏடு & சகி தொலைபேசி விவரக்கொத்தை வெளியிட்டார்.

---

**6. "sun–to–liquid" எரிபொருளைப் பயன்படுத்தும் உலகின் முதல் வானூர்தி நிறுவனம் எது?**



அ) ஜப்பான் ஏர்லைன்ஸ்

ஆ) கேத்தே பசிபிக் ஏர்வேஸ்

**இ) சுவிஸ் ஏர்லைன்ஸ் ☑**

ஈ) குவாண்டாஸ் ஏர்வேஸ்

✓ சுவிஸ் மற்றும் அதன் தாய் நிறுவனமான லுப்தான்சா குழுமம், அதன் சூரிய ஆற்றல் எரிபொருளைப்பயன்படுத்த செயற்கை எரிபொருள் குழுவான சின்ஹெலியன் உடன் கூட்டுசேர்ந்துள்ளது.

✓ இதன்மூலம், "sun–to–liquid" எரிபொருளை பயன்படுத்தும் உலகின் முதல் வானூர்தி நிறுவனமாக சுவிஸ் மாறும். சுவிட்சர்லாந்தைச்சார்ந்த சின்ஹெலியன், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து வானூர்திக்கான நிலையான எரிபொருளை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பத்–தை உருவாக்கியுள்ளது.

---

**7.** 'குப்பையில்லா நகரங்களுக்கான சமூக நிறுவனங்கள்' என்ற தேசிய மாநாட்டை நடத்தும் மாநிலம் எது?

அ) பீகார்



**ஆ) சத்தீஸ்கர் ☑**

இ) ஒடிஸா

ஈ) குஜராத்

✓ தூய்மை இந்தியா இயக்கம் – நகர்ப்புறம் 2.0, வீட்டுவசதி & நகர்ப்புற விவகார அமைச்சகத்தின்கீழ், 'குப்பையில்லா நகரங்களுக்கான சமூக நிறுவனங்கள்: கழிவு மேலாண் –மையில் பெண் தொழில்முனைவோரை ஊக்குவித்தல்' என்ற தேசிய மாநாட்டை ஏற்பாடு செய்தது. இராய்ப்பூரில் சத்தீஸ்கர் மாநில அரசுடன் இணைந்து இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

---

**8.** 'இந்திய அரசின் சுற்றுச்சூழல் அறிக்கை – 2022'ஐ வெளியிட்ட நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

**ஆ) அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் ☑**

இ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்றம் அமைச்சகம்

ஈ) ஐநா வளர்ச்சித் திட்டம்

✓ மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் பூபேந்தர் யாதவ், அறிவியல் மற்றும் சுற்றுச் சூழலுக்கான மையத்தின் 'டௌன் டூ எர்த்' என்ற இந்திய சுற்றுச்சூழல் அறிக்கை – 2022'ஐ வெளியிட்டார்.

✓ தில்லியைச் சார்ந்த இலாப நோக்கற்ற அறிவியல் மையம் ஏற்பாடு செய்த அனில் அகர்வால் பேச்சுவார்த்தையில் இது வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையின்படி, உத்தரபிரதேசம் மற்றும் பீகார் ஆகியவை முறையே 11 மற்றும் 14ஆம் SDG–களில் தேசிய சராசரியைவிடக்குறைவாக உள்ளன. SDG–இல் கேரளா, தமிழ்நாடு மற்றும் இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்கள் சிறப்பாக செயல்பட்டன.

---

**9.** 2022–ISSF உலகக்கோப்பை நடைபெறும் இடம் எது?

**அ) கெய்ரோ ☑**



ஆ) பாரிஸ்

இ) புடாபெஸ்ட்

ஈ) மாஸ்கோ

✓ நடப்பாண்டுக்கான (2022) முதல் ISSF உலகக்கோப்பை எகிப்தின் கெய்ரோ நகரில் நடைபெற்று வருகிறது.

✓ ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்திய வீரர் சௌரப் சௌத்ரி தங்கப்பதக்கம் வென்றார். மற்றொரு இந்திய வீராங்கனையான இஷா சிங், பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றதன்மூலம் நாட்டிற்கு 2ஆவது பதக்கத்தை வென்று தந்தார்.

---

**10.** 'ஸ்த்ரீ மனோரக்ஷா திட்டத்தை'த் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?

**அ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ☑**

ஆ) சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

இ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

ஈ) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

✓ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இந்தியாவில் பெண்களின் மனநலத்தை மேம்படுத்த 'ஸ்த்ரீ மனோரக்ஷா திட்டத்தை' அறிமுகப்படுத்தியது.

✓ பெங்களூரில் உள்ள தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்துடன் இணைந்து இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. வன்முறை மற்றும் துன்பத்திற்கு ஆளான பெண்ணை எவ்வாறு கையாள்வது என்ற திறனை வளர்ப்பதில் இத்திட்டம் கவனஞ்செலுத்துகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஸ்டான்லி மருத்துவமனையில் ₹2.44 கோடியில் வாழ்வூட்டும் மருத்துவ ஆராய்ச்சி மையம்**

அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் ₹2.44 கோடி செலவில் வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி மையத்தை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

---

**2. சாகித்திய அகாதெமி விருது...**

"சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை" என்ற சிறுகதைத் தொகுப்புக்காக எழுத்தாளர் அம்பைக்கு சாகித்திய அகாதெமி விருதும் "அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை" என்ற படைப்புக்காக எழுத்தாளர் மு முருகேசுக்கு பால சாகித்ய புரஸ்கார் விருதும் வழங்கப்பட்டன.

---

**3. சேதி தெரியுமா?**

**பிப்.28:** 'SEBI' என்றழைக்கப்படும் இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் முதல் பெண் தலைவராக மாதவி புரி நியமிக்கப்பட்டார்.

**மார்ச்.1:** உக்ரைன் – ரஷ்யா இடையே போர் நடைபெறும் நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்வதற்கான விண்ணப்பத்தில் உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஸெலென்ஸ்கி கையெழுத்திட்டார்.

**மார்ச்.2:** அரசுப்பணி நியமனங்களில் 3ஆம் பாலினத்தவரு –க்குத் தனி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

**மார்ச்.3:** போர் நடைபெறும் உக்ரைனில் சிக்கியுள்ள தமிழ்நாட்டு மாணவர்களை மீட்க வசதியாக எம்பி–க்கள் திருச்சி சிவா, கலாநிதி வீராசாமி, MM அப்துல்லா, எம் எல் ஏ டி ஆர் பி இராஜா ஆகியோர் அடங்கிய குழுவைத் தமிழக அரசு நியமித்தது.

**மார்ச்.4:** தமிழ்நாட்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் மேயர், துணை மேயர், தலைவர்,

துணைத்தலைவர் ஆகியோரைத் தேர்வுசெய்வதற்கான மறைமுகத் தேர்தல் நடைபெற்றது. இதில் பெரும்பாலான பதவிகளை திமுக கூட்டணி வென்றது.

**மார்ச்.4:** ஆஸ்திரேலியாவின் சுழற்பந்து ஜாம்பவான் ஷேன் வார்ன் (52) தாய்லாந்தில் தங்கியிருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டுக் காலமானார்.

**மார்ச்.5:** மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் அமன் லேகி தன்னுடைய பதவியை இராஜினாமா செய்து, அதற்கான கடிதத்தை மத்திய சட்டத்துறை அமைச்சர் கிரின் ரிஜிஜுவுக்கு அனுப்பினார்.

**மார்ச்.5:** மணிப்பூரில் 60 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு இருகட்டங்களாக நடைபெற்ற தேர்தலில் 86.01 சதவீத வாக்குகள் பதிவாயின.

### 3. புதிய வாடிக்கையாளர்களை சேர்க்க பேடிஎம் நிறுவனத்துக்கு தடை: ரிசர்வ் வங்கி நடவடிக்கை

புதிய வாடிக்கையாளர்களை சேர்க்க பேடிஎம் நிறுவனத்துக்கு ஆர்பிஐ தடை விதித்துள்ளது. ஆன்லைன் நிதி பரிவர்த்தனை நிறுவனமான பேடிஎம், புதிய வாடிக்கையாளர்களை சேர்க்க இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தடை விதித்துள்ளது. 1949ஆம் ஆண்டு வங்கி ஒழுங்குமுறை சட்டம் விதி 35–ஏ பிரிவின்கீழ் இந்தநடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இந்த தடை உடனடியாக அமலுக்கு வருவதாகவும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. பேடிஎம் நிறுவனத்தின் நிர்வாகம் தொடர்பான ஐயப்பாடு காரணமாக இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக ஆர்பிஐ கூறியுள்ளது.

நிறுவனத்தின் ஐடி செயல்பாடுகளை தணிக்கை செய்ய தகவல் தொழில்நுட்ப (ஐடி) தணிக்கைக் குழுவை அமைக்குமாறு பேடிஎம் நிறுவனத்தை ஆர்பிஐ வலியுறுத்தியுள்ளது. ஐடி தணிக்கை நிறுவனம் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் புதிய வாடிக்கையாளர்களை அனுமதிப்பதற்கு சிறப்பு அனுமதி வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என ஆர்பிஐ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜூன் மாதத்தில் சிறிய நிதி வங்கி தொடங்குவது தொடர்பாக ரிசர்வ் வங்கியை இரு தினங்களுக்கு முன் பேடிஎம் விண்ணப்பித்திருந்தது. இந்நிலையில் நிறுவன செயல்பாடு குறித்த புகார் எழுந்ததன் அடிப்படையில் இந்த நடவடிக்கையை ஆர்பிஐ எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

### 4. இந்தியாவில் உருவாக்கப்பட்ட விமானிகள் பயிற்சி விமானம்: ஹன்சா–என்ஜி–இன் கடல்மட்ட சோதனை வெற்றி

விமானிகள் பயிற்சி பெறுவதற்காக இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ள ஹன்சா–என்ஜி நவீன பயிற்சி விமானத்தின் கடல்மட்ட சோதனைகள் வெற்றிபெற்றன.

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றத்தின் (சிஎஸ்ஐஆர்) ஆய்வுக்கூடங்களில் ஒன்று பெங்களூருவிலுள்ள தேசிய விமானவியல் ஆய்வகம் (என்ஏஎல்). இந்த ஆய்வகம், விமானி பயிற்சிக்காக ஹன்சா என்ற இரு நபர் விமானத்தை 1993–ல் உருவாக்கியது.

மேம்பட்ட தொழில்நுட்பங்களைக் கொண்டபுதிய தலைமுறை ஹன்சா – என்ஜி (New Generation) என்ற அடையாளத்தோடு செப்.2021–ல் முதன்முதலாக பறக்க விடப்பட்டது. ஆராய்ச்சி நிலையிலிருந்து உற்பத்தி நிலைக்குச் செல்ல பல விதமான விமான சோதனைகள் செய்யப்படும். சமீபத்தில் நடந்த கடல் மட்ட சோதனைகளில் ஹன்சா–என்ஜி வெற்றி பெற்றுள் ளது. இதுகுறித்து அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஹன்சா–என்ஜி விமானத்தின் கடல்மட்ட சோதனைகள் புதுச்சேரியில் நடைபெற்றன. மணிக்கு 155 கிமீ வேகத்தில் பறந்த விமானம் பெங்களூருவிலிருந்து புதுச்சேரி வரை உள்ள 140 கடல் மைல் தூரத்தை ஒன்றரை மணி நேரத்தில் அடைந்தது.

#### இதுவரை 37 முறை சோதனை

பிப்.19 முதல் மார்ச் 5 வரை கடல் மட்ட சோதனைகளில் இந்த விமானம் 18 மணி நேரம்ஈடுபடுத்தப்பட்டது. விமானத்தின் பல்வேறுசெயல்பாடுகள் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டன. இந்த சோதனைகளுடன் இதுவரை விமானம் 37 முறை பறக்க விடப்பட்டு 50 மணி நேரம் சோதிக்கப்பட்டது. இன்னும் சில சோதனைகளுக்கு பிறகு சிவில் விமான போக்குவரத்து பொது இயக்குநரகத்தின் அனுமதி பெறப்படும். விமானம் உற்பத்தி நிலைக்குச் செல்ல கடல்மட்ட சோதனையின் வெற்றி ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.

ஹன்சா–என்ஜி விமானத்தில் பல புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உள்நாட்டு தயாரிப்பாகவும் எரிபொருள் சிக்கனமும் உள்ளதால் விமான பயிற்சி பள்ளிகளுக்கு ஏற்ற விமானமாக இது இருக்கும். இந்த விமானத்தை வாங்குவதற்கு இதுவரை 80 விமான பயிற்சி பள்ளிகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**1. எந்த அமைச்சகத்தின் நிர்வாக அதிகார வரம்பின்கீழ் தேசிய நிலப்பணமாக்கல் கழகம் செயல்படுகிறது?**

அ) வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

**ஆ) நிதியமைச்சகம் ☑**

இ) MSME அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ பிரதமர் தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், உபரி நிலங்களைப் பணமாக்குவதற்காக சிறப்பு ஏற்பாடாக, முற்றிலும் மத்திய அரசுக்கு சொந்தமான நிறுவனமாக தேசிய நில பணமாக்கல் கழகத்தை ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்தக் கழகத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட தொடக்க பங்கு மூலதனமாக ₹5,000 கோடியும், பெறப்படும் தொகையிலிருந்து ₹150 கோடி பங்கு மூலதனத்தையும் கொண்டதாக இருக்கும்.

✓ மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பிற அரசு அமைப்புகளுக்குச் சொந்தமான உபரிநிலம் மற்றும் கட்டட சொத்துக்களை பணமாக்கும் பணியை இந்தக் கழகம் மேற்கொள்ளும். மத்திய நிதியமைச்சகத்தின் பொது நிறுவனங்கள் துறை இந்தக் கழகத்தை உருவாக்கி, அதன் நிர்வாகம் அமைச்சகமாகவும் செயல்படும்.

---

**2. அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பு – CERN, அண்மையில் எந்த நாட்டின் கூர்நோக்காளர் தகுதியை இடைநிறுத்தம் செய்துவைத்துள்ளது?**

அ) அமெரிக்கா

**ஆ) ரஷ்யா ☑**

இ) உக்ரைன்

ஈ) பெலாரஸ்

✓ 'CERN' எனப்படும் அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பு அண்மையில் ரஷ்யாவின் 'கூர்நோக்காளர்' தகுதி நிலையை இடைநிறுத்தம் செய்துவைத்துள்ளது. இது அணுக்களை உடைக்கும் உலகின் மிகப்பெரிய கருவியைக் கொண்ட சர்வதேச அறிவியல் ஆய்வகமாகும்.

✓ உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை அதன் 23 உறுப்புநாடுகளும் கண்டிப்பதாக CERN அறிவித்துள்ளது. உக்ரைன், ஏழு இணை உறுப்புநாடுகளுள் ஒன்றாகும். மேலும் ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை CERNஇல் கூர்நோக்காளர் தகுதி நிலையைப் பெற்றுள்ளன.

---

**3. இந்தியாவில் 'WHO உலகளாவிய பாரம்பரிய மருத்துவ மையம்' நிறுவப்பட்டுள்ள இடம் எது?**

அ) எர்ணாகுளம்

**ஆ) ஜாம்நகர் ☑**



இ) சிம்லா

ஈ) கொல்கத்தா

✓ குஜராத்தின் ஜாம்நகரில், பாரம்பரிய மருந்துகளுக்கான உலக சுகாதார அமைப்பின் (WHO) சர்வதேச மையத்தை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ AYUSH அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் ஜாம்நகரில் அமைக்கப்படவுள்ள இந்த மையத்திற்காக, மத்திய அரசு WHO உடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளும். இந்த மையம் பாரம்பரிய மருத்துவத்திற்காக, அதன் தலைமை இடத்திற்கு வெளியே அமைக்கப்படும் முதலாவது மற்றும் சர்வதேச மையமாக திகழும்.

---

**4. 2022 – தேசிய இளைஞர் நாடாளுமன்ற விழாவின் கருப்பொருள் என்ன?**

**அ) Be the voice of New India and find solutions and contribute to Policy ☑**



ஆ) Voice of Youth matters

இ) e–Governance and Use of ICT

ஈ) Participation of Women in Parliament

✓ 2022 – தேசிய இளைஞர் நாடாளுமன்றத் திருவிழாவின் 3ஆம் பதிப்பின் தேசிய சுற்று தொடக்க அமர்வில் மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் உரையாற்றினார்.

✓ இந்த ஆண்டு (2022) தேசிய இளைஞர் நாடாளுமன்றத் திருவிழாவின் கருப்பொருள், "புதிய இந்தியாவின் குரலாக இருங்கள் மற்றும் தீர்வுகளைக் கண்டறிந்து கொள்கைக்குப் பங்களிப்பு செய்யுங்கள்" என்பதாகும். எதிர்வரும் ஆண்டுகளில் பல்வேறு தொழிற்துறைகளில் இணையவுள்ள இளைஞர்களின் குரலைக் கேட்க இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

**5. சமீபத்தில் வெளியான, 'UDISE+ அறிக்கை' என்பதுடன் தொடர்புடைய துறை எது?**

அ) சுகாதாரம்



**ஆ) கல்வி ☑**

இ) வணிகம்

ஈ) பெண்கள் அதிகாரமளித்தல்

✓ இந்தியாவின் பள்ளிக்கல்வி குறித்த 'ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பு பிளஸ் (UDISE+)' அறிக்கை 2020–21 சமீபத்தில் வெளியிடப்பட்டது.

✓ இவ்வறிக்கையின்படி, 2020–21 அமர்வில் தொடக்கநிலை முதல் மேல்நிலை வரை பள்ளிக்கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை 25.38 கோடியாக உயர்ந்துள்ளது. மொத்தப் பதிவு விகிதம், 2020–21இல் அனைத்து நிலைகளிலும் மேம்பட்டுள்ளது.

✓ அரசு உதவி பெறும், தனியார் பள்ளிகளில் பயிலும் 39.7 லட்சம் மாணவர்கள் அரசுப்பள்ளிகளுக்கு மாறியுள்ளனர் என்றும் இவ்வறிக்கை கூறுகிறது.

---

**6. 1996–க்குப் பிறகு மிகநீண்ட மின்வெட்டை விதித்த ஆசிய நாடு எது?**

அ) வங்காளதேசம்



ஆ) இந்தோனேசியா

**இ) இலங்கை ☑**

ஈ) ஆப்கானிஸ்தான்

- ✓ இலங்கை நாடளாவிய ரீதியில் நாள்தோறும் 7½ மணி நேர மின்வெட்டை அறிவித்துள்ளது. கடந்த 1996ஆம் ஆண்டுக்குப் பின் இலங்கையில் அறிவிக்கப்படும் மிக நீண்ட மின்வெட்டு இதுவாகும்.
- ✓ அதிகாரபூர்வ தகவல்களின்படி, மின் பற்றாக்குறையை நாடு எதிர்கொள்ளவில்லை; மாறாக அந்நியச் செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. அந்த நாட்டில் எரிபொருளை இறக்குமதி செய்வதற்குக்கூட போதுமான நிதி இருப்பு இல்லை எனக் கூறப்படுகிறது.

---

**7. எந்த மாநிலம்/UTஇல், கிராம இராணுவக் குழுக்களை அமைக்க மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) ஒப்புதல் அளித்துள்ளது?**

**அ) ஜம்மு–காஷ்மீர் ☑**

ஆ) பீகார்

இ) ஜார்கண்ட்

ஈ) பஞ்சாப்

- ✓ ஜம்மு–காஷ்மீரில் கிராம ராணுவக் குழுக்களை அமைக்க உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. கிராம இராணுவக்குழுக்களின் உறுப்பினர்கள் கிராம பாதுகாப்பு காவலர்களாக நியமிக்கப்படுவார்கள். 1990–களில், ஜம்மு காஷ்மீரில் 4,125 கிராம இராணுவக் குழுக்கள் இருந்தன.
- ✓ இந்தப் புதிய முயற்சி இக்குழுக்களுக்கு புத்துயிரளிக்கும் செயலாக பார்க்கப்படுகிறது. அவை பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ராணுவப்படைகளுக்கு உதவுவதோடு அமைதியை நிலைநாட்டவும் உதவுகின்றன.

---

**8. மானிலிருந்து மனிதனுக்கு COVID–19 பரவுவதற்கான சாத்தியக்கூறுகளைப் பதிவுசெய்துள்ள நாடு எது?**



அ) ஆஸ்திரேலியா

ஆ) ரஷ்யா

இ) பிரேசில்

**ஈ) கனடா ☑**

- ✓ ஒரு புதிய ஆய்வின்படி, மான்மூலம் மனிதனுக்குப் பரவிய COVID–19இன் முதல் பாதிப்பு கனடாவில் பதிவாகியுள்ளது. வெண்ணிற வாலுடைய மானினங்களில் SARS–CoV–2 மரபணுக்களின் மிகப்பிறழ்ந்த கொத்துக்களை ஆராய்ச்சி –யாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- ✓ ஆய்வுக்காக, தென்மேற்கு மற்றும் கீழை ஒன்டாரியோவில் உள்ள வெண்ணிற வால் மானின் 300 மாதிரிகளை ஆய்வாளர்கள் ஆய்வுசெய்தனர். தென்மேற்கு ஒன்டாரி –யோவில் பதினேழு மான்களுக்கு SARS–CoV–2 பாதிப்பு இருந்ததையும் அவர்கள் கண்டறிந்தனர்.

---

**9. ஐநா (UN) சுற்றுச்சூழல் திட்டத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ) ஜெனீவா

**ஆ) நைரோபி ☑**

இ) பாரிஸ்

ஈ) நியூயார்க்

- ✓ ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) என்பது, ஐநா அவையின் சூழல் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பு, மனிதச்சூழல்தொடர்பாக ஸ்டாக்ஹோமில் நடந்த ஐநா மாநாட்டைத் தொடர்ந்து 1972 ஜூனில் நிறுவப்பட்டது.
- ✓ UNEP–இன் தலைமையகம் கென்யாவின் நைரோபியில் உள்ளது. UNEP ஆனது ஐநா சுற்றுச்சூழல் பேரவையின் சிறப்பு இரண்டு நாள் அமர்வில் அதன் 50ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடவுள்ளது.

---

**10. WHO–இன் 2022ஆம் ஆண்டு உலக செவித்திறன் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) To hear for life, listen with care! ☑**




ஆ) Hearing to all and by all

இ) Hear the needs of vulnerable

ஈ) To hear is to listen

- ✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.3ஆம் தேதி உலக நலவாழ்வு அமைப்பால் (WHO) உலக செவித்திறன் (Hearing) நாளாக கொண்டாடப்படுகிறது. "To hear for life, listen with care!" என்பது 2022ஆம் ஆண்டில் வரும் உலக செவித்திறன் நாளுக்கானக் கருப்பொருளாகும்.
- ✓ இந்த ஆண்டு (2022), வாழ்க்கைப் பாதையில் நல்ல செவித்திறனைப் பேணுவதற்கான வழிமுறையாகப் பாதுகாப்பாகக் கேட்பதன் முக்கியத்துவத்தில் WHO தனது கவனத்தைச் செலுத்தும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி 8.1%–ஆக குறைப்பு**

நடப்பு 2021–22ஆம் நிதியாண்டில் தொழிலாளர்களின் வருங்கால வைப்புநிதிக்கான வட்டி விகிதத்தை 8.1 சதவீதமாக குறைக்க தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அமைப்பு (EPFO) முடிவெடுத்துள்ளது. இது 44 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குறைந்தபட்ச வட்டி விகிதமாகும்.

---

**2. மிதாலி ராஜ் புதிய சாதனை:**

ஐசிசி மகளிர் ஒருநாள் உலகக்கோப்பை போட்டிகளில் அதிக ஆட்டங்களுக்கு கேப்டனாக இருந்தவர் என்ற புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார் இந்தியாவின் மிதாலி ராஜ். ஆஸி. கேப்டன் மெலின்டா கிளார்க் 23 ஆட்டங்களுக்கு கேப்டனாக இருந்தது சாதனையாக இருந்தது.

ஆனால் மிதாலி 24 ஆட்டங்களுக்கு கேப்டனாக இருந்து சாதனையை முறியடித்துள்ளார்.

**ஜூலன் கோஸ்வாமி புதிய சாதனை:**

1 நாள் உலகக்கோப்பை போட்டியில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர் என்ற புதிய சாதனையையும் நிகழ்த்தி உள்ளார் ஜூலன் கோஸ்வாமி. ஆஸி. வீராங்கனை லின் புல்ஸ்டன் 39 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார். மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் விக்கெட்டை

வீழ்த்தியதின்மூலம் நாற்பது விக்கெட்டுகளுடன் புதிய சாதனையை படைத்துள்ளார் ஜுலன் கோஸ்வாமி.

**3. உக்ரைன் இந்திய தூதரகம் போலந்துக்கு மாற்றம்**

உக்ரைன் தலைநகர் கீவில் செயல்பட்ட இந்திய தூதரகம் போலந்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நேட்டோவில் இணைய முடிவு செய்த உக்ரைன் மீது கடந்த 24–ம் தேதி ரஷ்யா போர் தொடுத்தது. உக்ரைன் தலைநகர் கீவ் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் மீது ரஷ்ய ராணுவம் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகிறது. கீவில் செயல்பட்ட இந்திய தூதரகம், உக்ரைனில் சிக்கித் தவித்த இந்திய மாணவ, மாணவியரை மீட்கும் சவாலான பணியை திறம்பட மேற்கொண்டது. தூதரகத்தின் நடவடிக்கைகளால் சுமார் 20,000–க்கும் மேற்பட்ட இந்திய மாணவர்கள் உக்ரைனில் இருந்து பத்திரமாக மீட்கப்பட்டு தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழலில் தலைநகரம் கீவை கைப்பற்ற ரஷ்ய ஐராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. கீவ் நகரைச் சுற்றி வளைத்துள்ள ரஷ்ய பீரங்கி படைகள் தொடர்ந்து முன்னேறி வருகின்றன. வான்வழி தாக்குதலும் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து கீவில் செயல்பட்ட இந்திய தூதரகம் அண்டை நாடான போலந்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெளியுறவுத்துறை வெளியிட்ட அறிக்கையில், "உக்ரைனில் நிலவும் அசாதாரண சூழ்நிலையை கருத்தில்கொண்டு உக்ரைனுக்கான இந்திய தூதரகம் தற்காலிகமாக போலந்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளது. உக்ரைன் பாதுகாப்பு நிலைமை மேம்பட்ட பிறகு தூதரகத்தை கீவுக்கு மாற்றுவது குறித்து பரிசீலிக்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4. ஆசிய ஜூனியர் குத்துச்சண்டையில் இந்தியாவுக்கு 6 தங்கப்பதக்கம் கிடைத்துள்ளன.**

ஜோர்டானில், ஆசிய ஜூனியர் மற்றும் யூத் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் நடக்கிறது. ஜூனியர் பெண்களுக்கான 50 கிலோகிராம் எடைப்பிரிவு பைனலில் இந்தியாவின் வினி 5–0 என, கஜகஸ்தானின் கரினா டோகுபேவை வீழ்த்தி தங்கம் வென்றார்.

ஜூனியர் பெண்களுக்கான 52 கிலோகிராம் எடைப்பிரிவு பைனலில் இந்தியாவின் யாக்சிகா 4–1 என, உஸ்பெகிஸ்தானின் ரஹிமா பெக்னியாசோவாவை தோற்கடித்து தங்கத்தை தட்டிச் சென்றார். இந்திய வீராங்கனை விதி (ஜூனியர் 57 கிலோகிராம்) 5–0 என, ஜோர்டானின் அயா சுவின்தேவை வீழ்த்தி தங்கம் வென்றார்.

மற்ற எடைப்பிரிவு பைனலில் இந்தியாவின் நிகிதா சந்த் (60 கிலோகிராம்), ஷ்ருஷ்தி (63 கிலோகிராம்), ருத்ரிகா (75 கிலோகிராம்) வெற்றி பெற்று தங்கம் கைப்பற்றினர். மஹி (46 கிலோகிராம்), பாலக் (48 கிலோகிராம்), சுப்ரியா (54 கிலோகிராம்), குஷி (81 கிலோகிராம்) பைனலில் தோல்வியடைந்து வெள்ளி வென்றனர்.

**5. வரும் ஆண்டு சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்படும்: அமைச்சர் MRK பன்னீர்செல்வம் பேட்டி**

வருகிற ஆண்டு சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்படும் என்று வேளாண்துறை அமைச்சர் MRK பன்னீர்செல்வம் தெரிவித்தார். நெல் சாகுபடிக்கு இணையாக சிறுதானிய உற்பத்தியை முனைப்பாகக்கொண்டுசெல்லும் வகையில் இத்திட்டம் அறிவிக்கப்பட இருக்கிறது.

**6. இலங்கையில் உள்ள சம்பூரில் இந்தியா உதவியுடன் 100 MW சூரிய சக்தி மின் நிலையம் அமைக்க ஒப்பந்தம்**

இலங்கையில் 100 மவ் இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்காக இந்தியாவின் தேசிய அனல் மின்கழகம் & இலங்கை மின்சபை ஒப்பந்தம் செய்துள்ளன.

இலங்கை இராணுவத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடந்த போரில், கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளிடம் இருந்து அந்நாட்டு ராணுவம் கைப்பற்றிய முதல் இடம் சம்பூர். 2006–ம் ஆண்டு சம்பூர் பகுதியை கைப்பற்றிய பிறகு அந்த இடம் ராணுவத்தால் உயர் பாதுகாப்பு வளையமாக அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் அதிகரித்து வரும் மின் தேவையை சமாளிக்கும் வகை யில், திரிகோணமலை மாவட்டம், சம்பூர்பகுதியில் புதிய அனல் மின் நிலையம் அமைக்க இந்தியா – இலங்கை அரசுகளிடையே கடந்த 2011–ல் ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என திரிகோணமலை மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்த நிலையில், அந்த ஒப்பந்தம் தற்போது சூரிய மின் உற்பத்தியை மேற்கொள்ளும் வகையில் மாற்றி அமைக்க இரு நாட்டு அரசுகளும் ஒப்புக்கொண்டன.

இதற்கான நிகழ்ச்சி கொழும்பில் நேற்று முன்தினம் நடந்தது. இது தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியாவின் தேசிய அனல் மின் கழகம் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டனர்.

**7. உடான் திட்டத்தின் கீழ் 405 விமான வழித்தடங்கள்**

சிறிய நகரங்களுக்கும் விமான சேவையை விரிவுபடுத்தும் பிராந்திய இணைப்புத் திட்டமான உடான் திட்டத்தின் கீழ், 405 வழித்தடங்களில் விமானங்கள் இயக்கப்படுவதாக மத்திய வான்போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் ஜெனரல் வி கே சிங் தெரிவித்துள்ளார். மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனைத் தெரிவித்துள்ள அவர், மொத்தம் 948 வழித்தடங்களில் விமானங்களை இயக்க, இந்தியா விமான நிலையங்கள் ஆணையம் அனுமதி அளித்திருப்பதாக கூறியுள்ளார்.

இதில், மார்ச்.9ஆம் தேதி நிலவரப்படி, எட்டு ஹெலிகாப்டர் தளங்கள் உட்பட 65 விமான நிலையங்கள் மற்றும் 2 நீர்நிலை விமான நிலையங்களை (Water Aerodromes) உள்ளடக்கி மொத்தம் 405 வழித்தடங்களில் விமான சேவை நடத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிராந்திய இணைப்புத் திட்டத்தின்கீழ், 14 நீர்நிலை விமான தளங்கள், 36 ஹெலிபேட் உட்பட 154 விமான

நிலையங்கள், உடான் திட்டத்தின் கீழ் விமான சேவைகளை தொடங்க தேர்வு செய்யப்பட்டிருப்பதாகவும், ஜெனரல் வி கே சிங் தெரிவித்துள்ளார்.

---

### 8. வெள்ள முன்னறிவிப்பு அமைப்பு: தமிழ்நாட்டில் உள்ள நிலையங்களின் எண்ணிக்கை

மாநிலங்களவையில் எழுத்துபூர்வமாக பதிலளித்த ஜல் சக்தி இணை அமைச்சர் பிஷ்வேஸ்வர் துடு கீழ்காணும் தகவல்களை வழங்கினார்.

2016ஆம் ஆண்டு பருவமழையைத் தொடர்ந்து நாட்டில் வெள்ளம் ஏற்படக்கூடிய 20 முக்கிய ஆற்றுப்படுகைகளுக் –கான ஐந்து நாள் வெள்ள முன்னறிவிப்பு முறையை மத்திய நீர் ஆணையம் உருவாக்கி வருகிறது.

உள்நாட்டிலேயே உருவாக்கப்படும் இந்த அமைப்புகள் GPM (குளோபல் பெரசிப்பிடேஷன் மேனேஜ்மெண்ட்) GSMAP (குளோபல் சேட்டிலைட் மேப்பிங் ஆப் பெரசிபிடே –ஷன் – ஜப்பான் ஏரோஸ்பேஸ் எக்ஸ்ப்ளோரேஷன் ஏஜென்சியின் தயாரிப்பு) மற்றும் ஐஎம்டி (இந்திய வானிலை ஆய்வுத்துறை) ஆகியவற்றின் சர்வதேச மழைப்பொழிவு மாதிரியைப் பயன்படுத்துகின்றன.

இவற்றின் அடிப்படையில் வெள்ள முன்னறிவிப்பு அமைப்புகளை உருவாக்குவதற்காக, 20 முக்கிய நதிப் படுகைகளுக்கு 1–டி கணித வெள்ள முன்னறிவிப்பு மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்திய அளவில் 2016 வரை 199ஆக இருந்த வெள்ள முன்னறிவிப்பு நிலையங்களின் எண்ணிக்கை, தற்போது 331 ஆக இருக்கிறது. தமிழ்நாட்டில் 2016 வரை ஐந்தாக இருந்த வெள்ள முன்னறிவிப்பு நிலையங்களின் எண்ணிக்கை, தற்போது 15ஆக இருக்கிறது.

வெள்ள முன்னறிவிப்பு நடவடிக்கைகளுக்காக தமிழ்நாட்டிற்கு 2018–19இல் ₹26.75 லட்சமும், 2019–20 இல் ₹38.66 லட்சமும், 2020–21இல் ₹269.04 லட்சமும், 2021–22இல் ₹215.68 லட்சமும் என மொத்தம் ₹550.13 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

---

**1.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சியாமாபெய் என்ற தொல்லியல் தளம் அமைந்துள்ள நாடு எது?**



அ) ஜப்பான்

ஆ) வியட்நாம்

**இ) சீனா ☑**

ஈ) சுமத்ரா

✓ சீனாவைச் சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பெய்ஜிங்கிலிருந்து நூறு மைல்களுக்கு குறைவான தொலைவில் உள்ள சியாமாபெய் என்ற இடத்தில் பழங் கற்கால பண்பாட்டின் எச்சங்களை கண்டுபிடித்துள்ளனர்.

✓ அங்கு, பண்டைய ஹோமினின்கள் ஓச்சர் எனப்படும் செந்நிற நிறமியைப் பயன்படுத்தியது மற்றும் கல்லில் இருந்து சிறிய கத்தி போன்ற கருவிகளை வடிவமைத்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த எச்சங்கள் 40,000 ஆண்டுகளுக்கும் முந்தையவை என்று நம்பப்படுகிறது.

---

**2.** **'Role of Labour in India's Development' என்ற நூலை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு

ஆ) NITI ஆயோக்

**இ) பணியாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

ஈ) ASSOCHAM

✓ 'இந்தியாவின் வளர்ச்சியில் தொழிலாளர்களின் பங்கு' என்ற நூலினை தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு அமைச்சர் பூபேந்திர யாதவ் வெளியிட்டார். இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் தொழிலாளர்களின் பங்களிப்பு குறித்து பிரபல கல்வியாளர்கள் & களப்பணியாளர்கள் எழுதிய 12 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

✓ வி வி கிரி தேசிய தொழிலாளர் கல்விக் கழகம் இந்த நூலினை வெளியிட்டுள்ளது.

---

**3.** **MSME அடைவகம், வடிவமைப்பு & IPR திட்டங்களின் ஒருங்கிணைப்பாக தொடங்கப்பட்ட ஒரு புதிய திட்டத்தின் பெயர் என்ன?**

அ) MSME சாம்பியன்ஸ் திட்டம்



**ஆ) MSME புத்தாக்க திட்டம் ☑**

இ) MSME பிளஸ் திட்டம்

ஈ) MSME புரோ திட்டம்

✓ சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான புதுமைகள் (வழிகாட்டுதல், வடிவமைப்பு மற்றும் அறிவுசார் சொத்துரிமை) திட்டத்தையும் MSME ஐடியா ஹேக்கத்தானையும் மத்திய சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் நாராயண் ராணே தொடங்கி வைத்தார்.

✓ சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் படைப்புத்திறனை ஊக்குவித்து ஆதரிக்க MSME புதுமைகள் திட்டம் உதவும்.

---

**4.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'Xenotransplantation' என்பதுடன் தொடர்புடைய துறை எது?**



அ) கிரிப்டோ–நாணயம்

**ஆ) உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை ☑**

இ) குறைகடத்தி உற்பத்தி

ஈ) பருவநிலை மாற்றம்

✓ அயல்பதியஞ்செய்தல் (*Xenotransplantation*) என்பது அ) மனிதரல்லாத விலங்குமூலத்திலிருந்து உயிரணுக்கள், திசுக்கள் அல்லது உறுப்புகள், அல்லது (ஆ) ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட மனித உடல் திரவங்கள், செல்கள், திசுக்கள் அல்லது உறுப்புகளை மனிதனுக்கு மாற்றுவது என வரையறுக்கப்படுகிறது.

✓ இதயம் செயலிழந்த நிலையில், மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயம் மாற்றப்பட்ட நோயாளி அண்மையில் காலமானார். இது இந்த அறுவை சிகிச்சைக்கு இரண்டு மாதங்களுக்குப் பிறகு நடந்துள்ளது.

---

**5.** **உலகளாவிய வர்த்தகத்தில் ரஷ்யாவின் மிகப்பெரிய பங்களிப்பு எது?**



அ) பாதுகாப்பு உபகரணங்கள்

**ஆ) கச்சா பெட்ரோலியம் ☑**

இ) சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியம்

ஈ) எஃகு

✓ உலகளாவிய வர்த்தகத்தில் ரஷ்யாவின் மிகப்பெரிய பங்களிப்பு எரிசக்தி குறிப்பாக கச்சா பெட்ரோலியம் (USD 123 பில்லியன்). அதைத் தொடர்ந்து சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியமும் எரிவாயுவும் உள்ளது.

✓ சமீபத்தில், உக்ரைன் மீதான போர்த்தொடுப்பாள் பொருளாதாரத்தடைகளால் பாதிக்கப்பட்ட ரஷ்யா 200–க்கும் மேற்பட்ட தயாரிப்புகளுக்கு ஏற்றுமதி தடையை அறிவித்தது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு எரிசக்தி விநியோகம் செய்யும் முதன்மையாளராக ரஷ்யா உள்ளது.

---

**6.** **எந்த மத்திய அமைச்சகத்தால், டிரோன் மற்றும் டிரோன் கூறுகளுக்கான PLI திட்டம் அறிவிக்கப்பட்டது?**

அ) பாதுகாப்பு அமைச்சகம்

**ஆ) சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம் ☑**

இ) வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஈ) MSME அமைச்சகம்

✓ உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை பெறுவதற்கு டிரோன் தொழில் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்–கள் வரவேற்கப்படுவதாக சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

✓ உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டம் கடந்த 2021 செப்.30 அன்று அறிவிக்கப்பட்டது. உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வீதமானது மதிப்புக்கூடுதல் தொகையில் 20% ஆகும்.

---

**7.** 'யூரோபா கிளிப்பர் விண்கலம்' என்பது பின்வரும் எந்த விண்வெளி நிறுவனத்தின் முதன்மைத் திட்டமாகும்?



**அ) நாசா ☑**

ஆ) ஈஎஸ்ஏ

இ) ஜாக்ஸா

ஈ) ரோஸ்கோஸ்மாஸ்

- ✓ 2024ஆம் ஆண்டில் வியாழனின் நிலவான யூரோபாவிற்கு ஏவப்படுவதற்கு முன், 'யூரோபா கிளிப்பர் விண்கலத்தின்' இறுதிக்கட்டப் பணிகளை நாசா மேற்கொண்டு வருகிறது.
- ✓ இந்த விண்கலத்தின் முதன்மை அமைப்பு ஜான்ஸ் ஹாப்கின்ஸ் அப்ளைடு பிசிக்ஸ் ஆய்வகக்கத்தால் வடிவமைத்து கட்டப்பட்ட பத்து அடி உயரமுள்ள ஒரு மாபெரும் உந்துவிசை தொகுதி ஆகும்.

---

**8.** 'Lunar Reconnaissance' **சுற்றுக்கலனை ஏவிய நாடு எது?**



அ) ரஷ்யா

**ஆ) அமெரிக்கா ☑**

இ) ஜப்பான்

ஈ) இந்தியா

- ✓ லூனார் ரீகனைசென்ஸ் ஆர்பிட்டர் (LRO) என்பது NASA இன் ரோபோ விண்கலமாகும்.
- ✓ இது நிலவின் மையத்தில் இருந்து விலகி துருவ சுற்றுப் பாதையில் அதனைச் சுற்றி வருகிறது. நாசாவின் லூனார் ரீகனைசென்ஸ் ஆர்பிட்டர் திங்களின் மேற்பரப்பை ஆய்வதற்காக உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

---

**9.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஹோலோங்கி நகரம் அமைந்துள்ள மாநிலம் எது?



அ) மேகாலயா

**ஆ) அருணாச்சல பிரதேசம் ☑**

இ) இராஜஸ்தான்

ஈ) ஒடிஸா

- ✓ அருணாச்சல பிரதேசத்தில் உள்ள ஹோலோங்கியில் கிரீன்பீல்ட் விமான நிலையத்தை அமைக்கும் பணியை இந்திய வானூர்தி நிலைய ஆணையம் மேற்கொண்டு உள்ளது. இது மாநிலத்தின் தலைநகரான இட்டாநகரில் இருந்து 15 கிமீ தொலைவில் உள்ளது. கிரீன்பீல்ட் விமான நிலையம் ₹645 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு ஆக.15, 2022 முதல் செயல்படத்தொடங்கும்.

---

**10.** எந்த மாநிலத்தின் சுற்றுலாத் துறையால், "பிராஜ் ஹோலி மகோத்சவம்" நடத்தப்படுகிறது?



அ) உத்தர பிரதேசம்

ஆ) மத்திய பிரதேசம்

இ) ஹரியானா

**ஈ) இராஜஸ்தான் ☑**

- ✓ இராஜஸ்தான் மாநில சுற்றுலாத்துறை, மார்ச்.12–14 வரை மூன்று நாள் ஹோலி பண்டிகையான, "பிராஜ் ஹோலி மகோத்சவத்தை" நடத்தவுள்ளது.
- ✓ அக்கொண்டாட்ட நிகழ்வுகள் பாரத்பூர், டீக் மற்றும் கமான் நகரங்களில் நடைபெறும். உள்ளூர் விளையாட்டுகள், பாரம்பரிய நடனம் மற்றும் இசையுடன் அனைத்து வயது சுற்றுலாப் பயணிகளையும் மகிழ்விப்பதற்காக இந்தக் கொண்டாட்டம் நடத்தப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. '₹5,000 கோடி முதலீடு, 70,000+ வேலைவாய்ப்பு' – சென்னையில் மிகப்பெரிய ஐடி வளாகத்துக்கு முதல்வர் மு க ஸ்டாலின் அடிக்கல்**

சென்னை தரமணியில், "ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ்"–ன் மிகப்பெரிய உலகளாவிய வளாகத்திற்கு தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸின் மிகப்பெரிய உலகளாவிய வளாகத்திற்கு, தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

டிட்கோவின் 50 கோடி ரூபாய் முதலீட்டு பங்குடன் மேற்கொள்ளும் இந்தக் கூட்டுமுயற்சி செயல்திட்டத்தில், இந்த ஐடி மற்றும் ஐடிஇஎஸ் பூங்காவானது 6.8 மில்லியன் சதுர அடி பரப்பில், 27 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ளது. 5,000 கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்டிருக்கும் இந்த செயல்திட்டத்தில், DLF நிறுவனம் இத்தொகையை படிப் படியாக தேவைப்படும் காலகட்டங்களில் முதலீடு செய்யும்.

இதுபோன்ற பெரிய அளவிலான வர்த்தக அலுவலக செயல்திட்டங்கள், ஒரு டிரில்லியன் SGDP (மாநில அளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி) என்ற இலக்கை 2030ஆம் ஆண்டுக்குள் எட்டுவதற்கு தமிழ்நாட்டிற்கு வாய்ப்புகளை வழங்கும்.

---

**2. நீர்நிலை ஆக்கிரமிப்பு: தமிழ்நாடு முதலிடம்**

இராஜ்யசபாவில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த மத்திய ஜல்சக்தி துறை இணையமைச்சர் பிஸ்வேஸ்வர் தூடு கூறியதாவது: நாடு முழுதும், 9.45 இலட்சம் நீர்நிலைகள் இருப்பதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. இதில், 18 ஆயிரத்து 691 நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில்தான் அதிகபட்சமாக 8,366 நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ஆந்திராவில் 3,920; தெலுங்கானாவில், 3,032 நீர்நிலைகள் ஆக்கிரமிப்பில் உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

---

**3. ஏர் இந்தியாவின் புதிய தலைவராக டாடா சன்ஸ் சந்திரசேகரன் நியமனம்**

ஏர் இந்தியாவின் புதிய தலைவராக சந்திரசேகரனை நியமித்து டாடா குழுமம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

ஏர் இந்தியா நிறுவனத்தின் புதிய தலைமைச் செயல் அதிகாரி, நிர்வாக இயக்குநராக இல்கர் ஐசி நியமனம் செய்யப்படுவதாக டாடா அறிவித்தது. துருக்கி ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவராக பணியாற்றியவர் இல்கர் ஐசி. ஏப்ரல்.1ஆம் தேதி இல்கர் ஐசி பொறுப்பேற்க இருந்தார். அவரது நியமனத்துக்கு பல்வேறு தரப்பில் எதிர்ப்புகள் கிளப்பின.

துருக்கி அதிபருக்கு நெருக்கமானவர் என்பதால் அவரது பணிநியமனத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கக் கூடாது என இந்தியாவில் கோரிக்கை எழுந்தது.

இதனையடுத்து அவர் பதவியேற்க மறுத்து விட்டார். இந்தநிலையில் ஏர் இந்தியாவின் புதிய தலைவராக சந்திரசேகரன் இருப்பார் என்று டாடா குழுமம் அறிவித்து உள்ளது. இதற்கான ஒப்புதலை டாடா குழுமம் வழங்கியது.

சந்திரசேகரன், டாடா குழுமத்திற்கு தலைமைதாங்கும் முதல் பார்சி அல்லாத தொழில்முறை நிர்வாகி ஆவார்.

---

**4. திருக்குறள் – 'புளியமரத்தின் கதை' – தெலுங்கு நூல்களை முதல்வர் மு க ஸ்டாலின் வெளியிட்டார்**

உலகப்பொதுமறையாம் திருக்குறள், எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் 'ஒரு புளியமரத்தின் கதை' ஆகியவற்றின் தெலுங்கு நூல்களை முதல்வர் முக ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

அரசுப் பள்ளிகளில் தொழில்நுட்பக் கட்டமைப்பை வலிமைப்படுத்தவும், எளிமையாக தொழில்நுட்ப கற்றல் வளங்களை பள்ளிகளில் உருவாக்கிடவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தொழில்நுட்ப மற்றும் கணினிமயமான பள்ளிகளின் செயல்முறைக்கு ஏற்றவகையில் ஆசிரியர்களின் தொழில் நுட்பத்திறனை மேம்படுத்த தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறையும், காக்னிசன்ட் தகவல் தொழில்நுட்ப (CTS) நிறுவனமும் இணைந்து பள்ளிகளில் தொழில்நுட்ப தர மேம்பாட்டுக்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டன.

இந்த ஒப்பந்தம் முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் செய்துகொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம்மூலமாக, கணினி மயக்கற்றல் மேம்பாட்டுத் திட்டத்துக்கு காக்னிசன்ட் நிறுவனம் அறிவுசார் பங்குதாரராக அரசுடன் இணைந்து செயலாற்றும்.

**நூல்கள் வெளியீடு:** 'உலகப்பொதுமறை' எனப் போற்றப்படும் திருக்குறள் நூலானது, பேராசிரியர் ஜெயப் பிரகாஷ்மூலமாக தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதேபோன்று, புகழ்பெற்ற எழுத்தாளர் சுந்தரராமசாமி எழுதிய 'ஒரு புளியமரத்தின் கதை' நூலானது, கௌரி கிருபானந்தனால் தெலுங்கில் மொழிபெயர்ப்பு செய்யப் –பட்டுள்ளது. இந்த 2 நூல்களை முதல்வர் மு க ஸ்டாலின் வெளியிட்டார்.

---

**5. சேதி தெரியுமா?**

**மார்ச் 6:** மகளிர் 50 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் ஆறாவது முறையாகப் பங்கேற்கும் முதல் வீராங்கனை என்கிற சிறப்பை இந்தியாவின் மிதாலி ராஜ் பெற்றார்.

**மார்ச் 7:** சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மத்திய அரசு வழங்கிய 2020–ஆம் ஆண்டுக்கான 'மகளிர் சக்தி' விருது நீலகிரியைச் சேர்ந்த கைவினைக்கலைஞர்கள் ஜெயமுத்து, தேஜம்மாளுக்கும் 2021–ஆம் ஆண்டுக்கான விருது மன நல மருத்துவ நிபுணர் தாரா ரங்கசாமிக்கும் வழங்கப்பட்டன.

**மார்ச் 8:** தமிழக நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள், இனி குடும்பத் தலைவிகளின் பெயரிலேயே வழங்கப்படும் என மு க ஸ்டாலின் அறிவித்தார்.

**மார்ச் 9:** குஜராத் ஜாம்நகரில் பாரம்பரிய மருந்துகளுக்கான உலக சுகாதார அமைப்பின் சர்வதேச மையத்தை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

**மார்ச் 9:** முன்னாள் பிரதமர் இராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் 31 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் பேரறிவாளனுக்கு ஜாமீன் வழங்கி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

**மார்ச் 10:** 5 மாநிலங்களில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் உத்தர பிரதேசம், உத்தராகண்ட், மணிப்பூர், கோவா ஆகிய நான்கு மாநிலங்களில் பாஜக ஆட்சியைத் தக்கவைத்துக்கொண்டது. பஞ்சாபில் முதன்முறையாக ஆம் ஆத்மி கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

**மார்ச் 10:** இந்தியாவில் 'ஒரே நாடு ஒரே தேர்தல்' நடத்தத் தேர்தல் ஆணையம் தயாராக இருப்பதாகத் தலைமைத் தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா தெரிவித்தார்.

**மார்ச் 11:** இந்தியாவில் முதன்முறையாக முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் தொழிற்பூங்கா ஐதராபாத்தில் தொடங்கப்பட்டது.

---

**6. மார்ச்.15 – உலக நுகர்வோர் நாள்**

**கருப்பொருள்:** Fair Digital Finance

---

**1.** 'விஸ்வகர்மா ராஷ்ட்ரிய புரஸ்கர்' விருதை வழங்குகிற மத்திய அமைச்சகம் எது?

அ) கல்வி அமைச்சகம்

**ஆ) பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

இ) MSME அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகமானது கடந்த 1965ஆம் ஆண்டு முதல் 'விஸ்வகர்மா ராஷ்ட்ரிய புரஸ்கர் (VRP)' மற்றும் 'தேசிய பாதுகாப்பு விருதுகளையும் (NSA)', கடந்த 1983ஆம் ஆண்டு முதல் தேசிய பாதுகாப்பு விருதுகளையும் (சுரங்கங்கள்) வழங்கி வருகிறது.

✓ பணிச்சூழலில் முன்னேற்றம் விளைவிக்கும் ஒரு பணியாள் அல்லது பணியாளர்கள் குழு வழங்கிய பரிந்துரைகளை அங்கீகரிப்பதற்காக VRP வழங்கப்படுகிறது. தொழிற்துறை நிறுவனங்களின் பாதுகாப்பு செயல்திறனை அங்கீகரிப்பதற்காக NSA வழங்கப்படுகிறது.

---

**2.** கல்லாலான மிகப்பெரிய புத்தர் சிலை கண்டறியப்பட்டுள்ள நாடு எது?



அ) இந்தியா

***ஆ) சீனா ☑***

இ) நேபாளம்

ஈ) இலங்கை

✓ 233 அடி உயரமுள்ள கல்லால் ஆன சீனாவின் லேஷான் புத்தர் சிலை, உலகின் மிகப்பெரியதும் உயரமானதுமான புத்தர் சிலை ஆகும். 1996ஆம் ஆண்டு முதல் UNESCO உலக பாரம்பரிய தளமாக பட்டியலிடப்பட்டுள்ள இச்சிலை, எமி மலையை எதிர்நோக்கி உள்ளது.

✓ புத்த கயாவில் பௌத்தர் பன்னாட்டு பொதுநல இயக்கம் மூலம் இந்தியாவின் மிகப்பெரிய சாய்ந்தநிலை புத்தர் சிலை கட்டப்படுகிறது. 100 அடி நீளமும், 30 அடி உயரமும் கொண்ட இந்தச் சிலை கண்ணாடியிழையால் செய்யப்பட உள்ளது.

---

**3.** முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் இந்தியாவின் முதல், 'தொழிற்பூங்கா' அமைந்துள்ள நகரம் எது?



அ) மும்பை

ஆ) சென்னை

**இ) ஐதராபாத் ☑**

ஈ) புது தில்லி

✓ முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் இந்தியாவின் முதல், 'தொழிற்பூங்கா' ஐதராபாத்தில் இருபத்தைந்து பசுமைத் திட்டங்களுடன் செயல்படத் தொடங்கியுள்ளது.

✓ தெலுங்கானா மாநில அரசாங்கத்துடன் இணைந்து FICCI பெண்கள் கூட்டமைப்புமூலம் 'FLO தொழிற்பூங்கா' ஊக்குவிக்கப்படுகிறது. இத்தொழிற்பூங்காவிற்கு ₹250 கோடி முதலீட்டையும் FLO தந்துள்ளது.

---

**4.** உர உற்பத்தியாளர் 'SPIC', சமீபத்தில் எம்மாநிலத்தில் மிதவி சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை அமைத்தது?

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) இராஜஸ்தான்

இ) குஜராத்

ஈ) பஞ்சாப்

✓ முன்னணி உர உற்பத்தி நிறுவனமான சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (SPIC) தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் மிதவை சூரிய மின்னுற்பத்தி திட்டத்தை நிறுவியுள்ளது. இந்த ஆலை, ஆண்டுக்கு 42 மில்லியன் அலகு தூய ஆற்றலை உற்பத்தி செய்யும் மற்றும் அந்த நீர்த்தேக்கத்தில் நீர் ஆவியாதல் குறைப்பைக் கட்டுப்படுத்த உதவும். ₹150 கோடி மதிப்பீட்டில் இந்த ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

---

**5.** "மருந்துத்தொழிற்துறையை வலுப்படுத்துதல்" திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?



அ) சுகாதாரம் & குடும்ப நல அமைச்சகம்

**ஆ) வேதிகள் & உரங்கள் அமைச்சகம் ☑**

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) கனரக தொழிற்துறை அமைச்சகம்

✓ வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின்கீழியங்கும் மருந்துத்துறை, "மருந்துத்தொழிற்துறை வலுப்படுத்துதல்" திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

✓ 2021-22 நிதியாண்டு முதல் 2025-26 நிதியாண்டு வரையிலான காலகட்டத்தில் ₹500 கோடி மொத்த நிதிச் செலவீனத்துடன், "மருந்துத் தொழிலை வலுப்படுத்துதல்" திட்டத்திற்கான வழிகாட்டுதல்களை அத்துறை வெளியிட்டுள்ளது. மருந்துத்துறையில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

---

**6.** சமீப செய்திகளில் இடம்பெற்ற பாண்ட்ரேதன் கோவில் அமைந்துள்ள மாநிலம் / UT எது?



அ) மேற்கு வங்காளம்

**ஆ) ஜம்மு-காஷ்மீர் ☑**

இ) ஹிமாச்சல பிரதேசம்

ஈ) குஜராத்

✓ பாண்ட்ரேதன் கோவில் ஸ்ரீநகர் (ஜம்மு மற்றும் காஷ்மீர்) பதாமிபாக் பகுதியில் அமைந்துள்ள 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பாரம்பரிய தளமாகும். இந்திய ராணுவத்தின் சினார் கார்ப்ஸ் சமீபத்தில் இதனை புதுப்பித்துள்ளது. இது சம்பந்தமாக, இவ்வலகு, கலாசார அமைச்சகத்தின் தேசிய நினைவுச்சின்னங்கள் ஆணையத்தின் அங்கீகாரம் பெற்றது. இந்தத் தளத்தில் இரண்டு பெரிய ஒற்றைக்கல் பாறை சிவலிங்கங்கள், ஏழு காந்தார பாணி சிற்பங்கள் போன்ற வடிவங்களில் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்வேறு சிலைகள் உள்ளன.

---

**7.** **எரிசக்தி அமைச்சகத்தின்கீழ் உருவாக்கப்பட்ட எரிசக்தி மற்றும் அதுதொடர்பான துறைகளுக்கான, 'கொள்கை வாதிடும் பிரிவின்' பெயர் என்ன?**

**அ) எரிசக்தி அறக்கட்டளை ☑**

ஆ) ஆற்றல் அறக்கட்டளை

இ) பசுமை எரிசக்தி அறக்கட்டளை

ஈ) மத்திய எரிசக்தி சங்கம்

✓ NTPC, பவர் கிரிட், REC, PFC, NHPC, THDC, NEEPCO மற்றும் SJVN உள்ளிட்ட மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் ஒரு சமூகமாக 'பவர் ஃபவுண்டேஷனை' பதிவுசெய்தன. இது எரிசக்தி மற்றும் அதுதொடர்புடைய துறைகளுக்கான முதன்மைக் கொள்கை வாதிடும் பிரிவாக செயல்படும்.

✓ இது மாநிலங்கள் & தொழிற்துறைகளுக்கு ஆராய்ச்சியில் உதவுவதையும் இந்தியாவின் ஆற்றல் மாற்றத்திற்கான தீர்வுகளை உருவாக்குவதையும் நோக்கமாகக்கொண்டு உள்ளது. எரிசக்தி மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சரான R K சிங், இந்தச் சங்கத்தின் தலைவராக உள்ளார்.

---

**8.** **தேசிய நிதி அறிக்கையிடல் ஆணையத்தின் (NFRA) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ) அஜய் பூஷன் பாண்டே ☑**



ஆ) நந்தன் நிலேகனி

இ) அஸிம் பிரேம்ஜி

ஈ) கிரிஸ் கோபாலகிருஷ்ணன்

✓ தேசிய நிதி அறிக்கையிடல் ஆணையத்தின் தலைவராக முன்னாள் நிதிச்செயலாளர் அஜய் பூஷன் பாண்டேவை அரசாங்கம் நியமித்துள்ளது. அமைச்சரவையின் நியமனக் குழு மூன்றாண்டு காலத்திற்கு அவரை நியமித்துள்ளது. இவர் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம், வருவாய்த்துறை செயலாளராக இருந்து ஓய்வுபெற்றார்.

---

**9.** **2022 மார்ச் மாத நிலவரப்படி, சந்தை மூலதனத்தின் அடிப்படையில் உலகளாவிய பட்டியலில் இந்தியா பிடித்து உள்ள இடம் என்ன?**

அ) மூன்றாவது

**ஆ) ஐந்தாவது ☑**

இ) ஆறாவது

ஈ) ஏழாவது

✓ சந்தை மூலதனத்தின் அடிப்படையில் இந்திய பங்குச் சந்தை முதன்முறையாக உலகளவில் பட்டியலின் முதல் 5 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளது. நாட்டின் மொத்த சந்தை மதிப்பு $3.21 டிரில்லியன் டாலர்களாக உள்ளது. முதல் 4 இடங்களை அமெரிக்கா ($47.32 டிரில்லியன்), சீனா ($11.52 டிரில்லியன்), ஜப்பான் ($6 டிரில்லியன்) மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகள் பிடித்துள்ளன.

✓ இந்தியாவுக்கு அடுத்தபடியாக UK, சௌதி அரபியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் உள்ளன.

---

**10.** **'Smart Event Tracking System (SETS)' என்பது எந்த அமைச்சகம்/முகமையின் சொந்த மென்பொருளாகும்?**

**அ) இரயில்வே அமைச்சகம் ☑**

ஆ) உள்துறை அமைச்சகம்

இ) MSME அமைச்சகம்

ஈ) AIIMS

✓ 'Smart Event Tracking System (SETS)' என்பது இரயில்வே அமைச்சகத்தின் சொந்த மென்பொருளாகும். இது கூகுள் மேப்ஸ் அடிப்படையிலான திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வில் ஒரு புதிய கருவியாகும்; இது கால்நடைகள் ரயில்களில் சிக்குவதைக் கையாள பயன்படுத்தப்பட்டது.

✓ ஆக்ரா பிரிவில் செயல்பட்டு வரும் இம்மென்பொருள் எதிர்காலத்தில் மற்ற பிரிவுகளிலும் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாடு அரசு சார்பில் தமிழ்மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச்சமுதாய உயர்வுக்கும், தொண்டாற்றி பெருமைசேர்த்த தமிழறிஞர்கள், தமிழமைப்புக்கு விருதுகள் வழங்கப்பட்டது**

**யார்– யாருக்கு விருது?**

**முதல்வர் கணினித் தமிழ் விருது (2020)** – முனைவர் வ தனலட்சுமி

**திருவள்ளுவர் விருது (2022)** – மறைந்த மு மீனாட்சி சுந்தரம்.

**2021–ஆம் ஆண்டுக்கான விருதுகள்:**

**அண்ணா விருது** – சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத்

**அம்பேத்கர் விருது** – ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு

**பெரியார் விருது** – எழுத்தாளர் க. திருநாவுக்கரசு

**காமராசர் விருது** – காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தன்

**பாரதிதாசன் விருது** – புலவர் செந்தலை கௌதமன்

**பாரதியார் விருது** – ஆவணப்பட இயக்குநர் பாரதி கிருஷ்ண குமார்

**தேவநேயப்பாவாணர் விருது** – முனைவர் கு அரசேந்திரன்

**கி ஆ பெ விசுவநாதம் விருது** – முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம இராசேந்திரன்

**கம்பர் விருது** – பட்டிமன்ற பேச்சாளர் பாரதி பாஸ்கர்

**சொல்லின் செல்வர் விருது** – சூர்யா சேவியர்

**ஜி யு போப் விருது** – இதழாளர் அ சு பன்னீர்செல்வன்

**உமறுப்புலவர்** விருது– மதுரை நா மம்மது

**இளங்கோவடிகள் விருது** – சொற்பொழிவாளர் நெல்லை கண்ணன்

**சிங்காரவேலர் விருது** – கவிஞர் மதுக்கூர் இராமலிங்கம்

**மறைமலையடிகள் விருது** – சொற்பொழிவாளர் சுகி சிவம்

**வள்ளலார் விருது** – முனைவர் இரா சஞ்சீவிராயர்

**அயோத்திதாசப் பண்டிதர் விருது** – ஞான அலாய்சியஸ்

**சி பா ஆதித்தனார் திங்களிதழ் விருது** – உயிர்மை திங்களிதழ்

**தமிழ்த்தாய் விருது** – மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

**விருதுத்தொகை எவ்வளவு?**

விருதுபெறும் விருதாளர்களுக்கு தலா ₹2 லட்சத்துக்கான காசோலை, தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்பட்டன. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையால் வழங்கப்படும் பெரியார்விருது பெறுபவருக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் வழங்கப்படும் அம்பேத்கர் விருதினைப் பெறுபவருக்கும் விருதுத்தொகையாக தலா ₹5 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கி பொன்னாடை ஆகியவை வழங்கி சிறப்பிக்கப்பட்டனர்.

சி பா ஆதித்தனார் திங்களிதழ் விருது பெற்ற உயிர்மை திங்களிதழுக்கு விருதுத்தொகையான ₹2 லட்சத்துக்கான காசோலை, தகுதியுரை, கேடயம், பொன்னாடை வழங்கப்பட்டது. 2021–ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தாய் விருதுபெற்ற மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கு ₹5 லட்சத்துக்கான காசோலை, தகுதியுரை, கேடயம், பொன்னாடை ஆகியவை வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

---

### 2. 'தி காஷ்மீர் ஃபைல்ஸ்' திரைப்படத்துக்குப் பிரதமர் பாராட்டு

'தி காஷ்மீர் ஃபைல்ஸ்ர் திரைப்படத்துக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

**வரி விலக்கு:** 'தி காஷ்மீர் ஃபைல்ஸ்' திரைப்படத்துக்கு மத்திய பிரதேசம், குஜராத், கர்நாடகம், ஹரியானா, உத்தர பிரதேச மாநில அரசுகள் கேளிக்கை வரியில் விலக்கு அளித்துள்ளன.

---

### 3. ஆசிய இளையோர், ஜூனியர் குத்துச்சண்டையில் சென்னை வீரருக்கு தங்கம்: 39 பதக்கங்களை அள்ளியது இந்தியா

ஆசிய இளையோர் மற்றும் ஜூனியர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பில் இந்தியா 39 பதக்கங்களை வென்றது. கடைசி நாளில் சென்னையைச் சேர்ந்த விஷ்வநாத் சுரேஷ் தங்கப்பதக்கம் வென்றார்.

ஜோர்டானின் அம்மான் நகரில் ஆசிய இளையோர் மற்றும் ஜூனியர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் நடைபெற்றது. இதன் கடைசி நாளான நேற்றுமுன்தினம் இளையோருக்கான 48 கிலோ எடைப்பிரிவு இறுதிப் போட்டியில் சென்னையைச் சேர்ந்த விஷ்வநாத் சுரேஷ் 5–0 என்ற கணக்கில் கிர்கிஸ்தானின் எர்கெஷோவ்பெக்ஸாட்டை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார். அதேவேளையில் 63.5கிலோ எடைப் பிரிவில் சோனிப்பட்டைச் சேர்ந்த வன்ஷாஜ் 4–1 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானில் ஜாவோகிர் உம்மாத லீவ்வை தோற்கடித்து தங்கம் வென்றார்.

92 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் அமன் சிங் பிஷ்த் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

இறுதிசுற்றில் அவர், 1–4 என்றகணக்கில்ஜோர்டானின் சைஃப்அல்–ரவாஷ்தேவிடம் தோல்வியடைந்தார். மகளிர் பிரிவில் நிவேதிதா கார்கி (48 கிலோ), தமன்னா (50 கிலோ), ஷாஹீன் கில் (60 கிலோ), ரவீனா (63 கிலோ), முஸ்கான் (75 கிலோ) ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றனர்.

51 கிலோ எடைப் பிரிவில் ராமன், 54 கிலோ எடைப் பிரிவில்ஆனந்த் யாதவ், 75 கிலோ எடைப்பிரிவில் தீபக் ஆகியோர் வெண்கலப் பதக்கம் பெற்றனர். இளையோர் பிரிவில் மட்டும் இந்தியா 7 தங்கம், 3 வெள்ளி, 8 வெண்கலம் என மொத்தம் 18 பதக்கங்கள் பெற்று பதக்க பட்டியலில் 3–வது இடம் பிடித்தது. உஸ்பெகிஸ்தான் 23 பதக்கங்களுடன் முதலிடமும், கஜகஸ்தான் 22 பதக்கங்களுடன் 2–வது இடமும் பிடித்தன.

ஜூனியர் பிரிவில் வினி (50 கிலோ), யாஷிகா (52 கிலோ), நிகிதா சந்த் (60 கிலோ), வைதி (57 கிலோ), ஷிருஷ்டி சாத்தே (63 கிலோ), ருத்ரிகா (75 கிலோ), கிரிஷ் பால் (46 கிலோ), யஷ்வர்தன் சிங் (60 கிலோ) ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றனர். ஜூனியர் பிரிவில் இந்தியா 8 தங்கம், 7 வெள்ளி,6 வெண்கலம் என 21 பதக்கங்களுடன் பதக்க பட்டியலில் 2–வது இடம்பிடித்தது. ஒட்டுமொத்தமாக இந்தியா இந்தத் தொடரில் 15 தங்கம், 10 வெள்ளி, 14 வெண்கலம் என 39 பதக்கங்கள் வென்று குவித்தது.

---

### 4. ஸ்ரீபெரும்புதூரில் ₹1,588 கோடியில் சாம்சங் கம்ப்ரசர் ஆலை

திருப்பெரும்புதூரில் ₹1,588 கோடியில் சாம்சங் நிறுவனத்தின் கம்ப்ரசர் தொழிற்சாலை அமைப்பதற்கான ஒப்பந்தம் முதலமைச்சர் மு க ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.

---

### 5. காவிரி, யமுனை, பிரம்மபுத்திரா உள்ளிட்ட 13 நதிக் கரைகளில் ₹19,000 கோடியில் காடு வளர்ப்புத் திட்டம்: மத்திய அரசு தொடங்கியது

காவிரி, யமுனை, பிரம்மபுத்திரா உள்ளிட்ட 13 ஆற்றங் கரைகளில் ₹19 ஆயிரம் கோடி செலவில் ஆற்றோர காடு வளர்ப்புத் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

இத்திட்டத்தை மத்திய சுற்றுச்சூழல் துறையும், ஜல் சக்தி துறையும் இணைந்து செயல்படுத்தவுள்ளன. ₹19,000 கோடி செலவில் 13 பெரிய ஆறுகளையொட்டி காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இதன்மூலம் சுமார் 7,417.36 சதுர கிலோ மீட்டர் அளவுக்கு நாட்டில் காடுகளின் பரப்பளவு அதிகரிக்கப்படும்.

காடு வளர்க்கும் திட்டம்மூலம் நிலத்தடி நீர் அதிகரிக்கும். மேலும் வண்டல் மண் பிரதேசங்கள் குறைக்கப்படும். அது மட்டுமல்லாமல் ₹449.01 கோடி மதிப்பிலான மரமல்லாத, வனப்பொருட்கள் கிடைக்கும் என்று மத்திய சுற்றுச்சூழல் துறை தெரிவித்துள்ளது. மேலும் 34.4 கோடி மனித

நாட்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் சுற்றுச் சூழல் துறை தெரிவித்துள்ளது.

காவிரி, ஜீலம், சீனாப், ராவி, பியாஸ், சட்லெஜ், யமுனை, பிரம்மபுத்ரா, லுனி, நர்மதா, கோதாவரி, மகாநதி, கிருஷ்ணா ஆகிய 13 ஆறுகளையொட்டி இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். திட்டத்துக்கான நிதியை தேசிய காடு வளர்ப்பு & சூழல் மேம்பாட்டு வாரியம் வழங்கவுள்ளது.

**18,90,110 சதுர கிலோ மீட்டருக்கு...**

இந்த 13 நதிகளும் 18,90,110 ச கிலோ மீட்டர் அளவுக்கான பாசன வசதியைக் கொண்டுள்ளன அல்லது புவியியல் பகுதியில் சுமார் 57.45% சதவீதத்தைக் கொண்டுள்ளன. அவற்றின் நீளம் 42,830 கிலோ மீட்டர் ஆகும்.

இந்த ஆறுகளையொட்டி பல்வேறு மரவகைகள், மருத்துவ குணம் நிறைந்த செடிகள், புற்கள், புதர்கள், பழமரங்கள் ஆகியவை நடப்படவுள்ளன. இந்தத் திட்டத்தில் 667 மருத்துவச் செடிகள் மற்றும் தோட்ட மரங்களை நடலாம் என முன்மொழியப்பட்டுள்ளது.

அவற்றில் 283 மருத்துவச் செடிகள் இயற்கை நிலப் பரப்புகளுக்கும், 97 மருத்துவச் செடிகள் விவசாய நிலப் பரப்புகளுக்கும் மற்றும் 116 மரங்கள் நகர்ப்புற நிலப் பரப்புகளுக்கும் முன்மொழியப்பட்டுள்ளன.

இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டால் 2030ஆம் ஆண்டுக்குள் 2.6 கோடி ஹெக்டேர் பாழ்நிலங்கள் மீட்கப்படும் எனத் தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு பிரிட்டனின் கிளாஸ்கோ நகரில் நடந்த கூட்டத்தில், இந்தியா தனது திட்டமிடப்பட்ட கார்பன் உமிழ்வை 2030-க்குள் 100 கோடி டன்கள் குறைப்பதாக உறுதியளித்திருந்தது. மேலும் 2030-க்குள் புதுப்பிக்கத்த -க்க ஆற்றல்மூலம் நாட்டின் 50 சதவீதம் மின்னாற்றல் தேவைகளைப்பூர்த்தி செய்துகொள்வோம் என்றும் இந்தியா உறுதியளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**1. கர்நாடக மாநிலத்தின் எத்தனை பல்கலைக்கழகங்கள் அண்மையில், "உயர்புகழ்கொண்ட பல்கலைக்கழகம்" என்னும் அங்கீகாரத்தைப் பெற்றன?**

அ) 2

ஆ) 4

**இ) 6 ☑**

ஈ) 8



✓ கர்நாடகா மாநில அரசால் நடத்தப்படும் ஆறு கல்லூரிகள் "உயர்புகழ்கொண்ட (eminence) பல்கலைக்கழகம்" என்னும் அங்கீகாரத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்தக் கல்லூரிகள் புதுப்பிக்கப்பட்டு, தரத்தை மேலும் மேம்படுத்து –வதற்காக ஊக்குவிக்கப்படும்.

---

**2. 'நூர்–2' என்னும் இராணுவ செயற்கைக்கோளை அதன் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்திய நாடு எது?**

அ) ஐக்கிய அரபு அமீரகம்

**ஆ) ஈரான் ☑**

இ) இஸ்ரேல்

ஈ) ஓமான்



✓ ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவலர் படை தனது இரண்டாவது ராணுவ செயற்கைக்கோளான 'நூர்–2'ஐ வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது. இது 500 கிமீ உயரத்தில் புவியைச்சுற்றி வருகிறது. முதல் ராணுவ செயற்கைக்கோளான நூர் (பாரசீக மொழியில் 'ஒளி'), கடந்த 2020 ஏப்ரலில் ஏவப்பட்டது.

---

**3. கேரளா, ஹரியானா, மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் கீழ்காணும் எந்தத் தேதியில் உருவாக்கப்பட்டன?**

அ) மார்ச் 25

ஆ) ஏப்ரல் 01

இ) மே 05

**ஈ) நவம்பர் 01 ☑**




✓ நவ.1 அன்று தமிழ்நாடு, கேரளா, ஹரியானா, மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் கர்நாடகா போன்ற பல்வேறு இந்திய மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. இந்த நாள் மாநில நாளாக அல்லது மாநில உருவாக்க நாளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

✓ தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கர்நாடகா, மத்திய பிரதேசம் மற்றும் கேரளா ஆகியவை 1956இல் உருவாக்கப்பட்டன. பஞ்சாப் மற்றும் ஹரியானா 1966இல் உருவாக்கப்பட்டன.

---

**4. ரேணுகாஜி அணை பல்நோக்கு திட்டத்திற்கான ஒப்பந்தத்தின் ஒருபகுதியாக உள்ள மாநிலம் எது?**

**அ) உத்தர பிரதேசம் ☑**

ஆ) ஆந்திர பிரதேசம்

இ) குஜராத்

ஈ) பஞ்சாப்



✓ ரேணுகாஜி அணை பல்நோக்கு திட்டத்திற்கான ஒப்பந்தம் உத்தர பிரதேசம், ஹரியானா, இமாச்சல பிரதேசம், இராஜஸ்தான், உத்தரகண்ட் மற்றும் தில்லி ஆகிய ஆறு மாநிலங்களுக்கு இடையே கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின்படி யமுனை ஆறு மற்றும் அதன் இரண்டு கிளையாறுகளில் 3 திட்டங்கள் கட்ட முன்மொழியப்பட்டது.

---

**5. 'சாகித்யோத்சவ்' இலக்கிய விழாவை நடத்தும் நகரம் எது?**

அ) ஜெய்ப்பூர்

**ஆ) புது தில்லி ☑**

இ) புனே

ஈ) கொல்கத்தா

✓ சாகித்திய அகாதெமியின் இலக்கிய விழாவான 'சாகித்யோத்சவ்' சமீபத்தில் புது தில்லியில் தொடங்கியது. இந்தியாவின் 75ஆம் விடுதலை ஆண்டை நினைவுகூரும் வகையில், '2022 அஞ்சல்களின் திருவிழா' கொண்டாடப் –படுகிறது.

---

**6. 'அனைத்து மகளிர் இரயில் நிலையம்' என்று அறிவிக்கப்பட்ட குண்ட்லா போச்சம்பள்ளி ரயில் நிலையம், அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) தெலுங்கானா ☑**

இ) கர்நாடகா

ஈ) ஒடிஸா



✓ தெலுங்கானாவில் செகந்திராபாத்–மேட்சல் பிரிவிலுள்ள புறநகர் நிலையங்களுள் ஒன்றான குண்ட்லா போச்சம் பள்ளி இரயில் நிலையம், 'அனைத்து மகளிர் இரயில் நிலையம்' என அறிவிக்கப்பட்டுள்ளது.

✓ இரயில் இயக்கிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், பயணச் சீட்டு, பாதுகாப்பு மற்றும் தெற்கு மத்திய ரயில்வேயின் பிற தொடர்புடைய பணிகள் உட்பட அன்றாட நடவடிக்கைக –ளைக் கையாள அங்கு மகளிரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

---

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ராஷ்ட்ரிய இந்திய இராணுவக்கல்லூரி அமைந்துள்ள இந்திய மாநிலம் எது?**

அ) கேரளா

**ஆ) உத்தராகாண்ட் ☑**

இ) இமாச்சல பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா



✓ இந்தியாவின் மிகப்பழமையான இராணுவப் பள்ளியான ராஷ்ட்ரிய இந்திய ராணுவக் கல்லூரி (RIMC) சமீபத்தில் தனது நூறாண்டை நிறைவுசெய்தது. இது உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள டேராடூனில் அமைந்துள்ளது.

✓ இந்த இராணுவப் பயிற்சி நிறுவனம் 1922ஆம் ஆண்டு மார்ச் மாதம் அப்போதைய வேல்ஸ் இளவரசரால் திறந்து வைக்கப்பட்டது. RIMC என்பது எழிமலையில் உள்ள தேசிய பாதுகாப்பு அகாதெமி மற்றும் கடற்படை அகாதெமி ஆகியவற்றிற்கான முதன்மை நிறுவனம் ஆகும்.

**8.** 'கேல் மகாகும்பம்' என்பது எம்மாநிலத்தில் நடைபெறும் ஒரு விளையாட்டு நிகழ்வாகும்?

**அ) குஜராத் ☑**

ஆ) உத்தர பிரதேசம்

இ) இராஜஸ்தான்

ஈ) மத்திய பிரதேசம்

- ✓ குஜராத்தின் ஆமதாபாத்தில் 11ஆவது கேல் மகாகும்பத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வு 2010 இல் பதினாறு விளையாட்டுகள் மற்றும் பதிமூன்று லட்சம் பங்கேற்பாளர்களுடன் தொடங்கியது; பின்னர் 2019ஆம் ஆண்டில் 36 பொது விளையாட்டுகளாகவும் 26 பாரா விளையாட்டுகளாகவும் உயர்த்தப்பட்டது.
- ✓ COVID-19 காரணமாக, 2020இல் 'கேல் மகாகும்பம்' ஏற்பாடு செய்யப்படவில்லை.

---

**9.** **'தேசிய மருத்துவ சாதனங்கள் கொள்கை – 2022' வரைவை வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?**

அ) சுகாதாரம் & குடும்ப நல அமைச்சகம்

**ஆ) வேதிகள் & உரங்கள் அமைச்சகம் ☑**

இ) வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சகம்

ஈ) வெளியுறவு அமைச்சகம்



- ✓ வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மருந்துகள் துறை, 'தேசிய மருத்துவ சாதனங்கள் கொள்கை–2022' என்ற வரைவை வெளியிட்டது. தற்போது, நாட்டில் பயன்படுத்தப்படும் மருத்துவ சாதனங்களில் கிட்டத்தட்ட 80% இறக்குமதி செய்யப்படுகின்றன.
- ✓ மருத்துவ சாதனங்களுக்கான மதிப்பு மற்றும் தொழில்நுட் -பத்தின் அடிப்படையில், ஐந்து உலகளாவிய உற்பத்தி மையங்களில் ஒன்றாக இந்தியாவை வைப்பதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**10.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'எதிர்கால அருங்காட்சியகம்' அமைந்துள்ள நாடு எது?**

**அ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

ஆ) சௌதி அரேபியா

இ) குவைத்

ஈ) ஓமன்



- ✓ துபையில் உள்ள 'எதிர்கால அருங்காட்சியகம் – Museum of the Future' பொதுமக்களின் பார்வைக்காக சமீபத்தில் திறக்கப்பட்டது. இதை ஐக்கிய அரபு அமீரகத்தின் துணை அதிபர் மற்றும் பிரதமர் திறந்து வைத்தனர்.
- ✓ ஐக்கிய அரபு அமீரகத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி, பார்வையாளர்களை 2071ஆம் ஆண்டுக்கு அழைத்துச் செல்வதாக இந்த அருங்காட்சியகம் கூறுகிறது. இது 30 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்ட ஏழு மாடிகள் கொண்ட தூண்கள் இல்லாத அமைப்பாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2,900 மெகாவாட் மின்சாரம் கொள்முதல்: முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம்**

தமிழ்நாட்டில் 2,900 MW மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

**இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:**

நெய்வேலி பழுப்பு நிலக்கரி (NLC) நிறுவனமானது 800 MW மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய மூன்று அலகுகள் ஒடிஸா மாநிலம் தலபிரா என்ற இடத்தில் அமைக்கப்பட உள்ளது. அதில், 1,500 MW மின்சாரம் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது 2026–27ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளது. இதற்கான மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ₹3.06 ஆகும்.

**1,000 மெகாவாட்:** 1000 MW மின்சாரத்தை கொள்முதல் செய்ய சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான மின்சார யூனிட் ஒன்றின் விலை ₹2.61 ஆகும்.

2022-2023ஆம் நிதியாண்டின் இறுதியிலிருந்து மின்சாரம் கிடைத்திடும். இதேபோன்று, பவர் டிரேடிங் கார்ப்பரேசன் நிறுவனத்துடன் 400 MW மின்சாரத்துக்கான கொள்முதல் செய்யப்பட்டது. இதனுடைய யூனிட் ஒன்றின் விலை ₹3.26 ஆகும்.

மின்சார கொள்முதலுக்கான நான்கு நடுத்தர கால ஒப்பந்தங்கள் முதல்வ மு க ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பமானது.

---

**2. சிறு-குறு நிறுவனங்களுக்கு கடன்பெற தனி இணைய தளம்: தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம்**

சிறு, குறு நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாதத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தனி இணையதளம் அமைக்கப்படுகிறது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் உற்பத்தி அலகுகளுக்காக தமிழ்நாடு கடன் உத்தரவாதத்திட்டம் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு உள்ளது. ₹40 லட்சத்துக்கு குறைவான வங்கி கடன்களு -க்கு 90 சதவீத உத்தரவாதமும், அதற்கு மேல் ₹2 கோடி வரையிலான கடன்களுக்கு 80 சதவீத உத்தரவாதமும் மத்திய அரசின் கடன் உத்தரவாத நிதியத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசு வழங்கும்.

இந்தக் கடன் உத்தரவாத திட்டத்துடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு விரிவான மதிப்பீட்டு திட்டமும் ஒருங்கிணைந்து வழங்கப்படும். இந்தத் திட்டத்துக்கு தமிழ்நாடு அரசு ₹100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஆறுமாதங்களில் தொடங்கப்படும் வகையில் முழுவதுமாக கணினிமயமாக்கப்பட்ட இணையதளம் தயாரிக்கப்பட உள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில், தமிழ்நாடு குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் துறை மற்றும் கடன் உத்தரவாத நிதியம் ஆகியவற்றுக்கு இடையே செய்து கொள்ளப்பட்டது.

**புதிய வசதிகள் தொடக்கம்:** புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வினைத் தொடர்ந்து, புதிய வசதிகளை முதல்வர் தொடக்கி வைத்தார். தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் செங்கிப்பட்டி கிராமத்தில் தென்னைநார் உற்பத்திக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதை காணொலிக் காட்சி வழியாக முதல்வர் தொடக்கி வைத்தார்.

---

**3. இல்லம் தேடி வரும் தமிழரசு இதழ்: இ–சேவை மையத்தில் பதிவு செய்யலாம்**

அரசு இணைய சேவை மையங்களில் பதிவுசெய்தால் தமிழ்நாடு அரசின் மாதாந்திர இதழான 'தமிழரசு', இல்லம் தேடி வரும். இதற்கான அறிவிப்பை மாநில அரசு சமீபத்தில் வெளியிட்டது.

**அந்த அறிவிப்பு விவரம்:** 'தமிழரசு' இதழானது தமிழ், ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டு மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. இதன் ஒரு மாத இதழ் விலை ₹20. ஆண்டுச் சந்தா ₹240–ஆக கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கான ஆயுள் சந்தா ₹2 ஆயிரமாக உள்ளது.

---

**4. முதலமைச்சரின் பாதுகாப்பு பிரிவு காவல் கண்காணிப்பாளர் R திருநாவுக்கரசு, இகாப., அவர்களின் மகள் தி ஹேம மீனாட்சி எழுதிய, "The Secret of Smile" நூலை முதலமைச்சர் மு க ஸ்டாலின் வெளியிட்டார்.**

---

**5. 12–14 வயது சிறார்களுக்கு தடுப்பூசி போடும் பணி தொடக்கம்; கரோனா தடுப்பூசி பணியில் முக்கியமான நாள்: மோடி பெருமிதம்**

நாட்டில் 12 முதல் 14 வயதுடைய சிறார்களுக்கு கரோனா தடுப்பூசி செலுத்தும் பணி 2022 மார்ச்.16 தொடங்கியது. இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட்டர் பதிவில், "நாட்டின் குடிகளுக்கு தடுப்பூசி போடுவதற்கான இந்தியாவின் முயற்சிகளில் இது முக்கிய நாள்" என்று வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பரில் சீனாவில் தோன்றி உலகம் முழுவதும் பரவிய கரோனா வைரஸ் தொற்றுக்கு தடுப்பூசி செலுத்தும் பணி நம் நாட்டில் கடந்த ஆண்டு ஜன.16ஆம் தேதி தொடங்கியது. தொடக்கத்தில் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. பிறகு வயது அடிப்படையில் படிப்படியாக தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கியது.

இந்நிலையில் 12 முதல் 14 வயது சிறார்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணி நேற்று தொடங்கியது. கோர்பிவேக்ஸ் என்ற இந்தத் தடுப்பூசியை ஹைதராபாத்தைச் சேர்ந்த 'பயலாஜிகல்–இ' நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தத் தடுப்பூசியை 28 நாள் இடைவெளியில் இரு டோஸ்கள் செலுத்திக்கொள்ளவேண்டும்.

தொடக்கத்தில் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு தடுப்பூசி முகாம்களில் மட்டும் இத்தடுப்பூசி செலுத்தப்படுகி–றது. தனியார் மருத்துவமனைகளுக்கான விலை இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. விலை நிர்ணயிக்கப்–பட்ட பிறகு தனியார் மருத்துவமனைகளிலும் இதனை செலுத்திக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**6. ₹100 கோடி செலவில் மாமல்லபுரத்தில் உலக செஸ் ஒலிம்பியாட் போட்டி**

சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் ₹100 கோடி செலவில் உலக செஸ் ஒலிம்பியாட் போட்டி வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ளது.

சர்வதேச செஸ் கூட்டமைப்பின் 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டி ரஷ்யாவின் மாஸ்கோ நகரில் வரும் ஜூலை இறுதியில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் ரஷ்யா, உக்ரைன் போர் சூழ்நிலை காரணமாக செஸ் ஒலிம்பியாட் போட்டி மாஸ்கோவில் நடைபெறாது எனச் சர்வதேச செஸ் கூட்டமைப்பு சமீபத்தில் அறிவித்தது.

இதைத்தொடர்ந்து போட்டியை நடத்தும் உரிமையை பெறுவதற்கான நடவடிக்கைகளில் அகில இந்திய செஸ் கூட்டமைப்பு, தமிழக அரசுடன் இணைந்து செயல்பட்டது. இதற்கான ஏலத்தில் போட்டியை நடத்துவதற்கான இடமாக சென்னை நகரை சர்வதேச செஸ் கூட்டமைப்பு தேர்வு செய்தது. இதன்படி மாமல்லபுரத்தில் வரும் ஜூலை இறுதியில் போட்டியை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

**1.** 'ஹலாரி' என்பது எந்த இந்திய மாநிலத்தைச் சார்ந்த கழுதை இனமாகும்?

**அ) குஜராத் ☑**



ஆ) மகாராஷ்டிரா

இ) பஞ்சாப்

ஈ) பீகார்

- ✓ 'ஹலாரி' என்பது குஜராத்தின் சௌராஷ்டிரா பகுதியைச் சார்ந்த ஒரு கழுதை இனமாகும். நாட்டில் இவ்வினத்தின் எண்ணிக்கை வேகமாக குறைந்து வருகிறது.
- ✓ 'ஹலாரி' கழுதைகளைப் பாதுகாப்பதற்கான மால்தாரிகளி–ன் (அல்லது பாரம்பரிய கால்நடை மேய்ப்பர்கள்) சந்திப்புக் கூட்டத்திற்கு நடுவண் அமைச்சர் பர்சோத்தம் ரூபாலா தலைமை தாங்கினார்.

---

**2.** MSME அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, 'MSME கூட்டம் – 2022' நடைபெறும் மாநிலம் எது?

அ) குஜராத்

**ஆ) மகாராஷ்டிரா ☑**

Ministry of MSME, Govt. of India

இ) பஞ்சாப்

ஈ) பீகார்

- ✓ சிந்துதுர்க்கில், 'MSME கூட்டத்தை' மத்திய குறு, சிறு & நடுத்தர தொழில்கள் (MSME) அமைச்சர் நாராயண் ரானே தொடங்கிவைத்தார். ₹200 கோடி செலவில் சிந்துதுர்க்கில், MSME–தொழில்நுட்ப மையம் நிறுவப்படும் என்றும் அவர் அறிவித்தார். தேசிய SC/ST மையத்திற்கான MSME கூட்டம், இக்கூட்டத்தின் ஒருபகுதியாக தொடக்கப்பட்டது.

---

**3.** இந்திய இரயில்வேயின் முதலாவது கதி சக்தி சரக்கு முனையத்தை பின்வரும் எந்தப் பிரிவு இயக்கியது?

அ) சென்னை

**ஆ) அசன்சால் ☑**



இ) ஹூப்பள்ளி

ஈ) நாக்பூர்

- ✓ ரயில்வே அமைச்சகம், 'விரைவு சக்தி பன்னோக்கு சரக்கு முனைய'த்தை அசன்சால் பிரிவில் வெற்றிகரமாக உரு–வாக்கியுள்ளது. தாபர்நகர் எனுமிடத்தில் மைதான் பவர் லிட் என்னும் தனியார் நிறுவனம் இம்முனையத்தை இயக்கும். விரைவு சக்தியின் சரக்கு முனையமாக இது அமைந்துள்ளது.
- ✓ மின்திட்டங்களுக்கு தேவைப்படும் நிலக்கரி இதுவரை சாலை வழியாகவே கொண்டு செல்லப்பட்டு வந்தது. இச்சரக்கு முனையத்தின்மூலம் இரயில்வேயின் வருமானம் மாதத்திற்கு சுமார் ₹11 கோடி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**4.** 'சர்வதேச பெண் நீதிபதிகள் நாளானது' முதன்முதலில் எந்த ஆண்டில் கொண்டாடப்பட்டது?

அ) 1992 ஆ) 2002

இ) 2012 **ஈ) 2022 ☑**

**2022**

- ✓ 2021 ஏப்ரலில், ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.10 அன்று 'சர்வதேச பெண் நீதிபதிகளின் நாள்' கொண்டாடப்படும் என்று ஐநா பொதுச்சபை தீர்மானித்தது. ஐநா பொதுச் சபையில் கத்தாரால் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ✓ இந்திய உச்சநீதிமன்றம், தலைமை நீதிபதி NV இரமணா மற்றும் நான்கு பெண் உச்சநீதிமன்ற நீதிபதிகளுடன் தனது முதல் 'சர்வதேச பெண் நீதிபதிகள் நாளைக்' கொண்டாடியது.

---

**5.** ஆண்டுதோறும் எந்த மாதத்தில், 'புகைத்தலற்ற நாள்' அனுசரிக்கப்படுகிறது?

அ) ஜனவரி




ஆ) பிப்ரவரி

**இ) மார்ச் ☑**

ஈ) ஏப்ரல்

- ✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தின் இரண்டாவது புதன் கிழமையன்று, உலகம் முழுவதும் புகைத்தலற்ற நாள் அனுசரிக்கப்படுகிறது. இது இந்த ஆண்டு (2022) மார்ச்.9 ஆம் தேதி வருகிறது. புகைபிடிப்பதால் ஏற்படும் தீமைகள் மற்றும் விளைவுகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், புகைப்பிடிப்பவர்கள் புகைப்பிடிப்பதை நிறுத்த உதவுவதும் இந்த நாளின் நோக்கமாகும். "Quitting smoking doesn't have to be stressful" என்பது இந்த ஆண்டுக்கான கருப்பொருளாகும்.

---

**6.** ஒவ்வோர் ஆண்டும், எந்தத் தேதியில், உலக NGO நாள் அனுசரிக்கப்படுகிறது?

**அ) பிப்ரவரி.27 ☑**




ஆ) மார்ச்.01

இ) மார்ச்.15

ஈ) ஆகஸ்ட்.05

- ✓ உலக NGO நாள் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி.27 அன்று உலகம் முழுவதும் பல நாடுகளில் கொண்டாடப்படுகிறது.
- ✓ அரசு சாரா நிறுவனங்கள் அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக செயல்படுகின்றன. அரசு மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களை அங்கீகரிப்பது, கொண்டாடுவது மற்றும் கௌரவிப்பது இந்த நாளின் நோக்கமாகும்.

---

**7.** 2022–மத்திய கலால் வரி நாள் அனுசரிக்கப்பட்ட தேதி எது?

**அ) பிப்ரவரி 24 ☑**




ஆ) பிப்ரவரி 25

இ) பிப்ரவரி 26

ஈ) பிப்ரவரி 27

- ✓ இந்தியாவின் மத்திய கலால் நாள் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி.24 அன்று கொண்டாடப்படுகிறது. மத்திய கலால் மற்றும் சுங்க வாரியத்தின் சேவையைக் கௌரவிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

---

**8.** வருடாந்திர மாநில பட்ஜெட்டின் ஒருபகுதியாக, 'சிறார்கள் பட்ஜெட்டை' தாக்கல்செய்த மாநிலம் எது?

அ) குஜராத்



ஆ) உத்தர பிரதேசம்

இ) இராஜஸ்தான்

**ஈ) மத்திய பிரதேசம் ☑**

- ✓ மத்திய பிரதேசம் மாநிலம் 2022-23ஆம் ஆண்டுக்கான ₹2.79 இலட்சம் கோடி மதிப்பிலான பட்ஜெட்டை சட்டப் பேரவையில் தாக்கல் செய்தது. முதன்முறையாக, ஆண்டு நிதித்திட்டத்தின் ஒருபகுதியாக, அம்மாநில அரசு 'சிறார்கள் பட்ஜெட்டை'த் தாக்கல் செய்தது.
- ✓ 18 வயதுக்குட்பட்டோரை இலக்காகக்கொண்டு கல்வி உட்பட 17 துறைகளின்கீழ் 220 திட்டங்களுக்கு இந்தப் பட்ஜெட்டில் ₹57,800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

---

**9.** சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'ULPIN' என்பது எந்தத் துறையுடன் தொடர்புடைய தனிப்பட்ட அடையாள எண்?

அ) வரிவிதிப்பு



**ஆ) நில வளங்கள் ☑**

இ) MSME

ஈ) டிரோன் பதிவு

- ✓ சமீபத்தில் அஸ்ஸாம் மாநிலத்துக்கென ஒரு தனித்த நிலத் தொடகுப்பு அடையாள எண் (Unique Land Parcel Identification Number – ULPIN) அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ இது நிலவளத்துறையின் டிஜிட்டல் இந்தியா நிலப் பதிவேடுகள் நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் கருத்தாக்கப்பட்டது. இம்முன்முயற்சியின்கீழ், 14 இலக்க எழுத்தெண்கொண்ட புவி-இடஞ்சார்ந்த தனித்துவம்மிக்க அடையாள எண் வழங்கப்படுகிறது.

---

**10.** காலநிலை மாற்றத்தின் சவால்களைக் கையாள, 'காலநிலை செயல்திட்டத்தை' வெளியிட்டு முப்பதாண்டு கால செயல்திட்டத்தை வகுத்த இந்திய நகரம் எது?

அ) சென்னை

**ஆ) மும்பை ☑**

இ) புது தில்லி

ஈ) கொல்கத்தா

- ✓ அண்மையில் வெளியிடப்பட்ட மும்பை காலநிலை செயல் திட்டம் பருவநிலை மாற்றத்தின் சவால்களைச் சமாளிக்க அந்நகரத்திற்கான முப்பதாண்டு கால செயல்திட்டத்தை வகுத்துள்ளது. பிரகன்மும்பை முனிசிபல் கார்ப்பரேஷன் (BMC) ஆனது உலக வளங்கள் நிறுவனம், இந்தியா மற்றும் C40 நகரங்கள் வலையமைப்பின் தொழில்நுட்ப ஆதரவுடன் இத்திட்டத்தைத் தயாரித்தது.
- ✓ பைங்குடில் வாயுக்களின் சுழிய உமிழ்வு அல்லது 2050 -க்குள் நிகர சுழிய இலக்கை அடைவது உள்ளிட்ட குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால காலநிலை இலக்குகளை இச்செயல்திட்டம் நிர்ணயித்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இலங்கைக்கு இந்தியா மேலும் ₹7,500 கோடி கடனுதவி**

நிதி நெருக்கடியில் தவிக்கும் இலங்கைக்கு உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் கொள்முதல் செய்வதற்காக, பாரத ஸ்டேட் வங்கிமூலமாக இந்திய அரசு ₹7,500 கோடி (100 கோடி டாலர்) கடனுதவி வழங்குகிறது. இதற்கான ஒப்பந்தம் தில்லியில் இந்தியாவின் பாரத ஸ்டேட் வங்கிக்கும், இலங்கை அரசுக்கும் இடையே கையொப்பமானது.

முன்னதாக, எரிபொருள்கள் வாங்குவதற்காக, இலங்கை அரசுக்கு இந்தியாவின் எக்ஸிம் வங்கி கடந்த மாதம் ₹3,700 கோடி (50 கோடி டாலர்) கடனுதவி வழங்கியது.

---

**2. சென்னை சூப்பர் கிங்ஸ் சார்பில் சென்னை, சேலத்தில் கிரிக்கெட் பயிற்சி அகாடமிகள்**

சென்னை சூப்பர் கிங்ஸ் சார்பில் சென்னை, சேலத்தில் 2 கிரிக்கெட் பயிற்சி அகாடமிகள் தொடங்கப்படவுள்ளன.

இதுகுறித்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பு:

வரும் ஏப்ரல் மாதத்தில் இந்த அகாடமிகள் தொடங்கப்படும். இங்கு இருபாலருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும். முதலில் சென்னை, சேலத்தில் அகாடமிகள் தொடங்கப்படும். பின்னர் தமிழகம் மட்டுமின்றி, பிற மாநிலங்கள், வெளி நாடுகளிலும் அகாடமி தொடங்கும் திட்டம் உள்ளது.

சென்னையில் துரைப்பாக்கத்திலும், சேலத்தில் சேலம் கிரிக்கெட் அறக்கட்டளையிலும் அகாடமி செயல்படும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. "ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை" திட்டத்தில் 77 கோடி பயனாளிகள்: மத்திய அரசு தகவல்**

"ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை" திட்டத்தில் 77 கோடி பேர் இணைக்கப்பட்டுள்ளதாக மத்திய உணவு, பொது விநியோகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதில் சந்திக்கும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, "ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை" திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிமுகம் செய்தார். இந்தத் திட்டம் தற்போது 35 மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு 77 கோடி மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

---

**4. தில்லி-காஜியாபாத் இடையே செல்லும் பிராந்திய விரைவுப் போக்குவரத்து புதிய ரயில் மாதிரி அறிமுகம் செய்யப்பட்டது. மணிக்கு 100 முதல் 160 கிமீ வேகத்தில் செல்லக்கூடிய இந்தப் புதிய இரயில் நாட்டின் முதல் அதிவேக மெட்ரோ இரயிலாகும்.**

---

**5. இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவை 8 சதவீதம் அதிகரிக்கும்**

இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவை நடப்பாண்டில் 8 சதவீதம் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பின் (OPEC) ஓர் அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கரோனா பேரிடரால் ஏற்பட்ட பெரும் சீர்குலைவிலிருந்து இந்தியப் பொருளாதாரம் வேகமாக மீண்டு வருவதன் காரணமாக நடப்பு 2022ஆம் ஆண்டில் அதன் கச்சா எண்ணெயின் தேவை 8% அதிகரித்து நாளொன்றுக்கு 51.5 இலட்சம் பீப்பாய்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டு உள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டில் இந்தியாவின் கச்சா எண்ணெயின் தேவை நாளொன்றுக்கு 45.1 இலட்சம் பீப்பாய்களாக இருந்தநிலையில் 2021இல் 47.60 இலட்சம் பீப்பாய்களாக அதிகரித்தது. இது, 5.61% வளர்ச்சியாகும் என OPEC தெரிவித்துள்ளது.

---

**6. 'உலக அழகி' பட்டத்தை வென்றார் போலந்து இளம் பெண் கரோலினா**

2021–ஆம் ஆண்டுக்கான 'உலக அழகி' பட்டத்தை போலந்தைச் சேர்ந்த கரோலினா பைலாவ்ஸ்கா தட்டிச் சென்றுள்ளார்.

70–ஆவது உலக அழகிப் போட்டி, கரீபியன் தீவுகளில் ஒன்றான போர்டோரிகாவில் உள்ள சான் ஜுவான் நகரில் நடத்தப்பட்டது. அதில், 2020–இல் மிஸ் இந்தியா பட்டம் வென்ற மானசா வாராணசி உள்பட 97 பேர் கலந்து கொண்டனர்.

இறுதியில், போலந்தின் கரோலினா பைலாவ்ஸ்கா உலக அழகிப் பட்டத்தை வென்றார். அவருக்கு 2020–இல் உலக அழகிப் பட்டம் வென்ற ஜமைக்கா அழகி டோனி ஆன் சிங் கிரீடம் அணிவித்து கௌரவித்தார்.

இந்திய அமெரிக்க அழகியான ஸ்ரீ சாயினி இரண்டாவது இடத்தையும், ஐவரி கோஸ்ட்டைச்சேர்ந்த ஒலிவியா யேஸ் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

---

**7. உலகின் மகிழ்ச்சிகரமான நாடு இதுதாங்க...**

உலகின் மகிழ்ச்சிகரமான நாடாக பின்லாந்து ஐந்தாவது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஐநா வெளியிட்ட குறியீட்டு பட்டியலில் குறைவான மதிப்பெண்களை பெற்று மகிழ்ச்சியற்ற நாடாக ஆப்கானிஸ்தான் விளங்குகிறது. மகிழ்ச்சியற்ற நாடுகளின் பட்டியலில் இரண்டாவது நாடாக லெபனான் உள்ளது.

செர்பியா, பல்கேரியா மற்றும் ருமேனியா ஆகிய நாடுகள் நல்வாழ்வு குறியீட்டு மதிப்பெண்களில் நல்ல ஏற்றத்தை கண்டுள்ளது. பட்டியலில், லெபனான், வெனிசுலா மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகள் மிகப்பெரிய சரிவைச் சந்தித்து உள்ளன.

பொருளாதார சரிவை சந்தித்துவரும் லெபனான், பட்டியலில் கடைசிக்கு முந்தைய இடத்தைப் பிடித்துள்ளது. 146 நாடுகள்கொண்ட பட்டியலில் ஜிம்பாப்வேக்கு அடுத்த இடத்தில் லெபனான் உள்ளது.

போரால் மிகப்பெரிய தாக்கத்தைச் சந்தித்துவரும் ஆப்கானிஸ்தானை கடந்த ஆகஸ்ட் மாதம் தலிபான்கள் கைப்பற்றினர். தற்போது பட்டியலில், இந்த நாடு கடைசி இடத்தில் உள்ளது. தகுந்த உதவி கிடைக்காவிட்டால் இந்த குளிர்காலத்தில், ஐந்து வயதுக்கு குறைவாக உள்ள 10 லட்சம் குழந்தைகள் பசியால் உயிரிழக்கலாம் என்றும் UNICEF எச்சரித்துள்ளது.

பொருளாதார மற்றும் சமூக ரீதியான மக்கள் மகிழ்ச்சியாக உள்ளார்களா என்பது ஆராயப்பட்டு கடந்த 10 ஆண்டுகளாக உலக மகிழ்ச்சிகர குறியீடு வெளியிடப்பட்டு வருகிறது. மூன்றாண்டு காலத்தில், அதன் சராசரி கணக்கிடப்பட்டு சுழியத்திலிருந்து 10 மதிப்பெண்கள் வரை அளிக்கப்படுகிறது. உக்ரைன் மீதான ரஷிய போர் தொடங்குவதற்கு முன்பே இறுதிப்பட்டியல் தயாரிக்கப்பட்டு –விட்டது.

மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளே பட்டியலில் ஆதிக்கம் செலுத்திவருகிறது. முதலிடத்தில் பின்லாந்தும் 2ஆவது இடத்தில் டென்மார்க்கும் 3ஆவது இடத்தில் ஐஸ்லாந்தும் உள்ளது. சுவிச்சர்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடத்தில் உள்ளன.

3 இடங்கள் முன்னேறி அமெரிக்கா 16ஆவது இடத்தில் உள்ளது. 17ஆவது இடத்தில் பிரிட்டனும் 20ஆவது இடத்தில் பிரான்ஸ் நாடும் இடம்பெற்றுள்ளது.

---

**8. ராணுவ ஆராய்ச்சிக்காக 45 நாட்களில் 7 மாடி கட்டிடம் கட்டி டிஆர்டிஓ சாதனை: பெங்களூருவில் ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்**

ராணுவ ஆராய்ச்சி & மேம்பாட்டு கழக (DRDO) அதிகாரிகள் கூறியதாவது: DRDO உள்நாட்டில் உருவாக்கப்பட்ட ஐபிரிட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெங்களூருவில் 7 மாடி கட்டிடத்தை 45 நாட்களில் கட்டி முடித்துள்ளது. இக் கட்டிடம் 5ஜி மேம்பட்ட உள்நாட்டு போர் விமானங்களின் தயாரிப்புக்காக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக பயன்படுத்தப்படும். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

**1.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'ஜெனீவா ஒப்பந்தங்கள்' என்பதுடன் தொடர்புடையது எது?**

அ) டிஜிட்டல் நாணயம்

**ஆ) போரின்போது போர் நடத்தைக்கான விதிகள் ☑**

இ) பருவநிலை மாற்றம்

ஈ) ஏற்றுமதி–இறக்குமதி கொள்கை



✓ 'ஜெனீவா ஒப்பந்தங்கள்' என்பது போர் நடத்தைக்கான விதிமுறைகளை முன்னிலைப்படுத்தும் கொள்கைகளின் தொகுப்பாகும். உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆயுதம் ஏந்திய படையெடுப்பின்போது, குடிமக்களின் பல்வேறு உட்கட்டமைப்புகளும் இராணுவத்தைச் சாராத பலரும் பாதிக்கப்பட்டனர். மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

---

**2.** **'நுண்ணிதி கடன்களுக்கான ஒழுங்குமுறை கட்டமை–ப்பின்' வழிமுறைகளை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) NABARD

**ஆ) இந்திய ரிசர்வ் வங்கி ☑**

இ) நிதி அமைச்சகம்

ஈ) கூட்டுறவு அமைச்சகம்

✓ இந்திய ரிசர்வ் வங்கி RBI (நுண்நிதி கடன்களுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்பு) விதிகள், 2022–ஐ வெளியிட்–டுள்ளது, இது 2022 ஏப்.1 முதல் நடைமுறைக்கு வரும்.

✓ வழிகாட்டுதலின்கீழ், கடன்கள் பிணையமாக இருப்பதை உறுதிசெய்யுமாறு, சிறு நிதிப் பிரிவுக்கு கடன் வழங்கும் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களை இந்திய ரிசர்வ் வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

---

**3.** **'பயிர் பல்வகைப்படுத்தல் குறியீட்டை'ப் பயன்படுத்திய முதல் மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) தெலுங்கானா ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) பஞ்சாப்



✓ நாட்டிலேயே முதன்முறையாக, தெலுங்கானா மாநிலம் 'பயிர் பல்வகைப்படுத்தல் முறை'களை குறியீட்டு வடிவில் பதிவுசெய்யத்தொடங்கியுள்ளது. பயிர் பல்வகைப்படுத்தல் குறியீட்டின்படி, அம்மாநிலம் 77 வகைகளை பயிரிடுகிறது. எதிர்காலத்தில், மாநிலத்தில் பயிர் பல்வகைப்படுத்தலுக்கு இந்தக் குறியீடு ஓர் அடிப்படையாக இருக்கும்.

---

**4.** **பன்னாட்டளவில் ஆயுதப்பரிமாற்றங்களின் போக்குகள் குறித்த SIPRI'இன் 2021 அறிக்கையின்படி, உலகளவில் ஆயுதங்களை அதிகளவில் இறக்குமதி செய்யும் நாடு எது?**

அ) அமெரிக்கா

**ஆ) இந்தியா ☑**

இ) சீனா

ஈ) இஸ்ரேல்



✓ ஸ்டாக்ஹோம் பன்னாட்டு அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) பன்னாட்டு ஆயுதப் பரிமாற்றங்களின் போக்குகள், 2021 அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, உலக அளவில் ஆயுதங்களை அதிக அளவில் இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா உள்ளது.

✓ இந்தியாவின் பெரும்பாலான பாதுகாப்புப் பொருட்கள் ரஷ்யாவிலிருந்து வருகிறது. பாதுகாப்பு உபகரணங்களில் உள்நாட்டு வளர்ச்சிக்கு இந்தியா அழுத்தம் தந்துவருகிறது. மேலும் 2022–23ஆம் ஆண்டிற்கான மூலதன வரவு செலவுத்திட்டத்தில் 68 சதவீதத்தை உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கு இந்தியா ஒதுக்கியுள்ளது.

---

**5.** **'இஸ்லாமிய வெறுப்பை எதிர்த்துப் போராடுவதற்கான சர்வதேச தினம்' என ஐநா அறிவித்துள்ள நாள் எது?**

அ) மார்ச்.12

ஆ) மார்ச்.14

**இ) மார்ச்.15 ☑**

ஈ) மார்ச்.18




✓ ஐநா பொதுச்சபை மார்ச்.15–ஐ இஸ்லாமிய வெறுப்பை எதிர்த்துப் போராடுவதற்கான சர்வதேச தினமாக நிறுவும் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்தது. தீர்மானம் ஐநா'ஆல் ஒருமித்த கருத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

✓ இது மத விடுதலைக்கான உரிமையை வலியுறுத்துகிறது. மேலும், கடந்த 1981ஆம் ஆண்டின் தீர்மானத்தையும் இது நினைவுபடுத்துகிறது.

---

**6.** **"யுவ விஞ்ஞானி கார்யக்ரம்" (YUVIKA) திட்டத்தை நடத்துகிற அமைப்பு எது?**

அ) ஆர்பிஐ

**ஆ) இஸ்ரோ ☑**

இ) டிஆர்டிஓ

ஈ) பார்க்



✓ இந்திய விண்வெளி ஆய்வு மையமானது (ISRO) பள்ளி மாணவர்களுக்காக "யுவ விஞ்ஞானி கார்யக்ரம்" (YUVIKA) என்ற சிறப்புத் திட்டத்தை ஏற்பாடு செய்து வருகிறது. இது "இளம் விஞ்ஞானி திட்டம்" என்றும் அழைக்கப்படுகிறது.

✓ இது விண்வெளி தொழில்நுட்பம், விண்வெளி அறிவியல் மற்றும் விண்வெளிப் பயன்பாடுகள்பற்றிய அடிப்படை அறிவை இளம் மாணவர்களுக்கு, குறிப்பாக கிராமப் புறங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்குவதை நோக்கமா–கக் கொண்டுள்ளது.

---

**7.** **'PM KUSUM' திட்டத்தின் நோக்கம் என்ன?**

அ) உழவர்களுக்கு நிதி மானியம்

**ஆ) உழவர்களின் ஆற்றல் பாதுகாப்பு ☑**

இ) உழவர்களுக்கு பயிர்க்காப்பீடு

ஈ) உழவர்களுக்கு உர மானியம்



✓ உழவர்களின் ஆற்றல் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக பிரதமர் கிசான் உர்ஜா சுரக்ஷா ஏவம் உத்தான் மகாபியன் (PM KUSUM) திட்டம் 2019–இல் தொடங்கப்பட்டது.

- கூறு–A ஆனது மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மின்னுற்பத்தி நிலையங்களை அமைப்பதை உள்ளடக்கியது. 'B' விவசாய பம்புகள் / நீர்ப் பாசன அமைப்புகளை நிறுவுதலையும் 'C' பம்புகளை சூரியமயமாக்கலையும் உள்ளடக்கியுள்ளது.
- அண்மையில், கர்நாடக அமைச்சரவை PM KUSUM–B திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புதல் அளித்தது.

---

**8.** **மகளிர் உலகக்கோப்பை வரலாற்றில் சமீபத்தில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய வீராங்கனை யார்?**

அ) மிதாலி ராஜ்



**ஆ) ஜூலன் கோஸ்வாமி ☑**

இ) ஹர்மன்ப்ரீத் கவுர்

ஈ) ஸ்மிருதி மந்தனா

- பெண்கள் உலகக்கோப்பை வரலாற்றில் அதிக விக்கெட் வீழ்த்திய வீராங்கனை என்ற சாதனையை இந்திய அணியின் மூத்த வேகப்பந்து வீச்சாளர் ஜூலன் கோஸ்வாமி படைத்துள்ளார்.
- 2022 ஐசிசி மகளிர் ஒருநாள் உலகக்கோப்பையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியின்போது அவர் இச்சாதனையை நிகழ்த்தினார். இதன்மூலம் மகளிர் உலகக்கோப்பையில் 31 போட்டிகளில் 40 விக்கெட்டுக –ளை வீழ்த்திய ஆஸ்திரேலியாவின் லின் புல்ஸ்டனின் (39) சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

---

**9.** **உலக வனவுயிரிகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ) மார்ச்.03 ☑**




ஆ) மார்ச்.02

இ) மார்ச்.01

ஈ) மார்ச்.05

- ஆண்டுதோறும் மார்ச்.3ஆம் தேதி ஐநா சபையால் உலக வனவுயிரிகள் நாளாகக் கொண்டாடப்படுகிறது. மேலும் இந்த ஆண்டு (2022), "*Recovering key species for ecosystem restoration*" என்ற கருப்பொருளின் கீழ் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- இது அழிவின் விளிம்பிலிருக்கும் வனவுயிரிகளைப் பாதுகாப்பதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**10.** **உலக சிட்டுக்குருவிகள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) மார்ச்.20 ☑**



ஆ) மார்ச்.21

இ) மார்ச்.22

ஈ) மார்ச்.23

- உலக சிட்டுக்குருவிகள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.20 அன்று கொண்டாடப்படுகிறது.
- ஊர்க்குருவிகள் உட்பட பல்வேறு வகையான சிட்டுக் குருவி இனங்களுக்கு மனிதனால் ஏற்படும் அச்சுறுத்தல் –கள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இது நேச்சர் ஃபாரெவர் சொசைட்டி ஆஃப் இந்தியா மற்றும் பிரான்சின் Eco–Sys Action Foundation ஆகியவற்றால் கொண்டாடப்படுகிறது. 'LOVE Sparrows' என்பது நடப்பு (2022) ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2022–23: முக்கிய அம்சங்கள்...!**

தமிழக அரசின் 2022–23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்தார்.

**அதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:**

* புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 6 மாவட்டங்கள் உள்ளிட்ட 19 மாவட்டங்களிலுள்ள அரசு மருத்துவமனைகள் ₹1,019 கோடி செலவில் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும்.

* உயர்தர மனநலச் சேவைகளை வழங்குவதற்காக, கீழ்ப்பாக்கத்திலுள்ள மனநல மருத்துவமனையை 'தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் நிறுவனம்' என்ற உயர்நிலை அமைப்பாக மேம்படுத்திட அரசு திட்டமிட்டு உள்ளது. இதற்கு முதற்கட்டமாக ₹40 கோடி வழங்கப்படும்.

* காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம் 750 படுக்கை வசதிகளுடைய, தன்னாட்சி அதிகாரம் பெற்ற உயர்தர மருத்துவமனையாக மேலும் தரமுயர்த்தப்படும். இதற்காக ₹100 கோடி மதிப்பீட்டில், உலக வங்கி மற்றும் தேசிய சுகாதார இயக்க நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

* தேசிய ஊரக சுகாதார இயக்கத் திட்டத்திற்கு ₹1,906 கோடி ஒதுக்கீடு.

* அவசர ஊர்தி சேவைகளுக்கு ₹304 கோடி ஒதுக்கீடு.

* டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்கு ₹817 கோடி ஒதுக்கீடு.

* மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ₹17,901.73 கோடி ஒதுக்கீடு.

* அரசுத்துறைகளில் அசையும் மற்றும் அசையா சொத்து விவரங்களை சேகரித்து கண்காணிக்க சொத்து மேலாண்மை மென்பொருள் உருவாக்கப்படும்.

* மின்சாரத்தில் இயங்கும் 500 பேருந்துகளும், டீசலில் இயங்கும் 2213 பேருந்துகளும் வாங்கப்படும்.

* தமிழகத்தில் திறன்மிக்க மனித வளத்தை மேலும் மேம்படுத்தி அறிவுசார் பொருளாதாரத்தை உருவாக்குவது அரசின் தொலைநோக்கு திட்டமாகும்.

* உலகளாவிய பங்களிப்புடன் ஒரு அறிவுசார் நகரம் உருவாக்கப்படும். இது உலகில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களின் கிளைகளைக் கொண்டிருக்கும்.

* ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள, திறன் பயிற்சி மையங்கள், அறிவுசார் தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட பிரிவுகளை இந்த அறிவுசார் நகரம் கொண்டிருக்கும்.

* தமிழத்தில் டிட்கோ, சிப்காட், டான்ஜெட்கோ போன்ற அரசு பொது நிறுவனங்களுடன் இணைந்து மாநில பல்கலைக்கழங்கள் தங்கள் வளாகங்களில் ஆராய்ச்சி பூங்காக்கள் அமைக்க ஊக்குவிக்கப்படும்.

* தமிழகத்தில் உயர்கல்வி சேர்க்கை விகிதம் உயர்ந்து வருகிறது. அரசு கல்லூரி, பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் கட்டமைப்பு மேம்படுத்துவது அவசியம்.

* அடுத்த 5 ஆண்டில் ₹1000 கோடியில் சிறப்பு திட்டம் உருவாக்கி புதிய வகுப்பறை, விடுதி, ஆய்வகம், திறன்மிகு வகுப்பறை உருவாக்கப்படும். இதற்காக இந்த ஆண்டில் ₹250 கோடி வழங்கப்பட்டுள்ளது.

* முன்னுரிமை அடிப்படையில் 7.5 சதவீதம் ஒதுக்கீட்டில் கல்லூரிகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களின் பல்வேறு கட்டணத்துக்காக ₹201 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* தமிழகத்தில் ஏற்றுமதியை மேம்படுத்த ₹100 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு.

* இல்லம் தேடி கல்வித் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும். இதற்காக ₹200 கோடி நிதி ஒதுக்கீடு.

* சென்னை நந்தம்பாக்கத்தில் ₹75 கோடியில் புத்தொழில் உருவாக்க மையம் அமைக்கப்படும்.

* கேவையில் கைத்தொழில் மேம்பாட்டு குழுவம் அமைக்க ₹5 கோடி நிதி ஒதுக்கீடு.

* கோவை, வேலூர், பெரம்பலூரில் புதிய தொழில் பூங்காக்கக்கள் அமைக்கப்படும்.

* சிதிலமடைந்த 1000 ஆண்டுகள் பழமையான கோயில்களை புணரமைக்க ₹100 கோடி ஒதுக்கீடு.

* இந்து சமய அறநிலைத்துறைக்கு ₹387 கோடி ஒதுக்கீடு.

* தமிழகத்தில் அதிக போக்குவரத்து நெரிசல் கொண்ட கீழைக் கடற்கரைச் சாலை ஆறு வழிச் சாலையாக மாற்றப்படும்

* மாநகர பேருந்துகளில் மகளிர் இலவச பேருந்து பயணம் செய்யும் திட்டத்திற்கு ₹1520 கோடி மானியம்.

* துறைமுகம் – மதுரவாயல் உயர்மட்ட சாலை திட்டத்திற்கு ₹5770 கோடி ஒதுக்கீடு.

* நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படை தேவைகளா நிறைவு செய்ய ₹1,000 கோடி நிதி ஒதுக்கீடு.

* நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கு ₹8737 கோடி ஒதுக்கீடு.

* பிரதமரின் வீடு வசதித்திட்டத்திற்கு ₹7,300 கோடி ஒதுக்கீடு.

* ஏழை மக்களுக்கு அம்ருத் திட்டத்தின் கீழ் வீடு கட்ட ₹2030 கோடி ஒதுக்கீடு.

* 100 நாள்கள் வேலைவாய்ப்பு திட்டத்திற்கு ₹2800 கோடி ஒதுக்கீடு.

* சென்னையை மேம்படுத்தும் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்திற்கு ₹500 கோடி ஒதுக்கீடு.

* 149 சமத்துவபுரங்களை சீரமைக்க ₹190 கோடி ஒதுக்கீடு.

* ஒருங்கிணைந்த குழந்த வளர்ப்பு திட்டத்திற்கு ₹2,542 கோடி ஒதுக்கீடு.

* அரசுப் பள்ளியில் பயின்று உயர்கல்வி செல்லும் மாணவிகளுக்கு மாதம் ₹1000 உதவித்தொகை வழங்கப்படும். பெண்கள் உயர்க்கல்வி இடைநிற்றலை தடுக்க கல்லூரியில் சேர்ந்து அவர்கள் படிப்பு முடியும் வரை மாதம் ₹1000 வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். அம்மாணவிகள் பிற திட்டங்களில் உதவித்தொகை பெற்றிருந்தாலும் வழங்கப்படும்.

* சட்டப்பேரவையின் கேள்வி நேரத்தை நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

* அரசு சாரா தனியார் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்படும். இதற்காக ₹15 கோடி நிதி ஒதுக்கீடு.

* புதிதாக 18 ஆயிரம் வகுப்பறைகள் கட்ட ₹13,000 கோடி நிதி ஒதுக்கீடு.

* அரசுப் பள்ளிகளை தரம் உயர்த்தும் வகையில், அன்பழகன் பெயரில் திட்டம்.

*அரசுக் கல்லூரிகளின் கட்டமைப்பை மேம்படுத்த ₹250 கோடி ஒதுக்கீடு.

* தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறைக்கு ₹36,895.89 கோடி ஒதுக்கீடு.

* சுய உதவிக்குழுக்களுக்கான கடன், உழவர்களுக்கான பயிர்கடன் வழங்க ₹4,130 கோடி ஒதுக்கீடு

* சமூக ஊடகங்களில் தவறான பிரசாரத்தை தடுக்க சமூக ஊடக சிறப்பு மையம் அமைக்கப்படும்.

* முதியோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம் உள்ளிட்ட சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்கு ₹4,816 கோடி நிதி ஒதுக்கீடு.

* விழுப்புரம், இராமநாதபுரத்தில் ₹10 கோடியில் தொல் பொருள்களை வைக்க அருங்காட்சியகம் அமைக்கப்படும்

* சென்னை அருகே தாவரவயில் பூங்கா ₹300 கோடியில் அமைக்கப்படும்.

* கிண்டி சிறுவர் பூங்கா மேம்படுத்தப்படும்.

* தந்தை பெரியாரின் எழுத்துகளை எட்டுத்திக்கும் எடுத்து செல்ல பெரியாரின் சிந்தனை அடங்கிய தொகுப்பு 21 இந்திய உலக மொழிகளில் அச்சு மற்றும் டிஜிட்டல் வழியில் வெளியிடப்படும். இதற்காக 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* தமிழ்மொழிக்கும் பிற சர்வதேச மொழிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பை ஆராய குழு அமைக்கப்படும். அகர முதலி உருவாக்கும் திட்டத்திற்கு ₹2 கோடி ஒதுக்கீடு.

* தமிழ் மொழியின் தொன்மை, செம்மையை நிலைநாட்டிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்!

* தமிழ் வளர்ச்சித் துறைக்கு பட்ஜெட்டில் ₹82.86 கோடி நிதி ஒதுக்கீடு

* நீர்நிலை பாதுகாப்பு மற்றும் அரசு நிலங்களை மீட்கும் பணிகளுக்காக ₹50 கோடி ஒதுக்கீடு.

* வருவாய் பற்றாக்குறை கடந்த ஓராண்டில் ₹7ஆயிரம் கோடியாக குறைக்கப்பட்டுள்ளது.

* வெள்ளத்தடுப்பு பணிகளுக்காக முதற்கட்டமாக ₹500 கோடி ஒதுக்கீடு.

* தமிழகத்திலுள்ள 64 அணைகளை புனரமைக்க ₹1,064 கோடி ஒதுக்கீடு.

* தமிழக அரசின் நீர்வளத்துறைக்கு ₹7,338.36 கோடி ஒதுக்கீடு.

* வட்டியில்லா பயிர்க்கடன் திட்டத்திற்கு ₹200 கோடி நிதி ஒதுக்கீடு.

* வரும் நிதியாண்டில் மாநில மொத்த உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறை 4.61%லிருந்து 3.80 ஆக குறையும்.

* வருவாய் பற்றாக்குறை வரும் ஆண்டில் 7 ஆயிரம் கோடிக்கு மேல் குறைய வாய்ப்புள்ளது.

* கொற்கையில் ₹5 கோடியில் ஆழ்கடல் ஆய்வு மேற்கொள்ளப்படும்

* தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்காக ₹496 கோடி ஒதுக்கீடு.

* வானிலை முன்னறிவிப்பு கட்டமைப்பை உருவாக்க ₹10 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

* இரண்டு ரேடார்கள், 100 தானியங்கி வானிலை மையங்கள், 400 தானியங்கி மழை மானிகள் அமைக்கப்படும்.

* ₹20 கோடியில் வள்ளலார் கால்நடை பாதுகாப்பகங்கள் அமைக்கப்படும்.

* ஆதரவில்லாத, கைவிடப்பட்ட விலங்குகளை பராமரிக்க வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் ₹20கோடி.

* தமிழக அரசின் சுற்றுச்சூழல் துறைக்கு ₹849 கோடி நிதி ஒதுக்கீடு.

* ஆண்டுதோறும் 4 இலக்கிய திருவிழாக்கள் நடத்த ₹5.6 கோடி ஒதுக்கீடு.

* மாணவர்களுக்கு இலவச சைக்கிள் திட்டத்திறிகு ₹1062 கோடி ஒதுக்கீடு.

* எம்ஜிஆர் சத்துணவு திட்டத்திற்கு ₹1949 கோடி ஒதுக்கீடு.

* சமூக நலத்துறைக்கு ₹5922.40 கோடி ஒதுக்கீடு.

* முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்திற்கு ₹1540 கோடி ஒதுக்கீடு.

* வரையாடு பாதுகாப்பு திட்டத்திற்கு ₹10 கோடி ஒதுக்கீடு.

* தமிழக அரசின் ஒலிம்பிக் தங்கப்பதக்கம் தேடல் திட்டத்திற்கு ₹25 கோடி ஒதுக்கீடு.

* சென்னையில் சதுரங்க ஒலிம்பியாட் நடைபெறுகிறது. இதில், 150 நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

* விளையாட்டுத்துறைக்கு ₹293 கோடி ஒதுக்கீடு.

---

**2. இராமாமிர்தம் நினைவு நிதி**

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்படுவதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அரசுப்பள்ளிகளில் 6–ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை பயிலும் மாணவிகள் கல்லூரியில் சேர்ந்தவுடன் மாதந்தோறும் தலா ஆயிரம் ரூபாய் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும்.

இந்த மாணவிகள் ஏற்கெனவே பிற கல்வி உதவித் தொகைகளை பெற்று வந்தாலும் இந்தத் திட்டத்தில் கூடுதலாக உதவியைப் பெறலாம் எனவும், இத்திட்டத்தின் மூலம் சுமார் 6 இலட்சம் மாணவிகள் ஒவ்வோர் ஆண்டும் பயன்பெற வாய்ப்புள்ளதாகவும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**3. சென்னை அருகே ₹300 கோடியில் தாவரவியல் பூங்கா – பட்ஜெட்டில் அறிவிப்பு**

தாவரவியல் பூங்காக்கள், பல்லுயிரினங்களின் இருப்பிடங் –களாகவும், பொதுமக்களுக்கான பொழுதுபோக்கு மையங்களாகவும் திகழ்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, லண்டன் க்யூபூங்கா அமைப்புடன் இணைந்து சென்னைக்கு அருகில் தாவரவியல் பூங்கா 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை இவ்வாண்டு தயாரிக்கப்படும்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் இடர் தணிக்கும் திட்டங்கள் மற்றும் பசுமையாக்கும் திட்டங்களுக்கு போதிய நிதியினை அளித்திடவும், "தமிழ்நாடு பசுமைக் காலநிலை மாற்ற நிதியத்தை" அரசு உருவாக்கும்.

தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாடுகளைப் பாதுகாத்தல், அவற்றின் வாழ்விடத்தை விரிவுபடுத்துதல், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் "வரையாடு பாதுகாப்புத் திட்டத்தை" அரசு செயல்படுத்தும். இத்திட்டத்திற்கு, முதற்கட்டமாக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இளம்வயதிலிருந்தே வனம் மற்றும் வனவிலங்குகளைப் பற்றிய விழிப்புணர்வை குழந்தைகளுக்கு ஏற்படுத்த, கிண்டி குழந்தைகள் பூங்காவை மறுவடிவமைத்து, பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், விலங்குகள் உள்ளடங்கிய இயற்கைப் பூங்காவாக 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை இந்த ஆண்டில் தயாரிக்கப்படும்.

சேத்துமடை (கோயம்புத்தூர் மாவட்டம்), மணவனூர் மற்றும் தடியன் குடிசை (திண்டுக்கல் மாவட்டம்), ஏலகிரி (திருப்பத்தூர் மாவட்டம்) ஆகிய பகுதிகள் சூழல் சுற்றுலாத் தலங்களாக தனியார் பங்களிப்புடன் மேம்படுத்தப்படும்.

இம்மதிப்பீடுகளில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறைக்கு 849.21 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

**4. இயற்கை வேளாண்மை முதல் டிஜிட்டல் விவசாயம் வரை: தமிழக வேளாண் பட்ஜெட் 2022–23 சிறப்பு அம்சங்கள்**

2022–23–ஆம் ஆண்டுக்கான தமிழக வேளாண் பட்ஜெட் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. கர்நாடகா, ஆந்திராவுக்குப் பின் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் வேளாண் துறைக்கென தனியாக பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது.

இந்த வேளாண் பட்ஜெட்டில் மொத்த நிதி ஒதுக்கீடு – ₹33,007.68 கோடி. இந்த பட்ஜெட்டின் சிறப்பு அம்சங்கள்:

* கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை 3,204 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்துவதற்கு ₹300 கோடி நிதி ஒதுக்கீடு. அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து. (1997 கிராம பஞ்சாயத்துகள் 2021–22)

* முதல்வரின் மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தில் 3,000 மானாவாரி நிலத் தொகுப்புகளில் 7.5 லட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்கள் பயன்பெறுவதற்கு ₹132 கோடி.

* இயற்கை வேளாண்மை, இடுபொருட்கள் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கு ₹71 கோடி மதிப்பில் மாநில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டம் அறிமுகம்.

* பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திட ₹2,546 கோடி நிதி ஒதுக்கீடு.

* சிறுதானியங்கள் மற்றும் பயறுவகைகள் இயக்கம்

* இரண்டு சிறுதானிய சிறப்பு மண்டலங்கள்,

* திருவண்ணாமலை, சேலம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய மாவட்டங்களைக் கொண்டு முதல் மண்டலம்,

* தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, தென்காசி, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருச்சி, கரூர், திண்டுக்கல், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களைக் கொண்டு இரண்டாவது மண்டலம்,

* துவரைப் பயிருக்கென சிறப்பு மண்டலம் (கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் மாவட்டங்களைக் கொண்டது)

* சிறுதானியங்களின் ஊட்டச்சத்து பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த சிறுதானிய திருவிழாக்கள்,

* சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளுக்கு விதை முதல் விற்பனைக்கு ₹152 கோடியில் உதவி.

சூரியகாந்தி மற்றும் சோயாபீன்ஸ் ஆகியவற்றிற்கு சிறப்பு கவனம் செலுத்தி எண்ணெய் வித்துக்களை ₹29.7 கோடிக்கு ஊக்குவித்தல்.

* ₹8 கோடியில் டிஜிட்டல் விவசாயம் அறிமுகம்

* அனைத்து கிராம நிலங்களுக்கும் புவியிடக்குறியீடு, புதிய பயிர்த் திட்டத்திற்கான பரிந்துரை,

* பூச்சி மற்றும் நோய்களுக்கான செயற்கை நுண்ணறிவு, ட்ரோன்களைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி,

* நீர்ப்பாசனத்தில் தானியங்குமயமாக்கலுக்கு நவீன இணையதள தொழில்நுட்பம் (Internet of Things)

* மண் வள அட்டைகளுக்கான 'தமிழ் மண் வளம்' இணையமுகப்பு

* பயிர் சாகுபடிப் பரப்பினை கணிக்க தொலை உணர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்,

* இடுபொருட்கள், விதைகள் மற்றும் கன்றுகளை ஆன்லைனில் பதிவு செய்து விநியோகம்,

* வேளாண் விரிவாக்க மையங்ளில் பணமில்லா பரிவர்த்தனை.

* மயிலாடுதுறையில் புதிய மண் பரிசோதனை கூடம்

* உயர்மதிப்பு வேளாண் திட்டங்களில், ஆதி திராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவிகித மானியம் வழங்க ₹5 கோடி

* பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்கான சிறப்பு நிதியாக ₹5 கோடி

* கரும்பு விவசாயிகளுக்கு உதவி

* மெட்ரிக் டன்னுக்கு ₹195/– சிறப்பு ஊக்கத்தொகை – கரும்பு விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ₹2,950/–

* கரும்பு சாகுபடிக்கு உதவி – ₹10 கோடி

* சர்க்கரை ஆலைகளில் ஆய்வகத்தின் நவீனமயமாக்கல் & தானியங்கி எடைகள் – ₹4.5 கோடி

* மின் இணைப்பு வழங்கப்பட்ட தாட்கோ பயனாளிகளுக்கு நுண்ணீர்ப் பாசனம் அமைப்பதற்கு நிதி உதவி ₹20 கோடி ஒதுக்கீடு

* தோட்டக்கலை பயிர்களில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க – ₹30 கோடி

* தென்னை, மா, கொய்யா மற்றும் வாழை தோட்டங்களில் ஊடுபயிருக்காக ₹27.51 கோடி.

* பசுமைக்குடில், நிழல்வலைக்கூடம், நிலப்போர்வை, ஹைட்ரோபோனிக்ஸ், செங்குத்து தோட்டம் (Vertical Garden) போன்ற உயர் தொழில்நுட்பங்களுக்கு ₹25.9 கோடி

* தேனீ வளர்ப்பு தொகுப்புகளுக்கு ₹10.25 கோடி

* உழவர் சந்தைகளின் காய்கனிகளின் வரத்தை அதிகரிக்க சிறப்புத் திட்டத்திற்கு ₹5 கோடி

* காய்கறிகளில் பாரம்பரிய ரகங்களை மீட்டெடுக்க ₹2 கோடி

* பருவம் இல்லாத தக்காளி சாகுபடியை ஊக்குவிக்க ₹4 கோடி

* பனை மேம்பாட்டிற்காக ₹2.65 கோடி

* பண்ணை இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்க ₹150 கோடி

* முதலமைச்சரின் சூரியசக்தி பம்பு செட் திட்டத்திற்காக 3,000 பம்பு செட்டுகள் – ₹65.34 கோடி மற்றும் 145 சூரியசக்தி உலர்த்திகள் ₹3 கோடி

* 50 உழவர் சந்தைகளை சீரமைக்க ₹15 கோடி மற்றும் 10 உழவர் சந்தைகளை அமைக்க ₹10 கோடி

* ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு உழவர் சந்தையில் மாலையில் சிறுதானியங்கள், பயறுவகைகளை விற்பனை செய்ய அனுமதி.

* 2022–23 தமிழக வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்யும் முன் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்ற வேளாண்மை மற்றும் உழவர் நலன் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்

* மதிப்பு கூட்டல் மற்றும் உணவு பதப்படுத்துதலுக்கு முன்னுரிமை.

* திண்டிவனம், தேனி மற்றும் மணப்பாறையில் ₹381 கோடியில் மூன்று மிகப்பெரிய அளவிலான உணவுப் பூங்காக்கள்,

* கிராம அளவிலான மதிப்பு கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் மையங்கள் 38 கிராமங்களில் அமைக்க ₹95 கோடி

* 3 கோடியில் 5 தொழில் கற்கும் சிறுமையங்கள்.

* 295 மதிப்பு கூட்டும் மையங்கள் அமைப்பதற்கு ₹5 கோடி.

* சென்னை மற்றும் திருச்சியில் எஞ்சிய நச்சு பகுப்பாய்வு ஆய்வகங்கள் அமைக்க ₹15 கோடி

* பொது, தனியார் பங்கேற்பு முறையில் தேனி, கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் " மொத்த காய்கறி விற்பனை வளாகங்கள் அமைத்து, அருகாமையில் உள்ள மாநில வியாபாரிகள் தமிழக விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய வசதி.

* மாநில அளவிலான "உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மேலாண்மை மையம்" அமைத்து வணிக நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுதல்

* ஆறு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு கட்டமைப்பு வசதிகளுக்கு ₹36 கோடி.

* பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி, விருதுநகர் ஆகிய ஏழு மாவட்டங்களில் இரண்டாம் கட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு பணிகளுக்கு ₹125.44 கோடி

* 60 ட்ரோன்களை வாங்குவதற்கும் பயிற்சி மற்றும் செயல்விளக்கத்திற்கு ₹10.32 கோடி

**வேளாண் சார்ந்த துறைகளின் செயல்பாடுகள்**

* காவிரி டெல்டா மாவட்டங்களில் 4964 கிமீ நீளமுள்ள கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகளுக்கு ₹80 கோடி.

* அயிரை, செல் கெண்டை மற்றும் கல்பாசு போன்ற உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் பாதுகாப்புக்கு ₹5 கோடி.

* விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க TANGEDCO விற்கு ₹5,157.56 கோடி.

* ஊரக வளர்ச்சித் துறை மூலம் ₹1245.65 கோடியில் பண்ணைக்குட்டைகள், தடுப்பணைகள் மற்றும் தூர்வாரும் பணிகள்.

* விவசாயிகள் இடுபொருட்களை எடுத்துச்செல்லவும், விளைபொருட்களை சந்தைக்கு எடுத்த செல்லவும் கிராம பஞ்சாயத்துகளில் ₹604.73 கோடி செலவில் 2,750 கிமீ நீளத்தில் சாலைகள்,.

* தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தேசிய ஊரக பொருளாதார மாற்றத் திட்டத்தின் மூலம் மூன்று இலட்சம் வேளாண் சார்ந்த வாழ்வாதாரப் பணிகளுக்கு ₹42.07 கோடி,

* வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் உற்பத்தியாளர் குழுக்கள், உற்பத்தியாளர்கள் குழுக்கள் மற்றும் சமுதாய பண்ணை பள்ளிகளை உருவாக்க ₹30.56 கோடி ஒதுக்கீடு,

* சிறு, குறு, நடுத்தர தொழில்கள் (MSME) மூலம் சிறிய விவசாயம் சார்ந்த தொழில்களை தொடங்க ₹1.5 கோடி வரை மூலதன மானியம்.

* திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (டான்சிட்கோ) மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு ஏற்ற விலையைப் பெறுவதை உறுதிசெய்யும் வகையில் விவசாயப் பொருட்களுக்கான தொழிற்பேட்டை,

* வேளாண் புத்தொழில் நிறுவனங்களின் வேளாண் வணிக ரீதியான முயற்சிகளுக்கு 10 லட்சம் ரூபாய் வரை நிதியுதவி

* வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் கிராம வங்கிகள் மூலம் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ₹1,83,425 கோடி வேளாண் கடன் வழங்கப்படுவதைக் கண்காணித்தல்.

---

### 5. சென்னை ஐஐடியில் புதிய முயற்சி! மனித மூளை செல்களை வரைபடமாக்கும் மையம் தொடக்கம்

மனித மூளைகளை, 'செல்'களின் நிலையில் வரைபடமா–க்கும் வகையில் 'சுதா கோபாலகிருஷ்ணன் பிரெய்ன் சென்டர்' என்ற பெயரிலான ஆராய்ச்சி மையம் சென்னை ஐஐடியில் தொடங்கப்பட்டுள்ளது.

---

### 6. மிளகு, சாதிக்காய், கிராம்பு ஆகியவற்றுக்கான மரபணு வங்கி உருவாக்கப்படும்

மிளகு, சாதிக்காய், கிராம்பு ஆகியவற்றுக்கான மரபணு வங்கி நீலகிரி, கொடைக்கானல், கொல்லிமலை, குற்றாலம், ஏற்காடு, ஜவ்வாது மலைகளில் உள்ள அரசு தோட்டப்பண்ணைகளில் உருவாக்கப்படும்.

**வேளாண் நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பது:**

உழவர்கள், உழவர் ஆர்வலர் குழு, உழவர் உற்பத்தியா–ளர் குழு ஆகியோராலும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலும் உற்பத்தி செய்யப்படும் செடிகள், விதைகள், இடுபொருள்கள், வாசனைப் பொருள்களான ஏலக்காய், மிளகு, பட்டை, கிராம்பு போன்றவையும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களான ஜாம், ஜெல்லி, ஊறுகாய், உலர்பழங்கள், யூகலிப்டஸ் தைலம், போன்றவையும் இணையம் வாயிலாக விற்க ஏற்பாடு செய்யப்படும்.

பொருள்களைத் தரம் பிரித்து, சிப்பம் கட்டி விநியோகம் செய்ய மூன்று சேமிப்பு கிடங்குகள் சென்னை, மதுரை, கோவையில் ₹1.50 கோடி நிதியில் ஏற்படுத்தப்படும். இணையவழி விநியோக நிறுவனங்கள்மூலம் வாடிக்–கையாளர்களுக்குப் பொருள்கள் விநியோகம் செய்யப்ப–டும். இத்திட்டம் ₹2 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

**மரபணு வங்கி:** விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ற ரகங்களை உற்பத்தி செய்து வழங்கும் வகையில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுவைகூட்டும் பயிர்களின் வகைகளும் ரகங்களும் சேகரிக்கப்பட்டு அரசு தோட்டக்கலை பண்ணைகளில் நடவு செய்து பராமரிக்கப்படும். முதல்கட்டமாக இந்த ஆண்டு மிளகு, சாதிக்காய், கிராம்பு ஆகியவற்றிற்கான மரபணு வங்கி, நீலகிரி, கொடைக்கானல், கொல்லிமலை, குற்றாலம், ஏற்காடு, ஜவ்வாது மலைகளில் உள்ள அரசு தோட்டக் கலை பண்ணைகளில் தொடக்கப்பட்டு, உள்ளூர் வகைகள் அறிமுகப்படுத்தப்படும்.

இதற்கான உழவு, நடவு, இடுபொருட்கள், அறுவடை போன்ற பணிகளுக்காக ₹1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**மூலிகை தோட்டங்கள்:** 2022–23ஆம் ஆண்டில் ₹1 கோடி நிதி ஒதுக்கீட்டில் மூலிகை தோட்டங்கள் நான்கு ஆயிரம் வீடுகளில் அமைக்கப்படும். இதற்கு தேவையான மூலிகைச்செடிகள், அரசு தோட்டக்கலை பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்படும். ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டம், மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் முருங்கை நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டு முருங்கை சாகுபடி ஊக்குவிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

---

### 7. தேனி, திண்டிவனம், மணப்பாறையில் தரம் உயர்த்தப்பட்ட உணவுப் பூங்காக்கள்

தேனி, திண்டிவனம், மணப்பாறையில் தரம் உயர்த்தப்பட்ட உணவுப் பூங்காக்கள் அமைக்கப்படும்.

நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பது:

தேனி, திண்டிவனம் (விழுப்புரம்), மணப்பாறை (திருச்சி) ஆகிய வட்டங்களில் 451 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் நிறுவனத்தினால் உணவுப் பூங்காக்கள் ஏற்படுத்தப்பட உள்ளன.

மாநில அரசு எடுத்த முயற்சியினால் தற்போது இந்த மூன்று உணவுப் பூங்காக்களும் தரம் உயர்த்தப்பட்ட பெரிய அளவிலான உணவுப்பூங்காக்கள் என மத்திய அரசின் அங்கீகாரம் பெற்றுள்ளன. இந்த மூன்று உணவுப் பூங்காக்களுக்கு அருகில் அமைந்துள்ள பிற மாவட்ட விவசாயிகளும் பயன்பெறும் வகையில் இந்த உணவுப் பூங்காக்களுக்குத் தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளும் ₹381.38 கோடி மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தினால் நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் உருவாக்கப்படும்.

---

### 8. இந்தியா–ஜப்பான் இடையே 6 ஒப்பந்தங்கள் கையொப்பம்

வடகிழக்கு பிராந்தியத்தின் வளர்ச்சியை உறுதிசெய்வது, பசுமை திட்டங்களில் ஒத்துழைப்பு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக 6 ஒப்பந்தங்கள் இந்தியா–ஜப்பான் இடையே கையொப்பமாகின.

இந்தியா–ஜப்பான் இடையே நடைபெற்ற 14ஆவது மாநாட்டில் பிரதமர் மோடி, ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா ஆகியோர் கலந்துகொண்டனர். மாநாட்டின்போது இருநாடுகளுக்கும் இடையே 6 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் கையொப்பமானது.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்க ஒத்துழைப்புடன் செயல்படுவது தொடா்பான ஒப்பந்தமும் கையொப்பமானது. பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கான ஒப்பந்தங்களும் மாநாட்டின்போது கையொப்பமாகின.

---

### 9. உலகின் மகிழ்ச்சியான நாடு ஃபின்லாந்து

உலகின் மகிழ்ச்சியான நாடு என்ற பெருமையைத் தொடர்ந்து 5–ஆவது ஆண்டாக பின்லாந்து பெற்றுள்ளது. இந்தப் பட்டியலில் இந்தியா 3 இடங்கள் முன்னேறி 136–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

சர்வதேச மகிழ்ச்சி நாள் ஆண்டுதோறும் மார்ச் 20–ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. அதையொட்டி உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலை ஐநா நீடித்த வளர்ச்சிக்கான தீர்வுகள் அமைப்பு வெளியிட்டது. தொடர்ந்து 10ஆம் ஆண்டாக இப்பட்டியல் வெளியிடப்பட்டது.

மக்களிடம் கணக்கெடுப்பு நடத்தி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. கணக்கெடுப்பின்போது மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தி, ஆயுட்காலம், வாழ்வில் முடிவெடுப்பதற்கான சுதந்திரம், சமூக ஆதரவு, மக்களின் பெருந்தன்மை, ஊழல் உள்ளிட்டவை தொடர்பாக ஆராயப்பட்டது.

மொத்தம் 146 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்லாந்து தொடர்ந்து 5–ஆவது முறையாக உலகின் மகிழ்ச்சியான நாடு என்ற பெருமையைப் பெற்றுள்ளது. டென்மார்க், ஐஸ்லாந்து, ஸ்விட்சர்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இந்தியா 136ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த ஆண்டுக்கான அறிக்கையில் 139ஆவது இடத்தில் இருந்த இந்தியா தற்போது மூவிடங்கள் முன்னேறியுள்ளது.

---

**1.** Continental Europe Synchronous Area (CESA) உடன் இணைக்கப்பட்டுள்ள நாடு எது?

அ) சீனா

**ஆ) உக்ரைன் ☑**



இ) கஜகஸ்தான்

ஈ) ஆப்கானிஸ்தான்

✓ உக்ரைன் அண்மையில், 'கான்டினென்டல் ஐரோப்பா சிங்க்ரோனஸ் ஏரியா' உடன் இணைக்கப்பட்டுள்ளது. இது ஐரோப்பா கண்டத்தின் பெரும்பகுதியில் பரவியிருக்கும் மின்சார விநியோகக் கட்டமைப்பாகும். இந்த நடவடிக்கை உக்ரைனை ரஷ்யாவிலிருந்து வெளியேற அனுமதிக்கும்.

---

**2.** இந்தியாவின் முதலாவது எரிபொருள் மின்கல மின்சார வாகனத்தை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

அ) ஓலா

**ஆ) டொயோட்டா ☑**



இ) ஹோண்டா

ஈ) டாடா

✓ உலகின் அதிநவீன தொழினுட்பத்துடன் உருவாக்கப்பட்ட பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் மின்கல மின்வாகனமான டொயோட்டா மிராய்–ஐ மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி தொடங்கி வைத்தார்.

✓ இந்த வாகனம் ஹைட்ரஜனால் இயங்கக்கூடியது மட்டுமல்லாமல் இந்திய சாலைகள் & பருவநிலைக்கு ஏற்றதாகும். இந்தியாவில் இவ்வகையில் இது முதலாவது முன்னோடி திட்டமாகும். பசுமை ஹைட்ரஜன் அடிப்படையி–லான சுற்றுச்சூழலை நாட்டில் உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.


---

**3.** மகாத்மா காந்தியின் பெயரால் அழைக்கப்படும், 'பசுமை முக்கோணம்' திறக்கப்பட்டுள்ள நாடு எது?

அ) இலங்கை

ஆ) நேபாளம்

**இ) மடகாஸ்கர் ☑**




ஈ) மியான்மர்

✓ இந்தியாவின் 75ஆவது ஆண்டு விடுதலையை நினைவு கூரும் வகையில், மடகாஸ்கரின் தலைநகரமான அண்டனானரிவோவில் 'மகாத்மா' காந்தியின் பெயரில் அமைந்த, 'பசுமை முக்கோணம்' திறக்கப்பட்டது.

---

**4.** 'திஷாங்க்' என்பது எந்த இந்திய மாநிலத்தின் நில டிஜிட்டல் மயமாக்கல் செயலியாகும்?

**அ) கர்நாடகா ☑**

ஆ) கேரளா

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) குஜராத்

✓ அனைத்து நிலப் பதிவுகளையும் (பூமி திட்டத்தின்கீழ்) டிஜிட்டல் மயமாக்குவதற்காக 'திஷாங்க்' செயலி கர்நாடக அரசால் செயல்படுத்தப்படுகிறது. கர்நாடக மாநில தொலை உணர்வு பயன்பாட்டு மையத்தின் (KSRSAC) கர்நாடக புவியியல் தகவல் அமைப்பு திட்டத்தின்கீழ் இந்தச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இது வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவருவதோடு நிலம் தொடர்பான சர்ச்சைகளைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**5.** பகலொளி சேமிப்பு நேரத்தை (DST) நிரந்தரமாக்கும், 'சன்ஷைன் பாதுகாப்புச் சட்டத்தை' சமீபத்தில் நிறைவேற்–றிய நாடு எது?

அ) ரஷ்யா

**ஆ) அமெரிக்கா ☑**

இ) பிரேசில்

ஈ) கனடா

✓ பகலொளி சேமிப்பு நேரத்தை நிரந்தரமாக்கும் சட்டத்தை அமெரிக்க செனட் ஒருமனதாக நிறைவேற்றியது. குளிர் காலத்தின் வருகை மற்றும் புறப்பாடுடன் ஒத்துப்போகும் வகையில், நேரத்தை 1 ம நே முன்னும் பின்னும் மாற்றி வைக்கும் நடைமுறையை இது இரத்து செய்துள்ளது.

✓ இது ஒரு சட்டமாக கையொப்பமிடப்பட்ட பிறகு, ஒவ்வொரு நவம்பரிலும் நேரத்தை 1 மணி நேரம் முன்னே மாற்றும் நடைமுறை நிறுத்தப்படும்.

---

**6.** 'பாகினி' என்பது பின்வரும் எந்த இந்திய மாநிலத்தால் அறிவிக்கப்பட்ட ஒரு புதிய திட்டமாகும்?

அ) குஜராத்

**ஆ) சிக்கிம் ☑**



இ) மகாராஷ்டிரா

ஈ) கர்நாடகா

✓ சிக்கிம் மாநில அரசு தனது ஆண்டு பட்ஜெட்டில், 'பாகினி' திட்டத்தை அறிவிக்கவுள்ளது. அதன் அனைத்து 210 மேல் நிலை மற்றும் உயர்நிலை அரசுப் பள்ளிகளிலும் இலவச சானிட்டரி நாப்கின்களை வழங்குவதற்காக, விற்பனை எந்திரங்களை நிறுவுவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது. பள்ளிகளிலிருந்து மாணவிகள் இடைவிலகுவ–தைத்தடுப்பதும், சிறார்களிடையே மாதவிடாய் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

---

**7.** V–Dem ஜனநாயக அறிக்கை–2022'இன், 'தாராளவாத ஜனநாயகக்குறியீட்டில்' இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 75

ஆ) 83

**இ) 93 ☑**

ஈ) 99

✓ சுவீடனைச் சார்ந்த வி–டெம் நிறுவனம் (ஜனநாயகத்தின் வகைகள் ஆராய்ச்சித் திட்டம்) "ஜனநாயக அறிக்கை

2022: தன்னியக்கமயமாக்கல் இயல்பை மாற்றுகிறதா?" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது.

- ✓ தாராளவாத ஜனநாயகக் குறியீட்டில் இந்தியா 93ஆவது இடத்தையும், தேர்தல் ஜனநாயகக் குறியீட்டில் 100ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. எல் சால்வடார், துருக்கி மற்றும் ஹங்கேரி ஆகியவற்றுடன் உலகின் முதல் 10 தன்னாட்சி நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம்பெற்றுள்ளது.

---

**8.** **2022 – ஹென்லி கடவுச்சீட்டுக் குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ) 01

ஆ) 25

இ) 56

**ஈ) 83 ☑**

- ✓ 2022 – ஹென்லி கடவுச்சீட்டுக் குறியீட்டில் இந்தியாவின் கடவுச்சீட்டு 83ஆவது இடத்தில் உள்ளது. 2021இல் 90ஆவது இடத்திலிருந்த இது ஏழு இடங்கள் முன்னேறி உள்ளது. இந்தக் குறியீடு உலகின் அனைத்து கடவுச் சீட்டுகளையும் நுழைவு இசைவில்லாமல் அணுகக்கூடிய இடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தரவரி –சைப்படுத்துகிறது.
- ✓ இது பன்னாட்டு வான்போக்குவரத்து சங்கத்தின் (IATA) பிரத்தியேக தரவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. 2022 தரவரிசையின்படி, ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகியவை உலகின் மிகவும் ஆற்றல்மிகு கடவுச்சீட்டுக –ளைக்கொண்டுள்ளன.

---

**9.** **உலக ஊக்கமருந்து எதிர்ப்பு முகமை வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, ஊக்கமருந்து எதிர்ப்பு விதி மீறல்களில், இந்தியாவின் தரநிலை என்ன?**

அ) முதலாவது

ஆ) இரண்டாவது

**இ) மூன்றாவது ☑**

ஈ) நான்காவது

- ✓ உலக ஊக்கமருந்து எதிர்ப்பு முகமை வெளியிட்டுள்ள ஓர் அண்மைய அறிக்கையின்படி, கடந்த 2019ஆம் ஆண்டில் இந்தியாவில் 152 ஊக்கமருந்து எதிர்ப்பு விதி மீறல்கள் நிகழ்ந்துள்ளன. மேலும் இப்பட்டியலின் மூன்றாமிடத்தில் (152 மீறல்கள்) இந்தியா உள்ளது. இது உலகில் நிகழ்ந்த விதிமீறல்களில் 17%–க்கொண்டுள்ளது.
- ✓ ரஷ்யா–167, இத்தாலி–157, பிரேசில்–78, ஈரான்–70 ஆகிய இடங்களில் உள்ளன.

---

**10.** **'உலக நீர் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) மார்ச்.20

ஆ) மார்ச்.21



**இ) மார்ச்.22 ☑**

ஈ) மார்ச்.23

- ✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.22 உலக தண்ணீர் நாளாகக் கொண்டாடப்படுகிறது. நன்னீர் வளங்களின் நிலையான மேலாண்மைக்கு ஆதரவாக இது கொண்டாடப்படுகிறது.
- ✓ ஐநா அமைப்புகளால் ஒவ்வோராண்டும் இதுகுறித்து ஒரு கருப்பொருள் தேர்ந்தெடுக்கப்படுகிறது. "Groundwater: Making the Invisible Visible" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கொல்லிமலையில் இருபது வகை அரிய மருத்துவத் தாவரங்கள்: மாநிலங்களவையில் அமைச்சர் தகவல்**

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்மூலம் இருபது வகையான அரிய மருத்துவ தாவரங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மூலிகை வளம் நிறைந்த கொல்லிமலையில் சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம் அமைப்பது தொடர்பாக மாநிலங்களவை திமுக உறுப்பினர் இராஜேஷ்குமார் எழுப்பிய கேள்விக்கு மாநிலங்களவையில் எழுத்து பூர்வமாக மத்திய அமைச்சர் சர்பானந்தா சோனோவால் அளித்த பதில் வருமாறு:

தமிழ்நாட்டின் கொல்லிமலையில் நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த மருத்துவ தாவரங்கள் காணப்படுகின்றன. சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்திய தாவரவியல் ஆய்வு (BSI) தகவலின்படி, கொல்லிமலை மலையில் 100–க்கும் மேற்பட்ட மருத்துவ தாவர இனங்கள் கண்டறியப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன.

**அரிய வகை மருத்துவத் தாவரங்கள்:** மேலும், மேட்டூர் அணை, சித்த மருத்துவ தாவர தோட்டமும், மத்திய சித்த ஆராய்ச்சிக்கான கவுன்சிலின் தமிழகப் பிரிவும் இணைந்து கொல்லிமலைக் குன்றில் உள்ள மருத்துவத தாவரங்களை ஆய்வு செய்தது. இந்த ஆய்வில் கொல்லி மலைக் குன்றில் இருபது அரிய வகை மருத்துவத் தாவரங்கள் கண்டெடுக்கப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ளன. அதே சமயம், கொல்லிமலை குன்றுகளில் புதிதாக சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்து ஆயுஷ் அமைச்சகத்தின் பரிசீலனையில் இல்லை.

**சித்த ஆராய்ச்சி நிறுவனங்கள்:** தமிழகத்தில் ஏற்கெனவே சித்த ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சிலின் மூன்று புற நிறுவனங்கள் செயல்படுகின்றன. சென்னையிலுள்ள மத்திய சித்த ஆராய்ச்சி நிறுவனம், பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் உள்ள சித்த மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் மேட்டூர் அணைப்பகுதியில் உள்ள சித்த மருத்துவ தாவரங்கள் தோட்டம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேலும், ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு தேசிய சித்தா நிறுவனமும் சென்னையில் உள்ளது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

---

**2. 'ஆசனி' புயல்: அந்தமானில் பலத்த மழை**

'ஆசனி' புயல் காரணமாக அந்தமான் நிகோபார் தீவுகளில் பலத்தமழை பெய்து வருகிறது.

இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட பதிவு:

நிகோபார் தீவுகளில் உள்ள கார் நிகோபாரின் வடக்கு – வட மேற்கே சுமார் 110 கிமீ தொலைவில் தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டிய தெற்கு அந்தமான் கடற்பகுதியில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நிலை கொண்டிருக்கிறது. இது ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும், புயலாகவும் மாறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புயலுக்கு 'ஆசனி' எனத் தீவு நாடான இலங்கை பெயர் சூட்டியுள்ளது.

---

**3. 2020–ல் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரப்படி, இந்தியாவில் ஆண்டு தோறும் ஏற்படும் புற்றுநோய்களில் 27% புகையிலைப் பழக்கத்தால் ஏற்படும் புற்று வகையாகவே இருக்கிறது. இதனை ஏற்படுத்துவது 'பியூசோபாக்டீரியம் நியூக்ளியேட்டம்' (*Fusobacterium nucleatum*) என்ற பாக்டீரியா.**

---

**4. நரசிங்கம்பேட்டை நாதஸ்வரத்துக்கு புவிசார் குறியீடு**

புகழ்பெற்ற நரசிங்கம்பேட்டை நாதஸ்வரத்துக்கு புவிசார் குறியீடுக்கான அங்கீகார சான்று கிடைத்துள்ளது.

தென்னிந்தியாவின் கலாச்சார தலைநகரமாக திகழும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 17ஆம் நூற்றாண்டு முதல், நாதஸ்வரம் என்ற இசைக்கருவி பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1955ஆம் ஆண்டுக்கு முன்பு "பிரதி மத்தியமம் ஸ்வரம்" கொண்டுதான் நாதஸ்வரத்தில் தாய் ராகங்கள் வாசிக்கப்பட்டன. பின்னர், 1955ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம் நரசிங்கம்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த இரங்க நாத ஆச்சாரி என்ற கைவினைக் கலைஞர் என்பவரால், நாதஸ்வரத்தில் 'சுத்த மத்தியமம் ஸ்வர'த்தை கண்டுபிடி –த்து அதை நாதஸ்வர கருவியில் உருவாக்கினர். இந்த இசைக்கருவி எளிதாக இசைக்க முடிந்தது. இதனால் தான் நரசிங்கம்பேட்டை நாதஸ்வரம் எனப் பெயர் வந்தது.

நாதஸ்வர இசை வளர்ச்சிக்கு இந்த கருவி பெரிதும் உதவியது. தற்போது இந்த நாதஸ்வரம் கருவி 158 நாடுகளில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

இந்த இசைக்கருவியை கொண்டு வாசித்த ராஜரத்தினம் பிள்ளை, காருக்குறிச்சி அருணாச்சலம் உள்பட புகழ்பெற்ற நாதஸ்வர வித்வான்களும் நரசிங்கம்பேட்டை நாதஸ்வரத்தை வாசித்து பெரும் புகழ் பெற்றனர். எனவே இந்த நாதஸ்வரத்தை திராவிடர்களின் இசைக்கருவி என அழைக்கப்படுகிறது.

நரசிங்கம்பேட்டையில் ஆச்சா மரங்களை கொண்டு நாதஸ்வரத்தை சுமார் 15 குடும்பத்தினர் தற்போது வடிவமைத்து வருகின்றனர். இந்த நாதஸ்வரம் 2 ½ அடி நீளத்தில் வெட்டி அதனை கடைந்து, உள்துவாரம் இட்டு, 12 துளைகளை மிகவும் கவனமாகயிட்டு உருவாக்கப்படு –கிறது.

இதையடுத்து தமிழ்நாட்டில் இதுவரை 46 பொருட்கள் புவிசார் குறியீடு பெறப்பட்டதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் நரசிங்கம்பேட்டை நாதஸ்வரத்தை சேர்த்து 10 பொருட்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

**5. ஆட்டிசம் விழிப்புணர்வு ஏற்படுத்த பாக் ஜலசந்தி கடலை 13.05 மணி நேரத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்த சிறுமி**

ஆட்டிசம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த இலங்கை தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை 13.05 மணி நேரத்தில் ஆட்டிசம் பாதித்த மும்பை சிறுமி ஜியாராய் நீந்தி கடந்து சாதனை படைத்தார்.

மும்பையைச் சேர்ந்த கடற்படை வீரர் மதன்ராய் என்பவரின் மகள் ஜியாராய் (13). ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட இச்சிறுமி நீச்சல் பயிற்சியில் கைதேர்ந்தவர். ஏற்கெனவே பல சாதனைகளை படைத்துள்ளார்.

இந்நிலையில், ஆட்டிசம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை பாக் ஜலசந்தி கடலை நீந்தி சாதனை புரிவதற்காக ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து விசைப்படகு மற்றும் பைபர் படகில் ஜியாராய், அவரது தந்தை மதன்ராய், பயிற்சியாளர் மற்றும் மீனவர்கள் உள்ளிட்ட 10 பேர் தலைமன்னாருக்கு நேற்று முன்தினம் சென்றனர். நேற்று அதிகாலை 4.15 மணிக்கு நீந்தத் தொடங்கிய ஜியாராய் நேற்று மாலை 5.20 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியை வந்தடைந்தார்.

இவர் தலைமன்னார் – தனுஷ்கோடி இடையிலான 29 கி.மீ. தூரத்தை 13 மணி 5 நிமிடத்தில் நீந்தி கடந்துள்ளார். அரிச்சல் முனையில் தமிழக டிஜிபி சைலேந்திர பாபு, சிறுமி ஜியா ராய்க்கு சால்வை அணிவித்தும், பூங்கொத்து கொடுத்தும் வாழ்த்து தெரிவித்தார்.

---

**1.** ஆக்சிஸ் வங்கியின் உதவியுடன், 'டிஜிட்டல் பள்ளி நலவாழ்வு தளம்' தொடங்கப்பட்ட மாநிலம் / UT எது?

அ) புது தில்லி

ஆ) பீகார்

**இ) புதுச்சேரி ☑**

ஈ) கோவா

✓ சுமார் 2. 4 லட்சம் மாணவர்களின் உடல்நலம் குறித்த தகவல்களை டிஜிட்டல்மயமாக்குவதற்காக புதுச்சேரி அரசு அண்மையில், 'டிஜிட்டல் பள்ளி நலவாழ்வு தளத்தை' அறிமுகப்படுத்தியது. ஆக்சிஸ் வங்கியின் உதவியுடன் இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

✓ இதன்கீழ், மாணவர்களின் ஊட்டச்சத்து மதிப்பீட்டைக் கொண்டு அவர்கட்கு இரத்தசோகை உண்டா இல்லையா என்பதைக் கண்டறியவியலும். மேலும் அதற்கேற்ப சிகிச் –சைகளையும் மேற்கொள்ள முடியும்.

---

**2.** நாட்டின் முதல் மருத்துவ நகரமான, 'இந்திரயாணி மெடிசிட்டி'யை நிறுவவுள்ள இந்திய மாநிலம் எது?



அ) உத்தரகாண்ட்

**ஆ) மகாராஷ்டிரா ☑**

இ) ராஜஸ்தான்

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

✓ நாட்டின் முதல் மருத்துவ நகரம் புனேவில் அமைக்கப்படும் என மகாராஷ்டிர மாநில அரசு பட்ஜெட் தாக்கலின்போது அறிவித்தது. 'இந்திரயாணி மருத்துவ நகரம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ள இது, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி வசதிகள் மற்றும் அனைத்து வகை சிறப்பு சிகிச்சைகளை –யும் ஒரே கூரையின்கீழ் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3.** 'சர்வதேச துணிச்சல்மிக்க பெண்மணி விருது – 2022' வென்ற பூமிகா ஸ்ரேஸ்தா சார்ந்த நாடு எது?



அ) இலங்கை

**ஆ) நேபாளம் ☑**

இ) இந்தியா

ஈ) மியான்மர்

✓ நேபாளத்தின் திருநங்கைகள் உரிமை ஆர்வலர் பூமிகா ஸ்ரேஸ்தா, ஐக்கிய அமெரிக்க மாகாணங்கள் துறையின் மதிப்புமிக்க சர்வதேச துணிச்சல்மிக்க பெண்மணி விருது, 2022–க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

✓ LGBTQI+ சமூகத்தின் வாழ்வை மேம்படுத்துவதற்கான அவரது அர்ப்பணிப்புக்காக இந்த விருது அறிவிக்கப்பட்டு உள்ளது. கடந்த ஆண்டில், முஸ்கன் காதுன் என்னும் மற்றொரு நேபாள ஆர்வலர், அமிலத்தாக்குதல்களுக்கு எதிரான தனது பணிக்காக இவ்விருதை வென்றார்.

---

**4.** 'UPI லைட்' கட்டணப் பரிவர்த்தனையின் உச்சவரம்பு எவ்வளவு?

அ) ₹100

**ஆ) ₹200 ☑**

இ) ₹500

ஈ) ₹1000

✓ இந்திய தேசிய கொடுப்பனவு கழகமானது (NPCI) 'UPI லைட்'டை அறிமுகப்படுத்தவுள்ளது. இது இணையமற்ற பயன்முறையில் சிறிய மதிப்பிலான பரிவர்த்தனைகளை செயல்படுத்தும்.

✓ 'UPI லைட்' கட்டணப்பரிவர்த்தனையின் அதிகபட்ச வரம்பு ₹200ஆக இருக்கும். சாதனத்தில் உள்ள 'UPI Lite' பணப் பையின் மொத்த வரம்பு ₹2,000ஆக இருக்கும்.

---

**5.** காலமுறை தொழிலாளர் படை கணக்கெடுப்பை (PLFS) வெளியிடுகிற நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

**ஆ) தேசிய புள்ளியியல் அலுவலகம் ☑**

இ) பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

✓ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட சமீபத்திய காலமுறை தொழிலாளர்படை கணக்கெடுப்பின் படி, இந்தியாவின் நகர்ப்புற வேலையின்மை விகிதம் 2021 ஏப்ரல்–ஜூன் காலாண்டில் 12.6%ஆக உயர்ந்து உள்ளது. இந்த விகிதம் ஜனவரி–மார்ச் காலாண்டில் 9.3 சதவீதமாக இருந்தது.

---

**6.** 2022 – இந்தியா–ஜப்பான் வருடாந்திர உச்சிமாநாடு நடைபெற்ற இடம் எது?



அ) டோக்கியோ

**ஆ) புது தில்லி ☑**

இ) சென்னை

ஈ) ஒசாகா

✓ இந்தியா–ஜப்பான் வருடாந்திர உச்சிமாநாடு 2022–இன் போது புதுதில்லியில் பிரதமர் மோடியும் ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவும் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தச் சந்திப்புக்குப் பிறகு, ஜப்பான் இந்தியாவில் 5 டிரில்லியன் யென் அல்லது ₹3.2 இலட்சம் கோடி முதலீடு செய்ய உள்ளதாக இந்தியப் பிரதமர் அறிவித்தார்.

✓ ஜப்பானிய அரசாங்கத்தின் தலைவராக ஜப்பான் பிரதமர் இந்தியா வருவது இது முதல் முறையாகும்.

---

**7.** விண்வெளியில் உள்ள செயற்கைக்கோள்களை அழிக்கக்கூடிய, 'Relativistic Klystron Amplifier (RKA)'யை உருவாக்கியுள்ள நாடு எது?



அ) இந்தியா ஆ) ரஷ்யா

**இ) சீனா ☑** ஈ) இஸ்ரேல்

- ✓ சீனா அண்மையில் "Relativistic Klystron Amplifier (RKA)" என்ற ஒரு நுண்ணலை எந்திரத்தை உருவாக்கியுள்ளது. இது விண்வெளியில் உள்ள செயற்கைக்கோள்களை அழிக்கும் திறன்கொண்டதாகும். இந்தச் சாதனத்தால் Ka–கற்றையில் 5–மெகாவாட் அளவிலான அலை வெடிப்பை உருவாக்க முடியும்.
- ✓ இது உள்நாட்டு மற்றும் இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் மின்காந்த நிறமாலையின் ஒருபகுதி ஆகும். இயக்கப்பட்ட ஆற்றல் ஆயுதங்கள் (Directed Energy Weapons) எதிரியின் உபகரணங்களை அழிப்பதற்கு செறி–வூட்டப்பட்ட மின்காந்த ஆற்றலைப் பயன்படுத்துகின்றன.

---

**8. உயிரியல் மற்றும் நச்சு ஆயுதங்கள் தீர்மானம் குறித்து எந்தச் சர்வதேச அமைப்பில் இந்தியா வாதிட்டது?**

அ) அகதிகளுக்கான ஐநா உயராணையகம்

**ஆ) ஐநா பாதுகாப்பு அவை ☑**



இ) ஐநா சுற்றுச்சூழல் திட்டம்

ஈ) பன்னாட்டு நீதிமன்றம்

- ✓ ஐநா பாதுகாப்பு அவையில் (UNSC) உயிரியல் மற்றும் நச்சு ஆயுதங்கள் குறித்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. பேரழிவு தரும் இந்த வகை ஆயுதங்களின் அனைத்து வடிவங்களையும் தடைசெய்யும் BTWC தீர்மானத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக இந்தியா அறிவித்தது.

---

**9. 'MV இராம் பிரசாத் பிஸ்மில்' என்பது அண்மையில் எந்த ஆற்றில் பயணித்த மிக நீளமான கப்பலாகும்?**

அ) கங்கை

**ஆ) பிரம்மபுத்திரா ☑**



இ) நர்மதை

ஈ) கிருஷ்ணா

- ✓ 'MV இராம்பிரசாத் பிஸ்மில்' என்ற கலம் பிரம்மபுத்திராவில் பயணஞ்செய்ததை அடுத்து மிகநீளமான கப்பலை பயணிக்க வைத்த ஒரு மைல்கல்லை சாதனையை துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் எட்டியது. 90 மீட்டர் நீளமுள்ள இந்தக் கப்பல் 26 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது.

---

**10. உலக வாய்நல நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) மார்ச்.20 ☑**

ஆ) மார்ச்.21

இ) மார்ச்.22

ஈ) மார்ச்.23

- ✓ வாய்நலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.20ஆம் தேதி உலக வாய்நல நாள் கொண்டாடப்படுகிறது. "*Be Proud of Your Mouth*" என்பது நடப்பாண்டில் (2022) வரும் உலக வாய்நல நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன்: இறுதிப்போட்டியில் லக்ஷயா சென் தோல்வி**

ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன் போட்டி பர்மிங்காம் நகரில் நடந்தது. இதில் ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் தரவரிசையில் 11ஆவது இடம் வகிக்கும் இந்தியாவின் லக்ஷயா சென், 'நம்பர் ஒன்' வீரரும், ஒலிம்பிக் சாம்பியனுமான விக்டர் ஆக்சல்சென்னிடம் (டென்மார்க்) 21–10, 21–15 என்ற நேர் செட்டில் வீழ்ந்து வீழ்த்தி வெள்ளிப்பதக்கத்தை வசப்படுத்தினார்.

---

**2. ஆஸ்திரேலியாவில் இருந்து மீட்கப்பட்ட 29 பழங்கால பொருட்களை பார்வையிட்டார் பிரதமர் மோடி**

ஆஸ்திரேலியாவில் இருந்து மீட்கப்பட்ட 29 பழங்கால அரிய கலைப்பொருட்களை பிரதமர் பார்வையிட்டார்.

இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட சிலைகள் உட்பட 29 பழங்காலப் பொருட்களை ஆஸ்திரேலியாவிலிருந்து மத்திய அரசு மீட்டுள்ளது. இந்தப் பழங்காலப் பொருட்கள் இராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், தெலங்கானா, தமிழ்நாடு, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களை சேர்ந்தவை.

ஆஸ்திரேலியாவிலிருந்து மீட்டு இந்தியா கொண்டுவரப்ப–ட்ட 29 பொருட்களும் சிவன், சக்தி, விஷ்ணு, ஜெயின் பாரம்பரியம், உருவப்படங்கள் மற்றும் அலங்கார பொருட்கள் என ஆறு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த பழங்கால பொருட்களும் மணற்கல், பளிங்கு, வெண்கலம், பித்தளை, காகிதம் போன்ற பொருட்களால் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பொருட்களை தில்லியில் பிரதமர் மோடி பார்வையிட்டார்.

இதனிடையே, இந்தியா–ஆஸ்திரேலியா இடையிலான உச்சிமாநாடு காணொலிக்காட்சிமூலம் நடைபெற்றது. ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசனுடன் பிரதமர் மோடி காணொலிக்காட்சிமூலம் பேசினார். அப்போது, இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட பழங்காலப் பொருட்களை திருப்பி அனுப்பியதற்காக ஸ்காட் மோரிசனுக்கு இந்தியர்கள் அனைவரின் சார்பிலும் பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார். இந்தியா–ஆஸ்திரேலியா இடையிலான ஒத்துழைப்பு வேகமாக வளர்ந்து வருவதாகவும் மோடி கூறினார். மேலும், இந்தோ – பசிபிக் பகுதியின் வளர்ச்சியில் இருநாடுகளும் இணைந்து தொடர்ந்து கவனம் செலுத்துவது, ஐரோப்பாவில் நிலவும் பதற்றமான சூழல் ஆகியவை குறித்து இருநாட்டு தலைவர்களும் விவாதித்தனர்.

---

**3. உலக நாடுகளிடையே ஒத்துழைப்பு: ஐநா ஆலோசனைக் குழுவில் இந்திய பொருளாதார அறிஞர்**

குறைந்தபட்சம் மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இடையே ஆக்கபூர்வ ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான ஐநாஇன் புதிய உயர்நிலை ஆலோசனைக் குழு உறுப்பினராக இந்திய பொருளாதார அறிஞர் ஜயதி கோஷ் (66) நியமிக்கப்பட்டுள்ளார்.

**4. உலக தண்ணீர் நாள்**

ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.22 அன்று உலக தண்ணீர் நாள் கொண்டாடப்படுகிறது. நீர்வளங்களின் நிலைத் தன்மைமிக்க மேலாண்மையை வலியுறுத்துவதற்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

"நிலத்தடிநீர் – காணாததை காண வைத்தல்" என்னும் கருப்பொருளில் இந்த ஆண்டு (2022) உலக தண்ணீர் நாள் கொண்டாடப்படுகிறது.

---

**5. மேகேதாட்டு அணைக்கு நிதி ஒதுக்கிய கர்நாடக அரசை கண்டித்து தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்**

மேகேதாட்டுவில் புதிய அணை கட்ட நிதி ஒதுக்கியுள்ள கர்நாடக அரசைக் கண்டித்து, தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதில் கூறியிருப்பதாவது:

காவிரி நடுவர் மன்றம் 2007ஆம் ஆண்டு பிப்.5ஆம் தேதி அளித்த இறுதித்தீர்ப்பு மற்றும் உச்சநீதிமன்றம் 2018 பிப் 16ஆம் தேதி அளித்த தீர்ப்பை மதிக்காமலும் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஒப்புதலை பெறாமலும், மத்திய அரசின் எந்தவித அனுமதியை பெறாமலும் தன்னிச்சையாக காவிரியின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்ட நிதி ஒதுக்குவதை எவ்வகையிலும் ஏற்க முடியாது. எனவே, கர்நாடக அரசின் செயலுக்கு பேரவை கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

கர்நாடகாவின் மேகேதாட்டு அணை திட்டத்துக்கு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உட்பட எந்த அனுமதியும் அளிக்கக்கூடாது என மத்திய அரசுக்கு வலியுறுத்தப்படுகிற–து. காவிரி நதிநீர்ப் பிரச்சினை ஒரு நீண்டகால பிரச்சினையாகும். இதற்கு தீர்வாக கடந்த 2018 பிப்.16ஆம் தேதி உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு செயலாக்கப்பட்டு வருகிறது. இப்பிரச்சினை இரு மாநிலங்களின் உணர்வு பூர்வமான பிரச்சினையாகும்.

எனவே, கர்நாடக அரசு மேகேதாட்டுவிலோ, வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எந்தவித புதிய நீர்த்தேக்க திட்டத்தையும் மற்ற படுகை மாநிலங்கள், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் மேற்கொள்ளக்கூடாது என கர்நாடக அரசை அறிவுறுத்தும்படி மத்திய அரசை பேரவை கேட்டுக் கொள்கிறது.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை செயல்படுத்த காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, உச்சநீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்படாத நிலையில், மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கான கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை பரிசீலிக்கவோ, அதற்கு அனுமதியளிக்கவோ கூடாதென ஆணையத்தை பேரவை கேட்டுக் கொள்கிறது.

கர்நாடக அரசின் இந்த முயற்சியை முறியடித்து, தமிழக விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பேரவை தனது ஆதரவை ஒருமனதாக தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

---

**1.** 'G20 People's Climate Vote 2021' **என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

**அ) UNDP ☑**

ஆ) UNESCO

இ) உலக வங்கி

ஈ) WHO

✓ அண்மையில் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தால் (UNDP) வெளியிடப்பட்ட, 'G20 People's Climate Vote 2021' அறிக்கையின்படி, இந்தியாவிலுள்ள 67% இளைஞர்கள் காலநிலை நெருக்கடியை உலகளாவிய அவசரநிலை என்று கருதுகின்றனர்.

✓ அவசரக் கொள்கை உருவாக்கம் மற்றும் மாற்றத்தின் அவசியம் குறித்தும் இளைஞர்கள் குரல் கொடுக்கின்றனர். அதேசமயம், பருவநிலை மாற்றத்தை உலகளாவிய அவசரநிலையாகக் கருதும் வயதுவந்தோருள் இந்திய தேசத்தில் 58% பேர் மட்டுமே உள்ளனர்.

---

**2. இந்திய கடற்படை நாள் கொண்டாடப்படுகிற தேதி து?**



அ) மார்ச் 10

**ஆ) டிசம்பர் 04 ☑**

இ) பிப்ரவரி 10

ஈ) ஆகஸ்ட் 04

✓ 1971ஆம் ஆண்டு இந்தியா–பாகிஸ்தான் போரின்போது, 'ஆபரேஷன் டிரைடென்ட்' நடவடிக்கையில் இந்திய கடற்படையின் எதிர்த்தாக்குதலுக்கு மதிப்பளிக்கும் வகையில் ஆண்டுதோறும் டிச.4 அன்று இந்திய கடற்படை நாளாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு (2021), "*ஸ்வர்னிம் விஜய் வர்ஷ்*" என்ற கருப்பொருளின்கீழ் கடற்படை இந்த நிகழ்வைக்கொண்டாடியது.

---

**3.** 2022 – **உலக நுகர்வோர் உரிமைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




அ) Consumer Rights First

ஆ) Leaving No one Behind

**இ) Fair Digital Finance ☑**

ஈ) Sustainable Consumerism

✓ உலகளாவிய நுகர்வோர் உரிமைகள் நாளானது மார்ச் 15 அன்று நுகர்வோரின் உரிமைகளை அங்கீகரிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் நுகர்வோர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதே இந்த நாளின் நோக்கமாகும்.

✓ ஒவ்வோர் ஆண்டும், உலகம் முழுவதும் இந்த நாளைக் கொண்டாட ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் பின்பற்றப்படுகி–றது. நடப்பு 2022ஆம் ஆண்டுக்கான உலக நுகர்வோர் உரிமைகள் நாளின் கருப்பொருள், "*Fair Digital Finance*".

---

**4. தேசிய சுற்றுலா நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) ஜன.25 ☑** ஆ) பிப்.25

இ) மார்ச்.25 ஈ) ஏப்.25

✓ சுற்றுலாவின் முக்கியத்துவம் மற்றும் பொருளாதாரத்தில் அதன் தாக்கம்குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி.25 அன்று நாடு முழுவதும் தேசிய சுற்றுலா நாள் கொண்டாடப்படுகிறது.

✓ இந்த ஆண்டு, சுற்றுலா அமைச்சகம் 'அமுதப்பெருவிழா' என்ற பெயரில் தேசிய சுற்றுலா நாளை அனுசரிக்கிறது. "*Rural and Community Centric Tourism*" என்பது இந்த ஆண்டு தேசிய சுற்றுலா நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**5. எந்த இந்திய வங்கிக்கு, IFR ஆசியாவின், 'ஆசிய வங்கிக்கான விருது' வழங்கப்பட்டுள்ளது?**

அ) ஐசிஐசிஐ வங்கி

ஆ) பாரத ஸ்டேட் வங்கி

**இ) ஆக்சிஸ் வங்கி ☑**

ஈ) HDFC வங்கி

✓ இந்தியாவின் மூன்றாவது மிகப்பெரிய தனியார் துறை வங்கியான ஆக்சிஸ் வங்கி, ஈக்விட்டி மற்றும் கடன் வழங்குவதில் அதன் செயல்திறனுக்காக, IFR ஆசியாவின் ஆசிய வங்கிக்கான விருதைப்பெற்றுள்ளது. இந்த ஆண்டு, பைனான்ஸ் ஆசியாவின் விருதுகளில், 'இந்தியாவின் சிறந்த DCM ஹௌஸ்' விருதையும் அது வென்றுள்ளது.

✓ 2021 டிச.31 நிலவரப்படி, அவ்வங்கிக்கு நாடு முழுவதும் 4,700 உள்நாட்டு கிளைகள் மற்றும் 11,060 ATM–கள் உள்ளன.

---

**6. சமீபத்தில் முதன்முறையாக மெட்டாவெர்ஸில் நுழைந்த வங்கி எது?**

அ) உலக வங்கி

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி

**இ) JP மோர்கன் ☑**

ஈ) சிட்டி யூனியன் வங்கி

✓ JP மோர்கன் மெட்டாவெர்ஸில் ஓர் அங்காடியை அமைத்த உலகின் முதல் வங்கியாக மாறியுள்ளது. அமெரிக்காவின் மிகப்பெரிய வங்கியான இவ்வங்கி, பிளாக்செயின் அடிப்ப–டையில் இயங்கும் ஓர் உலகான டீசென்ட்ராலாந்தில் இதனைத் திறந்துள்ளது.

---

**7. ஏர் இந்தியாவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?**




**அ) N சந்திரசேகரன் ☑**

ஆ) நந்தன் நிலேகனி

இ) சஞ்சீவ் மேத்தா

ஈ) தீபக் பரேக்

✓ டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் N சந்திரசேகரன், இந்திய அரசாங்கத்திடமிருந்து அண்மையில் டாடா குழுமத்தால் கையகப்படுத்தப்பட்ட ஏர் இந்தியா என்ற விமான நிறுவனத்தின் தலைவராக அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

✓ ஜெனரல் இன்சூரன்சு கழகத்தின் முன்னாள் CMD ஆலிசு ஜீ வர்கீசு வைத்யன் மற்றும் ஹிந்துஸ்தான் யூனிலீவரின்

தலைவர் சஞ்சீவ் மேத்தா ஆகியோர் இந்தக் குழுவில் தன்னாட்சிமிக்க இயக்குநர்களாக சேர்க்கப்பட்டனர்.

---

**8.** 2022 – **ஜெர்மன் ஓபன் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய வீரர் யார்?**



அ) P V சிந்து

ஆ) கிடாம்பி ஸ்ரீகாந்த்

**இ) லக்ஷ்யா சென் ☑**

ஈ) சாய்நா நேவால்

✓ 2022 – ஜெர்மன் ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்திய பாட்மிண்டன் வீராங்கனை லக்ஷ்யா சென், தாய்லாந்தின் மூத்த வீரரும், உலகின் இருபதாம் நிலை வீரருமான குன்லெவட் விடிட்சார்னைச் சந்தித்தார். இதில் லக்ஷ்யா சென், விடிட்சார்னுக்கு எதிராக அபாரமாக போராடி வெள்ளிப்பதக்கம் பெற்றார்.

---

**9.** 2022 – **பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கின் பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்த நாடு எது?**



அ) இந்தியா

ஆ) சீனா

**இ) நார்வே ☑**

ஈ) ஜப்பான்

✓ 2022 – பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் பதினாறு தங்கப்பதக்கங்களுடன் நார்வே தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலிடம் பிடித்தது.

✓ அதைத்தொடர்ந்து ஜெர்மனி 12 தங்கங்களையும், சீனா 9 தங்கங்களையும் பெற்றன.

---

**10.** 2022 – **ISSF உலகக்கோப்பை பதக்கப்பட்டியலில் முதலிடம் பிடித்த நாடு எது?**



**அ) இந்தியா ☑**

ஆ) சீனா

இ) பிரான்ஸ்

ஈ) ரஷ்யா

✓ எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்ற 2022 – ISSF உலகக் கோப்பையில் இந்தியா நான்கு தங்கம், இரண்டு வெள்ளி மற்றும் 1 வெண்கலம் என மொத்தம் 7 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது. நார்வே ஆறு பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

✓ இந்தியாவின் சார்பாக தங்கம் வென்றவர்கள்: பெண்கள் 25 மீ பிஸ்டல் அணி – (ரகி சர்னோபத், ஈஷா சிங் மற்றும் ரிதம் சங்வான்); ஆடவர்களுக்கான 10 மீ ஏர் பிஸ்டல் – சௌரப் சௌத்ரி; மகளிருக்கான 10 மீ ஏர் பிஸ்டல் அணி – (ஈஷா சிங், நிவேதா பரமானந்தம், ருசிரா வினர்கர்) மற்றும் 25 மீ ரேபிட் பையர் பிஸ்டல் கலப்பணி – (ரிதம் சங்வான் மற்றும் அனிஷ் பன்வாலா).

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வீடுகளின் விலை அதிகரிப்பு: உலக பட்டியலில் இந்தியாவுக்கு 51–ஆவது இடம்**

உலக அளவில் வீடுகளின் விலை அதிகரிப்பு பட்டியலில் இந்தியா 2.1 சதவீதத்துடன் 51ஆவது இடத்தில் இருப்பதாக சொத்து ஆலோசனை நிறுவனமான நைட் ப்ராங் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனம் மேலும் கூறியுள்ளதாவது:

உலக அளவில் மிக முக்கிய நகரங்களில் வீடுகளின் விலை ஆண்டுக்கு ஆண்டு வேகமாக அதிகரித்து வருகிறது. இந்தப் பட்டியலில் கடந்தாண்டு அக்–டிசம்பர் காலாண்டு நிலவரப்படி 59.6% விலை அதிகரிப்புடன் துருக்கி முதலிடத்தில் உள்ளது.

அதற்கடுத்தபடியாக, நியூஸிலாந்து (22.6%), செக் குடியரசு (22.1%), ஸ்லோவேக்கியா (22.1%), ஆஸ்திரேலியா (21.8%) ஆகிய நாடுகள் உள்ளன. இந்தியா 2.1 சதவீத உயர்வுடன் இப்பட்டியலில் 51–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

கடந்த 2021–இல், மலேசியா, மால்டா, மொராக்கோ நாடுகளின் சந்தைகளில் வீடுகளின் விலை முறையே 0.7%, 3.1% மற்றும் 6.3% குறைந்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

**2. இந்தியாவின் வளர்ச்சி மதிப்பீட்டை 8.5%–ஆக குறைத்தது பிட்ச்**

அடுத்த நிதியாண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 8.5 சதவீதமாக குறைத்துள்ளதாக தரமதிப்பீட்டு நிறுவனமான பிட்ச் தெரிவித்தது.

இதுகுறித்து அந்த நிறுவனம் மேலும் கூறியுள்ளதாவது:

ரஷியா மற்றும் உக்கரைன் இடையேயான போர் சர்வதேச அளவில் பதற்ற நிலையை உருவாக்கியுள்ளது. ரஷியா மீது அமெரிக்கா உள்ளிட்ட பல உலக நாடுகள் தொடர்ச்சியாக வர்த்தக தடை அறிவிப்புகளை வெளியிட்டு வருவது சர்வதேச நிலைத்தன்மையை கேள்விக்குறியாக்–கியுள்ளது. இதனால் வரும் நாள்களில் எரிபொருள்களின் உயரும் என்பதுடன் பணவீக்கமும் அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதுபோன்ற பல்வேறு பின்னடைவு சூழல்களைக் கருத்தில்கொண்டு அடுத்த நிதியாண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை 10.3 சதவீதத்தி–லிருந்து 8.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், நடப்பு நிதியாண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறித்த மதிப்பீடு 0.6 சதவீதம் உயர்த்தப்பட்டு 8.7 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2023–24–இல் இந்த வளர்ச்சி விகிதம 7 சதவீதமாக இருக்கும் என பிட்ச் தெரிவித்துள்ளது.

---

**3. மார்ச்.24 – உலக காசநோய் நாள்**

**கருப்பொருள்:** *Invest to End TB. Save Lives*

---

**4. மார்ச்.23 – தியாகிகள் நாள்**

**5. 'H2Oooh!' முன்னெடுப்பின் கீழ் இந்திய நதிகளின் பாதுகாப்பு குறித்த 3 அனிமேஷன் படங்கள் வெளியீடு**

உலக தண்ணீர் நாளையொட்டி, தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கம், UNESCO மற்றும் பிற பங்குதாரர்கள் இணைந்து "H2Oooh! – இந்தியாவின் குழந்தைகளுக்–கான நீர் திட்டம்" முன்முயற்சியின்கீழ் 3 அனிமேஷன் படங்களை வெளியிட்டனர்.

இந்திய ஆறுகளின் பாதுகாப்பை மையமாகக்கொண்டு பள்ளி மாணவர்கள் சமர்ப்பித்த கதைகளை அடிப்படையாகக் கொண்ட திரைப்படங்கள் இவை ஆகும். தூய்மையான கங்கைக்கான தேசிய இயக்கம் மற்றும் பிற அமைப்புகளுடன் இணைந்து 2021 ஜூலை மாதம் UNESCOஆல் இந்த முயற்சி தொடங்கப்பட்டது.

இது தொடங்கப்பட்டதில் இருந்து, 18 மாநிலங்களில் உள்ள 53 பள்ளிகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 31000 மாணவர்கள் மற்றும் 400–க்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் வலுவான ஆதரவைப் பெற்றது.

**6. மூன்று நாள் சர்வதேச புவியியல் மாநாடு தில்லியில் நிறைவடைந்தது**

"அடுத்த தசாப்தத்திற்கான புவி அறிவியல்: சவால்கள் மற்றும் சமூகம்" என்ற கருப்பொருளில் மூன்று நாள் சர்வதேச புவி அறிவியல் நிகழ்வான 36ஆவது சர்வதேச புவியியல் மாநாடு நேற்று நிறைவுபெற்றது.

புவியியல் செயல்முறைகள், ஓபியோலைட் அடைப்பு, இமயமலையில் மேலோடு தடித்தல் மற்றும் உருமாற்றம், புவியியல் கரியமில சேமிப்பு உள்ளிட்டவை குறித்து மாநாட்டின் மூன்றாவது நாளில் விவாதிக்கப்பட்டது.

**7. தமிழ்நாட்டில் உள்ள தேசிய விரைவுச் சாலைகளின் நீளம்**

பாரத்மாலா திட்டத்தின் முதல் கட்டத்திற்கு முன்னும், பாரத்மாலா முதல் கட்டத்தின் போதும், 2014ஆம் ஆண்டு முதல் கட்டமைக்கப்பட்ட தேசிய விரைவுச் சாலைகளின் நீளம் (இந்த அமைச்சகத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது) தமிழ்நாட்டில் மட்டும் 106 கிலோமீட்டர் ஆகும்.

**8. வளரிளம் பெண்களுக்கான திட்டம்**

நாடு முழுவதும் 11 வயது முதல் 14 வயது உள்ள பள்ளிக்குச்செல்லாத வளரிளம் பெண்களுக்கு ஊட்டச்சத்து வழங்குவதில் இத்திட்டம் கவனஞ்செலுத்துகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் வளரிளம் பெண்களுக்கு 600 கலோரி துணை ஊட்டச்சத்துக்கள், 18 முதல் 20 கிராம் புரதச்சத்து மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் ஆண்டுக்கு 300 நாட்கள் வழங்கப்படுகிறது.

சமீபத்தில், வளரிளம் பெண்களுக்கான திட்டம், சக்ஷம் அங்கன்வாடி மற்றும் ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டது.

11 முதல் 14 வயதுடைய பெண்கள், கல்வி உரிமைச் சட்டம் 2009இன்கீழ் கொண்டுவரப்பட்டனர். இந்த மாற்றியமைக்–கப்பட்ட திட்டத்தின் பயனாளிகளாக முன்னேற விரும்பும் மாவட்டங்கள் மற்றும் வடகிழக்கு மாவட்டங்கள் உள்ள 14 வயது முதல் 18 வயதுள்ள பெண்களும் அடங்குவர்.

தமிழ்நாட்டில் 299 பயனாளிகள் உள்ளனர். இவர்களுக்–கான கடந்த 2020–21ஆம் ஆண்டில் ₹1.23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**9. ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு ₹250 கோடி ஒதுக்கீடு**

நாட்டில் ஊட்டச்சத்து குறைபாட்டை போக்க, ஊட்டச்சத்து திட்டம் கடந்த 2018 மார்ச்.8ஆம் தேதி தொடங்கப்பட்டது. 6 வயது வரை உள்ள குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பினிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து நிலவரத்தை மேம்படுத்துவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு ₹250 கோடியே 60 இலட்சத்து 44 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் ₹218 கோடியே 79 இலட்சத்து 36 ஆயிரத்தை தமிழ்நாடு பயன்படுத்தியுள்ளது.

**10. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஊக்கம்மிக்க மூன்று பெண்கள் NITI ஆயோக்–இன், "இந்தியாவின் மாற்றத்திற்கான பெண்கள்" விருதுகளைப் பெற்றுள்ளனர்.**

"வலிமையும், திறமையும் மிக்க இந்தியா" என மாற்றத்தை ஏற்படுத்துவதில் பெண்கள் தொடர்ந்து முக்கியப்பங்களிப்பு செய்து வருகின்றனர். பல்வேறு துறைகளில் இத்தகைய பெண்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில், NITI ஆயோக் இந்தியாவின் மாற்றத்திற்கான பெண்கள் விருதுகளை நிறுவியுள்ளது.

இந்த ஆண்டு இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டுப் பெருவிழாவின் பகுதியாக 75 பெண் சாதனையாளர்களு–க்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இவற்றுள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று பெண்கள் அவ்விருதைப் பெற்றுள்ளனர். அவர்கள்.,

1. வித்யா சுப்பிரமணியன், சென்னை, வித்யா சுப்பிரமணியன் கல்வி நிறுவனம்.
2. டாக்டர் இரம்யா S மூர்த்தி, சென்னை, நிர்மயா இன்னோவேஷன்ஸ் பிரைவேட் லிட்.
3. தேவிபாலா உமாமகேஸ்வரன், சென்னை, பிக்பிக்ஸ் கேட்ஜெட் கேர் எல்எல்பி.

**1.** 2022–FIFA உலகக்கோப்பையை நடத்தும் நாடு எது?

அ) நியூசிலாந்து

ஆ) UK

**இ) கத்தார் ☑**

ஈ) தென்னாப்பிரிக்கா

✓ '2022 – FIFA உலகக்கோப்பை' போட்டிகள் கத்தாரில் நடைபெறவுள்ளது. 32 நாடுகள் பங்கேற்கும் இப்போட்டி 2022 நவம்பர் மாதம் முதல் அல் பேட் மைதானத்தில் தொடங்கும். தென் கொரியா மற்றும் ஜப்பான் இணைந்து நடத்திய 2022ஆம் ஆண்டு உலகக்கோப்பை போட்டிக்குப் பிறகு தற்போது இரண்டாவது முறையாக ஆசியாவில் இப்போட்டி நடைபெறுகிறது.

---

**2.** பயனுள்ள பன்முகத்தன்மைக்கான ஐக்கிய நாடுகளின் ஆலோசனைக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

அ) இரகுராம் இராஜன்



**ஆ) ஜயதி கோஷ் ☑**

இ) அபிஜித் பானர்ஜி

ஈ) அமர்த்தியா சென்

✓ ஜயதி கோஷ் ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரஸால் பயனுள்ள பன்முகத்தன்மைக்கான ஐநா ஆலோசனைக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் லைபீரிய அதிபரும் நோபல் பரிசு பெற்றவருமான எலன் ஜான்சன் சர்லீப் மற்றும் முன்னாள் சுவீட பிரதம மந்திரி ஸ்டீபன் லோப்வென் ஆகியோர் இணைந்து இப்புதிய குழுவை நிறுவியதாக குடெரெஸ் அறிவித்தார்.

---

**3.** 2008ஆம் ஆண்டுக்கான 'Limited Liability Partnership' –க்கான திருத்தங்கள் எந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வரவுள்ளது?

அ) மார்ச்.1




**ஆ) ஏப்ரல்.1 ☑**

இ) மே.1

ஈ) ஜூன்.1

✓ 'Limited Liability Partnership' – 2008–க்கான திருத்தங்கள் ஏப்ரல்.1 முதல் அமலுக்கு வரவுள்ளது. இத்திருத்தம், 'Small Limited Liability Partnership' என்ற கருத்தாக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. LLP–கள் என்பது ₹40 இலட்சம் வரையிலான விற்றுமுதலையோ அல்லது ₹50 கோடிக்கு மிகாத நிர்ணயிக்கப்பட்ட தொகையைக் கொண்டிருப்ப–தையோ குறிக்கின்றது.

✓ சில LLP–களை 'ஸ்டார்ட்–அப் LLP'–களாக நியமிப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் உள்ளது.

---

**4.** ரஷ்யாவைச் சார்ந்திருத்தலைக் குறைத்துக்கொள்வத–ற்காக, ஜெர்மனி, பின்வரும் எந்த வடகிழக்கு நாட்டுடன் எரிசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

அ) குவைத்



**ஆ) கத்தார் ☑**

இ) ஓமான்

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ ஜெர்மனி கத்தாருடன் நீண்டகால ஆற்றல் கூட்டாண்மை–யாக ஓர் எரிசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஜெர்மனிக்கு எரிவாயு விநியோகிக்கும் மிகப்பெரிய நாடாக ரஷ்யா இருந்துவருகிறது.

✓ ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமிக்கத் தொடங்கிய பிறகு, ஐரோப்பாவின் மிகப்பெரிய பொருளாதாரமான ஜெர்மனி, ரஷ்ய எரிசக்தி ஆதாரங்களைச் சார்ந்திருக்க விரும்பவில்–லை. கத்தார் அமீரும் ஜெர்மனியின் அமைச்சரும் எரிசக்–தி துறையில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்–கான வழிகள் குறித்தும் விவாதித்தனர்.

---

**5.** இந்தியாவின் எந்த மத்திய அமைச்சகம், "இந்தியா & ஆர்க்டிக்: நிலையான வளர்ச்சிக்கான கூட்டாண்மையை உருவாக்கல்" என்ற கொள்கையை அறிமுகப்படுத்தியது?

**அ) புவி அறிவியல் அமைச்சகம் ☑**

ஆ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

இ) பாதுகாப்பு அமைச்சகம்



ஈ) வெளியுறவு அமைச்சகம்

✓ "இந்தியா மற்றும் ஆர்க்டிக்: நிலையான வளர்ச்சிக்கான கூட்டாண்மையை உருவாக்குதல்" என்ற கொள்கையை மத்திய புவி அறிவியல் அமைச்சர் ஜிதேந்திர சிங் வெளியிட்டார். இந்தக் கொள்கை, வளங்கள் நிறைந்த ஆர்க்டிக் பிராந்தியத்துடன் நாட்டின் கூட்டாண்மையை ஆழப்படுத்த எண்ணுகிறது.

✓ ஆர்க்டிக் கவுன்சிலில் பார்வையாளர் அந்தஸ்தில் உள்ள 13 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. துருவப்பகுதிகளுக்கும் இமயமலைக்கும் இடையேயுள்ள தொடர்பை ஆராயவும் இந்தக் கொள்கை எண்ணுகிறது.

---

**6.** அழிந்துவரும், 'பொன்னிற மந்தி' இனத்தின் பூர்வீக நாடுகள் எவை?

**அ) இந்தியா மற்றும் பூடான் ☑**



ஆ) இந்தியா மற்றும் இலங்கை

இ) இந்தியா மற்றும் வங்காளதேசம்

ஈ) லாவோஸ் மற்றும் கம்போடியா

✓ பொன்னிற மந்தி (*Trachypithecus geei*) என்பது பூடான் மற்றும் இந்தியாவின் எல்லையில் பரவியிருக்கும் ஓர் அழிந்துவரும் உயர்விலங்கினமாகும்.

✓ சமீபத்திய ஆய்வின்படி, பொன்னிற மந்தியின் வாழ்விடங்–கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்து வருகின்றன. இவ்வுயிரினங்களின் வாழ்விடங்களில் அதிகரிக்கும் மனித நடமாட்டங்கள் காரணமாக மனித–பொன்னிற மந்தி மோதலின் தீவிரம் அதிகரித்து வருகிறது.

**7.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'MH17 கிராஷ்' நிகழ்ந்த நாடு எது?**



அ) ஆஸ்திரேலியா

ஆ) மலேசியா

**இ) உக்ரைன் ☑**

ஈ) சீனா

✓ 2014ஆம் ஆண்டில் கீழை உக்ரைனின் டொனெட்ஸ்க் பகுதியில், கிரிமியாவை உருஷியப்படைகள் இணைத்த போது, மலேசிய ஏர்லைன்ஸ் வானூர்தியான, 'MH17' வீழ்த்தப்பட்டதில் ரஷ்யாவின் பங்கு இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது. சமீபத்தில், உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பிற்கு மத்தியில், ஆஸி., மற்றும் நெதர்லாந்து ஆகியவை, 'MH17' விபத்து வழக்கு தொடர்பாக ரஷ்யாவிற் –கு எதிராக ஒரு புதிய சட்ட வழக்கைத்தொடங்கவுள்ளன.

---

**8.** **உலகிலேயே முதன்முறையாக கார்பன் கட்டண வீதத்தை முன்மொழிந்த உலகளாவிய சங்கம் எது?**



**அ) ஐரோப்பிய ஒன்றியம் ☑**

ஆ) NATO

இ) G20

ஈ) G7

✓ ஐரோப்பிய தொழிற்துறையைப் பாதுகாக்கும் நோக்கில், எஃகு, சிமெண்ட், உரங்கள், அலுமினியம் மற்றும் மின்சாரம் ஆகியவற்றின் இறக்குமதிக்கு கார்பன் கட்டண வீதத்தை உலகிலேயே முதன்முறையாக ஐரோப்பிய ஒன்றியம் முன்மொழிந்தது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சமீபத்தில் மாசுபடுத்தும் பொருட்களின் இறக்குமதிமீது உலகின் முதல் கரியமில வாயு உமிழ்வு கட்டணத்தை விதிக்கும் சங்கத்தின் திட்டத்தை ஆதரித்தன.

---

**9.** **'நகரத்தில் உள்ள அனைத்து மெட்ரோ நிலையங்களு –க்கும் அதிவேகமாக பயணம் செய்ததற்கான' கின்னஸ் உலகசாதனையை படைத்த மெட்ரோ நெட்வொர்க் எது?**



அ) சென்னை மெட்ரோ

**ஆ) தில்லி மெட்ரோ ☑**

இ) கொச்சி மெட்ரோ

ஈ) மும்பை மெட்ரோ

✓ தில்லி மெட்ரோ இரயில் கழக ஊழியர் பிரபுல் சிங், நகரில் உள்ள அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களுக்கும் வேகமாகப் பயணம் செய்து கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளார். இதன்மூலம், நகரின் அனைத்து 254 நிலையங்களுக்கும் 348 கிமீ தூரத்தை வெறும் 16 மணி 2 நிமிடங்களில் பயணித்த உலகின் முதல் நபர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

---

**10.** **SKOCH மாநில நிர்வாக தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ள மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு ஆ) கேரளா

**இ) ஆந்திர பிரதேசம் ☑** ஈ) தெலுங்கானா

✓ SKOCH மாநிலத்தின் நிர்வாக தரவரிசையில், ஆந்திர பிரதேசம் தொடர்ந்து இரண்டாம் ஆண்டாக முதலிடத்தில் உள்ளது. SKOCH மாநில நிர்வாக தரவரிசை – 2021 ஆவணத்தின்படி, ஆந்திர பிரதேச மாநிலம் தொடர்ந்து நான்காவது ஆண்டாக ஒரு நட்சத்திரம் (தரநிலை 1 முதல் 5 வரை) கொண்டுள்ளது மாநிலம் என்பதைக் கூறுகிறது. 2021–இல் தென்னிந்தியாவிலிருந்து 'ஸ்டார்' மதிப்பீடு பெற்ற ஒரே மாநிலம் இதுவாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியாவில் மார்ச் 31இல் முடிவுக்கு வரும் கரோனா கட்டுப்பாடுகள்; முகக்கவசம் அணிதல், தனிமனித இடைவெளி மட்டும் அவசியம்**

நாட்டில் நீடித்துவரும் கரோனா கட்டுப்பாடுகள் மார்ச்.31 ஆம் தேதியுடன் முடிவுக்கு வருகிறது என்றும், இருப்பினும் மக்கள் தொடர்ந்து முகக்கவசம் அணிந்து, தனிமனித இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கரோனா வைரஸ் பெருந்தொற்றுப் பரவல் காரணமாக கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச்.22ஆம் தேதி முதல் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டது. கரோனாவின் முதல் அலையில் தொடர்ந்து எட்டு மாதங்கள் நீடித்த பொது முடக்கம் பின்பு படிப்படியாக விலக்கிக்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து இரண்டாம் அலையின்போது பொது முடக்கம் அறிவிக்கப்பட்டு விலக்கிக் கொள்ளப்பட்டது.

இந்தியாவில் மூன்றாவது அலை கரோனா பரவல் பிப்ரவரியில் முடிவடைந்து விட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாட்டில் படிப்படியாக பொது முடக்கம் தளர்த்தப்பட்டு பொதுப்போக்குவரத்து அனுமதிக்கப்பட்டாலும் சில கரோனா கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்து வந்தன. இந்த நிலையில், நாடு முழுவதும் கரோனா பாதிப்புகளின் எண்ணிக்கை குறைந்து வருவதைத் தொடர்ந்து, COVID –19 கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்காக அமல்படுத்தபட்ட பேரிடர் மேலாண்மை சட்டம் 2005–ன் விதிகளை ரத்து செய்ய உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

இருந்தபோதிலும் முகக்கவசம் அணிய, தனிமனித இடைவெளியைத் தொடர்ந்து கடைபிடிக்க மக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

---

**2. ஆஷ்லி பர்ட்டி ஓய்வு**

உலகின் நம்பர் 1 டென்னிஸ் வீராங்கனையாக இருக்கும் ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பர்ட்டி (25), விளையாட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

**27 பட்டங்கள்...**

கடந்த 2010–இல் தொழில்முறை டென்னிஸ் ஆடத் தொடங்கியது முதல் 'டூர்' நிலையிலான போட்டிகளில் இதுவரை ஒற்றையர் பிரிவில் 15, இரட்டையர் பிரிவில் 12 என 27 பட்டங்கள் வென்றிருக்கிறார் பர்ட்டி.

**3 கிராண்ட்ஸ்லாம்...**

டென்னிஸ் விளையாட்டில் இருக்கும் 4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில், 3–இல் பட்டம் வென்றிருக்கிறார் பர்ட்டி. பிரெஞ்சு ஓபன் (2019), விம்பிள்டன் (2021), ஆஸ்திரேலிய ஓபன் (2022) ஆகியவற்றில் கோப்பை வென்றிருக்கும் அவர், அமெரிக்க ஓபனில் அதிகபட்சமாக 4–ஆவது சுற்று வரை (2018, 19) வந்திருக்கிறார்.

---

**3. பாரா தடகளம்: தேசாய்க்கு தங்கம்**

துபையில் நடைபெறும் பாரா தடகள கிராண்ட் ப்ரீ போட்டியில் ஓட்டப்பந்தய வீரர் பிரணவ் பிரசாந்த் தேசாய் தங்கப்பதக்கம் வென்றார். இப்போட்டியில் இந்தியாவுக்குக் கிடைத்த முதல் தங்கம் இதுவாகும்.

பதக்கப்பட்டியலில் தற்போதைய நிலையில் இந்தியா 1 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் என 4 பதக்கங்களுடன் 15–ஆவது இடத்தில் உள்ளது.

---

**1. எந்த மாநிலத்தின் முதலமைச்சராக பகவந்த் மான் பதவியேற்றார்?**

அ) கோவா

**ஆ) பஞ்சாப் ☑**

இ) மணிப்பூர்

ஈ) இராஜஸ்தான்



✓ பஞ்சாப் மாநிலத்தின் 18ஆம் முதலமைச்சராக ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் பகவந்த் மான் சமீபத்தில் சண்டிகரில் உள்ள மாநில சிவில் செயலகத்தில் பதவியேற்றார். அவர் பஞ்சாபின் 18ஆவது முதலமைச்சராக, சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங்கின் பூர்வீக கிராமமான நவன்ஷஹரில் உள்ள கஹ்தர் கலனில் பதவியேற்றார்.

---

**2. 2022இல் 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்தும் இந்திய நகரம் எது?**

அ) ஹைதராபாத்

**ஆ) சென்னை ☑**

இ) புது தில்லி

ஈ) கொல்கத்தா



✓ 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் இந்த ஆண்டு இறுதியில் சென்னையில் நடக்கவுள்ளது. 190 நாடுகளைச் சேர்ந்த அணிகள் போட்டியிடும் ஈராண்டுக்கொருமுறை நடக்கும் ஒரு நிகழ்வாகும் இது. கடந்த 2013ஆம் ஆண்டு உலக சாம்பியன்ஷிப் போட்டிக்குப்பிறகு இந்தியாவில் நடக்கும் இரண்டாவது மிகப்பெரிய உலகளாவிய விளையாட்டுப் போட்டி இதுவாகும். இந்த நிகழ்வு, முன்னர் ரஷ்யாவில் நடத்த திட்டமிடப்பட்டது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரைத் தொடர்ந்து அது சென்னைக்கு மாற்றப்பட்டது.

---

**3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'சக்ஷம்' என்பது எந்த ஆயுதப்படையின் கடற்புற ரோந்துக் கப்பலாகும்?**

அ) இந்திய கடற்படை

ஆ) இந்திய இராணுவம்

**இ) இந்திய கடலோரக் காவல்படை ☑**

ஈ) இந்திய வான்படை

✓ இந்திய கடலோர காவல்படையானது 105 எம்–வகுப்பு கடற்புற ரோந்துக் கப்பல்களின் வரிசையில் ஐந்தாவது கடலோர காவல்படை கப்பலான ICGS 'சக்ஷம்'ஐ பணியில் இணைத்துக் கொண்டுள்ளது. ஐந்தாவது மற்றும் கடைசி கடற்புற ரோந்துக் கப்பலாக ICGS 'சக்ஷம்' கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தால் வடிவமைத்து உருவாக்கப்பட்டது.

---

**4. எந்த மாநிலத்தின் முதலமைச்சராக N பைரன் சிங் பதவியேற்றார்?**

அ) கோவா

**ஆ) மணிப்பூர் ☑**

இ) பஞ்சாப்

ஈ) சத்தீஸ்கர்



✓ N பைரன் சிங் தொடர்ந்து இரண்டாவது முறையாக மணிப்பூர் முதலமைச்சராக பதவியேற்றுள்ளார். மணிப்பூர் மாநில ஆளுநர் இல கணேசன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். சமீபத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலில், 60 உறுப்பினர்களில், பாரதிய ஜனதா கட்சி 32 இடங்களில் வெற்றிபெற்று அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றது.

---


**5. 'உலக கவிதை நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) மார்ச்.18

**ஆ) மார்ச்.21 ☑**

இ) மார்ச்.23

ஈ) மார்ச்.25




✓ உலக கவிதை நாளானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.21 அன்று அனுசரிக்கப்படுகிறது. 1999ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற UNESCOஇன் (ஐநா கல்வி அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு) 30ஆவது மாநாட்டில் முதன்முதலாக இந்த நாள் கொண்டாடப்பட்டது.

✓ உலக கவிதை நாளானது மொழியியலை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கவிதை வெளிப்பாடுமூலம் பன்முகத்தன்மை மற்றும் அழிந்துவரும் மொழிகளைக் காக்க வாய்ப்பு அதிகரிக்கும்.

---

**6. 'தேசிய AIDS மற்றும் STD கட்டுப்பாடுத் திட்டமானது' எவ்வகை திட்டத்தின்கீழ் வருகிறது?**

அ) முதன்மை திட்டம்

**ஆ) மத்திய துறை திட்டம் ☑**

இ) மத்திய அரசு ஆதரவு திட்டம்

ஈ) முதன்மை திட்டத்தின் மையக்கரு

✓ ஏப்.1 முதல் மார்ச்.31, 2026 வரை தேசிய AIDS மற்றும் STD கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தொடருவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது இந்திய அரசாங்கத்தால் முழுமையாக நிதியளிக்கப்பட்ட மத்திய துறைத் திட்டமாகும். இத்திட்டத்தின் கட்டம் V, ₹15471.94 கோடி செலவில் நீட்டிக்கப்பட்டுள்ளது. தேசிய AIDS மீட்புக் குழு, 1992இல் இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது.

---

**7. 2030'க்குள் அனைவருக்கும் பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதாரத்தை உறுதிசெய்வதற்கு எண்ணும் நிலையான வளர்ச்சி இலக்கு (SDG) எது?**

அ) முதலாவது

ஆ) மூன்றாவது

**இ) ஆறாவது ☑**

ஈ) எட்டாவது




✓ நீரின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தண்ணீரைப் பாதுகாக்க மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவுமாக மார்ச்.22 அன்று உலக நீர் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. 2030ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதாரத்தை உறுதிசெய்யும் ஐநாஇன் நிலையான வளர்ச்சி இலக்கு – 6ஐ அடைய உதவுவதே உலக நீர் நாளின் நோக்கமாகும்.

- "Groundwater, Making the Invisible Visible – நிலத்தடி நீர், தெரியாததை தெரிய வைத்தல்" என்பது இந்த ஆண்டு (2022) உலக நீர் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**8. 'ஜோதி சஞ்சீவினி' என்ற திட்டத்தைச் செயல்படுத்துகிற இந்திய மாநிலம் எது?**

அ) கேரளா



**ஆ) கர்நாடகா ☑**

இ) தெலுங்கானா

ஈ) ஒடிஸா

- கர்நாடக மாநில அரசு 'ஜோதி சஞ்சீவினி' திட்டத்தைச் செயல்படுத்துகிறது. இது விலையில்லா திட்டமாகும்; இது தீவிர நோய்களுக்கான சேவைசெய்யும் அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.
- கர்நாடக மாநில அரசு ஓய்வூதியர்களை, சோதி சஞ்சீவினி திட்டத்தின்கீழ் கொண்டு வர முடியுமா என்பதை அரசு பரிசீலனை செய்யும் என்று முதல்வர் பசவராஜ் பொம்மை அண்மையில் சட்டப்பேரவையில் உறுதியளித்தார்.

---

**9. 'உலக தூக்க நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) மார்ச்.12



ஆ) மார்ச்.14

இ) மார்ச்.16

**ஈ) மார்ச்.18 ☑**

- உடல் மற்றும் மனதுக்கு தரமான உறக்கத்தின் முக்கியத் –துவத்தை எடுத்துரைப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாத சம இரவு பகல் நாளுக்கு முந்தைய வெள்ளிக் கிழமையில், 'உலக உறக்க நாள்' அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு (2022) உலக தூக்க நாள், மார்ச்.18 அன்று வருகிறது. "*Quality Sleep, Sound Mind, Happy World*" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கா –னக் கருப்பொருளாகும். இந்நாள் உலக உறக்க சங்கத் –தால் ஏற்பாடு செய்யப்பட்டு, முதன்முதலாக கடந்த 2008 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.

---

**10.** **2022 – M3M ஹூரூன் உலகளாவிய செல்வந்தர்கள் பட்டியலில், முதல் 10இல் இடம்பெற்ற ஒரே இந்தியர் யார்?**

அ) கௌதம் அதானி



**ஆ) முகேஷ் அம்பானி ☑**

இ) சைரஸ் பூனவல்லா

ஈ) ரத்தன் டாடா

- புகழ்பெற்ற ஆராய்ச்சி மற்றும் செல்வந்த நிலை பதிப்பகக் குழுமமான ஹூரூன் இந்தியா, 2022ஆம் ஆண்டுக்கான உலகளாவிய செல்வந்தர்கள் பட்டியலை, M3M நிறுவனத் –துடன் இணைந்து வெளியிட்டது.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி 'இந்தியா மற்றும் ஆசியாவின் செல்வந்தர்' பட்டத்தைப் பெற்றார். $103 பில்லியன் நிகர மதிப்புடன் 2022 – M3M ஹூரூன் உலகளாவிய செல்வந்தர்கள் பட்டியலின் முதல் 10இல் இடம்பெற்ற ஒரே இந்தியராகவும் அவர் ஆனார். அவர், 'கோடீசுவர தொலைத்தொடர்பு தொழிலதிபர்' என்ற பட்டத்தையும் வென்றார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உடனடி கவனம் தேவை! | காற்றின் தரம் குறித்த தலையங்கம்**

மனித இனம் உயிர் வாழ்வதற்குத் தேவையானவற்றில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் காற்றின் தரம் தொடர்ந்து மாசடைந்து வருவதை ஆண்டுதோறும் வெளியிடப்படும் ஆய்வறிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. 2021–ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஆய்வறிக்கையில், காற்று மிகவும் மாசடைந்த 100 நாடுகளின் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த 63 நகரங்கள் இடம் பெற்றுள்ளது அதிர்ச்சியளிக்கிறது. உலக நாடுகளில் மிகவும் மாசுபட்ட தலைநகரங்களின் வரிசையில் புதுதில்லி தொடர்ந்து நான்காவது ஆண்டாக முதலிடத்திலேயே உள்ளது என்பதையும் அந்த ஆய்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த "ஐக்யூ ஏர்" என்ற அமைப்பு உலகளாவிய காற்றின் தரம் குறித்த இந்த ஆய்வறிக்கையை வெளியிட்டது. 117 நாடுகளில் உள்ள 61,475 நகரங்களில் காற்றின் தரம் குறித்து மிக விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

உலகம் முழுவதும் காற்றின் தரத்தை ஆய்வு செய்யும் அரசு அமைப்புகள், அரசு சாரா நிறுவனங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், கல்விக்கூடங்கள், தனிநபர்கள் திரட்டிய தகவல்கள் மூலம் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது.

உலகில் மிகவும் மாசடைந்த நகரங்களின் பட்டியலில் ராஜஸ்தானின் பிவாடி முதலிடத்திலும், உத்தர பிரதேசத்தின் காஜியாபாத் இரண்டாவது இடத்திலும் உள்ளன. உத்தர பிரதேசத் தலைநகர் லக்னௌ, அந்த மாநிலத்தின் கான்பூர், மீரட், ஆக்ரா, வராணசி, நொய்டா உள்ளிட்ட 14 நகரங்கள் மிகவும் மாசடைந்த 100 நகரங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. இதன்மூலம், உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள நகரங்களில் காற்றின் தரம் எந்த அளவுக்கு மோசமாக உள்ளது என்பதையும், இதுவிஷயத்தில் மாநில அரசு தீவிரமாகக் கவனம் செலுத்தவில்லை என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

காற்றின் தரம் பிஎம் 2.5 என்ற அளவுக்குள் இருக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பு நிர்ணயித்து உள்ளது. ஆனால், இந்த 14 நகரங்களில் நிர்ணய அளவைவிட 10–15 மடங்கு அதிகமாக காற்று மாசடைந்து உள்ளது. எனினும், உலக சுகாதார அமைப்பு நிர்ணயித்து உள்ள இந்த அளவீட்டுக்குள் உலகின் எவ்வொரு நகரமும் இல்லை என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் நாம் ஓரளவு திருப்திபட்டுக் கொள்ளலாம்.

கடந்த 2020–ஆம் ஆண்டில் கரோனா தீநுண்மிப் பரவல் காரணமாக பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டதால், உலகின் பல நகரங்களில் காற்றின் தரம் சற்று மேம்பட்ட போதிலும் அது தொடர்ந்து நீடிக்கவில்லை. உலக அளவில்

தற்போது சுகாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாகத் திகழ்வது காற்று மாசுதான். காற்று மாசால் நுரையீரல் கோளாறுகள், காசநோய், புற்றுநோய் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்டு, உலகம் முழுவதும் ஆண்டுதோறும் சுமார் 70 லட்சம் பேர் மரணமடைகின்றனர்.

அவ்வப்போது எழுந்து அடங்கும் தீநுண்மிகளால் ஏற்படக்கூடிய உயிரிழப்புகளைவிட, காற்று மாசால் இறப்பவர்களின் எண்ணிக்கை மிக அதிகம் என்பதை நாம் கவனத்தில் கொண்டாக வேண்டும். மேலும், காற்று மாசு, உலகின் ஒட்டுமொத்த உற்பத்தி வளர்ச்சி விகிதத்தில் ₹60,000 கோடி அளவுக்கு பொருளாதாரப் பாதிப்பையும் ஏற்படுத்துகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், வாகனங்கள், மின்சார ஜெனரேட்டர்கள், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை, சமையலுக்காக விறகுகளை எரிப்பது, புதிய கட்டுமானப் பகுதிகளிலிருந்து கிளம்பும் தூசு, பயிர் கழிவுகளை எரித்தல் போன்றவற்றால் காற்று பெரிதும் மாசடைகிறது.

சுற்றுச்சூழலுக்கும் மக்களின் உடல்நலத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ள காற்று மாசைக் குறைக்க மத்திய – மாநில அரசுகள் உடனடியாக உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம். தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை, கட்டுமானத் தூசு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய திட்டங்களை வகுத்து, அவற்றை முறையாகச் செயல்படுத்துவதில் அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

அதோடு, பேட்டரியால் இயங்கும் மின் வாகனங்களை மக்கள் அதிகளவில் பயன்படுத்துவதற்கு அரசு ஊக்கமளிக்க வேண்டும். இத்தகைய வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்க அரசு மானிய உதவியும் அளிக்கலாம். மிக முக்கியமாக, பொதுப் போக்குவரத்தை மக்கள் அதிகளவில் பயன்படுத்தும் விதத்தில் அதை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதேபோல, அடர்ந்த வனப்பகுதிகளில் ஏற்படும் திடீர் தீயைக் கட்டுப்படுத்த நவீன உத்திகளைக் கண்டறிந்து, அவற்றை உலக நாடுகள் செயல்படுத்த முன்வர வேண்டும். வேளாண்மைக் கழிவுகள், குப்பைகள் எரிக்கப்படுவதைக் கட்டுப்படுத்தவும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

உலகம் முழுவதும் காற்றின் தரத்தைக் கண்காணிக்கும் ஆய்வு நிலையங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். திடீரென தலைதூக்கும் பல்வேறு வகையான தீநுண்மிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் உலக நாடுகள் ஏற்கெனவே தத்தளித்து வருகின்றன.

ஆனால், கண்ணுக்குப் புலப்படாத இத்தகைய தீநுண்மிக –ளால் ஏற்படக்கூடிய ஆபத்தைவிட, காற்று மாசால் மனிதகுலம் பேராபத்தை எதிர்கொண்டு வருகிறது என்பதை உணர்ந்து அரசுகள் ஒருங்கிணைந்த நடவடிக்கைளை எடுக்க வேண்டும்.

காற்று மாசைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் ஆக்கபூர்வ நடவடிக்கைளை எடுத்தால் மட்டுமே, நமது வருங்கால சந்ததியினர் நோய்களின்றி நிம்மதியாக வாழ முடியும். இது விஷயத்தில் நமது மத்திய – மாநில அரசுகளும் உடனடியாக கவனஞ்செலுத்தி உரிய நடவடிக்கைகளை எடுத்தால்தான் தூய காற்றை நம்மால் சுவாசிக்க முடியும்!

**1. பார்முலா-1இன் அதிகாரப்பூர்வ ஒளிபரப்பாளராகவுள்ள இந்திய தொலைத்தொடர்பு நிறுவனம் எது?**

அ) ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்

**ஆ) TATA கம்யூனிகேஷன் ☑**

இ) பார்தி ஏர்டெல்

ஈ) BSNL

✓ மும்பையைச் சார்ந்த டாடா கம்யூனிகேஷன்சும் பார்முலா -1உம் பல்லாண்டுகால உத்திசார் கூட்டாண்மையை அறிவித்துள்ளன. இதன்மூலம், டாடா கம்யூனிகேஷன்ஸ் பார்முலா-1இன் அதிகாரப்பூர்வ ஒளிபரப்பு இணைப்பு வழங்குநராகும்.

✓ இதன்மூலம் F1-ஐ உலக அளவில் 500 மில்லியனுக்கும் அதிகமான ரசிகர்களுக்கு ஒளிபரப்ப இயலும்.

---

**2. எட்டிகோப்பகா பொம்மைகளுடன், "ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு" என்ற கருத்தைச் செயல்படுத்திய முதல் இரயில் நிலையம் எது?**

அ) மைசூரு



**ஆ) விசாகப்பட்டினம் ☑**

இ) ஹைதராபாத்

ஈ) கொச்சின்

✓ கிழைக்கடற்கரை இரயில்வேயில், விசாகப்பட்டினம் ரயில் நிலையம், "ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு" என்ற கருத்தை செயல்படுத்தும் முதல் இரயில் நிலையம் ஆனது.

✓ இதற்கான கருத்தாக்கம் சமீபத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப் -பட்டிருந்தது. எட்டிகோப்பகா பொம்மைகள் மற்றும் கை வினைப் பொருட்கள் விசாகப்பட்டின ரயில் நிலையத்தில் 15 நாட்களுக்கு சோதனை அடிப்படையில் காட்சிப்படுத்தப் -பட்டு விற்பனை செய்யப்படும்.

---

**3. 'டோல் உத்சவம்' கொண்டாடப்படுகிற மாநிலம் எது?**

அ) மத்திய பிரதேசம்



ஆ) ஹரியானா

**இ) மேற்கு வங்கம் ☑**

ஈ) இராஜஸ்தான்

✓ மேற்கு வங்க மக்கள் வண்ணங்களின் திருவிழாவைக் 'டோல் உத்சவம்' என்ற பெயரில் கொண்டாடுகிறார்கள். இக்கலாசார திருவிழா வசந்தகாலத்தின் தொடக்கத்தை குறிக்கிறது. இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில், வசந்த விழா 'டோல் உத்சவம்', 'டோல் யாத்ரா', 'டோல் பூர்ணிமா' மற்றும் 'வசந்தா உத்சவம்' என்று கொண்டாடப்படுகிறது.

---

**4. 'ஆர்டெமிஸ்-1' என்பது எந்த விண்வெளி முகமையின் முதன்மைத் திட்டமாகும்?**

அ) இஸ்ரோ

**ஆ) NASA ☑**

இ) ESA

ஈ) JAXA

✓ 'ஆர்டெமிஸ்' என்பது NASAஇன் முதன்மைத் திட்டமாகும். இது 2020-களின் இறுதிக்குள் நிலவில் நீண்ட கால, நிலையான மனித இருப்பை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. NASA சமீபத்தில் தனது 'ஆர்ட்டெமிஸ்-1' நிலவுப் பயணத்தை கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து சோதித்தது.

---

**5. 'Ex-DUSTLIK' என்பது இந்தியாவிற்கும் பின்வரும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெறும் ஒரு கூட்டு பாதுகாப்புப் பயிற்சியாகும்?**

அ) இலங்கை



ஆ) பிரான்ஸ்

**இ) உஸ்பெகிஸ்தான் ☑**

ஈ) ஓமன்

✓ 'Ex-DUSTLIK' எனப் பெயரிடப்பட்ட இந்தியா மற்றும் உஸ்பெகிஸ்தானின் படைகளுக்கு இடையிலான கூட்டுப் பயிற்சியின் மூன்றாவது பதிப்பு உஸ்பெகிஸ்தானின் யாங்கியாரிக்கில் தொடங்கியது.

✓ இந்தியாவை அதன் கிரெனேடியர்ஸ் படையணிப்பிரிவும் உஸ்பெகிஸ்தானை அதன் வடமேற்கு இராணுவ துருப்புகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

✓ DUSTLIK-இன் இதற்கு முந்தைய பதிப்பு உத்தரகாண்டின் இராணிகேட்டில் நடைபெற்றது.

---

**6. 2022 – 'பீகார் திவாஸி'ன் கருப்பொருள் என்ன?**

**அ) ஜல் ஜீவன் ஹரியாலி ☑**



ஆ) ஸ்வச் பீகார்

இ) பீகார் பேட்டி பதாவோ

ஈ) ஜல் சக்தி

✓ பீகார் அதன் 110ஆவது உதய நாளை மார்ச்.22 அன்று கொண்டாடியது. கடந்த 1912ஆம் ஆண்டு இதே நாளில் வங்காள மாகாணத்திலிருந்து பீகார் பிரிக்கப்பட்டது. இந்த ஆண்டு பீகார் திவாஸின் கருப்பொருள், 'ஜல் ஜீவன் ஹரியாலி' என்பதாகும்.

---

**7. பிப்லோபி பாரத் காட்சியகம் சமீபத்தில் எந்த நகரத்தில் திறக்கப்பட்டது?**

அ) புவனேஷ்வர்



**ஆ) கொல்கத்தா ☑**

இ) கௌகாத்தி

ஈ) சிம்லா

✓ கொல்கத்தாவின் விக்டோரியா நினைவரங்கில் உள்ள பிப்லோபி பாரத் காட்சிக்கூடத்தை பிரதமர் நரேந்திர மோடி காணொலிக்காட்சிமூலம், 'ஷாஹீத் திவாஸ்' என்ற விழாவில் திறந்து வைத்தார்.

✓ விடுதலைப்போராட்டத்தில் புரட்சியாளர்களின் பங்களிப் -பையும் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக்கு அவர்களின் எதிர்ப்பையும் இந்தக் காட்சிக்கூடம் காட்சிப்படுத்துகிறது.

---

**8.** "Step–Up to End TB – உலக காசநோய் நாள் உச்சி மாநாடு – 2022" ஏற்பாடு செய்யப்பட்ட நகரம் எது?

**அ) புது தில்லி ☑**



ஆ) மும்பை

இ) கொச்சி

ஈ) சென்னை

✓ மத்திய சுகாதார அமைச்சர் Dr மன்சுக் மாண்டவியா, புது தில்லியில் உலக காசநோய் நாளையொட்டி, "Step–Up to End TB – உலக காசநோய் நாள் உச்சிமாநாட்டை" தொடங்கி வைத்தார். கடந்த 2018ஆம் ஆண்டில், பிரதமர் மோடி தில்லி காசநோய் ஒழிப்பு உச்சிமாநாட்டிற்குத் தலைமை தாங்கினார் மற்றும் 2030ஆம் ஆண்டின் காசநோய் தொடர்பான SDG இலக்கிற்கு 5 ஆண்டுகட்கு முன்னதாக, 2025ஆம் ஆண்டளவில் இந்தியாவில் காச நோயை முடிவுக்குக் கொண்டுவர அவர் முன்மொழிந்தார்.

---

**9.** BRICS தடுப்பூசி R மற்றும் D மையம் மற்றும் தடுப்பூசி கூட்டாண்மை குறித்த பயிலரங்கைத் தொடங்கியுள்ள நாடு எது?

**அ) இந்தியா ☑**



ஆ) பிரேசில்

இ) சீனா

ஈ) ரஷ்யா

✓ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் Dr மன்சுக் மாண்டவியா, BRICS தடுப்பூசி R&D மையம் மற்றும் பிற BRICS (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா) தலைவர்களுடன் இணைந்து தடுப்பூசி கூட்டாண்மை குறித்த பயிலரங்கைத் தொடங்கி வைத்தார். இந்த மையம், கடந்த 2018 ஜோகன்னஸ்பர்க் பேரறிவிப்பின் ஒருபகுதியாக அமைக்க திட்டமிடப்பட்டது.

---

**10.** 2022 – இந்தியா–ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாடு நடைபெற்ற இடம் எது?

அ) டோக்கியோ

**ஆ) புது தில்லி ☑**



இ) சென்னை

ஈ) ஒசாகா

✓ இந்தியா–ஜப்பான் வருடாந்திர உச்சிமாநாடு 2022–இன் போது புதுதில்லியில் பிரதமர் மோடியும் ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவும் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தச் சந்திப்புக்குப் பிறகு, ஜப்பான் இந்தியாவில் 5 டிரில்லியன் யென் அல்லது ₹3.2 இலட்சம் கோடி முதலீடு செய்ய உள்ளதாக இந்தியப் பிரதமர் அறிவித்தார்.

✓ ஜப்பானிய அரசாங்கத்தின் தலைவராக ஜப்பான் பிரதமர் இந்தியா வருவது இது முதல் முறையாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பிரதமரின் ஏழைகள் நலன் உணவுத் திட்டத்தை (PM–GKAY) மேலும் ஆறு மாதங்களுக்கு (ஏப்ரல்–செப்டம்பர், 2022) நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, பிரதமரின் கரிப் கல்யாண் அன்ன யோஜனா (PM–GKAY) திட்டத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்துள்ளது. செப்டம்பர் 2022 (கட்டம் VI).

உலகின் மிகப்பெரிய உணவுப்பாதுகாப்புத் திட்டமாக பிரதமரின் ஏழைகள் நலன் உணவுத் (PM–GKAY) திட்டம் கடந்த 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ₹3.40 லட்சம் கோடி செலவா–கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நாடு முழுவதும் இந்தத் திட்டத்தின்கீழ் 80 கோடி பேர் பயன்பெறுவர். இதற்கான முழு நிதியையும் மத்திய அரசே வழங்கும்.

நீட்டிக்கப்பட்ட பிரதமரின் ஏழைகள் நலன் உணவுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பயனாளியும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவு தானியங்களுடன் கூடுதலாக நபர் ஒருவருக்கு மாதம் 5 கிலோ இலவச உணவு தானியம் வழங்கப்படும்.

---

**2. உலக பாரம்பரிய மருத்துவ மையம் அமைப்பதற்கான உடன்படிக்கையில் மத்திய ஆயுஷ் அமைச்சகம் மற்றும் உலக சுகாதார அமைப்பு கையெழுத்து**

குஜராத்தின் ஜாம்நகரில் உலக சுகாதார அமைப்பின் உலக பாரம்பரிய மருத்துவ மையம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் உலக சுகாதார அமைப்புடன் மையத்தின் தாயகமான இந்தியாவின் ஆயுஷ் அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது. இதன் இடைக்கால அலுவலகம் குஜராத்தின் ஆயுர்வேத ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இயங்கும். மத்திய அரசின் 250 மில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டுடன் இந்த மையம் செயல்படும்.

உலக மக்களின் ஒட்டுமொத்த நலனை முன்னேற்றுவதற்–கான, உலகம் முழுவதும் உள்ள பாரம்பரிய மருத்துவ வளத்தை நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மூலமாக மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

---

**3. தேசிய ஓட்டப்பந்தய சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய ரயில்வேயின் மகளிர் அணி தங்கம் வென்றது**

நாகாலாந்து தலைநகர் கோகிமாவில் நடைபெற்ற 56ஆவது தேசிய ஓட்டப்பந்தய சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் பிரிவில் இந்திய ரயில்வே அணி தங்கம் வென்றது. இரயில்வே விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சேர்ந்த வர்ஷா தேவி, மஞ்சு யாதவ், பிரினு யாதவ், மன்னி தேவி ஆகியோரைக் கொண்ட குழு போட்டியில் இந்தப் பதக்கத்தை வென்றது,

ஆடவர் பிரிவில் இந்திய இரயில்வே அணியின் நரேந்திர பிரதாப், தினேஷ், வீரேந்திர குமார் பால், ஹர்ஷத் மாத்ரே ஆகியோரைக் கொண்ட குழு வெள்ளி வென்றது.

நாட்டில் மிகப்பெரிய விளையாட்டுப் பணியாளர்களை கொண்ட துறையாக இந்திய இரயில்வே உள்ளது. நாட்டின் விளையாட்டுப் பிரிவில் அளவில்லா பங்களிப்பை அது வழங்கியுள்ளது. டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் இந்தியா வென்ற 7 பதக்கங்களில் 4 பதக்கங்களை வென்றவர்கள் இந்திய இரயில்வேயைச் சேர்ந்தவர்கள்.

---

**4. சென்ட்ரல் இரயில் நிலையத்தில் காஞ்சிபுரம் பட்டுப் புடவை அரங்கு**

தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் சார்பில், 'ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு திட்டத்தின்' கீழ், சென்ட்ரல் ரயில் நிலையத்தில் காஞ்சிபுரம் பட்டுப்புடவைகளின் விற்பனை அரங்கு திறக்கப்பட்டது.

---

**5. இதயநோயால் 28% உயிரிழப்பு**

நாட்டில் கடந்த 2016–இல் பதிவான மொத்த உயிரிழப்புக –ளில் 28 சதவீதம் இதயம் தொடர்புடைய நோய்களால் ஏற்பட்டவை என மக்களவையில் சுகாதாரத்துறை இணையமைச்சர் பாரதி பிரவீண் பவார் தெரிவித்தார்.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் வெளியிட்ட ஆய்வு முடிவின்படி, கடந்த 2016–இல் பதிவான உயிரிழப்புகளில் 28.1% இதயநோயால் பதிவானவை என்பது தெரியவந்து உள்ளது. இதுவே கடந்த 1990–இல் 15.2 சதவீதமாக இருந்தது. இதேபோல, நாட்டில் பதிவான உயிரிழப்புகளில் 63% தொற்றாநோய்களின் காரணமாக ஏற்பட்டவை என அதில் இணையமைச்சர் பாரதி பவார் தெரிவித்துள்ளார்.

---

**6. NITI ஆயோக்கின் ஏற்றுமதி தயார்நிலைக்குறியீடு: குஜராத் 2ஆம் ஆண்டாக முதலிடம்; தமிழகம் 4ஆம் இடம்**

NITI ஆயோக்கின் ஏற்றுமதி தயார்நிலை குறியீடு 2021–இல் குஜராத் தொடர்ந்து 2ஆவது ஆண்டாக முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாநிலங்களின் ஏற்றுமதிக்கான திறன் மற்றும் செயல்பாடுகள் எந்த அளவுக்கு தயார்நிலையில் உள்ளது என்பதை சுட்டிக்காட்டுவதை அடிப்படையாகக் கொண்டு NITI ஆயோக் ஏற்றுமதி தயார்நிலைப்பட்டியல் வெளியிடப்படுகிறது.

2021–க்கான இப்பட்டியலில் குஜராத் தொடர்ந்து 2ஆவது ஆண்டாக முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, மகாராஷ்டிரம், கர்நாடகம், தமிழகம், ஹரியானா, உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பஞ்சாப், ஆந்திரபிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

லட்சத்தீவு, அருணாசல பிரதேசம், மிசோரம், லடாக் மற்றும் மேகாலயா ஆகியவை ஏற்றுமதி தயார்நிலை பட்டியல்–2021–இல் கடைசி நிலைகளில் இடம்பெற்றுள்ளன. மொத்த ஏற்றுமதியில் 70% பங்களிப்பில் மகாராஷ்டிரம், குஜராத், கர்நாடகம், தமிழகம் மற்றும் தெலங்கானா ஆகிய 5 மாநிலங்கள் ஆதிக்கம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**1.** 2022 – பிரிட்ஸ்கர் பரிசை வென்றவர் யார்?

**அ) டிபெடோ பிரான்சிஸ் கெரே ☑**



ஆ) அன்னே லாகடன்

இ) ஜீன் பிலிப் வாசல்

ஈ) அரத இசோசாகி

✓ பிரிட்ஸ்கர் பரிசை வழங்கும் ஹயாத் அறக்கட்டளை, நடப்பு 2022ஆம் ஆண்டுக்கான பரிசின் வெற்றியாளராக டிபெடோ பிரான்சிஸ் கெரேவை அறிவித்துள்ளது.

✓ இது கட்டடக்கலைக்கான உலகின் மிக முக்கியமான விருதாக பார்க்கப்படுகிறது. புர்கினா பாசோவில் பிறந்த டிபெடோ பிரான்சிஸ் கெரே, 'பிரிட்ஸ்கர்' பரிசைப் பெற்ற முதல் ஆப்பிரிக்க கட்டடக் கலைஞராவார்.

---

**2.** 2022 – உலக மகிழ்ச்சி அறிக்கையில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 123

136

**ஆ) 136 ☑**

இ) 141

ஈ) 146

✓ 2022 – ஐநா உலக மகிழ்ச்சி அறிக்கையில், இந்தியா 136ஆவது இடத்தில் உள்ளது. இது பட்டியலின் இறுதியில் இருந்து பத்தாவது இடமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் பன்னாட்டு மகிழ்ச்சி நாளை முன்னிட்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 146 நாடுகள்கொண்ட இப்பட்டியலி –ல் பின்லாந்து தொடர்ந்து 5ஆம் ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.

---

**3.** உலகளாவிய கோதுமை உற்பத்தியில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) முதலாவது

2

**ஆ) இரண்டாவது ☑**

இ) மூன்றாவது

ஈ) நான்காவது

✓ கோதுமை உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய நாடாக இந்தியா உள்ளது. இந்த நிதியாண்டில் இந்தியா 7 மில்லியன் டன் கோதுமையை ஏற்றுமதி செய்து சாதிக்கவுள்ளது.

✓ மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின்படி, உலகளாவிய விலைகளி –ன் ஏற்றம் சந்தைப் பங்கைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. பிப்ரவரி மாத இறுதிவரை, இந்தியா 6.6 மில்லியன் டன் கோதுமையை ஏற்றுமதி செய்துள்ளது.

---

**4.** 'கின்சல் – Kinzhal' என்னும் மீவுயர் அதிர்வெண் கொண்ட எறிகணை சார்ந்த நாடு எது?

அ) உக்ரைன்



**ஆ) ரஷ்யா ☑**

இ) அமெரிக்கா

ஈ) வட கொரியா

✓ மேற்கு உக்ரைனில் உள்ள ஒரு பெரிய நிலத்தடி ஆயுதக் கிடங்கை ரஷ்ய ராணுவம் மீவுயர் அதிர்வெண்கொண்ட எறிகணையை ஏவி அழித்ததாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. 'கின்சல்' அல்லது 'டேகர்' என்றழைக்கப்படும் இந்த எறிகணை இப்போரில் முதல் முறையாக ரஷ்யாவால் பயன்படுத்தப்பட்டது.

---

**5.** கார்பன்–நடுநிலை வேளாண் முறைகளை அறிமுகம் செய்த முதல் இந்திய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



**ஆ) கேரளா ☑**

இ) பஞ்சாப்

ஈ) இராஜஸ்தான்

✓ தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் கரிம–நடுநிலை உழவு முறைகளை அறிமுகப்படுத்திய நாட்டின் முதல் மாநிலமாக கேரளா மாறவுள்ளது. இந்தத் திட்டத்திற்காக மாநில அரசு 2022–23 பட்ஜெட்டில் ₹6 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. முதற்கட்டமாக 13 பண்ணைகளில் இந்த கரிம–நடுநிலை வேளாண் முறை செயல்படுத்தப்படும்.

---

**6.** தேசிய இ–விதான் செயலியை (NeVA) செயல்படுத்திய நாட்டின் முதல் மாநில சட்டமன்றம் எது?

அ) தமிழ்நாடு

National eVidhan Application
Digital Legislatures
One Nation One Application

**ஆ) நாகாலாந்து ☑**

இ) மேற்கு வங்காளம்

ஈ) தெலுங்கானா

✓ தேசிய இ–விதான் செயலி திட்டத்தைச் செயல்படுத்தும் நாட்டின் முதல் மாநில சட்டமன்றம் நாகாலாந்து ஆகும்.

✓ 60 உறுப்பினர்கள் கொண்ட இந்தச் சட்டசபையில் உள்ள ஒவ்வொரு மேசையிலும் ஒரு டேப்லெட் அல்லது மின் நூல் இடம்பெற்றிருக்கும். மத்திய நாடாளுமன்ற விவகார அமைச்சகத்தின் மேற்பார்வையில், 'NeV' செயல்படுகிறது.

---

**7.** சொஜிலா கணவாயானது, பின்வரும் எந்த மாநிலம் / UT–ஐ நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கிறது?

அ) ஹிமாச்சல பிரதேசம்



**ஆ) லடாக் ☑**

இ) சிக்கிம்

ஈ) அஸ்ஸாம்

✓ சொஜிலா கணவாயானது ஸ்ரீநகர்–கார்கில்–லே சாலையி –ல் காஷ்மீர் பள்ளத்தாக்கிற்கும் லடாக்கிற்கும் இடையே இணைப்பை வழங்குகிறது. இது லடாக்கை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கிறது.

✓ எல்லைப்புற சாலைகள் அமைப்பால் (BRO) இக்கணவாய் திறக்கப்பட்டுள்ளது. இக்கணவாய் 11,650 அடி உயரத்தில் அமைந்துள்ளது. பொதுவாக ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாத இறுதியில் மூடப்பட்டு அடுத்த ஆண்டு ஏப்ரல் நடுப் பகுதியில் இக்கணவாய் திறக்கப்படுகிறது.

---

**8.** 'சுஜலாம் 2.0' பரப்புரையின் முக்கிய நோக்கம் என்ன?



அ) நிலத்தடி நீர் பாதுகாப்பு

**ஆ) கழிவுநீர் மேலாண்மை ☑**

இ) மழைநீர் மேலாண்மை

ஈ) வெள்ளநீர் மேலாண்மை

✓ கழிவுநீர் மேலாண்மைக்கான 'சுஜலாம் 2.0' பரப்புரையை மத்திய ஜல்சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் தொடங்கிவைத்தார். இந்தாண்டு உலக நீர் நாளுக்கானக் கருப்பொருள், "நிலத்தடிநீர்: கண்ணுக்கு தெரியாததை காணச்செய்வது".

✓ மக்கள் பங்களிப்பின்மூலம் கழிவுநீர் மேலாண்மையை மேற்கொள்வதுதான் இப்பிரசாரத்தின் நோக்கம். இந்தப் பிரச்சாரம்மூலம் பொதுமக்கள், பஞ்சாயத்துக்கள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளை கழிவுநீர் மேலாண்மைக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

---

**9. வானிலிருந்து வான் இலக்கைத் தாக்கும் பிரம்மோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்த அமைப்பு எது?**




அ) ISRO

**ஆ) DRDO ☑**

இ) HAL

ஈ) BHEL

✓ அந்தமான் & நிக்கோபார் தீவுகளில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) வானில் இருந்து வான் இலக்கைத் தாக்கும் பிரம்மோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதனை செய்தது. நீட்டிக்கப்பட்ட ஏவுகணை அதன் இலக்கை துல்லியமாகத் தாக்கியது.

---

**10.** 2022இல், 'BIMSTEC உச்சிமாநாட்டை' நடத்தும் நாடு எது?

அ) இந்தியா

**ஆ) இலங்கை ☑**

இ) பாகிஸ்தான்

ஈ) வங்காளதேசம்

✓ வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவிற்கான முன்னெடுப்பு (BIMSTEC) உச்சிமாநாடு நடப்பாண்டில் இலங்கையால் நடத்தப்படுகிறது. BIMSTEC சாசனம் & போக்குவரத்து இணைப்புக்கான BIMSTEC மாஸ்டர் திட்டம் ஆகியவை இலங்கை உச்சிமாநாட்டின் போது கையெழுத்திடப்படவுள்ளன.

✓ BIMSTEC அமைப்பு 1997-இல் நிறுவப்பட்டது. மேலும் இது வாங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம், இலங்கை, மியான்மர் மற்றும் தாய்லாந்து ஆகிய ஏழு உறுப்பு நாடுகளை உள்ளடக்கியதாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியா-ஐக்கிய அரபு அமீரகம் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்: மே 1-இல் அமலாக வாய்ப்பு**

இந்தியா-ஐக்கிய அரபு அமீரகம் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நிகழாண்டு மே 1 முதல் அமலுக்கு வர வாய்ப்புள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் துபை எக்ஸ்போ கண்காட்சி நடைபெற்று வருகிறது. இந்தக் கண்காட்சியில் மத்திய அமைச்சா் பியூஷ் கோயல் கலந்துகொண்டு பேசியதாவது:

தற்போது இந்தியா-யுஏஇ இடையிலான வர்த்தகத்தின் மதிப்பு 60 பில்லியன் டாலர் (சுமார் ₹4.50 லட்சம் கோடி). இதனை அடுத்த 5 ஆண்டுகளில் 100 பில்லியன் டாலராக (சுமார் 7.60 லட்சம் கோடி) அதிகரிக்கும் நோக்கில், கடந்த பிப்ரவரி மாதம் இந்தியா, யுஏஇ இடையே விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் கையொப்பானது.

இந்த ஒப்பந்தம் தொடர்பான விரிவான தகவல்கள் பொது வெளியில் வெளியிடப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம் தொடர்பான ஆவணப் பணிகள், சுங்க அறிவிக்கைகளை விரைந்து முடிக்க முயற்சிக்கப்பட்டு வருகிறது.

இந்த ஒப்பந்தத்தை நிகழாண்டு மே 1 முதல் அமல்படுத்த முடியும் என்று நம்புகிறோம். இதன்மூலம் யுஏஇ சந்தைக்கு ஜவுளி, வேளாண்மை, ரத்தினம் மற்றும் ஆபரணங்கள் போன்ற துறைகளின் 6,090 சரக்குப் பொருள்களை வரிகளின்றி இந்திய வர்த்தகர் ஏற்றுமதி செய்யமுடியும்.

தற்போது இந்தியாவிலிருந்து 26 பில்லியன் டாலர் (சுமார் ₹2 லட்சம் கோடி) மதிப்பிலான சரக்குகள் யுஏஇக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நிலையில், சிஇபிஏ ஒப்பந்தம் அமலுக்கு வரும் நாளிலிருந்து யுஏஇக்கு ஏற்றுமதி செய்யப்படும் 90% சரக்குகளுக்கு முழுமையான வரிவிலக்குக் கிடைக்கும். எஞ்சிய 9.5% சரக்குகளுக்கு அடுத்த 5-10 ஆண்டுகளில் வரிவிலக்குக் கிடைக்கும்.

---

**2. சுவிஸ் ஓபன் பாட்மின்டன்: சிந்து 'சாம்பியன்'**

சுவிஸ் ஓபன் பாட்மின்டன் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சிந்து சாம்பியன் பட்டம் வென்றார்.

சுவிட்சர்லாந்தின் பசல் நகரில், சுவிஸ் ஓபன் 'சூப்பர் 300' பாட்மின்டன் தொடர் நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு பைனலில் இந்தியாவின் சிந்து, தாய்லாந்தின் புசானன் மோதினர். முதல் செட்டை 21-16 எனக் கைப்பற்றிய சிந்து, இரண்டாவது செட்டை 21-8 என வென்றார்.

மொத்தம் 49 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய சிந்து 21-16, 21-8 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, இத்தொடரில் முதன்முறையாக கோப்பை வென்றார்.

---

### 3. மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரண மாதிரிகளை தேர்வு செய்ய புதிய திட்டம்: நடப்பாண்டில் ₹9.50 கோடி நிதி ஒதுக்கீடு

மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்களின் மாதிரிகளை தேர்வு செய்ய புதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தைச் செயல்படுத்த நடப்பாண்டில் ₹9.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. தமிழகம் முழுவதும் 13 லட்சத்துக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் வசித்து வருகின்றனர். இவர்களில் உதவி உபகரணங்கள் தேவைப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஆண்டுதோறும் சக்கர நாற்காலி, மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் உள்ளிட்ட 24 வகையான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வழங்கப்படும் உதவி உபகரணங்கள் குறிப்பிட்ட மாதிரிகளில் மட்டுமே வடிவமைக்கப்பட்டிருக்கு –ம். இதனால், மாற்றுத்திறனாளிகள் குறிப்பிட்ட மாதிரியை –த்தான் பெறவேண்டிய நிலை உள்ளது. இவற்றுக்கு மாற்றாக, மாற்றுத்திறனாளிகள் மாதிரிகளை தேர்வு செய்ய புதிய திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதனடிப்படையில், தமிழகத்தில் மாற்றுத் திறனாளிகள் தேர்வு செய்யும் உபகரணங்களின் மாதிரிகளுக்கும் மானியம் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் முதல்கட்டமாக மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள், காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் ஆகிய ஐந்து வகையான உபகரணங்களை மாற்றுத்திறனாளிகள் தேர்வு செய்ய அனுமதியளிக்கப்பட் –டுள்ளது. இதன்மூலம், தாங்கள் விரும்பிய உபகரணங்களை தேர்வு செய்வதற்கான வாய்ப்பு மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்பட்டுள்ளது. நடப்பாண்டில் இந்த திட்டத்தை செயல்படுத்த ₹9.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

### 4. சமூக வலைதளங்களை கண்காணிக்க இஸ்ரேல் தொழில்நுட்பம்: தமிழக காவல் துறையின் சைபர் க்ரைம் பிரிவில் அறிமுகம்

தமிழக காவல் துறையின் சைபர் கிரைம் பிரிவில், சமூக வலைதளங்களைக் கண்காணிக்க இஸ்ரேல் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கொலை, கொள்ளை, கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைந்து வந்தாலும், வங்கி மோசடி, கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு மோசடிகள், போலி கணக்கு மூலம் மோசடி செய்தல், சமூக வலைதளங்களில் போலி செய்திகளைப் பரவவிடுதல், அவதூறு பரப்புதல், இணையதளம்மூலம் பெண்கள், குழந்தைகளை மன ரீதியில் துன்புறுத்துதல், ஆன்லைன் மோசடி, வன்முறையைத் தூண்டும் வகையில் கருத்துகளைப் பதிவிடுதல் உள்ளிட்ட சைபர் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

குறிப்பாக, 2020–ம் ஆண்டில்தமிழகத்தில் சைபர் குற்றங்கள்இரண்டு மடங்கு அதிகரித்திருப்பதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது. எனவே,சைபர் குற்றங்களைத் தடுக்கவும்,நடந்த குற்றங்களில் குற்றவாளிகளை அடையாளம் கண்டு கைது செய்யவும் காவல் துறையினர் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதன் ஒருபகுதியாக, இணைய குற்ற வழக்குகளில் விரைவாக துப்புதுலக்கும் வகையில் தமிழகத்தில் முதல்முறையாக சென்னை வேப்பேரியில் அதிநவீன சைபர் தடய ஆய்வகம் உருவாக்கப்பட்டுள்ளது. இது விரைவில் பயன்பாட்டுக்கு வர உள்ளது.

அதேபோல, வாட்ஸ்–அப், முகநூல், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களைக் கண்காணிக்க இஸ்ரேல் தொழில்நுட்பம் போலீஸாரின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. முதற்கட்டமாக சென்னை காவளதுறக்கு இத்தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

---

**1.** 'முக்கியமந்திரி பார்க் சௌந்தர்யகரன்' **திட்டத்தைச் செயல்படுத்துகிற இந்திய மாநிலம்/UT எது?**



அ) உத்தர பிரதேசம்

**ஆ) புது தில்லி ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) குஜராத்

✓ 'முக்கியமந்திரி பார்க் சௌந்தர்யகரன்' திட்டம் புது தில்லி அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் ஒருபகுதியாக, தில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், தேசிய தலைநகரத்தில் சுமார் 3000 ஏக்கர் பரப்பளவில் உள்ள 17 நகர்ப்புறக் காடுகளை, 'உலகத்தரம்வாய்ந்த' காடுகளாக மாற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

---

**2.** 2022 – ஏபெல் பரிசு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?



**அ) டென்னிஸ் பார்னெல் சல்லிவன் ☑**

ஆ) கர்டிஸ் டி. மெக்முல்லன்

இ) வில்லியம் பிரவுடர்

ஈ) ஹால் அபெல்சன்

✓ நடப்பு 2022ஆம் ஆண்டிற்கான 'ஏபெல்' பரிசு பேராசிரியர் டென்னிஸ் பார்னெல் சல்லிவனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது சிறந்த கணிதவியலாளர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இந்த விருது 2002–இல் நார்வே அரசாங்கத்தால் நிறுவப்பட்டது.

✓ பேராசிரியர் சல்லிவனுக்கு, "இயற்கணிதம், வடிவியல் மற்றும் இயக்கவியல் அம்சங்களில் இடவியலில் அவர் செய்த பங்களிப்புகளுக்காக" அப்பரிசு வழங்கப்பட்டது.

---

**3.** 'AquaMAP' **தண்ணீர் மேலாண்மை மற்றும் கொள்கை மையத்தைத் தொடங்கியுள்ள நிறுவனம் எது?**

**அ) ஐஐடி மெட்ராஸ் ☑**

ஆ) IISc பெங்களூரு

இ) ஐஐடி காரக்பூர்

ஈ) ஐஐடி தில்லி

✓ மெட்ராஸ் – இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) 'AquaMAP' என்ற நீர் மேலாண்மை மற்றும் கொள்கை மையத்தைத் திறந்து வைத்து அதன் வலைதளத்தையும் தொடங்கியது. 'AquaMAP' என்பது ஒரு தேசிய நீர் மையமாகும். மேலும், இத்திட்டம் ரீதியாக IIT மெட்ராஸ் IIT தார்வாட் உடன் இணைந்துள்ளது.

✓ திறமையான தண்ணீர் மேலாண்மை நடைமுறைகளை வடிவமைத்து மேம்படுத்துவதன்மூலம் தண்ணீர் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதை இந்த மையம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**4.** 'Lamitiye – 2022' **என்பது இந்தியாவிற்கும் பின்வரும் எந்த நாட்டிற்கும் இடையிலான ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியாகும்?**




அ) இலங்கை ஆ) மாலத்தீவுகள்

**இ) செஷல்ஸ் ☑** ஈ) மடகாஸ்கர்

✓ 'Lamitiye – 2022' என்பது இந்திய இராணுவம் மற்றும் செஷல்ஸ் பாதுகாப்புப் படைகளுக்கு இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியின் ஒன்பதாவது பதிப்பாகும். மார்ச் 22 முதல் 31 வரை செஷல்ஸ் பாதுகாப்பு அகாதமியில் நடத்தப்படும் இந்தப் பயிற்சிக்காக இந்திய இராணுவக்குழு செஷல்ஸ் சென்றடைந்தது.

---

**5.** **இந்திய தூர்வாரல் கழகமானது எந்த நிறுவனத்துடன் இணைந்து முதலாவது உள்நாட்டு தூர்வாரும் கப்பலை உருவாக்கியுள்ளது?**

**அ) கொச்சி கப்பல்கட்டும் நிறுவனம் ☑**

ஆ) மசகான் கப்பல்கட்டும் நிறுவனம்

இ) கோவா கப்பல்கட்டுந்தளம்

ஈ) கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் & பொறியாளர்கள்

✓ இந்திய தூர்வாரல் கழகமும் கொச்சின் கப்பல்கட்டும் நிறுவனமும் முதலாவது உள்நாட்டு தூர்வாரும் கப்பலை உருவாக்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்தக் கப்பலின் விலை சுமார் ₹920 கோடியாகும்.

✓ இதுவே இந்தியாவில் கட்டப்படுகிற மிகப்பெரிய மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட தூர்வரும் கப்பல் ஆகும்.

---

**6.** **கிவோலேடியோ தேசியப்பூங்கா அமைந்துள்ள இந்திய மாநிலம்/UT எது?**



**அ) இராஜஸ்தான் ☑**

ஆ) பஞ்சாப்

இ) மத்திய பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

✓ கிவோலாடியோ தேசியப் பூங்கா இராஜஸ்தானின் பரத்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. சமீபத்தில், ஆபிரிக்காவின் 'போமா கேப்சரிங் டெக்னிக்' கொண்ட ஒரு பரிசோதனை இப்பூங்காவில் மேற்கொள்ளப்பட்டது.

✓ 450 கிமீ தொலைவில் அமைந்துள்ள முகுந்தரா ஹில்ஸ் புலிகள் காப்பகத்தில், இரையின் தளத்தை மேம்படுத்தவும் புள்ளிமான்களைப் பிடிக்கவும் இடமாற்றம் செய்யவும் இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

---

**7.** **சமீபத்தில் புவிசார் குறியீடு பெற்ற,** 'நரசிங்கம்பேட்டை நாகஸ்வரம்' **சார்ந்த மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**



ஆ) கேரளம்

இ) கர்நாடகா

ஈ) மேற்கு வங்காளம்

✓ தமிழ்நாட்டின், 'நரசிங்கப்பேட்டை நாகஸ்வரம்' ஆனது 'பதினைந்தாம் வகுப்பு இசைக்கருவி' என்ற பிரிவின்கீழ் புவிசார் குறியீடு பெற்றுள்ளது. தஞ்சாவூரில் அமைந்துள்ள நரசிங்கம்பேட்டை கிராமத்தில் இந்தக் கருவி கையால் தயாரிக்கப்படுகிறது. ஒரு வகை கருங்காலி மரம் தேர்வு செய்யப்பட்டு இது உருவாக்கப்படுகிறது.

✓ நாணல் எனப்படும் ஒரு வகை தாவரத்தின் இலைகளில் இருந்து இதன் பன்னைமூடி தயாரிக்கப்படுகிறது.

**8.** 2022 – உலக காடுகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

**அ) Forests & Sustainable Production and Consumption ☑**

ஆ) World's Terrestrial Biodiversity




இ) Role of Forest in Achieving SDGs

ஈ) Trees – Pathway to Susutainability

- ✓ புவியில் உயிர்களை நிலைநிறுத்துவதில் காடுகளின் பங்கு குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்குடன் ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.21 அன்று உலக காடுகள் நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ✓ "*Forests & Sustainable Production and Consumption*" என்பது 2022ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் ஆகும். ஐநா அவையின் கூற்றுப்படி, 80% பல்லுயிர் பெருக்கத்தில் 60,000–க்கும் மேற்பட்ட மர வகைகளுடன் உலகின் காடுகள் பங்களித்து வருகின்றன.

---

**9.** 'Hwasong–17' **எனப் பெயரிடப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சமீபத்தில் பரிசோதனை செய்த நாடு எது?**

அ) சீனா



**ஆ) வட கொரியா ☑**

இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) இஸ்ரேல்

- ✓ கடந்த 2017ஆம் ஆண்டு முதல் கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை, 'Hwasong–17' என்ற பெயரில் பரிசோதனை செய்துள்ளதாக வடகொரியா உறுதிசெய்து உள்ளது. 'Hwasong–17' ஆனது அதிகபட்சமாக 6,248.5 கிமீ உயரத்தில் 1,090 கிமீட்டர் தூரம் பறந்து இலக்கைத் தாக்கியது. 'Hwasong–17' ஆனது உலகின் மிகப்பெரிய கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணை எனக் கூறப்படு –கிறது. கடந்த 2017 நவம்பரில் பரிசோதனை செய்யப்பட்ட 'Hwasong–15', சுமார் 4,475 கிமீட்டர் உயரத்தை எட்டியது மற்றும் 950 கிமீகளைக் கடந்தது.

---

**10.** **2022–இந்திய காசநோய் அறிக்கையின்படி, 2021ஆம் ஆண்டில் இந்தியாவில் காசநோய் பாதிப்பு % என்ன?**

அ) 2%




ஆ) 5%

இ) 9%

**ஈ) 19% ☑**

- ✓ '2022 – இந்திய காசநோய் அறிக்கை' சமீபத்தில் மத்திய சுகாதார அமைச்சரால் வெளியிடப்பட்டது.
- ✓ இவ்வறிக்கையின்படி, கடந்தாண்டுகளை ஒப்பிடும்போது 2021ஆம் ஆண்டில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 19 சதவீதம் அதிகரித்துள்ளது. 2021ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட மொத்த காசநோயாளிகளின் எண்ணிக்கை 19 இலட்சமாகும்.
- ✓ 2020–இல் இந்த எண்ணிக்கை 16 இலட்சமாக இருந்தது. இந்தியாவில் 2019–2020–க்கு இடையில் காசநோயால் ஏற்படும் இறப்பு விகிதம் 11 சதவீதம் அதிகரித்துள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழகத்தில் 2 புதிய வணிக வளாகங்கள்: அரசு – அரபு நிறுவனம் ₹3,500 கோடிக்கு ஒப்பந்தம்**

அரபு நாடுகளில் மிகப்பெரிய வணிக வளாகங்களை நடத்தி வரும் லுலு நிறுவனம், தமிழகத்திலும் 2 புதிய வணிக வளாகங்களை கட்டமைக்கவுள்ளது. இதற்காக ₹3,500 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் அபுதாபியில் முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பமானது.

---

**2. 94–ஆவது ஆஸ்கர் விருதுப்பட்டியல்!**

**சிறந்த திரைப்படம்** – கோடா

**சிறந்த அந்நியமொழித் திரைப்படம்** – டிரைவ் மை கார் (ஜப்பான்)

**சிறந்த இயக்குநர்** – ஜேன் கேம்பியன் (The Power of the Dog)

**சிறந்த நடிகர்** – வில் ஸ்மித் (கிங் ரிச்சர்டு)

**சிறந்த நடிகை** – ஜெசிகா சேஸ்டெயின் (தி ஐஸ் ஆப் டேம்மி பேயி)

**சிறந்த குணச்சித்திர நடிகர்** – ட்ரோய் கோட்சர் (கோடா)

**சிறந்த குணச்சித்திர நடிகை** – அரியானா டிபோஸ் (வெஸ்ட் சைடு ஸ்டோரி)

**சிறந்த அனிமேஷன் திரைப்படம்** – என்கேன்டோ (ஜரீத் புஷ், பைரன் ஹோவர்டு, கிளார்க் ஸ்பென்சர்)

**சிறந்த அனிமேஷன் குறும்படம்** – தி விண்ட்ஷீல்டு வைப்பர் (ஆல்பர்டோ மியால்கோ, லியோ சான்செஸ்)

**சிறந்த ஆவணப்படம்** – சம்மர் ஆப் சோல் (அமீர் தாம்ப்சன், ஜோசப் படேல்)

**சிறந்த ஆவணக்குறும்படம்** – தி குயின் ஆப் பேஸ்கட்பால் (பென் பிரவுட்புட்)

**சிறந்த அசல் திரைக்கதை** – பெல்பாஸ்ட் (கென்னத் பிரனாக்)

**சிறந்த தழுவல் திரைக்கதை** – கோடா (சியான் ஹெடர்)

**சிறந்த பாடல்** – "நோ டைம் டு டை" (பில்லி ஐலிஷ், பினியஸ் ஓ கானல்)

**சிறந்த ஒளிப்பதிவு** – டியூன் (கிரேக் பிரேசர்)

**சிறந்த படத்தொகுப்பு** – டியூன் (ஜோ வாக்கர்)

**சிறந்த கலை வடிவமைப்பு** – டியூன் (பாட்ரிஸ் வெர்மெட்)

**சிறந்த விஷுவல் எபெக்ட்** – டியூன்

**சிறந்த ஒலித்தொகுப்பு** – டியூன் (மேக் ரூத், மார்க் மங்கினி)

**சிறந்த பின்னணி இசை** – டியூன் (ஹான்ஸ் ஜிம்மர்)

**சிறந்த ஆடை வடிவமைப்பு** – குரூவெல்லா (ஜெனி பீவன்)

**சிறந்த ஒப்பனை, கூந்தல் அலங்காரம்** – தி ஐஸ் ஆப் டேம்மி பேயி (லிண்டா டோட்ஸ், ஸ்டீபனி இங்ரம், ஜஸ்டின் ராலே)

---

**3. சேதி தெரியுமா?**

**மார்ச்.21:** மணிப்பூர் முதல்வராக வீரேன்சிங் இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்றார். அவருக்கு ஆளுநர் இல. கணேசன் பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

**மார்ச்.22:** மேகேதாட்டு அணை விவகாரத்தில் கர்நாடகாவுக்கு எதிராக தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மார்ச்.23:** சென்னை உயர்நீதிமன்றத்துக்கு வழக்கறிஞர்கள் N மாலா, S சௌந்தர் ஆகியோரைப் புதிய நீதிபதிகளாக நியமித்துக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் உத்தரவு பிறப்பித்தார்.

**மார்ச்.23:** உத்தரகண்ட் முதல்வராக புஷ்கர் சிங் தாமி இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்றார். அவருக்கு ஆளுநர் குர்மிட் சிங் பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

**மார்ச்.24:** தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு க ஸ்டாலின் பதவியேற்றுக் கொண்ட பிறகு துபாயில் நடைபெறும் சர்வதேச தொழில் கண்காட்சியில் பங்கேற்க முதன் முறையாக வெளிநாடு சென்றார்.

**மார்ச்.25:** உத்தர பிரதேச முதல்வராக யோகி ஆதித்யநாத் இரண்டாவது முறையாக மீண்டும் பொறுப்பேற்றார். அவருக்கு ஆளுநர் ஆனந்திபென் பட்டேல் பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

**மார்ச்.25:** மேகேதாட்டு அணை விவகாரத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்குப் போட்டியாக கர்நாடக சட்டப்பேரவையில் ஆதரவு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மார்ச்.27:** நியூசிலாந்தில் நடைபெற்றுவரும் 50 ஓவர் மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் 3 வெற்றி, 4 தோல்விகளுடன் இந்திய அணி வெளியேறியது.

---

**4. தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்புக்கு '181' இயங்குவது எப்படி? – ஒரு தெளிவுப்பார்வை**

**எதற்காக, எப்போது அறிமுகமானது?** – '181' என்பது மகளிருக்கான உதவி எண். இது கட்டணமில்லா தொலை பேசி எண். இது முதன்முதலில் தலைநகர் தில்லியில்தான் தொடங்கப்பட்டது.

மத்திய அரசு 'நிர்பயா நிதி' என்ற நிதியை ஏற்படுத்தியது. இந்த நிதி ஒதுக்கீட்டின்கீழ்தான் மகளிருக்கான உதவி எண் '181' தொடங்கப்பட்டது. இந்தச்சேவை அந்தந்த மாநில போலீஸாரின் உதவியுடன் 'Safe City' திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் கடந்த 2018 டிசம்பர் 10 முதல் இச்சேவை செயல்படுகிறது.

**இணையதளத்திலும் புகார்...**

'181' என்ற எண்ணை அழைத்துப் புகார் சொல்ல இயலாத நேரத்தில் https://tn181whl.org/tamil/ என்ற இணையதளத்திற்குச் சென்று அங்குள்ள அரட்டை சேவையைப் பயன்படுத்தியோ இ–பார்ம் பயன்படுத்தியோ புகார் அளிக்கலாம். 24 மணி நேரமும் இயங்கக் கூடிய டோல் பிரீ எண்ணைப் பற்றி அறிந்துகொள்வதோடு அனைவருடனும் பகிர்ந்து கொள்வோம்.

---

**1. 'பாரத பாக்ய விதாதா' விழா நடைபெறும் இடம் எது?**

அ) மும்பை



**ஆ) புது தில்லி ☑**

இ) லக்னௌ

ஈ) அகமதாபாத்

✓ 'பாரத பாக்ய விதாதா' என்ற தலைப்பில் 10 நாள் நடக்கும் 'செங்கோட்டை திருவிழா' புது தில்லியில் அமைந்துள்ள செங்கோட்டையில் அண்மையில் தொடங்கியது. மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி இவ்விழாவை தொடங்கிவைத்தார்.

✓ இந்தத் திருவிழா, 'அமுதப்பெருவிழாவின்' ஒருபகுதியாக கலாச்சார அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. செங்கோட்டை விழா இந்தியாவின் அனைத்துப் பகுதி கலாசாரத்தையும், பாரம்பரியத்தையும் நினைவுப்படுத்தும் ஒரு விழாவாகும்.

---

**2. 'ஆண்டின் ஆளுநர்' விருதை வென்றமரியோ மார்செல், எந்த நாட்டு மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தார்?**

**அ) சிலி ☑**



ஆ) ஆஸ்திரேலியா

இ) ஜெர்மனி

ஈ) வெனிசுலா

✓ மத்திய வங்கிக்குழுவும் அதன் தலையங்க ஆலோசனைக் குழுவும் அண்மையில் மத்திய வங்கி விருதுகளின் 9ஆம் பதிப்பை (2022) வெளியிட்டன. சிலி நாட்டின் மரியோ மார்செல், 'நடப்பாண்டுக்கான (2022) சிறந்த ஆளுநர்' விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளார். 'Banco Central de Chile' என்பது சிலியின் மத்திய வங்கியின் பெயர்.

---

**3. ரிசர்வ் வங்கியின் புத்தாக்க மையத்தின் (RBIH) முதல் தலைவர் யார்?**

**அ) சேனாபதி கிரிஸ் கோபாலகிருஷ்ணன் ☑**



ஆ) உர்ஜித் படேல்

இ) அபிஜீத் பானர்ஜி

ஈ) விரல் ஆச்சார்யா

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) ஆளுநர் சக்திகாந்த தாஸ் பெங்களூருவில் இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) புத்தாக்க மையத்தை (RBIH) திறந்து வைத்தார். 100 கோடி ஆரம்ப மூலதனப்பங்களிப்புடன், நிதிசார் புத்தாக்கங்களை ஊக்கு –விக்கவும், வளர்த்தெடுக்கவும் இது அமைக்கப்பட்டுள்ளது.

✓ சேனாபதி கிரிஸ் கோபாலகிருஷ்ணன் இதன் முதலாவது தலைவர் ஆவார். மேலும் தொழிற்துறை மற்றும் கல்வித் துறையைச்சேர்ந்தோரும் இதில் உறுப்பென உள்ளனர்.

---

**4. கனிஜ் பிதேஷ் இந்தியா லிட் (KABIL) என்பது எந்தப் பொருளின் விநியோகத்தை உறுதிசெய்வதற்காக உரு –வாக்கப்பட்ட ஒரு கூட்டு நிறுவனமாகும்?**

அ) பெட்ரோலியம்

ஆ) கச்சா எண்ணெய்

**இ) முதன்மை கனிமங்கள் ☑**

ஈ) மருத்துவப்பொருள்

✓ கனிஜ் பிதேஷ் இந்தியா லிட் (KABIL) என்பது தேசிய அலுமினியம் நிறுவனம் (NALCO), ஹிந்துஸ்தான் காப்பர் நிறுவனம் (HCL) மற்றும் மினரல் எக்ஸ்ப்ளோரேஷன் கம்பெனி லிமிடெட் (MECL) ஆகிய மூன்று பொதுத்துறை நிறுவனங்களின் கூட்டு நிறுவனமாகும்.

✓ சமீபத்தில், சுரங்கத்துறை ஒத்துழைப்புக்கான முதன்மை புரிந்துணர்வு ஒப்பந்தம், கனிஜ் பிதேஷ் இந்தியா லிமிடெட் (KABIL) மற்றும் ஆஸ்திரேலியாவின் முதன்மை கனிம வசதி அலுவலகம் இடையே கையெழுத்தானது.

---

**5. '2022 – பஸ்ஸா சர்வதேச சாம்பியன்ஷிப் உலக பாரா தடகள கிராண்ட்பிரிக்ஸ்' நடைபெறும் இடம் எது?**

அ) புது தில்லி



**ஆ) துபாய் ☑**

இ) சென்னை

ஈ) கொழும்பு

✓ 13ஆவது பாஸ்ஸா சர்வதேச சாம்பியன்ஷிப் உலக பாரா தடகள கிராண்ட் பிரிக்ஸ் – 2022 துபாயில் தொடங்கியது. பாராலிம்பியன் தரம்பிர் தலைமையிலான 29 பேர் கொண்ட இந்திய அணி, 43 நாடுகளைச் சேர்ந்த சுமார் 500 பாரா விளையாட்டு வீரர்களுடன் இந்தப் போட்டியில் பங்கேற்கிறது.

---

**6. 2022 – ஆல் இங்கிலாந்து ஓப்பன் பாட்மிண்டன் சாம்பியன்ஷிப்பில் 2ஆமிடத்தை வென்ற இந்தியர் யார்?**

அ) K ஸ்ரீகாந்த்



ஆ) P V சிந்து

**இ) லக்ஷ்யா சென் ☑**

ஈ) சாய்னா நேவால்

✓ ஆல் இங்கிலாந்து ஓப்பன் பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் – 2022இல் இந்திய டென்னிஸ் வீரர் லக்ஷ்யா சென் 2ஆம் இடத்தைப் பெற்றார். பர்மிங்காமில் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில், உலகின் நம்பர்–1 விக்டர் ஆக்சல்சென் லக்ஷ்யா சென்னை வீழ்த்தினார்.

✓ மகளிர் ஒற்றையர் பிரிவில் ஜப்பானின் யமகுச்சி அகானே சாம்பியன் பட்டம் வென்றார். ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தோனேஷியா சாம்பியன் பட்டம் வென்றது. மகளிர் இரட்டையர் பட்டம் மற்றும் கலப்பு இரட்டையர் பட்டத்தை ஜப்பான் வென்றது.

---

**7. மதிப்புமிக்க, 'ஸ்போர்ட்ஸ் ஐகான்' விருதை வென்ற இந்திய கிரிக்கெட் வீரர் யார்?**

**அ) சுரேஷ் ரெய்னா ☑**



ஆ) M S தோனி

இ) சச்சின் டெண்டுல்கர்

ஈ) விராட் கோலி

✓ முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா, மாலத்தீவு விளையாட்டு விருதுகள் 2022இல் மதிப்புமிக்க 'ஸ்போர்ட்ஸ் ஐகான்' விருதைப் பெற்றார்.

---

**8.** 2022 – 'இந்தியாவை மாற்றும் பெண்கள்' விருதுகள், எத்தனை பெண் சாதனையாளர்களுக்கு வழங்கப்பட்டது?

அ) 10

ஆ) 50

**இ) 75 ☑**

ஈ) 100




✓ '*Women Transforming India (WTI)* – இந்தியாவை மாற்றும் பெண்கள்' விருதுகளின் ஐந்தாவது பதிப்பை NITI ஆயோக் நடத்தியது. நாட்டின் 75ஆவது ஆண்டு விடுதலையைக் கொண்டாடும் விடுதலையின் அமுதப்பெருவிழாவின் ஒரு பகுதியாக, 75 பெண் சாதனையாளர்களுக்கு இந்த ஆண்டுக்கான (2022) விருதுகள் வழங்கப்பட்டன.

---

**9.** 'WINGS INDIA–2022' மாநாட்டை நடத்தும் நகரம் எது?

அ) புது தில்லி

ஆ) மும்பை

**இ) ஹைதராபாத் ☑**

ஈ) புனே

✓ சிவில் வான் போக்குவரத்து அமைச்சகம் மற்றும் இந்திய தொழில் மற்றும் வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பு (FICCI) ஆகியவை இணைந்து 'WINGS INDIA – 2022' என்னும் ஆசியாவின் மிகப்பெரிய வான் போக்குவரத்து தொடர்பான நிகழ்ச்சியை ஹைதராபாத்தில் நடத்தின.

✓ புதிய வணிகங்களை கையகப்படுத்தல், முதலீடுகள், கொள்கை உருவாக்கம் மற்றும் பிராந்திய இணைப்பு ஆகியவற்றில் இது கவனஞ்செலுத்தியது.

✓ வான்போக்குவரத்து மையமாக ஐதராபாத் இருப்பதால் அங்கு இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நாட்டின் 75ஆவது ஆண்டின் சுதந்திரத்தைக் கொண்டாடும் விடுதலையின் அமுதப் பெருவிழாவின் ஒருபகுதியாக, "இந்தியா@75: விமானத் தொழிலுக்கான புதிய தொடுவானம்" என்பது இந்த நிகழ்வின் கருப்பொருளாக இருந்தது.

---

**10.** உலகின் முதல் வனவுயிரி பாதுகாப்புப் பத்திரத்தை வெளியிட்ட நிறுவனம் எது?

**அ) உலக வங்கி ☑**

ஆ) ஐநா சுற்றுச்சூழல் திட்டம்

இ) உலக பொருளாதார மன்றம்

ஈ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்



✓ வனவுயிரிகள் பாதுகாப்புப் பத்திரம் எனப் பெயரிடப்பட்ட உலகின் முதல் வனவுயிரிகள் பத்திரத்தை உலக வங்கி வெளியிட்டுள்ளது. இரண்டு தென்னாப்பிரிக்க காப்புப் பகுதிகளான அட்டோ யானைகள் தேசியப்பூங்கா மற்றும் கிரேட் ஃபிஷ் ரிவர் நேச்சர் ரிசர்வ் ஆகியவற்றிற்காக $150 மில்லியன் டாலர்கள் செலவிடப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. 5ஆவது BIMSTEC உச்சிமாநாடு

BIMSTEC (Bay of Bengal Initiative for Multi–Sectoral Technical and Economic Cooperation) அமைப்பின் 5ஆவது உச்சிமாநாடு அந்த அமைப்புக்கு தற்போது தலைமைப் பொறுப்புவகிக்கும் இலங்கை தலைமையில் நடந்தது.

பிரதமர் உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் தலைவர்கள் முன்னிலையில், மூன்று BIMSTEC ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின. (i) குற்ற விவகாரங்களில் பரஸ்பர சட்ட உதவிக்கான BIMSTEC உடன்படிக்கை: (ii) இராஜ்ஜிய பயிற்சித்துறையில் பரஸ்பர ஒத்துழைப்புக்கான புரிந்துண –ர்வு ஒப்பந்தம் மற்றும் (iii) BIMSTEC தொழில்நுட்ப மாற்ற வசதிக்கான அமைப்பு.

உறுப்பு நாடுகளின் தற்போதைய முன்னுரிமைகளை பிரதிபலிக்கும் விதமாக, "மறுமலர்ச்சி அடையக்கூடிய பிராந்தியம், வளமான பொருளாதாரம், ஆரோக்கியமான மக்கள்" என்பதே இந்த மாநாட்டின் மையக்கருத்தாகும்.

---

### 2. நீர் மேலாண்மை: தமிழ்நாட்டுக்கு 6 தேசிய விருதுகள்

மத்திய அரசின் நீர் மேலாண்மைத் திட்டத்தில் சிறப்பாக செயல்பட்டதற்காக தமிழ்நாட்டுக்கு 6 தேசிய விருதுகள் கிடைத்துள்ளன. குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் தில்லியில் நடைபெற்ற விழாவில் இந்த விருதுகளை மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் வழங்கினார்.

நீர் மேலாண்மையில் மக்களையும் பல்வேறு தரப்பினரையும் முழுமையாக ஈடுபடுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், தேசிய நீர் விருதுகளை மத்திய அரசு கடந்த 2018–ஆம் ஆண்டு அறிவித்தது. தண்ணீரின் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பயனுள்ள நீர் மேலாண்மை நடைமுறைக –ளைப் பின்பற்றுபவர்களை ஊக்குவிக்கவும் இந்த விருது வழங்கப்படுகிறது.

இதில் சிறந்த மாநிலம், மாவட்டம், ஊராட்சி, பள்ளிகள், தனியார் நிறுவனம், தொழிற்சாலைகள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட 11 பிரிவுகளில் மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகம் சார்பில் ஆண்டுதோறும் 57 தேசிய நீர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

நீர்மேலாண்மையில் சிறப்பாக செயல்படும் மாநிலங்களை ஜல் சக்தித் துறையின் சிறப்புக் குழு, மாநில வாரியாக நேரில் கள ஆய்வு செய்து விருதுகளை வழங்கி வருகிறது.

**தமிழ்நாடு 3–ஆம் இடம்:** நிகழாண்டு மூன்றாவது தேசிய நீர் விருதுகள் வழங்கும் விழா தில்லி விஞ்ஞான் பவனில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் நடைபெற்றது. ஒட்டுமொத்தமாக நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கிய மாநிலங்களின் பட்டியலில் உத்தர பிரதேச மாநிலம் முதலிடம் பிடித்தது.

இரண்டாம் இடத்தை இராஜஸ்தான் மாநிலம் பெற்றது. மூன்றாமிடத்தை தமிழ்நாடு பிடித்தது. 2020–ஆம் ஆண்டு

வழங்கப்பட்ட இரண்டாவது தேசிய நீர் விருதில், தமிழகம் முதலாவது இடத்தைப் பிடித்திருந்தது.

**காவேரிப்பட்டினம் பள்ளிக்கு முதல் பரிசு:**

நீர் மேலாண்மையில் சிறந்த பள்ளிகள் பிரிவில் கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. புதுச்சேரி மணப்பட்டு அரசுப் பள்ளி மூன்றாமிடம் பெற்றது.

**செங்கல்பட்டு, மதுரைக்கு பரிசு:** சிறந்த ஊராட்சி பிரிவில் (தென்மண்டல அளவில்) செங்கல்பட்டு மாவட்டம் வெள்ளப் புதூர் ஊராட்சி இரண்டாம் பரிசு பெற்றது. சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பிரிவில் மதுரை மாநகராட்சிக்கு 3–ஆவது பரிசு கிடைத்தது.

சிறந்த தொழில் பிரிவில் ஹுண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்துக்கு இரண்டாவது பரிசும், சிறந்த தன்னார்வ தொண்டு நிறுவனப் பிரிவில் கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரத்துக்கு 2–ஆவது இடத்துக்கான பரிசும் வழங்கப்பட்டது.

---

**3. 3 மின் திட்டப் பணிகளில் இந்தியாவுடன் இலங்கை அரசு ஒப்பந்தம்: சீன நிறுவனத்துக்கு வழங்கிய பணிகள் ரத்து**

இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள 3 தீவுகளில் மரபுசாரா மின்னுற்பத்தி திட்டங்கள் மேற்கொள்ள சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடப்பட்ட நிலையில் அதனை ரத்து செய்த இலங்கை அரசு, அப்பணிகளை இந்திய நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் உள்ள நைனா தீவு, நெடுந்தீவு மற்றும் அனலைத் தீவு உள்ளிட்ட பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை நிறைவேற்ற சீனாவைச் சேர்ந்த சினோசோர்–எடெக்வின் என்ற நிறுவனத்துக்கு இலங்கை அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தது.

இது ஆசிய வளர்ச்சி வங்கி ஆதரவுடன் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் நடக்கும் மிகப்பெரிய மின்னுற்பத்தி திட்டமாகும்.

---

**4. போதைப் பொருள் விற்பனையை முற்றிலும் தடுக்கும் 'ஆபரேஷன் கஞ்சா வேட்டை 2.0'**

தமிழகத்தில் போதைப் பொருள் நடமாட்டத்தை முற்றிலும் தடுக்க 'ஆபரேஷன் கஞ்சா வேட்டை 2.0' என்ற சிறப்பு நடவடிக்கை ஒரு மாதத்துக்கு தொடங்கப்பட்டுள்ளது.

**மார்ச் 28 முதல் ஏப்.27 வரை**

கடந்த 2021 டிசம்பர் முதல் கடந்த ஜனவரி வரை நடத்தப்பட்ட கஞ்சா வேட்டையின் தொடர்ச்சியாக, இந்த மாதம் 28ஆம் தேதி முதல் ஏப்ரல்.27 வரை ஒரு மாதம் 'ஆபரேஷன் கஞ்சா வேட்டை 2.0' நடத்தப்படவுள்ளது. இதன்மூலம் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகே கஞ்சா, குட்காபோன்ற போதைப்பொருட்கள் விற்கப்படுவ–தைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

---

**5. ₹400 கோடியில் உருவாக்கப்பட்டுள்ள 'சென்ட்ரல் ஸ்கொயர்'**

சென்னை மத்திய ரயில் நிலையம் எதிரே போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ₹400 கோடி செலவில் 'சென்ட்ரல் ஸ்கொயர்' என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் சென்னை சென்ட்ரல், மெட்ரோ இரயில் நிலையம், ரிப்பன் பில்டிங், இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, பூங்கா நகர் இரயில் நிலையம் ஆகியவற்றை இணைத்து ஒரே சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

---

**1. காசநோயை ஒழிப்பதற்கு தரவு சார்ந்த ஆராய்ச்சியான, 'Dare2eraD TB'ஐத் தொடங்கியுள்ள நாடு எது?**



அ) வங்காளதேசம்

**ஆ) இந்தியா ☑**

இ) நேபாளம்

ஈ) சீனா

✓ மத்திய அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சர் ஜிதேந்திர சிங், உலக காசநோய் நாளன்று, உயிரி தொழில்நுட்பத் துறையின், '*Dare2eraD TB*' என்னும் காசநோயை ஒழிப்பதற்கான தரவு அடிப்படையிலான ஆராய்ச்சியைத் தொடங்கினார். '*Dare2eraD TB*' என்பது, இந்திய காச நோய் மரபணு கண்காணிப்பு கூட்டமைப்பு, இந்திய காச நோய் அறிவுசார் மையம் போன்ற முன்முயற்சிகளை உள்ளடக்கிய ஒரு திட்டமாகும்.

---

**2. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் எத்தேதியை, 'தேசிய டால்பின் நாள்' என அறிவித்துள்ளது?**



அ) ஏப்ரல்.5

ஆ) மே.5

இ) ஜூலை.5

**ஈ) அக்டோபர்.5 ☑**

✓ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமானது அக்டோபர்.5ஆம் தேதியை தேசிய டால்பின் நாள் என அறிவித்துள்ளது. இந்த ஆண்டு (2022) முதல் ஆண்டுதோறும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படும். தேசிய டால்பின் நாளை அறிவிப்பதற்கான முடிவு தேசிய வனவுயிரிகள் வாரியத்தின் நிலைக் குழுவால் எடுக்கப்பட்டது.

---

**3. சமீபத்தில் கடற்படையின் எந்தக்கப்பலுக்கு மதிப்புமிக்க 'குடியரசுத்தலைவரின் வண்ண விருது' வழங்கப்பட்டது?**



**அ) INS வல்சுரா ☑**

ஆ) INS கோமதி

இ) INS பிரம்மபுத்திரா

ஈ) INS பெட்வா

✓ இந்தியக்குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த், 'INS வல்சுரா' கப்பலுக்கு மதிப்புமிக்க 'குடியரசுத்தலைவரின் வண்ண விருதை' வழங்கினார். இரண்டாம் உலகப் போரின்போது ராயல் இந்திய கடற்படைக்காக 1942இல் இக்கப்பல் உருவாக்கப்பட்டது. இந்தியா குடியரசாக ஆன பிறகு, 1950 ஜூலை 01–இல், இக்கப்பலுக்கு 'INS வல்சுரா' எனப் பெயர் சூட்டப்பட்டது.

---

**4. 'தனியுரிமை மற்றும் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு குறித்த பேரறிவிப்பை' வெளியிட்ட சங்கம் எது?**



அ) G–20

**ஆ) ஐரோப்பிய ஒன்றியம் ☑**

இ) G–7

ஈ) NATO

✓ ஐரோப்பிய ஒன்றியம் (EU), ஆஸ்திரேலியா, கொமொரோஸ், இந்தியா, ஜப்பான், மொரிஷியஸ், நியூசிலாந்து, தென் கொரியா, சிங்கப்பூர் மற்றும் இலங்கை ஆகியவற்றின் கூட்டுப் பிரகடனத்தை ஐரோப்பிய வெளியக நடவடிக்கை சேவை அறிவித்தது.

✓ 'தனியுரிமைபற்றிய பிரகடனம் மற்றும் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு' – டிஜிட்டல் சூழலில் நம்பிக்கையை வலுப்படுத்துவதோடு உயர்நிலை தரவு பாதுகாப்பு மற்றும் தனியுரிமையின் தரங்களை மேம்படுத்துவதில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதை இது தனது நோக்கம் எனக் கொண்டுள்ளது.

---

**5. மத்திய பட்ஜெட்டின்படி, அனல்மின் நிலையங்களில் எத்தனை % பயோமாஸ் துகள்கள் பயன்படுத்தப்படும்?**



அ) 2–3%

ஆ) 3–5%

**இ) 5–7% ☑**

ஈ) 7–9%

✓ 2022–23 மத்திய பட்ஜெட்டில் கூறியபடி, அனல்மின் நிலையங்களில் 5–7% பயோமாஸ் துகள்கள் பயன்படுத்தப்படும். இதன் விளைவாக ஆண்டுதோறும் 38 MMT $CO_2$ வெளியேற்றம் மீதப்படும்.

✓ "நிலக்கரி அடிப்படையிலான மின்னுற்பத்தி நிலையங்களில் இணை உலையூட்டிமூலம் மின்னுற்பத்திக்கான உயிரிப்பொருட்களைப் பயன்படுத்துவதற்கான திருத்தப்பட்ட கொள்கையின்" கீழ், நிலக்கரியுடன் வேளாண் எச்சங்களால் செய்யப்பட்ட உயிரித் துகள்களை கலப்பதை எரிசக்தி அமைச்சகம் கட்டாயமாக்கியுள்ளது. இவ்வாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஈராண்டுகளுக்குப்பிறகு இது முழு சதவீதமான 7%–த்தை எட்டியிருக்கும்.

---

**6. உலக காற்று தர அறிக்கை – 2022இன்படி, தொடர்ந்து 4ஆம் ஆண்டாக உலகின் மிகவும் மாசுபட்ட தலைநகரம் என உள்ள நகரம் எது?**



அ) டோக்கியோ

**ஆ) புது தில்லி ☑**

இ) பெய்ஜிங்

ஈ) நியூயார்க்

✓ சுவிஸ் நிறுவனமான 'IQAir' தயாரித்த உலக காற்று தர அறிக்கையின்படி, புது தில்லி தொடர்ந்து நான்காவது ஆண்டாக உலகின் மிகவும் மாசுபட்ட தலைநகராக உள்ளது. இவ்வறிக்கையின்படி, எந்த நாட்டாலும் 2021–இல் WHOஆல் நிர்ணயிக்கப்பட்ட காற்றின் தரத்தை பெற இயலவில்லை. 2021ஆம் ஆண்டிற்கான மிகமோசமான காற்று தரத்துடன் 35 இந்திய நகரங்கள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன. அதில்,பிவாடி (ராஜஸ்தான்) பட்டியலில் முதலிடத்திலும், அதைத்தொடர்ந்த இடத்தில் காஜியாபாத் (உத்தர பிரதேசம்) நகரம் 2ஆம் இடத்திலும் உள்ளது.

---

**7.** **அண்மையில், 53.2°C வெப்பநிலையுடன் புவியின் மிக வெப்பமான இடமாக மாறிய நாடு எது?**



அ) ஐக்கிய அரபு அமீரகம்

**ஆ) குவைத் ☑**

இ) ஓமன்

ஈ) மாலத்தீவுகள்

✓ சமீபத்தில் 53.2°C (127.7°F) வெப்பநிலையுடன் பூமியின் மிகவெப்பமான இடமாக குவைத் மாறியது. சமீபத்திய ஆய்வின்படி, அதன் தலைநகரத்தில் நிகழ்ந்த வெப்பம் தொடர்பான இறப்புகளில் 67% காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டதாகும். உலக வளக் கழகத்தின் கூற்றுப்படி, அந்த நாடு மின்சாரத்திற்காக தொடர்ந்து எண்ணெயை எரித்து வருகிறது. மேலும் தனிநபர் $CO_2$ உமிழ்வு பட்டியலிலும் முதலிடத்தில் உள்ளது.

---

**8.** **சமீபத்தில் தனது டென்னிஸ் வாழ்விலிருந்து ஓய்வுற்ற ஆஷ்லி பார்டி சார்ந்த நாடு எது?**



**அ) ஆஸ்திரேலியா ☑**

ஆ) அமெரிக்கா

இ) இத்தாலி

ஈ) சுவிச்சர்லாந்து

✓ உலகின் நெம்பர்.1 டென்னிஸ் வீராங்கனையான ஆஷ்லி பார்டி தனது 25ஆம் வயதில் தொழிற்முறை டென்னிஸில் இருந்து ஓய்வுறுவதாக அறிவித்தார். ஆஷ்லி பார்டி இந்த ஆண்டு ஜனவரியில் நடந்த ஆஸ்திரேலிய ஓப்பன் உட்பட 3 கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் போட்டிகளில் வென்றார்.

---

**9.** **"The Little Book of Joy" என்ற நூலின் ஆசிரியர்கள் யார்?**




**அ) தலாய் லாமா & டெஸ்மண்ட் டுட்டு ☑**

ஆ) சச்சின் டெண்டுல்கர் & பிரையன் லாரா

இ) பராக் ஒபாமா & மிச்செல் ஒபாமா

ஈ) சுதா மூர்த்தி & நாராயண மூர்த்தி

✓ 2016ஆம் ஆண்டில், பேராயர் டெஸ்மண்ட் டுட்டு மற்றும் தலாய் லாமா ஆகியோர் இணைந்து, "The Book of Joy: Lasting Happiness in a Changing World" என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதினர். இந்த நூல் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பிரதிகள் விற்றுள்ளதோடு 40-க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

---

**10.** **'இராஜீவ் காந்தி பூமிஹீன் கிரிஷி மஸ்தூர் நியாய் யோஜனா' சார்ந்த மாநிலம் எது?**



அ) பஞ்சாப்

ஆ) இராஜஸ்தான்

**இ) சத்தீஸ்கர் ☑**

ஈ) மணிப்பூர்

✓ சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர் பூபேஷ் பாகேல், 2022-23ஆம் ஆண்டிற்கான ₹1,04,000 கோடி மதிப்பிலான பட்ஜெட்டை தாக்கல் செய்தார். இது, முந்தைய ஆண்டை விட 7% அதிகமாகும்.

✓ மாநில அரசு ஊழியர்களுக்கான பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீட்டெடுப்பதாகவும், சமஉ-க்களுக்கு வழங்கப்-படும் உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியை இரட்டிப்பாக்கு-வதாகவும் அவர் அறிவித்தார். இராஜீவ் காந்தி கிசான் நியாய் திட்டத்திற்கு ₹6,000 கோடி நிதி ஒதுக்கீடு மற்றும் இராஜீவ்காந்தி பூமிகீன் கிரிஷி மஸ்தூர் நியாய் யோஜனா திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு ₹6,000 முதல் ₹7,000 வரை ஊதியம் உயர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நிகழாண்டில் ஏழு செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்படும்: மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங்**

நிகழாண்டில் இஸ்ரோ ஏழு செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த திட்டமிட்டிருப்பதாக மத்திய அறிவியல் & தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இதுகுறித்து மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில், "PSLV C-52 ஏவுகலம்மூலம் புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் EOS-4 கடந்த பிப்.14-இல் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.

விண்வெளியின் சுற்று வட்டப்பாதையில் செயல்படுவதற்காக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 2ஆம் தலைமுறை நானோ செயற்கைக்கோள்களில் முதலாவதான INS-2டிடி-உம் இதனுடன் அனுப்பப்பட்டது. இதேபோல, நிகழாண்டில் இஸ்ரோ ஏழு செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளது.

---

**2. மூத்த எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதிக்கு சாகித்திய அகாதெமியின் உயரிய அங்கீகாரம்**

மூத்த தமிழ் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, சாகித்திய அகாதெமியின் உயரிய பெல்லோஷிப் அங்கீகாரம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மூத்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரும் தமிழ்ப் பேராசிரியருமான இந்திரா பார்த்தசாரதி, சாகித்திய அகாதெமியின் மதிப்புக்குரிய 21 உறுப்பினர்களில் ஒருவராக கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தேர்ந்தெடுக்க-ப்பட்டார். 91 வயதான இவர் சாகித்திய அகாதெமி விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

இலக்கியத்துக்கு நீண்டகாலமாகத் தொண்டாற்றிய எழுத்-தாளர்களுக்கு வழங்கப்படும் சாகித்திய பெல்லோஷிப் அங்கீகாரம் தமிழ்நாட்டைச் சேர்ந்த இராஜாஜி, தெ பொ மீனாட்சி சுந்தரனார், கே ஆர் சீனிவாசன், ஜெயகாந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மூத்த தமிழ் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதிக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

---